කාර්යසාධන වාර්තාව
செயலாற்றுகை அறிக்கை
Performance Report
2022






බුද්ධශාසන, ආගමික සහ සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය
புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு
Ministry of Buddhasasana, Religious & Cultural Affairs



செயலாற்றுகை அறிக்கை

2022

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

இல.135, ஸ்ரீமத் அநாகரிக தர்மபால மாவத்தை

கொழும்பு – 07.

தொலைபேசி : 011 -2307694
011 - 2307674

தொலைநகல் : 011 -2307688
011 - 2300513

மின்னஞ்சல் : mbsecoffice@gmail.com

இணையதளம் : http://www.mbs.gov.lk

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகைஅ றிக்கை

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

உள்ளடக்கம் **பக்க இல.**

புத்தசாசன பிரிவு

அத்தியாயம் 01	நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு	01 - 05
அத்தியாயம் 02	முன்னேற்றம் மற்றும் எதிர்காலகண்ணோட்டம்	06 - 23
அத்தியாயம் 03	வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	24 - 72
அத்தியாயம் 04	செயலாற்றுகைசுட்டிகள்	73
அத்தியாயம் 05	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை(SDG) அடையும் செயலாற்றுகை	74 - 75
அத்தியாயம் 06	மனிதவளவிபரம்	76 - 78
அத்தியாயம் 07	இணக்கஅறிக்கை	79 - 86

கலாச்சார அலுவல்கள் பிரிவு

அத்தியாயம் 01	நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு	87 - 95
அத்தியாயம் 02	முன்னேற்றம் மற்றும் எதிர்காலகண்ணோட்டம்	96 - 112
அத்தியாயம் 03	வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	113 - 150
அத்தியாயம் 04	செயலாற்றுகைசுட்டிகள்	151 - 152
அத்தியாயம் 05	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை(SDG) அடையும் செயலாற்றுகை	153 - 157
அத்தியாயம் 06	மனிதவளவிபரம்	158 - 159
அத்தியாயம் 07	இணக்கஅறிக்கை	160 - 172

தேசிய பரம்பரிய பிரிவு

அத்தியாயம் 01	நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு	173 - 188
அத்தியாயம் 02	முன்னேற்றம் மற்றும் எதிர்காலகண்ணோட்டம்	189 - 206
அத்தியாயம் 03	வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	207 - 232
அத்தியாயம் 04	செயலாற்றுகைசுட்டிகள்	233 - 236
அத்தியாயம் 05	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை(SDG) அடையும் செயலாற்றுகை	237 -245
அத்தியாயம் 06	மனிதவளவிபரம்	246 -248
அத்தியாயம் 07	இணக்கஅறிக்கை	249 -257

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் பிரிவு

அத்தியாயம் 01 : நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டவாறு, புத்தசாசனத்தினைப் பாதுகாப்பதும் அதனை மேம்படுத்துவதும் அரசாங்கத்தின் முன்னுரிமையளிக்கப்பட்ட பொறுப்பாக இருந்துள்ளது. அதற்கிணங்க, அரசாங்கமானது ஒவ்வொரு சமயத்தினையும் சமமாகக் கருதுவது, அனைத்து மதங்களையும் சார்ந்த மக்களுடனும் சகல இனக்குழுக்களுடனும் சக வாழ்வுடன் இணைந்து வாழும் வகையில் மிகச் சிறந்த ஒழுக்கநெறி சார்ந்த சமூகமொன்றினைக் கட்டியழுப்புதல் மற்றும் புத்தமதத்தின் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட நிலையான பொருளாதாரமொன்றினைக் கட்டியெழுப்பும் பின்னணியினை ஏற்படுத்துதல் என்பனவற்றினை முன்னெடுப்பது அரசாங்கத்தின் இயல்பான கடமையாகவே கருதப்படுகின்றது. மேலும், இலங்கையின் கலைகள் மற்றும் பண்பாடு என்பவற்றினை முன்னேற்றுவதற்கான பாதுகாப்பு மற்றும் வளர்த்தெடுத்தல் நடவடிக்கைளினை முன்னெடுப்பது அமைச்சின் கடமைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

இந்த அமைச்சின் நோக்கங்கள் அரசாங்கத்தின் நாட்டினைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கின்படி அடையப் பெறவேண்டியுள்ளன. இது புனிதப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் சமயங்கள் மற்றும் இனங்களுக்கிடையில் சகவாழ்வினை ஏற்படுத்துதல் அல்லது சமயகுரவர்களின் முன்னேற்றத்தினை அதிகரித்தல் தொடர்பான கருத்திட்டங்களை உள்ளடக்குகின்றது. அவ்வாறே, புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் பிரிவானது பௌத்த, கிறீஸ்தவ, இந்து, இஸ்லாமிய சமயங்களுடனும் மற்றும் இலங்கையில் தொழிற்படும் ஏனைய சமயம் சார்ந்த அமைப்புக்களுடனும் இணைந்து பணியாற்றி வருகின்றது.

அதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டின் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் பிரிவு மற்றும் தேசிய பரம்பரிய பிரிவு என்பவை தொடர்பில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றுகை தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக இந்த செயலாற்றுகை அறிக்கையானது தயாரிக்கப்பட்டுள்ளது.

1.2 நோக்கு / செயற்பணி / நோக்கம்

நோக்கு

“வலுவாதாரம் மிக்க அபிவிருத்தியடைந்த இலங்கையினை உருவாக்குதல்”

செயற்பணி

“இலங்கையின் கலாச்சாரத்தினைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் பிரபல்யப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளினை முன்னெடுப்பதற்குத் தேவையான

கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல், திரைப்படங்கள், நாடகங்கள் கோட்பாட்டு ரீதியான கலைகள் மற்றும் கட்புலனாகும் மற்றும் கட்புலனாகா மரபுரிகைள் மற்றும் அரச ஆவணங்கள் என்பவற்றினைப் பாதுகாத்தல், கலாச்சார மற்றும் தொல்பொருளியல் மரபுரிமைகளினைப் பாதுகாத்தல் மற்றும் வேறிடங்களுக்கு அவற்றினை நகர்த்திப் பாதுகாப்பளித்தல், புத்தசாசனத்தினால் முன்னுரிமை அளிக்கப்படும் அனைத்து சமயங்களினதும் போதனைகளின் அடிப்படையில் ஆகக் கூடிய மட்டத்தில் மூலவளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அனைத்துத் தரப்புக்களிதும் பங்குபெறுதலுடன் சமய சகவாழ்வினை முழுமையாக விருத்தி செய்து முறையான, நெறிமுறை சார்ந்த மற்றும் ஆன்மீக வழியில் மேம்பட்ட சமூகமொன்றினை உருவாக்குதல்".

நோக்கங்கள்

ஆன்மீக விழுமியங்கள் மற்றும் நல்லொழுக்கங்கள் நிறைந்த சகவாழ்வுடைய சமூகமொன்றினை உருவாக்கும் பொருட்டு இந்து, கிறீஸ்தவ மற்றும் இஸ்லாமிய சமயங்களுடன் சகவாழ்வினைப் பேணுவதும் பௌத்த சமயத்திற்கு முதன்மை இடம் வழங்கப்படுவதனை உறுதி செய்யும் நோக்கில் தொழிற்படும் இந்த அமைச்சுக்கு பின்வரும் நோக்கங்களும் உரித்தளிக்கப்பட்டுள்ளன.

- பௌத்த சமயத்திற்கு முன்னுரிமை வழங்கும் அதேவேளையில் அதனைப் பாதுகாத்தலும் வளர்த்தெடுத்தலும்.

- ஒவ்வொரு சமயத்தினதும் உரிகைளினைப் பாதுகாத்தல் மற்றும் சமய ரீதியானதும் ஆன்மிக வழியிலுமான சமூகத்தினைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு இனக்குழுவும் பரஸ்பரம் புரிந்துணர்வுடனும் சகவாழ்வுடனும் வாழும் வகையிலான சமூகமொன்றினைத் தோற்றுவித்தல்.

- தேரவடி புத்த சமயத்தினைப் பாதுகாப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ள பௌத்த துறவிகளுக்கு பௌத்த தத்துவங்கள் மற்றும் ஏனைய மொழிகள் என்பவற்றின் அறிவூட்டலுடன் கூடிய தேவையான வசதிகளினை எற்படுத்திக் கொடுத்தலும் ஏனைய சமயங்களின் குரவர்களுக்கும் அறிவூட்டுவதற்கான நடவடிக்கைகளினை எடுத்தலும்.

- ஒவ்வொரு சமய ரீதியான நிறுவனங்களையும் கவனத்தில் கொண்டு ஆன்மீக மற்றும் ஒழுக்கநெறி சார்ந்த வாழ்வினை பொதுமக்களுக்கு நெறிப்படுத்துதலும் அவர்களின் சிறுபராயத்திலிருந்து ஒழுக்கநெறி சார்ந்தவர்களாக உருவாக்குதலும் பல்வேறு சமயங்களினூடாக உண்மையான சமய ரீதியான அறிவினை மேம்படுத்துதலும்.

- சமய விழுமியங்களின் அடிப்படையிலான பொருளாதாரமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கான பின்னணியினை உருவாக்குதல்.

- பொருளாதார ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் முன்னேற்றமடைந்த பிரஜைகளினை உருவாக்குதல்.

- தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தெரவடி புத்தசமயத்தின் விரிவாக்குவதற்கான மையமாகத் தொழிற்படுதல்.

- புராதன பௌத்த மற்றும் தொல்பொருள் விழுமியங்களுடன் கூடிய பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளினை எடுத்தலும் அவற்றினை எதிர்காலத் தலைமுறைகளுக்குப் பரிசளித்தலும்.

1.3 பிரதான தொழிற்பாடுகள்

- இந்த அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் பிரிவு, திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டசபைகள் என்பவை தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களினை வகுத்தலும் அவற்றினை அமுல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல்.

- அமைச்சின் நோக்கெல்லையின் கீழ்வருகின்ற பொதுமக்களுக்கான சேவைகளினை வினைத்திறனுடனும் நட்புணர்வுடனும் வழங்குதல்.

- நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல் மற்றும் ஊழலை ஒழிப்பதன் மூலம அமைச்சானது தனது தொழிற்பாட்டினை திறம்பட நிறைவேற்றுவதனை உறுதி செய்வதற்கு உதவுதல்.

- பேளத்த மதம் உள்ளடங்கலாக ஏனைய மதங்களினைப் பின்பற்றஜவதற்கான உரிமையினைப் பாதுகாத்தலும் மேம்படுத்துதலும்.

- பௌத்தம் உள்ளடங்கலாக அனைத்து மதங்களையும் பின்பற்றுவதற்கான உரிமையினைப் பாதுகாத்தலும் மத தீவிரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுத்தலும்.

- வணக்க தலங்களைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும்.

- பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம் சமய மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும் பின்பற்றுதலும்.


- அதிஉயர் தலைமைப்பீடத்தின் தீர்மானங்களை நிறைவேற்றுதல்

- கஸ்டப் பிரதேசங்களில் உள்ள வணக்க தலங்களை விருத்தி செய்தல்.

- நேபாளத்தில் அமைந்துள்ள வணக்க தலங்கள் மற்றும் புனிதப் பிரதேசத்தினை பாதுகாத்தலும் விருத்தி செய்தலும்.

- இந்தப் பிரிவுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் தொழிற்படுத்துதல், அவதானம் செலுத்துதல், வழிகாட்டுதல்களை அமுலாக்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

1.4 நிருவாக கட்டமைப்பு – புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு (புத்தசாசன மற்றும் சமய பிரிவு)



1.5 புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் பிரிவின் நோக்கெல்லையின்கீழ் தொழிற்படுகின்ற திணைக்களங்கள்

- பௌத்த அலுவல்கள் திணைக்களம்
- இந்து மத அலுவல்கள் திணைக்களம்
- இஸ்லாமிய மத அலுவல்கள் திணைக்களம்
- கிறீஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்
- பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் திணைக்களம்

1.6 அமைச்சின் கீழுள்ள நிதியங்கள்

- புத்தசாசன நிதியம்

1.7 வெளிநாட்டு உதவி கிடைக்கப் பெறும் கருத்திட்டங்கள்

- கருத்திட்டத்தின் பெயர் : பல்லேகல செயலாற்றுகை பயிற்சி நிறுவக நிருமாணம் (தலதா மாளிகையுடன் இணைக்கப்பட்டது)

- பங்களிப்புச் செய்யும் முகவராண்மை : இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பில்.

- வலுவூட்டல் அதிகாரசபை நிறுவகம் : இந்திய உயர் ஸ்தானிகராலயம்

- ஒப்பந்ததார் : லிங்க் இஞ்சினியரிங் தனியார் லிமிட்டட்.

- மதிப்பீட்டுச் செலவு : இந்திய உதவிகள் ரூபா.145.62 மி.
  இலங்கை அரசாங்கம் ரூபா. 21.84 மி.
  (பெசேவ கொடுப்பனவு) ரூபா.167.46 மி.

2016.09.16 ஆம் திகதியிலிருந்து 2022.12.31 ஆம் திகதி வரையிலான முன்னேற்றம்

மொத்த மதிப்பீட்டுச் செலவு (ரூ.மி.)	2021.12.31 இலுள்ளவாறான செலவினம் (ரூ.மி.)	2022 இல் நிதி ஒதுக்கீடு (ரூ.மி.)	2022.12.31 இல் உள்ளவாறான செலவு (ரூ.மி.)	2022.12.31 இல் மொத்த செலவு (ரூ.மி.)	பௌதீக முன்னேற்றம் (%)
145.62	110.59	27.40	24.43	135.02	98%
21.84	11.36	2.57	2.57	13.93	
167.46	121.95	29.97	27.00	148.95	

*2022.12.31 ஆம் திகதியில் குறிப்பிடப்பட்ட செலவினமானது 2017 இலிருந்து (இந்த கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து) இதுவரையிலான முன்னேற்றத்துடன் தொடர்புடையதாகும்.

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1. 2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் (2022 டிசம்பர் 31 இலுள்ளவாறு)

தொடர் இல.	நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம்	2022 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு (ரூ.மில்)*	பௌதீக சார் முன்னேற்றம் (%)	2022.12.31 இலுள்ளவாறான நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)	விசேட தகவல்கள்
1.	புனிதப் பிரதேசங்களைப் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும்	16.48	96%	14.41	-
2.	குறைவிருத்தியுடைய குறைவிருத்தியுடைய விகாரைகளினை மீளமைக்கும் கருத்திட்டம்	67.61	100%	61.72	செலுத்தப்படாதுள்ள பட்டியல்கள் - ரூ.மி. 8.24**
3.	நிலையான புண்ணியகிரம நிகழ்ச்சித்திட்டம	26.91	94%	25.95	-
4.	தலதா மாளிகையுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ள பள்ளேகல செயலாற்றுகை பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தல்	13 – 27.40 17 – 2.57	98%	13 – 24.43 17 – 2.57	-
5.	வித்தியாலங்கார சர்வதேச மாநாட்டு மண்டப நிருமாணம்	-	100%	-	நிலை Vவரையிலான வேலைகள் நிறைவு பெற்றுள்ளன. கட்டிடத்தை வித்யாலங்கார நம்பிக்கை நிதியத்துக்கு மாற்றுவதற்கு எற்பாடகள் நடைபெற்று வருகின்றனள.
6.	பௌத்த துறவிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	4.43	75%	3.28	செலுத்தப்படாதுள்ள பட்டியல்கள் - ரூ.மி. 0.67
7.	கட்டவாபிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயத்தின் அறநெறிப் பாடசாலை கட்டிட நிரமாணம்.	50.00	56%	49.84	-
8.	ஒரு புதிய வளாகத்தில் அமைச்சுக் கட்டிடத்தினைத் தாபித்தல்	50.00	50%	49.78	-

* நி.பி.66 இற்கிணங்க நிதி மாற்றல்களும் உள்ளடங்கும்.

** 2021 ஆம் ஆண்டு நிலுவையிலுள்ள விலைப்பட்டியல்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டின் முதல் 2 காலாண்டுக்கான நிலுவையிலுள்ள விலைப்பட்டியல்களான ரூபா.2.34 என்பன 2023 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.1.1 புனிதப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்

எனவே, 1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இல. (26 ஆவது உறுப்புரையின்படி) நகர மற்றும் நாட்டு திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2) மற்றும் 21(2) ஆ ஆம் பிரிவுகளின் கீழ் நகர அபிவிருத்திப் பிரதேசங்களாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணிகள் புனிதப் பிரதேசங்களாக அழைக்கப்படுகின்றன. இது தொடர்பில், பௌதீக திட்டமிடல் திணைக்களம் மற்றும் நில அளவைத் திணைக்களம் என்பவற்றின் உதவுகையானது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.


புனிதப் பிரதேசங்களாக அடையாளங் காண்பதற்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்.

- சமய ரீதியான முக்கியத்துவம்
- வரலாற்று ரீதியான முக்கியத்துவம்
- தொழ்பொருள் ரீதியான முக்கியத்துவம்
- கலாச்சார ரீதியான முன்னேற்றம்
- கட்டிடக் கலை ரீதியான முக்கியத்துவம்
- சுற்றாடல் ரீதியான முக்கியத்துவம்
- பொருளாதார மற்றும் சமுக முக்கியத்துவம்

2022 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை ரூபா.15 மில்லியனாகும். துறவிகள் பயிற்சி சமய சகவாழ்வு செலவினத்தில் ரூபா.1.48 மில்லியன் நிதி மாற்றப்பட்டது. மேற்குறித்த நிதிகளினைப் பயன்படுத்தி 05 மாகாணங்கள், 06 மாவட்டங்கள் மற்றும் புனித பூமிகளினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா.14,406,727.04 செலவிடப்பட்டுள்ளதுடன் மின்சாரம் இல்லாத விகாரைகளுக்கு மின்சாரம் வழங்குவதற்காக ரூபா.1.48 மில்லியன் தொகையானது விடுவிக்கப்பட்டுள்ளது.



கேகாலை லெனகல மஹா விகாரையின் பக்கச்சுவர் நிருமாணம்




அம்பாறை திகவாபிய மஹா விகாரையின் தாது மந்திரய நிருமாணம்

2.1.1.1 - அரச வெசாக் பண்டிகை - 2022


பௌத்த வருடம் 2565 (கலண்டர் வருடம் 2022) ஆனது இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பலாங்கொடை கூரகல ரஜமஹா விகாரையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. வெசாக் பண்டிகையினை முன்னிட்டு இந்த விகாரையானது வழிபாட்டுத் தலமாக மாற்றப்பட்டுள்ளது.





2.1.1.2 - அரச பொசொன் பண்டிகை


அரச பொசொன் பண்டிகை– 2022 ஆனது ஜுன் மாதம் 14 ஆம் திகதியன்று மிஹிந்தலை ரஜ மகா விகாரையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் கௌரவ விதுர விக்கிரமநாயக்க மற்றும் புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு.சோமரத்ன விதானபத்திரண மற்றும் அமைச்சின் அதிகாரிகளம் பங்குபற்றியிருந்தனர். சதி பிரித் பிங்கா மற்றும் ஆலோக பூஜையும் இடம்பெற்றுள்ளதுடன் அதமஸ்தானம் மற்றும் தந்திரிமலை பூஜா பூமியில் பல சமகால நிகழ்வகளும் இடம்பெற்றுள்ளன.





2.1.1.3 – அரச கதீனா வைபவம்

அரச கதீனா வைபவம் - 2022 ஆனது,அரச கதீனா வைபவமானது 2022.10.29 மற்றும் 30 ஆம் திகதிகளில் மிஹிந்தலை ரஜ மகா விகாரையினை மையமாக கொண்டு பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. அங்கு இந்த அமைச்சின் பங்களிப்புடன் கதீனா ஆடையானது சம்பிரதாயபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டதுடன் துறவிகளுக்கு சாம்பலைத் தூவுவதற்காக மிஹிந்தலை ரஜ மகா விகாரையினை மையமாக கொண்டு சாவடிகளைச் சீரமைக்கும் பணிகளுக்கு எமது அமைச்சு பங்களிப்பினை வழங்கியுள்ளது.





2.1.1.4 - புனித தலங்களில் சன்னங்கள் வழங்கும் நிகழ்வு

இலங்கை முழுவதும் பரவிக் கிடக்கும் ஆலயங்களில் இருந்து புனித தலங்களாக 14 தனித்துவ மிக்க ஆலயங்களுக்கான சந்நிதிகள் வழங்கும் நிகழ்வானது 2022.11.25 ஆம் திகதி அலரி மாளிகை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதற்காக, இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் மாண்புமிகு பிரதம மந்திரி தினேஸ் குணவர்தன அவர்களின் தலைமையில் புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, முதலமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் ஆகியோரினால் பின்வரும் விகாரைகளுக்கு சன்னங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- குருகல ரஜமஹா விகாரை, இரத்தினபுரி
- நிகசலா நுவர ரஜமஹா விகாரை, குருநாகல்
- மத்தேபொல ரஜமகா விகாரை,குருநாகல்
- பிங்கிரிய தேவகிரி ரஜமகா விகாரை, குருநாகல்.
- கொடஹென பரமானந்த புராண விகாரை, கொழும்பு
- மாமபிட கல்லென் ரஜமகா விகாரை, கேகாலை
- மகுல் மகா விகாரை, அம்பாறை
- பியங்கல ரஜமகா விகாரை, அம்பாறை
- கொலவெனிகம் ரஜ மகா விகாரை, மாத்தறை
- ஆதனகி கந்தபுராண ரஜமகா விகாரை, திருகோணமலை
- பம்பரகல ஆரண்யத சேனாசன, திருகோணமலை
- சங்கமலை பண்டைய ரஜமகா விகாரை, திருகோணமலை.
- ஆசிரிகந்த புராதன ரஜமகா விகாரை, திருகோணமலை.
- நாகலென ரஜமகா விகாரை, திருகோணமலை.

2.1.2 குறைவிருத்தியுடைய விகாரைகளின் புனரமைப்புத் திட்டம் மற்றும் தொலைதூர பகுதிகளில் உள்ள விகாரைகள் மற்றும் விகாரைகளுக்கான வசதிகளினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

பௌத்த மதத்தின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக உழைக்கும் போது அலயங்களில் காணப்படும் பௌத்த மதத்தின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக உழைக்கும் போது ஆலயங்களில் காணப்படும் குறைபாடுகளினைக் குறைப்பதற்கான அரசாங்க பங்களிப்புத் திட்டங்களாக இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதன் கீழ், பிராந்திய சமய அறநிலை சபைகளின் பரிந்துரையின் அடிப்படையில், ஒவ்வொரு பிராந்திய செயலகமும் விகாரைகளுக்குப் பெயர் சூட்டி, சமயப் பணிக்கு விகாரைகளின் தேவை மற்றும் பங்களிப்பு என்பனவற்றினைக் கருத்தில் கொண்டு, கருத்திட்ட ஆக்கங்களினைத் தேர்ந்தெடுக்கும். அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விகாரைகள் தொடர்பிலும் கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

2022 ஆம் ஆண்டினைப் பொறுத்த வரையில், திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்படி, ரூபா. 100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மேலும்,ரூபா. 2.61 மில்லியன் இந்த கருத்திட்டத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க, மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியானது ரூபா. 102.61 மில்லியனாகும்.

அத்தகைய ஒதுக்கீட்டிலிருந்து ரூபா. 35 மில்லியனை அமரதேவ அசபு நிருமாணத்திற்காக கலாச்சாரப் பிரிவக்கு மாற்றீடு செய்ததன் பின்னர் மீதியாகவுள்ள ஒதுக்கீடானது மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 71 கருத்திட்டங்களை விருத்தி செய்வதற்கும் 2021 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடானது கிடைக்கப் பெறாமையாலும் பயன்படுத்தப்பட்டது. 2021.12.31 ஆம் திகதியன்று அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்த விலைப்பட்டியல்களுக்காக ரூபா. 67.60 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2022.12.31 இல் மேற்கொள்ளப்பட்ட உண்மையான செலவினம் ரூபா. 61.72 மில்லியனாகும். 2021 ஆம் ஆண்டின் நிலுவையிலுள்ள விலைப்பட்டியல்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டின் முதல் மற்றும் இரண்டாம் காலாண்டின் நிலுவையிலுள்ள விலைப்பட்டியல்களான ரூபா. 8.24 மில்லியன் தொகையும் 2023 இல் பதிவு செய்யப்பட்டுள்ளன.



வராகொட பொகுணகல புராதன கல்லென் செனசுன – பாதுகாப்பு பக்கச்சுவர் புனரமைப்பு - (கேகாலை மாவட்டம் / ரம்புக்கனை பி.செ)



வராகொட பொகுணகல புராதன கல்லென் செனசுன – பாதுகாப்பு பக்கச்சுவர் புனரமைப்பு– (கேகாலை மாவட்டம் / ரம்புக்கனை பி.செ)

2.1.3 நிலையான புண்ணியகிரம நிகழ்ச்சித்திட்டம்

போதைப் பொருளற்றதும் தன்னம்பிக்கையினைக் கொண்டதும், ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியமான வாழ்வு நிறைந்த, குரூரமற்ற, ஆன்மிக ரீதியான சிந்தனைகளினைக் கொண்ட, மிகச் சிறந்ததும் மேம்படுத்தப்பட்டதுமான மனித வளத்தினை முழுமையாகக் கொண்டதுமான கிராமமே புண்ணியகிராம என அழைக்கப்படுகின்றது. மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டமானது புத்த மதத்தினை பாதுகாத்தல் மற்றும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் ''கிராம விகாரை'' எண்ணக்கருவினை உருவாக்குவதன் மூலம் சாதகமான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தேவையான புத்தமத கோட்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மக்களினை ஊக்குவிப்பதற்காக முன்னெடுக்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டில், நிலையான புண்ணியகிரம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2022.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு 22 மாவட்டங்களிலுள்ள 266 கிராமங்களில் 204 கிராமங்களில் 4 ஆண்டுகளுக்கு ரூபா.6.51 மில்லியன லிழுமியங்கள் மற்றும் சமூக மேம்பாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 9 மாவட்டங்களில் 2021.12.31 இலுள்ளவாறு நிலுவையிலுள்ள விலைப்பட்டியல்களுக்காக ரூபா.8.12 மில்லியன் மற்றும் ரூபா.3.30 மில்லியன் நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.





நல்லதொரு எதிர்கால சந்ததியினை உருவாக்கவதற்கு பெற்றோரின் பங்களிப்பினை வலியுறுத்தும் நிகழ்ச்சி மற்றும் பிள்ளைகளின் தலைமைத்துவ குணங்கள் விழுமியங்கள், வளர்ச்சி மற்றும் கல்விப் பண்புகளை மேம்படுத்த ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் வெலிவிட்டிய திவித்துர மாகாண செயகப் பிரிவுக்குட்பட்ட அம்பேகம கிராமத்தில் அமைந்துள்ள சிறி அமரரக்கித விகாரையில் நடாத்தப்பட்டது.





மாத்தறை கடவன்சதர பி.செ.பிரிவிலுள்ள ரஸ்செந்தேனிய சிறி புஸ்பாராம விகாரையில் கடந்த 4 வருடங்களாக இடம்பெற்ற நிகழ்ச்சித்திட்டத்தினை மீளாய்வு செய்தல்.

2.1.3.1 மின்சார வசதிகள் இல்லாத விகாரைகளுக்கு சூரிய மின்கலத்தினாலான மின்சாரத்தினை வழங்குதல்

சமய, பொருளாதார விழுமியங்கள் மற்றும் ஆன்மீக மேம்பாடு உள்ள மக்களாக குடிமக்களை உருவாக்குவதனை நோக்கமாக கொண்ட புண்ணியகிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விகாரையின் சமூகப் பணிகளுக்கு தற்போதைய தேவைக்கு ஏற்ற வகையில் சமுதாயத்திற்கு ஆற்றி வரும் சேவையினை மேலும் வலுப்படுத்துதல், தேசிய அதிகார அமைப்பிலிருந்து பிக்குகள் மற்றும் உள்ளூர் சமூகம் என்பன மின்சார வசதிகள் இல்லாமையால் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு இலங்கையில் மின்சார வசதிகள் இல்லாத விகாரைகளுக்கு சூரிய மின்சக்தியினை வழங்குவதற்காக மின்சக்தி அமைச்சுக்கு ரூபா.08 மில்லியன் விடுவிக்கப்பட்டது.

இலங்கையில் தற்போது நிலவும் மின்சார நெருக்கடியிக் கருத்தில் கொண்டு 2023 ஆம் ஆண்டில் இந்த அமைச்சினால் அமுல்படுத்தப்படவுள்ள இந்திய உதவித் திட்டத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக 04 ஆலயங்களுக்கு ரூபா. 7,508,660.00 செலவில் சூரிய சக்தியினை மேற்குறித்த திட்டங்களுக்கு வெற்றிகரமாக வழங்க முடிந்துள்ளது.



குச்சவெளி – மிஹிந்துலென புராதன ரஜமகா விகாரையில் நிறுவப்பட்டுள்ள சூரிய மினசக்தி



கோமரன்கடவல – திஸ்ஸ விகாரையில் நிருமாணிக்கப்பட்ட மூரிய சக்தி முறைமையினை விகாரை பீடாதிபதியிடம் கையளித்தல்.

2.1.3.2. போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்

சமய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு தேவையான பின்னணியை உருவாக்குதல் மற்றும் அனைத்து குடிமக்களையும் பூரண பொருளாதார மற்றும் ஆன்மீக வளர்ச்சியினைக் கொண்டவர்களாக முன்னேற்றுதல் என்பன இந்த அமைச்சின் நோக்கங்களாகும். போதைப்பொருள் பாவனையில் இருந்து மக்களைத் தடுப்பதே அந்த நோக்கங்களை அடைவதற்கான இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதன் கீழ் 2021 ஆம் ஆண்டில் 12 மாவட்டங்களின் 20 நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக ரூபா. 0.62 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது. கோவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பொதுமக்கள் ஒன்று கூடுவதில் ஏற்பட்ட தடைகள் காரணமாக ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

2022 இல் போதைத் தடுப்புக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

தொடர் இல.	மாவட்டம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	செலவினம்
1	கேகாலை	2	80,250.00
2	கிளிநொச்சி	1	36,250.00
3	குருநாகல்	3	197,500.00
4	கொழும்பு	5	181,250.00
5	நுவரெலியா	2	72,500.00
6	புத்தளம்	6	217,500.00
7	பொலநறுவை	1	36,250.00
8	மட்டக்களப்பு	3	108,750.00
9	மாத்தளை	1	36,250.00
10	இரத்தினபுரி	3	108,750.00
11	களுத்துறை	3	116,500.00
12	கம்பஹா	6	248,500.00
13	பதுளை	1	36,250.00
14	கண்டி	1	44,000.00
15	திருகோணமலை	2	159,000.00
16	சான்றிதழ் அச்சிடல்		84,240.00
மொத்தம்		**40**	**1,763,740.00**

2.1.4 பிக்கு பயிற்சி ஊக்குவிப்பு திட்டம்

பிக்குகளின் பல்வேறு மொழிகளின் அறிவு, புரிதல் மற்றும் நடைமுறைப் பயன்பாட்டுத் திறன்களின் வளர்ச்சி பௌத்தத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் இருப்புக்கு மிகவும் முக்கியமானது. இந்த நோக்கத்திற்காக, இந்நாட்டில் உள்ள பிக்குகளின் மொழி அறிவாற்றலை விரிவுபடுத்துவதற்காக தமிழ், ஆங்கிலம் மற்றும் ஏனைய மொழிகளைக் கற்பிப்பதற்கும்,உலகில் தர்மத்தை வளர்க்கும் நடவடிக்கைகளுக்குத் தேவையான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

2022 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டமானது, இலங்கை சர்வதேச பௌத்த கல்வி நிறுவகம் (சிபா பல்கலைக்கழகம்), இலங்கை பிக்குகளள் பல்கலைக்கழகம், இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களம் என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பின்வரும் பாடநெறிகளுக்கு ரூபா.3.9 மில்லியன் நிதிக் கொடுப்பனவுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட விதி முறைகளின் கீழ் ரூபா. 3.3 மில்லியன் நிதி ஒதுக்கீடானது செலவிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய ரூபா.672,564.44 தொகையானது நிதிப் பற்றாக்குறை காரணமாக 2023 ஆம் ஆண்டில் செலுத்தப் பட வேண்டியுள்ளது.





நிறுவனம்	பாடநெறி	பயனாளிகளின் எண்ணிக்கை	பெறப்பட்டள்ள நிதி ஒதுக்கீடு (ரூபா)
இலங்கை சர்வதேச பௌத்த கல்வி நிலையம்	ஆங்கிலம் பயிற்சி பாடநெறிகள் (கண்டி மாவட்டம்)	81	1,075,000.00
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	ஜப்பானிய மொழி டிப்புளோமா பாடநெறி	40	485,000.00
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	ஆங்கில மொழி டிப்புளோமா பாடநெறி	40	475,000.00
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	தமிழ் மொழி டிப்புளோமா பாடநெறி	40	475,000.00
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	சீன மொழி சான்றிதழ் பாடநெறி	25	315,000.00
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்புளோமா பாடநெறி	40	448,000.00

அரச கரும மொழிகள் திணைக்களம்	தமிழ் மொழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	15	112,350.00
தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி பாடநெறி நிறுவகம்.	தமிழ் மொழி பயிற்சி பாடநெறி	49	165,000.00
இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்	ஆங்கில மொழியில் சொற்பொழிவாற்றும் நிகழ்ச்சித்திட்டம்	26	120,000.00
	இரண்டு நாள் ஆங்கில மொழி பயிற்சி	53	278,595.00
மொத்தம்		**409**	**3,948,945.00**

2.1.5 தலதா மாளிகையுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ள பள்ளேகல செயலாற்றுகை பயிற்சி நிலையத்தின் நிருமாண வேலைகள்

இந்த செயலாற்றுகை பயிற்சி நிலையத்தின் நிருமாண வேலைகள், எதிர்கால தலைமுறைக்கு கலை சார்ந்த பாரம்பரியங்களை பரிசளிக்கும் நோக்குடன் இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற நிதி நன்கொடையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டன. இக்கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா.145.62 (பெ.சே.வ. நீங்கலாக) மில்லியனாகும். இக்கருத்திட்டத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கிணங்க, நிருமாண வேலைகளின் பெறுமதி மீது மதிப்பிடப்பட்ட பெசேவ உள்ளூர் நிதியங்களினால் செலுத்தப்படுதல் வேண்டும். எனவே, ரூபா.2.57 மில்லியன் திறைசேரி நிதியானது 2022 இல் இந்நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்துடன் தொடர்புடைய பெறுகைகள் நடவடிக்கைகள் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இக்கருத்திட்டப் பணிகளின் மேற்பார்வையானது இந்த அமைச்சு, இந்திய உயர் ஸ்தானிகராலயம், தலதா மாளிகையின் வெளிநாட்டு அலுவல்கள் பிரிவு என்பவற்றின் பிரதிநிதிகளினை உள்ளடக்கியதான குழுவொன்றினால் கையாளப்பட்டு வருகின்றது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இக்கருத்திட்டத்தில் ஏறக்குறைய 98% முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.





2.1.6 வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபம்

வித்தியாலங்கார பிரிவெனவிற்கு அரசாங்க அனுசரணைப் பங்களிப்பினை வழங்கும் நோக்குடன் நகர அபிவிருத்தி மற்றும் நீர்ப் போக்குவரத்து அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த மாநாட்டு மண்டபத்தின் நிருமாணப் பணிகள் வழங்கப்பட்டதன் பின்னர், நிருமாணப் பணிகளின் Vஆம் கட்டங்கள் புத்தசாசன அமைச்சின் நோக்கெல்லைக் ஏற்ப பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்பாட்டு நடவடிக்கைகளினை ஆரம்பிக்கவும் எதிர்கால நிருவாக நடவடிக்கைகளினை நெறிப்படுத்தவும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் தாபிக்கப்பட்ட முகாமைத்துவ நிதியத்துக்கு மாநாட்டு கட்டிடத்தினை ஒப்படைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், நிருமாண கண்காணிப்பின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகளைச் சரி செய்யும் வேலைகள் துரிதமாக நிறைவு செய்யப்பட்டு முகாமைத்துவ நிதியத்திடம் ஒப்படைக்கப்பட்டு வருவதுடன் கட்டிடத்திற்கான இணக்கச் சான்றிதழினைப் பெறுவதற்கான விண்ணப்பமானது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் தற்போது கட்டிடம் அமைந்துள்ள காணியின் நில அளவை திட்டமும் கட்டிடத் திட்டமும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தின் ஆறாம் கட்ட பணிகளினை வித்தியாலங்கார முகாமைத்துவ அறக்கட்டளையிடம் கையளித்த பின்னர் மேற்கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. எதிர்கால நடவடிக்கைகளினை சுய நிதி அடிப்படையில் நடாத்தவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது





2.1.7 கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியான் தேவாலயத்திலுள்ள அறநெறிப் பாடசாலைக் கட்டிட நிருமாணம்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலில் சேதமடைந்த கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயத்தின் அறநெறிப் பாடசாலை கட்டிடத்தினை நிருமாணிப்பது தொடர்பாக ரூபா.50,000 ஒதுக்கப்பட்டு கிராமப்புற வீட்டு வசதிகள், நிருமாண மற்றும் கட்டிடப் பொருட்கள் மற்றும் கைத்தொழில் ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் அது தொடர்பான நிருமாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2022 ஆம் ஆண்டினைப் பொறுத்த வரையில் ரூபா.49.84 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் பௌதீக ரீதியான முன்னேற்றம் 56% ஆகும்.





2.1.8 ஒரு புதிய வளாகத்தில் அமைச்சினை தாபித்தல்

தற்போது முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் இயங்கி வரும் டி.ஆர் விஜயவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள பகுதியளவில் நிருமாணிக்கப்பட்டுள்ள 9 மாடிகளினைக் கொண்டுள்ள கட்டிடத்தில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் சமய அலுவல்கள் திணைக்களத்தினை தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கட்டிடப் பொருட்களின் விலைகள் மிகவும் உயர்வடைந்திருந்தமையுடன் அதன் காரணமாக செலவுகளை கட்டுப்படுத்தவோ உரிய வகையில் முகாமைத்துவம் செய்யவோ முடியாத காரணத்தினால் வாடகை அடிப்படையில் தனியார் கட்டிடயங்களில் தொழிற்பட்டு வரும் அமைச்சின கீழ் செயற்படும் நிறுவனங்களை உடனடியாக அத்தகைய கட்டிடங்களில் இருந்து அகற்றும் தீர்மானத்தின்படி, இந்தக் கட்டிடத்தில் தற்போது கிறீஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம் தாபிக்கப்பட்டுள்ளது.

இந்து சமய அலுவல்கள் திணைக்களமும் விரைவில் அங்கே தாபிக்கப்படவுள்ளதுடன் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 50% நிலப் பரப்பளவும் பூர்த்தியடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா. 50 மில்லியன் நிதியில் செலவின முன்னேற்றம் 100% ஆகும்.

2.1.9 ஏனையவை

2.1.9.1 புத்த மத மதியுரைக் குழு

மஹாநாயக்க தேரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பௌத்த மத மதியுரைக் குழுவொன்று, புத்தசாசனத்தின் நீடித்து நிலைத்திருக்கும் தன்மை மற்றும் மதம் சார்ந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் மற்றும் இந்த அமைச்சுக்கு பௌத்தம் சார்ந்த வியடங்கள் தொடர்பில் அறிவுறுத்தல்களினை வழங்குதல் மற்றும் மதியுரைகளினைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற விடயங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தக் குழுவானது புத்த மதத்தினை முன்னேற்றுவதற்கும் பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகளினை எடுப்பதற்கு அமைச்சுக்கு ஆலோசனைகளினை வழங்கி வருகின்றது. இதேவேளையில், சம்புத்த சாசனத்தின் பதவி உயர்வு மற்றும் பாதுகாப்பிற்காக அங்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளினை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகியவை இந்த ஆலோசனைக் குழவின் ஆலோசனையின்படி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2.1.9.2 பௌத்த கலைக்களஞ்சியம்

பௌத்த கலைக் களஞ்சியத்தினை இணையத்தில் வெளியிடும் திட்டம் தொடர்பான திட்ட முன்மொழிவானது பௌத்த அலவல்கள் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட குழுவொன்று தயாரித்துள்ளதுடன் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவகத்திடமிருந்து அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளினைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தினை எவ்வாறு நடைமுறைப்படுத்தவது என்பது குறித்து குழுவொன்று நியமிக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரைகளின்படி செயற்படுத்தப்படும்.

2.1.9.3 விசாக்களுக்கான பரிந்துரைகளினை வழங்குதல்

இந்திய யாத்திரைக்கான கட்டணமில்லா விசாக்களினைப் பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைகளினை வழங்குதல், வெளிநாடுகளுக்குச் செல்கின்ற துறவிகளுக்கான பரிந்துரைகளினை வழங்குதல் மற்றும் இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டினைச் சேர்ந்த துறவிகளுக்கு விசாக்களினை வழங்குவது இந்த அமைச்சின் கடமையாகும்.

I. புனிதப் பயணம் மேற்கொள்ளும் மதகுருமார்கள் / பாமரர்களுக்கு விசா பரிந்துரைகளை வழங்குதல்

2022 மார்ச்சிலிருந்து தம்பதீப புனித யாத்திரைகளினை மேற்கொள்வதற்கான பரிந்துரைகள் மதகுருமார்கள் / மதகுருமார் அல்லாதவர்களுக்கு வழங்கப்படுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

II. கல்வி மற்றும் பௌத்த மத நடவடிக்கைகளுக்காக இங்கு வரும் வெளிநாட்டு துறவிகள், கன்னியாஸ்திரிகள் மற்றும் சாதாரண நபர்களுக்கு விசா பரிந்துரைகளை வழங்குதல்.

இதன் கீழ் வருகை விசாக்கள் மற்றும் வதிவிட விசாக்களுக்கான பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. விசாவிற்கான பரிந்துரைகள் 2022 இல் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன.

- 694 வெளிநாட்டு துறவிகள் மற்றம் துறவிகளுகக்ான விசா பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. (552 வதிவிட விசா மற்றும் 142 வருகை தரும் விசா)
- வெளிநாட்டு துறவிகளை இலவசமாக விசா நீடிப்பக்குத் தேவையான மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துதல். – 638

III. கல்விசார் மற்றும் தூதரக வேலைகளுக்காக துறவிகள் வெளிநாடு வெளிநாடு செல்லும் போது பரிந்துரைக் கடிதங்களினை வழங்குதல்

தேரவாத பௌத்தத்தை சர்வதேச ரீதியில் பரப்புவதற்கோ அல்லது கல்வி நோக்கத்திற்கோ இலங்கை பிரமுகர்கள் வெளிநாடு செல்லும் போது விசாவினைப் பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைக் கடிதங்கள் உரிய தூதரகங்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஆதற்கிணஙக, 2022 ஆம் ஆண்டில் 733 உள்ளூர் துறவிகளுக்கு வெளிநாடு செல்லும் போது விசா பரிந்துரைக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.1.9.4 யாத்திரிகர் வீயின் பராமரிப்பும் மேம்பாடும்.

இந்த அமைச்சுக்கு பின்வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு யாத்திரிகர் விடுதிகள் சொந்தமாகவுள்ளன. குறித்த யாத்திரிகர் விடுதிகளின் பராமரிப்பு மற்றும் நிருவாக நடவடிக்கைகள் என்பன இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- **புதுடில்லியிலுள்ள புத்தமத யாத்திரிகர் விடுதி**

இந்த யாத்திரிகர் விடுதியானது புதுடில்லி,பகர்கஞ், வெல்மிஸ்போட் மாவத்தையில் அமைந்துள்ளது. இந்த புத்த மத யாத்திரிகர் விடுதியானது இந்தியாவினால் இலங்கைக்கு அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட காணியில் அமைந்துள்ளது. இது இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.



- **நேபாளத்திலுள்ள துட்டகெமுனு யாத்திரிகர் விடுதி**

இந்த யாத்திரிகர் விடுதியானது நேபாளத்திலுள்ள ருபன்டே, லும்பினியில் அமைந்துள்ளது. இந்த யாத்திரிகர் விடுதியினை நிருமாணிப்பதற்கான காணி லும்பினி

அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த யாத்திரிகர் விடுதியானது நேபாளத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படுகின்றது. ஒரே நேரத்தில் சுமார் 130 பேர் வரையில் இந்த விடுதியில தங்கலாம். இதில் மாநாட்டு மண்டபம் மற்றும் திறந்த வெளி விழா மண்டபம் என்பனவும் காணப்படுகின்றன.



- **அநுராதபுரம் குருந்தம்குலம ரஜரட்ட யாத்திரிகர் விடுதி**

இந்த விடுதியானது இந்த அமைச்சின் கீழ் நிருவகிக்கப்பட்டு வருவதுடன் ஒரே நேரத்தில் ஏறக்குறைய 30 பேர் தங்குவதற்கான வசதிகள் உள்ளன.



2.1.10 சமய அலுவல்கள் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தொழிற்பாடுகள்

பௌத்த அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், முஸலீம் சமய அலுவல்கள் திணைக்களம் மற்றும் கிறீஸ்தவ சமய அலவல்கள் திணைக்களம் போன்ற அனைத்து மதங்களுக்குரிய திணைக்களங்களும் சமய சகவாழ்வுக்காக ஒரு அமைச்சின் தாபிக்கப்பட்டு பேணப்படுகின்றமையால் பௌத்த இந்து சமய, முஸ்லிம், சமய மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து சமய நடவடிக்கைகளும் சமய அலவல்கள் பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றன.

சமய மற்றும் சமூக நல்லிணக்கதிற்காக இத்துறையால் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- கடமைகளினை மேற்பார்வை செய்தலும் வழிகாட்டுதலும்.

- அமைச்சரின் அமைச்சரவைப் பத்திரங்களைத் தயாரித்து அந்தந்த திணைக்களங்களின் நோக்கம் தொடர்பான கட்டுப்பாட்டு பிரிவிடம் ஒப்படைத்தலும் அவற்றின் முடிவுகளினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளினை மேற்கொள்ளுதலும்.

- அனைத்து திணைக்களங்கள் தொடர்பான காணி மற்றும் சமய அலுவல்கள் தொடர்பான ஏனைய கடமைகளினை மேற்கொள்ளுதல்

- இந்து சமய முஸ்லீம் சமய மற்றும் கிறீஸ்தவ சமய அலுவல்கள் ஆகிய மூன்று துறைகளினால் பரிந்துரை செய்யப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்படும் அந்தந்த மதங்களைச் சேர்ந்த மதகுருமார் மற்றும் ஏனையவர்களுக்கான வருகை தரும் விசாக்களை நீடித்தலும் வதிவிட விசாக்களை நீடிப்பதற்குத் தேவையான பாதுகாப்பு அனுமதிகளினைப் பெறுவதற்குத் தேவையான பாதுகாப்பு அனுமதிகளினைப் பெறுவதற்கு பாதுகாப்பு அமைச்சுக்கு பரிந்துரை செய்தல் மற்றும் மேற்படி அமைச்சினால் அறிவிக்கப்பட்ட ஏனைய விசேட விடயங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளினை மேற்கொள்ளமாறு குடிவரவுத் திணைக்களம் மற்றும் ஏயை தொடர்புடைய நிறுவனங்களை ஒருங்கிணத்து அறிவித்தல்

- சமயம் சார்ந்த சுற்றுலாக்களுக்கான விசா சலுகைகளுக்கான பரிந்துரைகளினை மேற்கொள்ளுதல்.

- விகாரைகள், கோவில்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளினை ஆராய்ந்து மேலதிக நடவடிக்கைகளுக்காக உரிய திணைக்களுக்கு அனுப்பி வைத்தல்.

- விகாரைகள், கோவல்கள் மற்றும் தேவாலயங்களை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தில் எழும் சட்ட அல்லது சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சின் தலையீடு மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை திணைக்களங்களுக்கு வழங்குதல்.

- இலங்கைக்கு முஸ்லீம் சமய நூல்களை இறக்குமதி செய்யும் போது அத்தகைய நூல்களை சுங்கத்திலிருந்து விலக்களப்புச் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சிலிருந்து தேவையான பாதுகாப்பு அனுமதகளினைப் பெற்று அத்தகைய தீர்மானங்கள் தொடர்பில் சுங்கத் திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினருக்கு தெரியப்படுத்துதல்.

- சமயங்களுகிடையிலான ஒத்துழைப்பு மற்றும் சகோதரத்துவத்தினை ஏற்படுத்தும் வகையில் சமய சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்து செயற்படுதல்.

- வழிபாட்டுத் தலங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக பறிமுதல் செய்யப்பட்ட கட்டுமானப் பொருட்களை சலுகை விலையில் வழங்குவதற்கான பரிந்துரையை நீதி அமைச்சிடம் சமர்ப்பித்தல்.

- மத விவகாரங்களுக்காக திணைக்களங்களுக்கு வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட நன்கொடைகளை சுங்கத்திலிருந்து விலக்களிப்புச் செய்வதற்கு அமைச்சு நேரடியாக தலையீடு செய்தல்.

- அனைத்து மத வழிபாட்டுத் தலங்களையும் நிருமாணித்தல் மற்றும் பராமரித்தல், அங்கீகரிக்கப்படாத வழிபாட்டுத் தலங்களை நிருமாணிப்பதற்கான பணிகளினை மேற்கொள்வது மற்றும் இவ்விடயங்களில் தீர்மானங்களை எடுத்தல்.

- அனைத்து மத திணைக்களங்கள் தொடர்பான சர்வதேச விவகாரங்கள் தொடர்பான வெளி விவகார அமைச்சுக்கள் மற்றும் தூதரகங்கள் மற்றும் உயர் ஸ்தானிகராலயங்கள் என்பவற்றினால் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் மற்றும் முன்மொழிவுகளினைக் கையாளுதலும் அவ்விவகாரங்களை மேற்பார்வை செய்தலும்.
- புத்தசாசன நிதியத்தின் நடவடிக்கைகளினை மேற்பார்வையிட்டு வழிகாட்டுதல்.
- அமைசசின் செயலாளரினால் அவ்வப்போது குறித்துரைக்கப்படும் ஏனைய கடமைகளினை நிறைவேற்றுதல்.

மேலே உள்ள பக்கங்கள் 01 முதல் 22 வரை உள்ள தகவல்கள் சரிபார்க்கப்பட்டதாகவும், அந்த புள்ளிவிபரங்களுடன் உடன்படுவதாகவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்

2.2 எதிர்கால இலக்குகள்

2.2.1 2023 இல் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்

தொடர் இல.	நிகழ்ச்சித்திட்டம்	2023 செயல்திட்டத்திற்கு அமைவாக எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடு / இலக்குகள்.	2023 இன் எதிர்கால நோக்கத்திற்கு இணங்க இலக்குகள்.
01	குறைவிருத்தி விகாரைகளினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்.	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மில்)) 100.00	வேசாக் பண்டிகையினை முன்னிட்டு புத்தளம் மாவட்டத்தில் உள்ள விகாரைகளினை புனரமைப்பு செய்வதற்காக - ரூபா. 16.00 மில். இயற்கை அழிவகளினால் சேதமடைந்த விகாரைகளினை புனரமைப்பு செய்வதற்காக. - ரூபா. 30.00 மில். ஏனைய மாவட்டங்களிலுள்ள விகாரைகளின் மேம்பாட்டுக்காக - ரூபா. 45.76 மில். 2022 ஆம் ஆண்டு நிலுவையிலுள்ள விலைப்பட்டியல்களினைச் செலுத்துதல் - ரூபா. 8.24 மில்.
02	இடர் மிகுந்த இடங்களிலுள்ள விகாரைகளினை விருத்தி செய்தல்.	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மில்)) 10.00	தொண்டு நிகழ்ச்சித்திட்டம் - ரூபா. 7.00 மில். போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் - ரூபா. 3.00 மில்.
03	புனிதப் பிரதேச அபிவிருத்தி	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மில்) 30.00	வுர்த்மானியில் வெளியிடப்பட்ட விகாரைகளின் கட்டமைப்புக்கு - ரூபா. 25.00 மில். ஆரச வெசாக் பண்டிகை - ரூபா.5.00 மில்.
04	பிக்குகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மில்) 5.00	பிக்குகளின் திறன் மேம்பாடு, ஒழுக்கம் மற்றும் பௌத்த பாரம்பரியம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - ரூபா. 4.33 மில். 2022 ஆம் ஆண்டு நிலுவையிலுள்ள விலைப்பட்டியல்களினைச் செலுத்துதல் - ரூபா. 0.67 மில்.
05	தலதா மாளிகை இணைப்புச் செய்யப்பட்டுள்ள பள்ளேகல செயலாற்றுகை பயிற்சி நிலைய நிருமாணம்.	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மில்) 6.00	நிருமாண வேலைகள் நிறைவடைந்ததும் தலதா மாளிகையிடம் ஒப்படைத்தல்
06	கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயத்தின் அறநெறிப் பாடசாலை கட்டிட நிருமாணம்	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மில்) 45.00	நிருமாணத்தினை நிறைவு செய்தல்
07	தோல்லியல் பெறமதி வாய்ந்த புராதன விகாரைகளினை புனரமைப்பு செய்தல்	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மில்) 11.00	657 பிரிவெனாக்கள் மற்றும் பௌத்த விகாரைகளுக்கு சூரிய சக்தியினாலான மின்சக்தியினை வழங்குதல் - ரூபா.1800 மில்.
08	ஆமைச்சினை புதிய வளாகத்தில் தாபித்தல்	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மில்) 100.00	நிருமாணத்தினைப் பூர்த்தி செய்தல்

அத்தியாயம் 03 - 2022 ஆம் ஆண்டுக்கான ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகை

ஏசிஏ - எப்

3.1. 2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றுகை கூற்று

வ.செ.திட்டம் 2022		குறிப்பு	உண்மையான 2022	2021	
ரூபா.			ரூபா.	ரூபா.	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	பொருட்கள், சேவைகளுக்கான வரிகள்	2	-	-	ஏசிஏ - 1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள	3	-	-	
-	வரியல்லா வருமானம் மற்றும் பிற	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமல்லாத பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி முற்பணம்		258,835,000	283,135,000	ஏசிஏ - 3
-	வைப்புக்கள்		561,123	4,106,182	ஏசிஏ - 4
-	முற்பணக் கணக்குகள்		8,372,931	7,495,596	ஏசிஏ - 5
	ஏனைய பிரதான பேரேட்டு பெறுகைகள்		10,396,941	9,925,899	
	மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)				
-			**278,165,995**	**304,662,677**	
	மொத்த வருமானப் பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ =(அ) +(ஆ)				
-			**278,165,995**	**304,662,677**	
	திறைசேரிக்கான அனுப்புதல்கள் (ஈ)		-	-	
	தேறிய வருமானப் பெறுகைகள் மற்றும் வருமானமல்லாப் பெறுகைகள் (உ) = (இ) - (ஈ)		**278,165,995**	**304,662,677**	
	கழி: செலவினம்				
-	**மீண்டெழும் செலவினம்**		-	-	
129,600,000	வேதனாதிகள், சம்பளங்கள் மற்றும் பிற ஊழிய நன்மைகள்	5	112,708,006	111,905,004	
125,434,000	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	104,000,943	100,750,657	ஏசிஏ-2(ii)
450,000	உதவுதொகை, மானியம் மற்றும் மாற்றல்கள்	7	412,989	422,037	
-	வட்டிக் கொடுப்பனவுகள	8	-	-	
-	ஏனைய மீண்டெழும் செலவினம்	9	-	-	
255,484,000	**மொத்த மீண்டெழும் செலவினம் (ஊ)**		**217,121,938**	**213,077,699**	
	மூலதனச் செலவினம்				
60,900,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடும்.	10	55,892,012	9,374,586	
54,400,000	மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்துதல்	11	53,148,820	17,478,797	
145,400,000	மூலதன மாற்றல்கள்	12	132,345,553	530,677,866	ஸிஐஎ-2(ii)
-	நிதிச் சொத்துக்களினைக் கையகப்படுத்துதல்	13	-	-	
400,000	திறன் மேம்பாடு	14	361,590	199,000	
-	பிற மூலதனச் செலவுகள்	15	-	-	
261,100,000	**மொத்த மூலதனச் செலவினம் (எ)**		**241,747,975**	**557,730,249**	
	வைப்புக் கொடுப்பனவு		1,571,306	37,262,492	ஏசிஏ - 4
	முற்பணக் கொடுப்பனவு		8,441,081	9,031,644	ஏசிஏ - 5
	ஏனைய பிரதான பேரேட்டுச் கொடுப்பனவுகள்		-	-	
	பிரதான பேரேட்டுச் செலவுகள் (ஏ)		**10,012,387**	**46,294,136**	
	மொத்தச் செலவினம் (ஐ) = (ஊ + எ + ஏ)		**468,882,300**	**817,102,084**	
516,584,000	**டிசம்பர் 31 இலுள்ளவாறான மீதி ஏ = (இ-எ)**		**(190,716,305)**	**(512,439,407)**	
	கட்டுநிதிக் கூற்றின்படியான மீதி 2022 டிசம்பர் 31 இல் கட்டுநிதி மீதி		**(190,716,305)**	**(512,439,407)**	ஏசிஏ - 7
			-		ஏசிஏ - 3
			(190,716,305)	**(512,439,407)**	

3.2. 2022 டிசம்பர் 31 இலுள்ளவாறான நிதி நிலைமை பற்றிய கூற்று

	குறிப்பு	உண்மையான	
		2022	2021
		ரூபா.	ரூபா.
நிதி அல்லாத சொத்துக்கள்			
சொத்து, பொறித் தொகுதி, உபகரணம்	ஏசிஏ - 6	1,019,348,206	1,060,474,786
நிதிச் சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசிஏ-5(ஆ)	23,012,585	22,944,435
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	ஏசிஏ--3	-	-
மொத்தச் சொத்துக்கள்		**1,042,360,790**	**1,083,419,221**
நிகர சொத்து / பங்கு			
திறைசேரிக்கான தேறிய சொத்து		(228,235)	(1,306,567)
ஆதனம், பொறி, உபகரணம்		1,019,348,206	1,060,474,786
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசிஏ-5(ஆ)		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்கு	ஏசிஏ-4	23,240,820	24,251,002
முற்பண மீதி	ஏசிஏ--3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**1,042,360,790**	**1,083,419,221**

24 முதல் 25 வரையான பக்கங்களில் மேலே உள்ள ஏ.சி.ஏ வடிவத்தில் இலக்கம் 1 முதல் 7 வரையில் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான கணக்கு அறிக்கைகள் மற்றும் 27 முதல் 51 வரையான பக்கங்களில் வழங்கப்பட்ட கணக்குகளுக்கான குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி மிகவும் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதிக் கணக்கின் புள்ளிவிவரங்கள், தொடர்புடைய கணக்கீட்டு குறிப்புக்கள் மற்றும் ஏனைய கணக்கீட்டு தகவல்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடன் ஒப்பு நொக்கப்பட்டுள்ளதுடன் இந்த புள்ளிவிபரங்களுடன் உடன்படுகின்றன என்பதையும் நாங்கள் இதன் மூலம் சான்றுப்படுத்துகின்றோம்.

நிதிக் கட்டுப்பாட்டிற்கான பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையானது அறிக்கையிடல் நிறுவனத்தில் நடைமுறையிலுள்ளது என்பதையும் நிதிக் கட்டுப்பாட்டிற்கான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் செயல்திறனைக் கண்காணிக்கவும் அவற்றினைத் திறம்பட செயற்படுத்துவதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்யவும் அவ்வப்போது மதிப்பாய்வுகள் நடாத்தப்படுகின்றன என்பதனை நாங்கள் இதன் மூலம் சான்றுப்படுத்துகின்றோம்.

.....	.....	.....
பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதம கணக்காளர்	பணிப்பாளர் (நிதி) / ஆணையாளர் (நிதி)
பதவி	பதவி	பதவி
திகதி	திகதி	திகதி

3.3. 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மையான	
	2022	2021
	ரூபா	ரூபா
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணம், அபராதம், தண்டப் பணம், உரிமங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானமல்லாத பெறுகைகள்	10,396,941	9,925,899
ஏனைய தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	-	-
பெறப்பட்ட முற்பணம்	258,835,000	283,135,000
முற்பண அறவீடுகள்	6,403,619	7,910,933
பெறப்பட்ட வைப்புக்கள்	561,123	4,156,207
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (அ)	**276,196,683**	**305,128,039**
கழி – காசு செலவிடல்:		
ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு	193,236,327	201,529,693
மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள்	412,989	422,037
ஏனைய செலவின தலைப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள்	8,731,094	1,164,908
திறைசேரிக்குச் செலுத்திய கட்டுப்பணம்	-	-
முற்பணம் செலுத்துதல்	8,454,286	9,877,176
வைப்புக்கள் செலுத்துதல்	1,571,306	18,603,081
தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)	**212,406,001**	**231,596,895**
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**63,790,681**	**73,531,144**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-
சொத்து விற்பனை பௌதீக ஆதன விற்பனை	-	-
உபகரண கட்டணங்கள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு (ஈ)	**-**	**-**
கழி – காசு செலவிடல்:		
பௌதீக சொத்து கொள்வனவு நிர்மாணம் அல்லது வேறு முதலீடுகளைக் கையகப்படுத்துதல்	63,790,681	73,531,144
முதலீட்டு செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)	**63,790,681**	**73,531,144**
முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ) = (உ)-(ஈ)	**(63,790,681)**	**(73,531,144)**
මෙහෙයුම් හා ආයෝජන ක්‍රියාකාරකම්වලින් ජනිත වූ ශුද්ධ මුදල් ප්‍රවාහය (ඇ)=(ඇ) + (ඊ)	**0.00**	**0.00**
நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
உள்நாட்டுக் கடன் பெறுகை	-	-
வெளிநாட்டுக் கடன் பெறுகை	-	-
பெறப்பட்ட மானியங்கள்	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு (ஏ)	**-**	**-**
கழி – காசு செலவிடல்::		
உள்நாட்டுக் கடன் பெறுகை மீள் கொடுப்பனவு	-	-
வெளிநாட்டுக் கடன் பெறுகை மீள் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாட்டுகாக செலவிடப்பட்ட மொத்த காசு (ஐ)	**-**	**-**
நிதிசார் நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஓ) = (ஏ) - ()	**-**	**-**
நிதிச் செயற்பாட்டிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஓ) = (ஏ)-(ஐ)	**-**	**-**
ஜனவரி 01 அன்று ஆரம்ப காசு மீதி	**-**	**-**
டிசம்பர் 31 அன்று இறுதி காசு மீதி	**-**	**-**

3.4. நிதிசார் வெளிப்படுத்துகை கூற்று

ரூபா.

தலைப்பு	நிகழ்ச்சித்திட்டம்(1)					நிகழ்ச்சித்திட்டம் (2)					மொத்த செலவினம்
	ஏற்பாடு				செலவினம்	ஏற்பாடு				செலவினம்	
	வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு ஒதுக்கீடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு	நி.பி.66/69 மாற்றல்கள்	மொத்த தேறிய ஒதுக்கீடு		வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டு ஒதுக்கீடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு	நி.பி.66/69 மாற்றல்கள்	மொத்த தேறிய ஒதுக்கீடு		
	(1)	(2)	(3)	(4) = (1)+(2)+(3)	(5)	(6)	(7)	(8)	(9)=(6)+(7)+(8)	(10)	(11)=(5)+(10)
மீண்டுவரும் செலவுகள்											
ஆளுக்கிய வேதனாதிகள்	129,600,000	-	-	129,600,000	112,708,006	-	-	-	-	-	112,708,006
பிரயாணச் செலவுகள்	3,500,000	-	(600,000)	2,900,000	1,330,149	-	-	-	-	-	1,330,149
வழங்கல்கள்	20,450,000	-	8,150,000	28,600,000	28,132,127	-	-	-	-	-	28,132,127
□ பேணுதல் செலவுகள்	11,400,000	-	(2,872,000)	8,528,000	6,111,348	-	-	-	-	-	6,111,348
சேவைகள்	22,600,000	-	(2,050,000)	20,550,000	17,416,960	51,300,000	16,184,000	(2,628,000)	64,856,000	51,010,358	68,427,318
மாற்றல்கள்	450,000	-	-	450,000	412,989	-	-	-	-	-	412,989
வட்டிச் செலவு	-	-	-	-	-	-	-	-	-	-	-
ஏனையவை மீண்டுவரும் செலவுகள்.	-	-	-	-	-	-	-	-	-	-	- -
மொத்தம்	**246,400,000**	**-**	**5,256,000**	**251,656,000**	**219,515,153**	**102,600,000**	**32,368,000**	**(5,256,000)**	**129,712,000**	**102,020,716**	**321,535,869**

ரூபா.

தலைப்பு	நிகழ்ச்சித்திட்டம்(1)					நிகழ்ச்சித்திட்டம் (2)					மொத்த செலவினம்
	ஏற்பாடு				செலவினம்	ஏற்பாடு				செலவினம்	
	வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு ஒதுக்கீடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு	நி.பி.66/69 மாற்றல்கள்	மொத்த தேறிய ஒதுக்கீடு		வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டு ஒதுக்கீடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு	நி.பி.66/69 மாற்றல்கள்	மொத்த தேறிய ஒதுக்கீடு		
	(1)	(2)	(3)	(4) = (1)+(2)+(3)	(5)	(6)	(7)	(8)	(9)=(6)+(7)+(8)	(10)	(11)=(5)+(10)
மூலதன செலவுகள்											
□ மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்	60,900,000	-	-	60,900,000	55,892,012	-	-	-	-	-	55,892,012
மூலத்தனச் சொத்க்களின் கொள்ளல்	4,400,000	-	-	4,400,000	3,559,327	50,000,000	-	-	50,000,000	49,589,493	53,148,820
மூலதன மாற்றல்கள்	-	-	-	-	-	155,000,000	25,400,000	(35,000,000)	145,400,000	132,345,554	132,345,554
நிதிச் சொத்துக்கிளன் கொள்ளல்	-	-	-	-	-	-	-	-	-	-	-
திறன் விருத்தி	400,000	-	-	400,000	361,590	-	-	-	-	-	361,590
ஏனைய மூலதன செலவினம்	-	-	-	-	-	-	-	-	-	-	-
மொத்தம்	**70,500,000**	**-**	**-**	**70,500,000**	**63,733,845**	**410,000,000**	**50,800,000**	**(70,000,000)**	**390,800,000**	**363,870,094**	**427,603,939**
மொத்த மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகள்	**316,900,000**	**-**	**5,256,000**	**322,156,000**	**283,248,999**	**512,600,000**	**83,168,000**	**(75,256,000)**	**520,512,000**	**465,890,810**	**749,139,809**

3.5. வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா. 000

வருமான குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான ஒதுக்கீடு (%)
இல்லை					

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா. 000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீட்டுவகை		உண்மையான செலவினம்	இறுதிஒதுக்கீட்டின் %ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டுவரும்	239,300	255,484	217,122	85%
மூலதனம்	270,700	261,100	241,748	93%

3.7. நி.பி.208 இன்படி, ஏனைய அமைச்சு / திணைக்களங்களினைப் பிரதிநிதித்துவப்படுத்தும இந்த திணைக்களத்திற்கு / மாவட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு

தொ.இல.	மாவட்டம்	செலவினத் தலைப்பு	தேசிய வெசாக் பண்டிகை	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்	ஏப்பிரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்	செப்ரெம்பர்	டிசம்பர்	மொத்தச் செலவினம்	%
	செலவின விபரம்		101-2-6-1409-(5)												
	அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடு		நிதி ஒதுக்கீடு	வைப்பிலிடுதல்											
	8,372,000														
1	கொழும்பு	255	3,627,300.00						3,627,300.00					3,627,300.00	100%
2	கம்பஹா	256	-											-	
3	களுத்துறை	257	-											-	
4	கண்டி	258	-											-	
5	மாத்தளை	259	-											-	
6	நுவரெலியா	260	-											-	
(ii) நிதிப்பிரமாணம் 113 (6) மற்றும் 2020 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய இலக்கம் 01/2020 உடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு	சேவையை விட்டுச் சென்று 5 வருடங்கள் கடந்து போயுள்ள கலாச்சாரப் பிரிவைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 220,488 தொகையுடைய மொத்த மீதியை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.
(இ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தி மற்றும் அரச நிதித் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி இலக்கம் 14	புத்தசாசனப் பிரிவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் இணக்கமடைவதாக குறிப்பிடப்பட்டிருந்த 09 தேவைப்பாடுகள் இணங்கவில்லை என்பது அவதானிக்கட்டது. மேலும் கலாச்சாரப் பிரிவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் இணக்கமடைவதாக குறிப்பிடப்பட்டிருந்த 03 தேவைப்பாடுகள் இணங்கவில்லை என்பது அவதானிக்கட்டது.
2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்கமுடைய அரச நிருவாக சுற்றிக்கையின் 3.3 ஆம் பிரிவு.	எரிபொருள் பயன்பாட்டில் பாதகமான மாற்றங்கள் காணப்படுமாயின் அதனை இனங்கண்டு கொள்வதற்காக சுற்றறிக்கையின் இணைப்பு 1 இன் பிரகாரம் போக்குவரத்து சேவைக் குறிப்பை மாதாந்தம் பூரணப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

2.4 வைப்பு

புத்தசாசனப் பிரிவில் 2022 டிசம்பர் 31ஆம் திகதிக்கு வைப்பு மிகுதியாக ரூபா. 23,240,820 தொகை காணப்பட்டதுடன், அதில் இரண்டு ஆண்டுகள் கடந்ததன் பின்னரான மொத்தம் ரூபா. 21,106,115 தொகையை ஒப்பந்தத்திற்கான 05 தடுப்பு வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.5. வங்கிக் கணக்கினை கையாளுதல்

வங்கிக் கணக்குகளை பராமரிக்கும் போது காசோலைகளில் கைச்சாத்திடும் அதிகாரிகள் நிதிப்பிரமாணம் 880 இன் படி அரச அதிகாரிகளின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் பிணை வைக்க வேண்டிய போதிலும் புத்தசாசனப் பிரிவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பிணையை அறிவீடு செய்வதற்குரிய நடவக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. தொழிற்பாட்டு மதிப்பாய்வு

3.1 செயலாற்றுகை

(அ) 2020 ஆகஸ்ட் 28ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிந்து 150 நாட்களுக்குள் அந்த ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கையானது 2022 செப்டம்பர் 30 ஆம் திகதியிலேயெ பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

(ஆ) வருடாந்த செயல்திட்டத்துடன் தொடர்புடைய முன்னேற்றமும் செயலாற்றுகையும்

i. கலாச்சார அலுவல்கள் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் பிரதான வேலைத்திட்டம் கலாச்சார நிலைய வேலைத்திட்டமாகும். எனவே ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் கலாச்சார நிலையம் ஒன்று நிறுவப்பட உள்ளதாக வருடாந்த செயற்திறன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்படி இருந்தும் முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஒரு கலாச்சார நிலையம் கூட தாபிக்கப்படவில்லை என்பதுடன், இவ்வருடத்தில் கலாச்சார நிலையங்களை நிர்மாணிக்கும் போது கூட இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

ii. செயல்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள் விரிவான முறையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்கள்/செயற்திட்டங்கள் என்னவென்பது குறித்து தெளிவாக இல்லை என்பதுடன், அந்நடவடிக்கைகள் தொடர்பான நோக்கங்கள் மற்றும் இலக்குகள் எட்டப்பட்டதா என்பதை தீர்மானிக்க முடியவில்லை.

iii. செயல்திட்டத்தின் குறிக்கோள் இலக்கம் 04 இன் இலக்குகளாக நிலையான அபிவிருத்தி இலக்குளை அடைவதற்காக செயற்படுதல் என்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. 2030 ஆம் ஆண்டளவில் கல்வி கற்கும் அனைவரும் நிலையான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு அறிவு மற்றும் திறன்களைப் பெற்றிருத்தல் மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மையை மதிப்பீடு செய்வதற்காக திட்டங்கள் கண்டறியப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

iv. குறிக்கோள் இலக்கம் 11இல் இலக்கு 11.4 என்பதாக அனைத்து கலாச்சார மற்றும் இயற்கைப் பாரம்பரியங்களைப் பாதுகாத்தல், பாதுகாப்பு மற்றம் பாதுகாப்புக்கான முயற்சிகளை வலுப்படுத்தும் இலக்குகளாக தமிழ், முஸ்லிம் மற்றும் பிற கலாச்சார பாரம்பரிய உரிமைகளுக்கான திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சமூக கலாச்சார ஒருங்கிணைப்புக்கான விசேட திட்டங்கள் (101-2-5-6-1508)

i. இந்த செலவு விடயத்தின் மூலம் கலாச்சார மத்திய நிலையங்களினூடாக நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கலாச்சார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு ரூபா. 10,000,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2022 டிசம்பர் 19 ஆம் திகதி அதில் ரூபா. 6,560,000 ஒதுக்கீடு 101-2-5-9-1409 செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக அச் செலவு விடயத்தின் கீழ்

மீதமுள்ள ஒதுக்கீட்டை குறைந்த பெறுமதியாகக் காண்பித்து செயலாற்றுகை அறிக்கையில் நிதி முன்னேற்றப்பாடு 100 சதவீதம் என காட்டப்பட்டுள்ளது. இருந்த போதிலும், கலாச்சார நிலையங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் கலாச்சார மேம்பாட்டு நிகழ்ச்சிகளுக்கான நிதியுதவி வழங்குவதானது குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

ii. வருடாந்த செயல்திட்டத்தின் படி சம்பந்தப்பட்ட செலவு விடயத்தின் செயலாற்றுகை குறியீடானது ''செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கலாச்சார ஊக்குவிப்புத் திட்டங்களின் எண்ணிக்கை'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதற்கான எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் நிறுவப்படவில்லை. இருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட செலவு விடயத்தின் பௌதீக முன்னேற்றமானது 100 சதவீதம் என வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ளது.

iii. இச்செலவின தலைப்பின் கீழ் சமூக கலாச்சார ஒருங்கிணைப்புக்கான விசேட திட்டங்கள் செயற்பாடுகளாக அடையாளம் காணப்பட்ட போதிலும் வெவ்வேறு இனங்களின் கலாச்சாரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல்வகைத் தன்மையுடன் கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரச சேவையாளர்களுக்கிடையிலான ஆக்கப் போட்டி (101-02-05-08-1409)

2022ஆம் அண்டில் அரச சேவையாளர்களுக்கிடையிலான ஆக்கப் போட்டிக்கான விண்ணப்பம் கோரல் மற்றும் முன் பிரச்சார நடவடிக்கைகள் இந்தச் செலவுத் தலைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எனினும், ஆண்டிற்குள் அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் தொடர்புடைய செலவு விடயத்தின் பௌதீக முன்னேற்றப்பாடு 99 சதவீதம் என்பதாக வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ) சில்ப கம்மான கிராமிய நிகழ்ச்சித் திட்டம் (101-02-05-21-2506)

சில்ப கம்மான நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது செயற்பாட்டின் கீழ் உரிய உப செயற்பாடுகள் மூன்றில் எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், 18 கைவினைஞர்கள் மற்றும் 12 நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுக்கான பரிசளிப்பு விழாவொன்று நடாத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் தும்பரா மாதிரி தொழில்துறையை ஊக்குவிக்கும் நோக்கம் அடையப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளாத காரணத்தினால் பௌதீக முன்னேற்றம் ஏற்படாவிடினும், 48 சதவீதமான பௌதீக முன்னேற்றம் வருடாந்த செயற்திறன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஊ) கலாச்சாரப் பெறுமானங்கள் மற்றும் உள்நாட்டு அறிவு தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் (101-02-05-29-2507)

இதன் கீழ், பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சிப் பிரிவை நிறுவுதல் மற்றும் தேசிய கலாச்சாரக் கொள்கையை தயாரித்தல் ஆகிய நடவடிக்கைகள் இவ்வருடத்தில் நிறைவடையவில்லை என்பதுடன், அவ்விரண்டு செயற்பாடுகளும் 2023ஆம ஆண்டுக்கான செயற்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. இதன்படி, தேசிய கலாச்சார

கொள்கையை தயாரிப்பதற்காக பத்திரிகை விளம்பரங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா. 461,916 செலவு தேறிய செலவாக மாறியிருப்பதனை அவதானிக்க முடிந்துள்ளது.

3.2 பெறுகை அறிவிப்புக்கள்

(அ) அமைச்சின் கலாச்சாரப் பிரிவுக்கான சுத்திகரிப்பு சேவையை பெறுதல் - 2021/2022

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. அமைச்சின் கலாச்சாரப் பிரிவின் சுத்திகரிப்பு சேவை நடவடிக்கைகள் ரூபா. 147.000 மாத வாடகைக்கு 2021 டிசம்பர் 01ஆம் திகதி முதல் 2022 நவம்பர் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு 2022 மார்ச் 07ஆம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்ட போதிலும் சுத்திகரிப்புப் பணிகள் 2021 நவம்பர் 26ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட்டன.

ii. பெறுகை ஆவணத்தின் பிரகாரம் சுத்திகரிப்பு சேவையாளர்களின் தனிப்பட்ட தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அந்தத் தகவல்கள் பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன், பெறுகை ஆவணத்திற்கும் ஒப்பந்தத்திற்கும் இடையில் வருகை மற்றும் புறப்படும் நேரம் மற்றும் பணியில் அமர்த்தப்பட வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை போன்றவற்றில் வேறுபாடுகள் காணப்பட்டன.

iii. ஒப்பந்தம் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணங்களின்படி, 04 பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டிய போதிலும் 2022 ஜனவரி முதல் 2022 டிசம்பர் 31 வரை இரண்டு தொழிலாளர்கள் மட்டுமே பணியமர்த்தப்பட்டுள்ளதுடன், பணி மேற்பார்வையாளர் ஒருவர் எந்த மேற்பார்வைப் பணியையும் செய்யவில்லை. அவ்வாறான நிலையில் பெறுகை ஆவணங்களிலும், ஒப்பந்தத்திலும் அபராதக் கட்டணங்களை அறவிடுவது தொடர்பான உரிய விதிமுறைகள் உள்ளடக்கப்படாமல், தொடர்ந்து சேவை விதிமுறைகளை மீறிய போதிலும், இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மாத வாடகை முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

iv. துப்புரவு நடவடிக்கைகளுக்காக மாதாந்திர அடிப்படையில் வழங்குநர் வழங்க வேண்டிய உபகரணங்கள் மற்றும் பொருட்களின் விநியோகம் மற்றும் பயன்பாடு தொடர்பான நிபந்தனைகள் பெறுகை ஆவணம் மற்றும் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிரக்கவில்லை என்பதுடன், அந்த பொருட்களின் பதிவை பராமரித்துச் செல்வதற்கும், அந்த நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மகிந்த ராஜபக்ச தேசிய திரைப்படப் பூங்காவிற்கு சுத்திகரிப்பு சேவையை பெறுதல் - 2022/2023

அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. சுத்திகரிப்பு சேவையைப் பெறுவதற்கு, சந்தை விலை ஒப்பீட்டுப் பெறுகை முறையைப் பயன்படுத்தி, அமைச்சின் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைமனுக் கோருவதற்கு அமைச்சின் சிறு பெறுகைக் குழுவின் ஒப்புதல் கிடைத்திருந்தாலும், பெறுகை வழிகாட்டுதல்கள் கோவைகள் 4.3.1 மற்றும் 4.3.2 இன் பிரகாரம், இந்தப்

பெறுகைச் செயற்பாட்டிற்கான மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்கு ஏற்ப அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், விலைமனுக் கோரலுக்கு அழைக்கப்பட்ட 5 வழங்குநர்களில் ஒரு வழங்குநர் மட்டுமே பதிவு செய்யப்பட்ட வழங்குநராக இருந்தார்.

ii. 2021/2022 மற்றும் 2022/2023 சேவை ஒப்பந்தங்களின்படி செலுத்த வேண்டிய அதிகபட்ச மாதாந்த கட்டணம் முறையே ரூபா.798,000 மற்றும் ரூபா.831,000 ஆக இருக்க வேண்டிய போதிலும் மாறாக, அதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா. 79,800 ஆக காணப்பட்டதுடன், அந்தத் தொகையானது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் இருந்து அறிவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய கலை நிகழ்ச்சி மத்தியநிலையத்திற்கான சுத்திகரிப்பு சேவையைப் பெறுதல்

அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

i. பெறுகை வழிகாட்டுதல் கோவை 4.3 இன் படி, மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை என்பதுடன், கடந்த 11 மாதங்களுடன் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களின் பெறுமதியை அண்ணளவான மதிப்பீடாகக் கருத்தில் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தனது அவதானிப்புகளை வழங்கியது.

ii. சுத்திகரிப்பு சேவையைப் பெறுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட சேவை வழங்குநருடன் ஒப்பந்தம் செய்யப்படுதல் வேண்டும் என்ற போதிலும், 2022 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து சேவையினைப் பெற்று, 6 மாத கால தாமதத்திற்குப் பிறகு 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

iii. பெறுகை ஆவணங்களின் பிரகாரம் நாளாந்தம் பணியமர்த்தப்பட வேண்டிய மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 21 ஆக இருந்தாலும், 6 - 7 இற்கு இடைப்பட்ட ஊழியர்கள் அதாவது 32 சதவீதத்தினர் நாளாந்த அடிப்படையில் பணிக்கு வருவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன்படி, தேவையான எண்ணிக்கையிலான பணியாளர்களை ஈடுபடுத்தி தரமான சேவையை பெற்றுக்கொள்வதற்குஎந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதுடன், பணிக்கு வராத ஊழியர்களுக்கான செலுத்துகை தொகை மாத்திரமே குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

iv. சம்பளம் வழங்குவதில், பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூபா.1,400 மற்றும் பணி மேற்பார்வையாளருக்கு ரூபா.1,500 என்பதாக செலுத்துகை செய்யப்பட்ட போதிலும், பணிக்குச் சமூகமளிக்காமைக்காக வேண்டி பணம் குறைப்புச் செய்யும் போது நாள் ஒன்றுக்கு ரூபா.740 உம் மற்றும் பணி மேற்பார்வையாளருக்கு ரூபா.840 உம் கழிக்கப்படுதல் வேண்டும் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2022 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் ரூபா. 845,460 நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்க விலைமனுக்கோரல் வழிகாட்டுதல் விதிகளின்படி சேவை பெற்றுக்கொள்ளல் செய்யப்பட வேண்டிய போதிலும், கிராமோதய ஜனகலா கேந்திரவிற்கு 2022/2023 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்ளும் போது சேவை ஒப்பந்தத்தை முந்தைய ஆண்டின் வழங்குநரானவரையறுக்கப்பட்ட ரக்னா செக்யூரிட்டி லங்கா நிறுவனத்திற்கு வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக நேரடியாகவே தலைமைக் கணக்காளர் (தேசிய

உரிமைகள் பிரிவு) மூலமாக 2022 டிசம்பர் 12 ஆம் திகதி சம்பந்தப்பட்ட வழங்குநருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) விலைமனுக்கோரல் தீர்மானத்தின் மூலம் அமைச்சின் மூலமாக நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளுக்காக உணவு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிறுவனங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ள போதிலும், அதற்கு முரணான வகையில் 2022 ஜனவரி 04ஆம் திகதி ரூபா.134,875 செலுத்தி நிகழ்ச்சியொன்றிற்கு சிற்றுண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

3.3 சொத்து முகாமைத்துவம்

இது சம்பந்தமாக, பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வித்யாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபத்தின் நிர்மாணப் பணிகள்

ரூபா. 1350 மில்லியன் (1-5 கட்டங்களாக) மதிப்பீட்டின் அடிப்படையில் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2017ஆம் ஆண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதி முடிப்பதற்கு திட்டமிடப்பட வித்யாலங்கார சர்வதேசபௌத்த மாநாட்டு மண்டபத்தின் 05 கட்டங்கள் வரையிலான கட்டுமானப் பணிகளுக்காக 2021 டிசம்பர் 31ஆம் திகதிக்குரூ.1245.18 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. செயல்திறன் அறிக்கையின்படி, கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில், அதற்கான செலவுகள் எதுவும் ஏற்படவில்லை. அது தொடர்பாக, 2022 நவம்பர் 29 அன்று நடத்தப்பட்ட நிலைய இடப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளது,

i. அஸ்திவாரத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக, பிரதான கட்டிடத்தைப் போலவே, முன் மற்றும் பின் படிக்கட்டுகள் நிலத்தினுள் இறங்கி அவற்றின் தரையோடுகள் கழன்று போய் காணப்பட்டதுடன், நுழைவு படிக்கட்டுகளுடன் இணைந்ததான சுவர்கள் வெடித்து கோடுகள் விழுந்திருந்தன. கட்டிட இறக்கத்தின் அதிகபட்ச அளவினை அளவிட, இணைக்கப்பட்ட படிகளில் மணல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.
ii. கட்டிடத்தின் உள்ளே வெளியிலிருந்து தண்ணீர் கசிந்து கொண்டிருந்ததுடன், மத்திய குளிரூட்டல் ஒழுங்கமைப்பு கொண்ட அறையிலும் தண்ணீர் கசிவு காணப்பட்டது. தண்ணீர் தொட்டிகள் அமைக்கப்பட்ட இடத்திலும் ஈரப்பதத்தின் மீது பல்வேறு செடி கொடிகள் வளர்ந்து, பாசியும் படிந்து காணப்பட்டது.

iii. கட்டிடத்தின் மேல் தளத்தின் பல்கனி யன்னல்களில் பதாமை (சீமெந்துக் கலவை) உதிர்ந்து போய் காணப்பட்டதுடன், நுழைவாயிலின் சுவர்கள் மற்றும் சிவிலினில் பறவைகளின் எச்சங்கள் படிந்து அழுக்குப் படிந்ததாக காணப்பட்டது.

iv. பிரதான கேட்போர் கூடத்தில் பொருத்தப்பட்டிருந்த இருக்கைகளில் பூஞ்சை உருவாகி இருந்ததுடன், பொருத்தப்பட்டுள்ள திரைச்சீலைகள் மாசுபட்டிருப்பதையும், சில திரைச்சீலைகள் பாதுகாப்பற்ற முறையில் தரையில் குவிக்கப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

v. கட்டிடத்தில் பொருத்தப்பட்ட தீயணைப்புக் கருவிகள் 2019.11.10 ஆம் திகதி காலாவதியாகிவிட்டதை அவதானிக்க முடிந்தது.

vi. கட்டிடம் அமைந்துள்ள வளாகத்தில் காடுகள் வளர்ந்திருந்துடன், கட்டிடத்தின் உள்ளேயும் பல்வேறு வகையான செடி கொடிகளும் வளர்ந்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

vii. இருப்பினும், இந்த மாநாட்டு மண்டப கட்டிடம் இந்த அறிக்கையின் திகதியாகும் போது கூடபயன்படுத்தப்படாமல் வெறுமையாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

(ஆ) அமைச்சின் புத்தசாசனப் பிரிவுக்குச் சொந்தமான 18-4263 இலக்கத்தைக் கொண்ட மோட்டார் வாகனம், 2019 அல்லது அதற்கு முன்னர் தொட்டு மகாநாயக்க சாரிகாராம வளாகத்தில் துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றது.

(**இ**) 2018 ஒக்டோபர் 10 ஆம் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் படி, அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்களின் பதிவு உரிமைகள் தொடர்பான பிரச்சனைகள் 2019 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், கலாச்சாரப் பிரிவின் மூலம் பயன்படுத்தப்பட்டு வரும் KU-1910,CAM-5384 மற்றும் 32-5805 இலக்கங்களையுடைய 03 வாகனங்களின் உரிமையை மாற்றிக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக இனங்காணப்பட்ட கலாசாரப் பிரிவுக்குச் சொந்தமான 301-4103,QY-1829 மற்றும் 18-7052 இலக்கங்களை கொண்ட 03 வாகனங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாகனங்கள் தொடர்பில் 2020 ஆகஸ்ட் 28ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 (II) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தகவல் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் காணப்பட்ட திஸ்ஸமஹாரம, ரன்மினிதென்னயில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ திரைப்படப் பூங்கா,2020 ஆகஸ்ட் 09ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2187/27 மூலம் தேசிய மரபுரிமை, கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைஞர்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டது. இதன்படி, வெகுஜன ஊடக அமைச்சின் மேலதிக செயலாளரின் இலக்கம் MMI / 05 / 08 / 16 மற்றும் 2020 டிசம்பர் 04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், 09 வாகனங்கள் ரன்மினிதென்ன திரைப்படப் பூங்காவிற்கு இணைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. அமைச்சுக்களுக்கு இடையே சொத்துக்களை மாற்றப்படுகின்ற போது மற்றும் ஒப்படைக்கும் போது 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இல 01/2020 இன் II ஆம் பகுதியின் 8ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் படி செய்திருக்க வேண்டும் என்றாலும், அதற்கு ஏற்ப உரிய மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. உரிய 09 வாகனங்களில், 04 வாகனங்கள் வெகுஜன ஊடக அமைச்சினால் தேசிய மரபுரிமை, கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமிய கலைஞர்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், எஞ்சிய வாகனங்களை சட்டப்பூர்வமாக ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iii. சம்பந்தப்பட்ட வாகனங்களை பொறுப்பேற்பதை சம்பந்தப்பட்ட அமைச்சின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், மஹிந்த ராஜபக்ஷ தேசிய திரைப்படப் பூங்காவின் பதில் பணிப்பாளர் நாயகத்தினால் இவ்விடயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.மஹிந்த ராஜபக்ஷ தேசிய திரைப்படப் பூங்கா என்பது முறைப்படி நிறுவப்படாத நிறுவனமாக இருப்பதாலும், அதன் பணிப்பாளர் நாயகம்

பதவியும் தற்காலிக நியமனம் என்பதாலும், வாகனங்களை ஏற்றுக்கொள்வது சட்டப்பூர்வமானது அல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2022 டிசம்பர் 31 நிலவரப்படி, கிராமோதய ஜனகலா கேந்திரவுக்குச் சொந்தமான 10 உத்தியோகபூர்வ இல்லங்களில், 7 உத்தியோகபூர்வ வீடுகள் அதிகாரிகளின் குடியிருப்புக்காகவும், மீதமுள்ள 3 வீடுகள் பிற தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 1ஆம் பிரிவின் படி, அனைத்து அரச இல்லங்களும் அட்டவணைப்படுத்தப்பட்ட இல்லங்கள் அல்லது பொது சேவை இல்லங்கள் என்பதாக வகைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் ஜனகலா கேந்திரவுக்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள் அதற்கேற்ப வேறுபடுத்தப்படவில்லை.

ii. தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் உப பிரிவின் படி, உத்தியோகத்தர் ஒரவரின் சம்பளத்திலிருந்து வசூலிக்கப்படும் வீட்டு வாடகையானது, அவருக்குக் கொடுக்கப்பட்ட வீட்டின் நியாயமான பொருளாதார வாடகையை விட கணிசமாக அதிகமாக இருந்தால், அவ்வதிகாரியின் சம்பளத்திலிருந்து நூற்றுக்கு சதவீதமாக வசூலிப்பதற்குப் பதிலாக உறுதியானதொரு வீட்டு வாடகையை வசூலிப்பதற்கு செயலாளரின் அனுமதி பெற வேண்டும் எனினும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

iii. தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 60.1 ஆம் உப பிரிவின் படி,ஒரு பதவிக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளைத் தவிர மற்றைய அனைத்து உத்தியோகபூர்வ வீடுகளினதும் குத்தகைக் காலம் 5 ஆண்டுகளில் காலாவதியாவதுடன் உத்தியோகபூர்வ இல்லங்களை உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்படும் போது, தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பிரகாரம் உரிய உத்தியோகத்தருடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளல் வேண்டும். மேலும் உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறிச் செல்லாவிட்டால், 1971 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கம் மற்றும் 1974 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க அரச இல்லங்கள் (உடமையை மீளப் பெற்றுக்கொள்ளல்) சட்டத்தின் கீழ் அவர்களை அவ்வில்லங்களில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும்.எவ்வாறாயினும், அவ்வகையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதை நிராகரித்து, உத்தியோகபூர்வ இல்லமொன்றில் வசித்து வருகின்ற உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பில் அதன்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. உத்தியோகபூர்வ இல்லமொன்று சங்கீதக் கற்கைக்குப் பயன்படுத்தப்படுவதாக கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டாலும், பயன்படுத்தாமல் மூடியிருப்பதன் காரணமாக கரையான் போன்ற பூச்சிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும், கட்டிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதை தடுத்துக் கொள்வதற்குப் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்குமாறும்,கிராமோதய ஜனகலா கேந்திரவின் பணிப்பாளரினால் புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மூலமாக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

3.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண இல 880 இன் படி, அரச அதிகாரிகளின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆவது அதிகாரத்தின்படி, அமைச்சின் புத்தசாசனப் பிரிவில் பிணை வைக்கப்பட வேண்டிய 25 அதிகாரிகளிடமிருந்து பிணைப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ) தம்பதிவ யாத்ரீகர்களின் பதிவு மற்றும் வழிகாட்டுதல்

i. தம்பதிவ யாத்திரை ஏற்பாட்டாளர்கள் அமைச்சில் பதிவு செய்வதன் மூலம், தம்பதிவ யாத்திரை சுற்றுப்பயண பங்கேற்பாளர்களுக்கு இலவச விசாவைப் பெற்றுக்கொள்வதை இலகுபடுத்தவும், கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் யாத்ரீகர்களுக்கு அதிக பாதுகாப்பை வழங்குதல் போன்ற வாய்ப்புக்கள் கிடைக்கின்ற போதிலும்அவர்களுக்கு கிடைக்கும் இவ்வசதிகள் குறித்து ஏற்பாட்டாளர்களையும் யாத்ரிகர்களையும் தெளிவூட்டும் முறையானதெர்ு வேலைத்திட்டத்தை அமைச்சினுள் முன்னெடுக்கப்படவில்லை. மேலும், இலவச விசா வசதிகளை வழங்குவதன் மூலம் செலவுகள் குறையும் சலுகைகள் யாத்ரீகர்களுக்கு கிடைக்கின்றதா என்பது குறித்து எந்தவொரு பின்தொடர்தல் நடவடிக்கையும் செய்யப்படவில்லை.

ii. தம்பதிவ யாத்ரிகர்கள் யாத்திரையில் ஈடுபடும் வேளையில் அடிக்கடி உடல்நலப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தல் மற்றும் பல்வேறு தடவைகளில் இறப்பதற்கும் நேரிடுவதால் அமைச்சின் மேலதிக செயலாளரினால் (நிரிவாகம்) சுற்றுப்பயண யாத்திரை ஏற்பாட்டாளர்கள் மற்றும் யாத்ரீகர்களுக்கான சுகாதார ஆலோசனையுடனான வழிகாட்டியொன்றை தயாரித்துத் தருமாறு சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததுடன், அதற்கிணங்க, சுகாதார மேம்பாட்டு பணியகம் பொருத்தமான வழிகாட்டுதலை தயாரித்து அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளது. ஆயினும்கூட, இந்த வழிகாட்டுதலை அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து தபதிவ ஏற்பாட்டாளர்களுக்கும் விநியோகிக்கப்பட்டது என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன் அதனோடு தொடர்புடைய பின்தொடர்தல் நடவடிக்கை எதுவும் செய்யப்படவில்லை.

iii. பதிவுசெய்யப்பட்ட ஏற்பாட்டாளர்களிடமிருந்து தம்பதிவ யாத்திரையில் ஈடுபடும் யாத்ரீகர்களுக்கு ஏற்படும் குறைபாடுகள் தொடர்பாக கண்டறிதல் நடவடிக்கையொன்றை அமைச்சின் மூலமாக மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் 2020 முதல் 2022 வரையான காலப்பகுதியில் யாத்திரிகர்களுக்கு ஏற்பாட்டாளர்கள் மூலமாக ஏற்பட்ட பல்வேறு சிரமங்கள் மற்றும் அநீதிகள் குறித்து 29 முறைப்பாடுகளும், யாத்திரை ஏற்பாட்டாளர்களால் 02 முறைப்பாடுகளும் அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டபோதிலும் அது தொடர்பில் அமைச்சின் மூலமாக எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) ரஜரட்ட சுற்றுலா விடுதி இல்லத்தை பரிசோதித்தல்

i. ரஜரட்ட சுற்றுலா விடுதி இல்லக் கட்டிடத்தின் கொன்கிரீட் தளங்கள் வெடிப்புக்குள்ளாகிக் காணப்படுவதுடன், சாரதி தங்குமிடக் கட்டிடத்தின் மின் நிறுவல்கள் பழுதுபார்க்கப்பட்டவேண்டிய நிலையில் காணப்படுகிறது. மேலும், சுற்றுலா

விடுதி இல்லத்தின் நுழைவு வீதி மழைநீரால் கழுவிச் செல்லப்படுவதன் காரணமாக வாகனங்களைஉள்நுழைவிப்பதில் சிரம நிலை காணப்படுகின்ற போதிலும் இதுவரை அதை சீரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ii. சுற்றுலா விடுதியை ஒதுக்கீடு செய்யும் கட்டணங்களுக்கு மேலதிகமாக பிரமுகர்களின் கட்டில் ஒன்றுக்கு 50 ரூபா என்கின்ற கட்டில் விரிப்புக் கட்டணம் சுற்றுலா விடுதிப் பொறுப்பாளரினால் அறவிடப்படுவதோடு, அதற்காக நிதிப்பிரமாணம் 168 (1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் முறையான பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை.

iii. நிதிப்பிரமாணம் 177 இன் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற அரச நிதிகளை நாளாந்தம் அல்லது கூடிய விரைவில் பரிமாற்றம் செய்ய வேண்டிய போதிலும் சுற்றுலா விடுதிக்கு சில்லறைச் செலவு முன்பணம் அல்லது வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணத்தினால் சில சந்தர்ப்பங்களில் கட்டில் விரிப்புக் கட்டணங்களால் வேறு செலவுகளும் செய்யப்பட்டுள்ளது.

(இ) சுதந்திர தின விழாவின் நடனங்களுக்கான ஆடைகளுக்கு அமைச்சின் கலாசாரத் திணைக்களம் ரூ. 4,429,800 தொகையைச் செலவிட்டிருந்ததுடன், அத்தகைய ஆடைகளை நடன ஆடைக் காப்பகத்தில் முறையாக வைக்காததாலும் நாடக ஆடை, ஆபரணங்களின் நிலுவைகளின் சரியான தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை.மேலும்,ஒப்பீட்டளவில் அதிக பொருட்செலவில் உருவாக்கப்படும் இந்த நாட்டிய ஆடைகளை வேறு மாற்று சந்தர்ப்பங்களுக்கு வெளி அமைப்புகளுக்கு கொடுத்து வருமானம் ஈட்டக்கூடியதாக இருந்த போதிலும் அதனை கவனத்தில் கொள்ளாமல் இந்த அணிகலன்கள் வெருமனே குவிந்து கிடப்பதை அவதானிக்க முடிந்தது.

(ஈ) திஸ்ஸமஹாராம, ரன்மினிதன்ன பிரதேசத்தில் 235 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ தேசிய திரைப்படப் பூங்காவானது, 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதுடன், அப்போது அது முறையான நிறுவனமொன்றாக நிறுவப்படவில்லை.இது தொடர்பில் அப்போதைய வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி 'மஹிந்த ராஜபக்ச தேசிய திரைப்படப் பூங்காவை அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனமாக மாற்ற வேண்டும்' என்ற தலையங்கத்திலான அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்திருந்தார். இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. சம்பந்தப்பட்ட அமைச்சரவை முடிவை செயல்படுத்துவதற்கான நிறுவனமாக ஊடகம் மற்றும் தகவல் அமைச்சுபெயரிடப்பட்டிருந்ததுடன், அவ்வமைச்சின் மூலம் அல்லது இத்திரைப்படப் பூங்கா அப்போது காணப்பட்ட தேசிய பாரம்பரிய உரிமைகள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைஞர்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் மூலம் சம்பந்தப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ii. மஹிந்த ராஜபக்ஷ தேசிய திரைப்படப் பூங்கா அமைந்துள்ள காணியானது அரச காணியாகக் காணப்படுவதுடன், இத்திரைபடப் பூங்கா ஊடக மற்றும் தகவல் அமைச்சின் கீழ் இருந்த காலப்பகுதியில் பல விசேட நிபந்தனைகளின் கீழ் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு மாற்றப்பட்டது. இந்த அறிக்கையின் திகதியாகின்ற போதும்,அக்காணி இன்னும் ஊடகம் மற்றும் தகவல் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் பெயரில் காணப்பட்டதுடன்,தேசிய பாரம்பரிய உரிமைகள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைஞர்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சிடம் இப்பூங்கா ஒப்படைக்கப்பட்டு 02 ஆண்டுகளுக்கு

மேலாகிவிட்ட போதிலும்,சம்பந்தப்பட்ட காணியினை அமைச்சிற்கு பொறுப்பேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) கிராமோதய ஜனகலா கேந்திரவின் செயல்நடவடிக்கைகள் மற்றும் செயற்திறன்கள் குறித்து பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2022 செப்டம்பர் 13ஆம் திகதிய இலக்கம் அசு/22/1294/620/007உடைய அமைச்சரவை தீர்மானத்தின் படி,கிராமோதய ஜனகலா கேந்திரவை கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டமொன்றாக முன்னெடுத்தச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரை செய்யப்பட்ட போதிலும், கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழான திட்டமொன்றாக செயற்படுத்தாமல் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியாகின்ற போதும் புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ii. முந்தைய மூன்றாண்டு காலப்பகுதியில் கிராமோதய ஜனகலா கேந்திரவிற்குச் செய்யப்பட்ட மொத்தச் செலவு 26,365,301 ரூபாவாக இருந்தபோதிலும், அந்தக் காலப்பகுதியில் பாடநெறிகளில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 112 ஆகக் குறைவாக இருந்ததுடன், மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான பொருத்தமான உத்திகள் பயன்படுத்தப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டது.

iii. 2020 ஒக்டோபர் 26 ஆம் திகதியுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 02/2020 இன் துணைப்பிரிவு 1 (vii) இன் பிரகாரம், நிறுவனங்களின் தற்போதைய சேவைத் தேவைகளின்படி அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்கு திருத்தங்கள் தேவைப்படும் போது, மிகவும் வினைதிறனான மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதற்குத் தேவையான குறைந்த பதவி எண்ணிக்கைகளை கண்டறிந்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். இருந்தபோதிலும், கலையரங்கம் இல்லாத ஜனகலா கேந்திரவிற்குமுகாமையாளர் பதவியொன்றும் கலையரங்க உதவியாளர் பதவிகள் இரண்டும்அங்கீகரிக்கப்பட்ட பதிவிகளாக முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், அப்பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தாமரைத் தடாக அரங்கம் (நெலும் பொகுன) உள்ளக அரங்கத்தின் செயல்பாடுகள் தொடர்பாக நடத்தப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2020 செப்டம்பர் 25 ஆம் திகதி தொடக்கம் புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் காணப்பட்ட தேசிய பாரம்பரிய கலை மற்றும் கிராமப்புற கலைஞர்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் தாமரைத் தடாக அரங்கம் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர், 2022 ஜூலை 22 ஆம் திகதிய 2289/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் மாற்றப்பட்டது. ஆயினும்கூட, 2022 டிசம்பர் 31 ஆம் திகதியாகின்ற போது கூட கலையரங்கம் குறித்த அமைச்சின் மூலம் முறைப்படி நிறுவப்பட்டிருக்கவில்லை என்பது கவனிக்கப்பட்டது.

ii. அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் SA / AMP / Deposit/Transfer இலக்கமுடைய 2020 ஜனவரி 09 ஆம் திகதிய கடிதத்தின் படி, அரங்கின் வருமானத்திற்கு வருவாய்த் தலைப்பொன்றை உருவாக்ககிக கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியாகின்ற போதும் அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

iii. 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் சேவைகளை வழங்குவதற்காக வசூலிக்கப்படும் பல்வேறு கட்டணங்களை அதிகரிக்காத அனைத்து அரச நிறுவனங்களும் சம்பந்தப்பட்ட நேரியல் அமைச்சின் செயலாளரது ஒப்புதலைப் பெற்று அக்கட்டணத்தை 15 சதவீதம் அல்லது அதற்கு மேல் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் மூலம் 2012 ஆம் ஆண்டு முதல் வசூலிக்கப்படும் கட்டணத்தை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. அரங்கினை வாடகை அடிப்படையில் வழங்கும் போது,ஒருசிலதரப்பினர் மட்டும் மானிய முறையிலான கேள்வி விலையில் வாடகைப் பணத்தை வசூலித்திருந்ததுடன் (தள்ளுபடிகளை வழங்குதல்) அத்தகைய சலுகை அடிப்படையிலான அறவீடுகளுக்காக திறைசேரியின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை.

v. வாடகை அடிப்படையில் அரங்கினை வழங்கும் போது அந்தந்த வாடகை வாங்கும் தரப்பினருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தின் முதலாவது தரப்பினர் சார்பில்அரங்கினை முன்பதிவு செய்து கொள்ளும் அதிகாரி மற்றும் அரங்கின் பிரதான நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரினால் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடப்பட்டுள்ளது. இருப்பினும், கலையரங்கு முறையான சட்ட ஆளுமை கொண்ட நிறுவனமாக நிறுவப்படாததால், ஒப்பந்தம் சட்டப்பூர்வமாக செல்லுபடியாகவில்லை.

vi. நிதி ஒழுங்குவிதி 3(1) இன் பிரகாரம், அரசாங்கத்தின் அனைத்து செயல்பாடுகளும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் குறிப்பிடப்பட வேண்டும் என்ற போதிலும், கலையரங்குடன் தொடர்பான செலவுகளை சுமப்பதற்காக அவ்வாறு திட்டமிடப்படவில்லை என்பதுடன், அச்செலவுகள் வருடாந்த மதிப்பீட்டில் சேர்த்து,பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை.

vii. மின் கட்டணம் செலுத்தும் போது, குறிப்பிட்ட மாதத்தின் மின் பட்டியல் கிடைத்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டிய போதிலும் தாமதமாக செலுத்தும் போது16 ஆவது நாளிலிருந்து 1.20% அளவிலான மாதாந்திர வட்டித் தொகையொன்றுநிலுவையான மின் கட்டணப் பட்டியலுக்கு அமைய வசூலிக்கப்படும் என்றும் மின் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படி இருந்தும், கலையரங்கின் மாதாந்திர மின்கட்டணம், 15 நாட்களுக்குள் செலுத்தப்பட்டு, தாமத வட்டியை வசூலிப்பதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.இதன் காரணமாக, 2022 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கான கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ரூபா. 460,419 தொகை கூடுதல் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. இது நிதி ஒழுங்குவிதிகள் 156 மற்றும் 210 (2) இன் படி செய்யப்பட வேண்டும்கவனிக்கப்பட்டது.

viii. மத்திய நிலையத்தில் மூன்று தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்களால் நடத்தப்படும் பரிமாற்ற ஆண்டெனாக்களுக்கான சேவைகளை வழங்குவதற்காக வசூலிக்கப்படும் வாடகை மற்றும் மின்சாரக் கட்டணம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- பரிமாற்ற ஆண்டெனாக்களை (Transmission Antena) பராமரிக்கும் இரண்டு தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் 2022 டிசம்பர் 31 இல் காலாவதியாகிவிட்ட போதிலும், புதிய ஒப்பந்தங்கள் எதுவும் செய்யப்படவில்லை. இதனால் கேள்வி விலைகளை திருத்தம் செய்து அதிக வருமானம் ஈட்டிக்கொள்ள அரங்கத்திற்கு காணப்பட்ட வாய்ப்பு இழக்கப்பட்டது.

- ஒப்பந்தத்தின்படி, வரி வாடகையை ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி செலுத்த வேண்டும் என்ற போதிலும், கலையரங்கின் மாத வருமான அறிக்கையின்படி, அந்தத் தொடர்பு நிறுவனங்கள் முறையாக தவணை செலுத்தவில்லை என்றும், ஒப்பந்தங்களில் நுழையும் போது,குத்தகைக் கூலி செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் அறவிடப்பட வேண்டிய அபராதத் தொகை குறிப்பிடப்படாமையினாலும் தாமதமான அபராதத் தொகையை வசூலிக்க முடியவில்லை.

- கலையரங்கம் மற்றும் ஒவ்வொரு தகவல் தொடர்பு நிறுவனத்திற்கும் இடையேயான ஒப்பந்தங்களின்படி, பரிமாற்ற ஆண்டெனாக்களை பராமரிக்க பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான செலவுகளை அந்த நிறுவனங்கள் கலையரங்கிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன், கலைரயங்கின் மூலமாக தொடர்புடைய கட்டணப் பட்டியல்கள் செலுத்தப்படுதல் வேண்டும். இருந்தபோதிலும், மேற்படி நிறுவனங்கள் முறையாக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாததன் காரணமாக, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான தொகையாக 1,255,465 ரூபா அறவிடப்பட வேண்டியிருந்தது.

ix. மத்திய நிலைய வளாகத்தில் 400 சதுர அடி பரப்பளவிலான நிலப்பகுதியில் இராணுவத்தால் சிற்றண்டிச்சாலையொன்று பராமரிக்கப்பட்டு வருவதுடன்,அதற்காக சம்பந்தப்பட்ட இராணுவத்திடம் இருந்து வாடகை எதுவும் வசூலிக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. சிற்றுண்டிச்சாலை நலன்புரி அடிப்படையில் நடத்தப்படுவதாலும், சிற்றுண்டிச்சாலையின் செயல்பாடுகள் கலையரங்கின் செயல்பாடுகளிலிருந்து தனித்தனியாகப் பராமரிக்கப்படுவதாலும், வளாகத்திற்கு வாடகை எதுவும் செலுத்தப்படுவதில்லை என்று சம்பந்தப்பட்ட இராணுவப் பிரிவு கணக்காய்வுக்கு தெரிவித்துள்ளது.இருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட நில வளாகம் பொருளாதார மதிப்பில் மிகவும் உயர்வானது என்பதும், மேற்படி வளாகத்துடன் தொடர்புடைய துப்புரவு, மின்சாரக் கட்டணம்,தண்ணீர் கட்டணம் போன்றவற்றை கலையரங்கமே ஏற்றுக்கொள்வதால், மதிப்பிடப்பட்ட மதிப்பின் அடிப்படையில் வாடகைத் தொகையொன்று வசூலிக்கப்பட வேண்டும் என நிரூபணமானது.

(எ) மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக நியதிச்சட்ட சபைகளுக்கிடையில் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

i. மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக நியதிச்சட்ட சபையினால் முன்னெடுக்கப்படும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வேறு நிறுவனங்கள் இருப்பதால், மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கென தனியான செயற்திட்டத்தை பேண வேண்டிய அவசியமில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

ii. மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக நியதிச்சட்ட சபைகளின் அலுவலக வளாகத்திற்காக கண்டி மாநகர சபைக்குள் அமைந்துள்ள கட்டிடமொன்றை குத்தகை

அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. தொடர்புடைய குத்தகை ஒப்பந்தத்தின்படி, குத்தகை ஒப்பந்தத்தின் முடிவில் மதிப்பிடப்பட்ட மதிப்பின் அடிப்படையில், சொத்தில் செய்யப்பட்ட ரூபா.6,194,607 பழுதுபார்ப்பு மற்றும் கட்டுமானத்திற்காக குத்தகைதாரரிடம் கட்டணம் வசூலிக்க அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், புதிய குத்தகை ஒப்பந்தத்தில் அந்த நிபந்தனைகளைச் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அமைச்சிற்கு முழுமையாகச் சொந்தமான கலாச்சார பாதுகாப்பு மற்றும் கட்டுமான (தனியார்) நிறுவனம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

i. கலாச்சார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களில் கட்டிட நிருமாணம் மற்றும் பராமரிப்பினை திறமையாக மேற்கொள்ளும் நோக்கில் அமைச்சுக்கு முழுமையான பங்கு உரிமைகள் உள்ளபடி பதிவு செய்யப்பட்டிருந்த கலாச்சார பாதுகாப்பு மற்றும் கட்டுமான (தனியார்) நிறுவனத்தின் 2018/2019, 2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022 நிதி ஆண்டுகளுடன் தொடர்பான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. தற்போது, நிறுவனத்தின் நடவடிக்கைகள் முற்றிலும் செயலற்ற நிலையில் இருப்பதால், நிறுவனத்தை கலைக்குமாறு 2021 ஜூலை 05 ஆம் திகதி பிரதமரின் செயலாளரின் மூலமாக கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இந்த அறிக்கையின் திகதியாகின்ற போதும் கலைப்பு செயல்முறை செயல்படுத்தப்படவில்லை.

4. நல்லாட்சி

4.1 உள்ளக கணக்காய்வு

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) மற்றும் 40(3) பிரிவுகளின் பிரகாரம் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரினால் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட 07 கணக்காய்வு வினாக்கள் தொடர்பான கருத்துத் தெரிவிப்பினை சமர்ப்பிக்கவில்லை.

(ஆ) 2019 ஜனவரி 12 திகதியிடப்பட்டDMA/01-2019 ஆம் இலக்கமுடைய முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, நிதிப்பிரமாணம் 134(2) இல் குறிப்பிட்டுள்ள படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி ஆலோசனை பெற்றிருக்க வேண்டிய போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) அமைச்சின் கலாசாரத் துறைக்கு ஏறக்குறைய ஆயிரம் பணியாளர்களும், நாடு முழுவதிலும் தாபிக்கப்பட்ட 208 கலாசார நிலையங்கள் இயங்கி வந்தாலும் அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுப் பதவி பல ஆண்டுகளாக வெற்றிடமாக உள்ளது.

5. மனித வள முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் புத்தசாசனப் பிரிவிற்கு 219 அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களும் 164 உண்மையான பணியாளர்களும் காணப்படுவதுடன் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ள

வெற்றிடங்களின் எண்ணிக்கை 55 ஆகும். அவற்றில் பணிப்பாளர் பதவியொன்றும், பொறியியலாளர் மற்றும் உதவிப் பொறியாளர் பதவிகள் 02உம், உதவிச் செயலாளர் பதவிகள் 3 உம் வெற்றிடமாக இருந்தன. மேலும், 13 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 12 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள், 9 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 07 சாரதி பதவிகள் ஆகியவற்றில் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை அமைச்சின் செயலாற்றுகையில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்படுகின்றது.

(ஆ) கலாச்சாரப் பிரிவுக்கு 201 உதவிக் கலாச்சார ஊக்குவிப்பு உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும், உண்மையான எண்ணிக்கை 133 ஆக காணப்பட்டதுடன், 68 பதவிகள் அதாவது 34 சதவீதமான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், கலாச்சாரப் பிரிவுக்கான அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 141 ஆக காணப்பட்ட போதிலும் உண்மையான எண்ணிக்கை 187 ஆக உள்ளதால் 46 பதவிகளில் அதாவது, 33 சதவீதமானவை அதிகமாகக் காணப்பட்டது.

(இ) அமைச்சிடம் 208 கலாச்சார மத்தியநிலையங்கள் காணப்பட்டாலும், மத்திய நிலைய காவலர்களாக 297 பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். 2020 டிசம்பர் 10 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் தனிப்பட்ட முறையில் வைத்திருப்பவருக்கு மட்டும் 106 காவலர்கள் அனுமதிக்கப்பட்ட காரணத்தினால் இந்த உபரித் தொகை பதிவாகியிருந்தது. மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது, மேலதிக 89 காவலர்களின் சேவையை வினைத்திறனான முறையில் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இம் மத்தியநிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கைரேகை இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை 2021 ஆம் ஆண்டு கணக்காய்வு அறிக்கைகளின் மூலமாக சுட்டிக்காட்டியிருந்தாலும், அமைச்சின் மூலமாக இது விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மகிந்த ராஜபக்ச தேசிய திரைப்படப் பூங்காவிற்கான ''அலுவலக உதவியாளர் பதவி'' என்பது அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றல்ல என்ற போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியாகின்ற போதும் 02 பேர் அந்த பதவியில் இன்னும் பணியாற்றி வருகின்றனர்.

ஒப்பம்: எச்.எம். ரணசிங்க பண்டா
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக

அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 அமைச்சின் செயலாற்றுகை சுட்டிகள் (செயல்திட்டத்தின் அடிப்படையில்)

செயலாற்றுகை குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் வீதாசாரமாக(%)		
	100 – 90%	75 – 89%	50 -74%
1. புனிதப் பிரதேசங்களின் வசதிகள் மேம்படுத்தலினை விரிவாக்குதல்	√	-	-
2. விகாரைகளிலுள்ள பௌதீக உள்ளக கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டினை விருத்தி செய்தல்.	√	-	-
3. சமுக, பொருளாதார மற்றும் ஆன்மீக ரீதியில் வலுவூட்டப்பட்ட கிராமங்களை விரிவாக்கம் செய்தல்.	√	-	-
4. தலதா மாளிகையுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ள பள்ளேகல செயலாற்றுகை பயிற்சி நிலையத்தின் நிருமாணப் பணிகளினை பூர்த்தி செய்தல்.	√	-	-
5. வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டப நிருமாணம்	√	-	-
6. சமனெற மற்றும் உபசம்பத பிக்கு பயிற்சி	-	√	-
7. கட்டுவாப்பிட்டிய, புனித செபஸ்தியான் தேவாலய கட்டிடத்திலுள்ள அறநெறிப் பாடசாலையின் நிருமாணப் பணிகளினை பூர்த்தி செய்தல்.	-	-	√

அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1அடையாளங் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைச் சுட்டிக் காட்டுதல்.

இலக்கு / குறிக்கோள	அடைவுகள்	அடைவுக் குறிகாட்டிகள்	இதுவரை அடையப் பெற்ற முன்னேற்றம்(%)		
			0-49 (%)	50-74 (%)	75-100 (%)
1.புனிதப் பிரதேசங்களைப் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும்.	புனிதப் பிரதேசங்களில் பௌதீக / உள்ளக கட்டமைப்புக்கள ை மேம்படுத்துதல்	புனிதப் பிரதேசங்களின் வசதிகளினை மேம்படுத்துதல்.			√
2.விகாரைகளில் காணப்படும் பௌதிக ரீதியான குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்.	விகாரைகளில் பௌதீக / உள்ளக கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துதல்.	விகாரைகளின் பௌதீக உள்ளக கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துதல்.			√
3.சமூக, பொருளாதார மற்றும் ஆன்மீக வழியில் நிறைவான மக்களை உருவாக்குதல்.	சமூக, பொருளாதார மற்றும் ஆன்மீக வழியில் வலுவான கிராமங்களை உருவாக்குதல்.	சமூக, பொருளாதார மற்றும் ஆன்மீக வழியில் வலுவான கிராமங்களை உருவாக்குத ல்.			√
4.கைப்பணியாளர் களுக்கான பயிற்சித் தளங்களை உருவாக்குதல்.	தலதா மாளிகையுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ள பள்ளேகல செயலாற்றுகை பயிற்சி நிலையத்தினை நிருமாணித்தல்.	நிருமாணப் பூர்த்தியின் தரம்			√
5.பிக்குகளை நிறைவான அறிவுடையவர்களாக உருவாக்குதல்.	சுமனிர மற்றும் உபசம்பத பிக்கு பயிற்சி	வருடாந்தம் பயிற்சி பெறும் பிக்கைகளின் எண்ணிக்கை			√
6.தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தெரவடி பௌத்தத்தினை மேம்படுத்துவதற்கான வசதிகளினை வழங்குதல்	வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டப நிருமாணம் (கட்டம் v)	நிருமாண வேலைகளின் பூர்த்தி செய்யப்பட்ட அளவு.			√
7.ஆன்மீக வழியில் நிறைவான பிள்ளைகளினை உருவாக்குதல்.	கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியான் தேவாலயத்தின் அறநெறி பாடசாலை கட்டிட நிருமாணத்தினை பூர்த்தி செய்தல்.	ஆறநெறிப் பாடசாலையின் பௌதீக உள்ளக கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துதல்.		√	

5.2 வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் சாதனைகளும் சவால்களும்

இந்த அமைச்சானது விநைத்திறன் வாய்ந்த நிறுவனங்களுடன் இணைந்த நிறுவனங்களை தாபிக்கும் 16 ஆவது அபிவிருத்தி இலக்குகளினை அடைவதற்கு நேரடியாக பங்களிப்புச் செய்துள்ளதுடன் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுக்கிடையில் நிலையான அபிவிருத்திக்கான அமைதியானதும் இணைந்த சமூக ஊக்குவிப்புக்கான வாய்ப்பினையும் வழங்கியுள்ளது.

அதற்கமைவாக, அறநெறிப் பாடசாலை முறைமையானது வினைத்திறன் வாய்ந்ததும் ஒழுக்க நெறி சார்ந்ததுமான சிறார் சமூகமொன்றினை உருவாக்கும் பொருட்டு பௌத்த சமய கல்வி நடவடிக்கைகளுக்காக ஞாயிற்றுக் கிழமைகளில் விகாரைகளில் நடாத்தப்பட்டு வருகின்றன. சிறார் சமூகத்தில் அறநெறி அறிவினை மேம்படுத்துவதற்கான தடைகளாக, அறநெறிப் பாடசாலைகளுக்கான உள்ளக கட்டமைப்பு வசதிகளுக்கான நிதி ஒதுக்கீடானது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படுதல், அறநெறிப் பாடசாலை முறைமையானது தொண்டர் ஆசிரியர்களினைக் கொண்டு நடாத்தப்படுதல் மற்றும் சிறார்களுக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் வேறு தனியார் வகுப்புக்கள் நடைபெறுவதால் சிறுவர்கள் போதயளவில் வகுப்புக்களுக்கு வருகை தராமை என்பன காணப்படுகின்றன.

நாடளாவிய ரீதியில் பரவியுள்ள மொத்த சனத்தொகையில் 72மூ ஆனவர்கள் பௌத்தர்களாக காணப்பட்ட போதிலும், சில கஸ்டப் பிரதேசங்களில் காணப்படும் விகாரைகளில் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான அல்லது ஒரு சில பிக்குகளே காணப்படுகின்றனர். மக்களுக்கு சமய ரீதியான சேவைகளினை வழங்குவதற்கு இதுவம் ஒரு தடையாக அமைகின்றது.

புண்ணியகிரம நிகழ்ச்சித்திட்டத்தினூடாக மக்களுக்கு ஆன்மீக விருத்தியினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும், அனைத்துத் துறைகளிலும் விருத்தியினை ஏற்படுத்துவதற்கு இது போதுமானது அல்ல என்பதுடன் இது ஏனைய நிறுவனங்களின் உதவுகையினையும் கோரி நிற்கின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் எரிபொருள் தட்டுப்பாடு, நிருமாணப் பொருட்களின் விலையேற்றம் போன்ற காரணங்களினால் ஆன்மீக அபிவிருத்தி நிகழ்ச்சிகள் மத நல்லிணக்க நிகழ்வுகள் போன்ற காரணங்களினால் ஆன்மிக அபிவிருத்தி நிகழ்வுகளினை நடாத்தவதிலும் நிருமாணத் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதிலும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போதிருக்கும் வளங்களை ஆகக்கூடிய மட்டத்தில் பயன்படுத்துவதனூடாக 2022 இல் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளினை அடைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் உயர்ந்தளவிலான வீதாசாரத்தில் கருத்திட்டங்களின் பௌதீக ரீதியான முன்னேற்றங்கள் காணப்படுவதன் மூலம் இது நிரூபணமாகியுள்ளது.

அத்தியாயம் 06 – மனித வள விபரம்

6.1 ஆளணி முகாமைத்துவம் (2022.12.31 இலுள்ளவாறு)

விபரணம்	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதிருக்கும் ஆளணி	வெற்றிடங்கள்
சிரேஸ்ட	21	15	06
மூன்றாவது நிலை	05	04	01
இரண்டாம் நிலை	143	104	39
முதல் நிலை	50	41	09

6.2 பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் திணைக்களத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றன என்பதன் சுருக்கம்

இரண்டாம் நிலை பதவிகளில் உத்தியோகத்தருக்கு தனிப்பட்ட முறையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 13 வெற்றிடங்கள் காணப்படுவதால் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தகைய வெற்றிடங்களில் பெரும்பாலானவை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை மற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவையிலேயே காணப்பட்டுள்ளன.

ஆனால், தற்போதுள்ள ஊழியர்கள், தங்களின் பணிகளினை உகந்த முறையில் நிறைவேற்றுவதற்காகவே பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

6.3 பதவியினர் திறன் விருத்தி

தொடர் இல.	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்சியளிக்கப் பட்டபதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்ட காலம்	மொத்த முதலீடு (ரூபா '000)		நிகழ்ச்சி திட்டத்தின் இயல்பு	வெளியீடு / பெற்றுக் கொண்ட அறிவு
				உள்நாடு (ரூபா)	வெளிநாடு (ரூபா)		
1.	அலுவலக முறைமை பயிற்சி - I	30 உத்தியோகத்தர் கள்	நாளொன் றுக்கு 4 மணி	15.78	-	உள்ளூர்	ஊழியர்க ளின் விடயதான அறிவு / அணுகு முறை விருத்தி
2.	அலுவலக முறைமை பயிற்சி - II	30 உத்தியோகத்தர் கள்	நாளொன் றுக்கு 4 மணி	24.81	-	உள்ளூர்	
3.	கேளிக்கை இசை நிகழ்சி	160 உத்தியோகத்தர் கள்	-	-	-	உள்ளூர்	
4.	தாபன விதிக் கோவை / நிதிப் பிரமாணம் - I	25 உத்தியோகத்தர் கள்	01 நாள்	26.458	-	உள்ளூர்	
5.	தாபன விதிக் கோவை / நிதிப் பிரமாணம் - II	35 உத்தியோகத்தர் கள்	01 நாள்	27.626	-	உள்ளூர்	
6.	கருத்திட்ட கண்காணிப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பதவிநிலை உத்தியோகத்தர்க ள் மற்றும் திணைக்களத் தலைவர்கள்	01 நாள்	85.343	-	உள்ளூர்	உத்தியோ கத்தர்களி ன் வினைத்தி றன் விருத்தி
7.	இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்திற்கு செலுத்தப்படும் வருடாந்த உறுப்புரிமைக் கட்டணம்	01 உத்தியோகத்தர்	-	10	-	உள்ளுர	

8.	வாகன பேணுகை நிகழ்ச்சித்திட்டம்	03 உத்தியோகத்தர் கள்	01 நாள்	15	-	உள்ளூர்	
9.	ஆவணப்படுத்துதல்	01 உத்தியோகத்தர்	01 நாள்	5	-	உள்ளூர்	
10.	விருந்தினர் விடுதிகளினை உரிய முறையில் பராமரித்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	03 உத்தியோகத்தர் கள்	01 நாள்	13.395	-	உள்ளூர்	ஊழியர்க ளின் விடயதான அறிவு / அணுகு முறை விருத்தி
11.	கணனி வன்பொருள் தொடர்பான பயிற்சி	25 உத்தியோகத்தர் கள்	01 நாள்	82.590	-	உள்ளூர்	உத்தியோ கத்தர்களி ன் வினைத்தி றன் விருத்தி
12.	சுய விபரக் கோவையினை வினைத்திறனுடன் பேணுதல்.	05 உத்தியோகத்தர் கள்	01 நாள்	25	-	உள்ளூர்	
13.	அமைச்சின் நடைமுறை மூலோபாயங்கள் குறித்த விளக்கவுரை	130 உத்தியோகத்தர் கள்	01 நாள்	25.270	-	உள்ளூர்	

பொதுவாக, பாடவிதான அறிவும் மனப்பான்மையும் பயிறிசியின் மூலமே விருத்தியாவதுடன் பொது மக்களின் பணியினை உடனடியாக நிறைவு செய்வதன் மூலமும் பணியாளர்கள் மற்ற கடமைகளினைத் திறம்பட மேற்கொள்வதில் கவனம் செலுத்தவதன் மூலமும் நிறுவனத்தின் செயல்திறன் மேம்படுகின்றது.

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள்உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	√		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	√		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	பொருத்தமற்றது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	பொருத்தமற்றது		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	பொருத்தமற்றது		
1.6	ஏனையவை	பொருத்தமற்றது		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளினைப் பேணுதல் (FR445)**			
2.1	ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை 267/2018 இன்படி, நிலையான சொத்து பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பேணுதல்.	√		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பிதல் மற்றும் பராமரித்தல்.	√		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	√		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	√		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொதுத் திறைசேரிக்குச் உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	√		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	√		
2.7	பொருட் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	√		
2.8	இருப்புப் பதிவேட்டினைப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
2.9	இழப்புப் பதிவேட்டினைப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	√		
2.10	இணக்கப்பாட்டு பதிவேட்டினைப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	√		
2.11	காசோலை அடிக்கட்டைப் புத்தகங்களின் பதிவேட்டினைப் (GAN20) பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	√		
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன.	√		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது.	√		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக் கப்பட்டது.	√		
3.4	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இல. அரச கணக்கு சுற்றறிக்கையின்படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயற்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்டவை.	√		
4	**வருடாந்த திட்டங்களினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரித்தல்	√		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	√		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	√		
4.4	வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்தல் மற்றும் அதை ச.செ.தி. திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	√		
4.5	வருடாந்த காசுப் பாச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்துக் கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட திகதியில் பதிலளிக்கப்பட்டுள்ளன.	√		
6	**உள்ளக கணக்காய்வு**			
6.1	நி.பி.134(2) டி.எம்.ஏ /1-2019 இன் படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் ஆலோசனை மேற்கொண்டதன் பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டமொன்றினைத் தயாரித்தல்	√		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கை களுக்கும் ஒரு மாத காலப்பகுதியினுள் பதிலளித்தல்.	×	சில சந்தர்ப்பங்களில் சில நிறுவனங்களிட மிருந்து பதில்களைப் பெறுவது சிறப்பானதாகும்.	வுழக்கமான விளக்கங்கள் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் மூலம் இலக்குகளை அடைதல்.
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப் பிரிவு 40(4) இன் அடிப்படையில், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல்.	√		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் நிதி ஒழுங்குவிதி 134(3) இன் அடிப்படையில், கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல்.	√		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டி.எம்.ஏ. 1-2019 சுற்றறிக்கையின்படி, குறித்த ஆண்டு காலப்பகுதியில் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	சொத்து முகாமைத்துவ சுற்றிக்கை இல.01/2017 இன் பந்தி 07 இன் படி, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.	√		
8.2	மேற்குறித்த சுற்றிக்கையின் 13 ஆம் பந்தியின்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினை அமுலாக்குவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பொருத்தமான இணைப்பு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் பெயர் குறிப்பீடு செய்யப்பட்ட உத்தியோகத்தரின் விபரங்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.	√		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.01/2020 இன்படி, உரிய திகதியில் பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு அது தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.	√		
8.4	மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் என்பன இருப்பு மதிப்பாய்வுச் சபையினூடாக வெளிப்படுத்தப் பட்டுள்ளதுடன் ஏனைய அது தொடர்பான பரிந்துரைகள், நடவடிக்கைகள் என்பன சுற்றிக்கையில் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்டன.	√		
8.5	நி.பி.772 இன்படி, பாவனைக்குதவாத பொருட்களின் விற்பனையானது நடைமுறைப் படுத்தப்பட்டது.	√		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கைகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் என்பனவற்றினைத் தயாரித்து அவற்றினை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்	√		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு 6 மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
9.3	வாகனப் பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்பட்டு அவை புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	√		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி.103, 104, 109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	√		
9.5	2016.12.29 ஆம் திகதிய 30/2016 ஆம் இல. பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இன் விதிகளின்படி, எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	√		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்துப் பதிவு புத்தகம் குத்தகை காலத்தின் பின்னர் மாற்றப்படும்.	√		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டுள்ளதுடன் உரிய திகதியில் கணக்காய்வு மேற்கொள்வதற்கு தயாராகவுள்ளன.	√		
10.2	மீளாய்வு ஆண்டில் அல்லது முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட செயற்பாடற்ற கணக்குகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.	√		
10.3	வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களினூடாக வெளிப்படுத்தப்பட்ட மீதிகள் தொடர்பில் நிதிசார் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டிய சீராக்கல்களுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அத்தகைய மீதிகள் ஒரு மாத காலத்தினுள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.	√		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் செலவின எல்லையினை விஞ்சாமல் செலவிடப்பட்டுள்ளன.	√		
11.2	நி.பி.94(1) இன்படி, குறித்த ஆண்டின் இறுதியில் ஏற்பாடுகளினை விஞ்சாத பொறுப்புக்கள் மீதமாயுள்ளன.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	√		
12.2	நிலுவையாகவுள்ள கடன்கள் தொடர்பில் சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்தல்.	√		
12.3	ஒரு வருடத்திற்கு மேலாக காணப்படும் கடன் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன.	√		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	செயலிழந்த வைப்புக்களின் விற்பனை தொடர்டபில் நி.பி.571 இன்படி, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	√		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுப் பதிவேடானது இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருகின்றது.	√		
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியிலுள்ள காசேட்டு மீதியானது TOD இற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	√		
14.2	நி.பி.371 இன்படி வழங்கப்பட்ட உப கட்டுநிதியானது குறித்த பணியானது பூர்த்தியடைந்ததிலிருந்து ஒரு மாத காலத்தினுள் தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.	√		
14.3	குறித்த தேவைக்காக உருவாக்கப்பட்ட உப முற்பணமானது நி.பி.371 இன்படி அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லையினை விஞ்சும் வகையில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	√		
14.4	முற்பணக் கணக்கு மீதியானது மாதாந்தம் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப் பட்டுள்ளன.	√		
15	**வருமானக் கணக்கு**			
15.1	ஒழுங்குவிதிகளின்படி, வருமானத்திலிருந்து மீளளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	பொருத்தமற்றது		
15.2	வருமான சேகரிப்பானது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்படாது இறைவரிக் கணக்கில் நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்தன.	பொருத்தமற்றது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
15.3	நி.பி.176 இன்படி, வருமான நிலுவைகளின் மீளளிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன	பொருத்தமற்றது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	பதவியினருக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய வகையில் கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.	√		
16.2	பதவியணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலமாக கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன	√		
16.3	2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இல. சுற்றிக்கையின்படி, அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	√		
17	**பொது மக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முறையான தகவல் பதிவேடும் பேணப்பட்டு வருவதுடன் அது தகவலறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குமைவாக இற்றைப் படுத்தப்பட்டும் வருகின்றது.	√		
17.2	பொதுமக்களுக்கு நிறுவனம் தொடர்பான தகவல்கள் இணையதளம் அல்லது மாற்று வழிமுறைகள் மூலமாக அளிக்கப்பட்டுள்ளதுடன் இந்த இணையத் தளம் மற்றும் மாற்று வழிமுறைகளின் மூலம் பொதுமக்களுக்கெதிரான மெச்சுதல்கள் /குற்றச்சாட்டுக்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	√		
17.3	தகவலறியும் சட்டத்தின் பிரிவுகள் 08 மற்றும் 10 இன்படி, வருடாந்தம் அல்லது வருடத்திற்கு இரண்டு தடவை வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
18	**பிரஜைகள் பட்டயத்தினை செயற்படுத்துதல்**			
18.1	பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் நியதிகளின்படி, நிறுவனத்தினால் பிரஜைகள் சாசனம் / பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனமானது வகுக்கப்பட்டு அமுல்படுத்தப் பட்டுள்ளது.	√		
18.2	சுற்றிக்கையின் 2.3 ஆம் பந்தியின்படி, பிரஜைகள் சாசனம; / பிரஜைகள் வாடிக்கையாளரின் சாசனத்தினை வகுத்தல் மற்றும் தயாரித்தல் நடவடிக்கைகளினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு நிறுவனத்தினால் முறைமையொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.	√		
19	**மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இல.பொது நிருவாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 இலுள்ள வடிவத்தின் நியதிகளின்படி, மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.	√		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணி நேரப் பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்குக் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வளத் திட்டம் உறுதி செய்தல் வேண்டும்.	√		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில், அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயல்திறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.	√		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 பந்திக்கேற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியினை நியமித்தல்.	√		
20	**கணக்காய்வு பந்திக்கான பொறுப்புக்கள்**			
20.1	முன்னைய ஆண்டுகளுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளைச் சரி செய்தல்	√		

கலாசார அலுவல்கள் பிரிவு

01 ஆம் அத்தியாயம் - நிறுவன சுயவிபரம் / அமுலாக்கத்தின் சுருக்கம்

1.1 அறிமுகம்

இலங்கையின் பாரம்பரிய மரபுரிமையைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளல், இலக்கியத்தையும் கலையையும் பேணி வளர்த்தல், தனித்துவமான ஒரு இலங்கை தேசத்தை உருவாக்குவதற்கான உன்னத பணிக்கு கலாசார அலுவல்கள் பிரிவு உறுதி பூண்டுள்ளது. இதற்காக கலாசார அலுவல்கள் பிரிவாகிய நாம் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு எனும் தேசிய கொள்கைக்கு அமையவும் நற்குணங்கள் நிறைந்த மற்றும் உணர்திறன் வாய்ந்த மக்கள் நிறைந்த ஒரு நிலையான வளர்ச்சி அடைந்த இலங்கையில் காலடி எடுத்து வைப்பதற்குத் தேவையான பாரிய பங்கினை ஆற்றி வருகின்றது. இதற்கமைய 2022 ஆம் ஆண்டில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயற்பாடுகளில் கலாசார அலுவல்கள் பிரிவின் செயல்த் திறன் இப் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.2 நோக்கம், குறிக்கோள், செயற்பாடுகள்

நோக்கம்

“ஒரு நிலையான வளர்ச்சியடைந்த இலங்கை”

செயற்பாடு

கலாசார மற்றும் தொல்பொருள் மரபுரிமைகளை தளத்தில் மற்றும் வேறு இடத்திற்குக் கொண்டு சென்று பாதுகாத்தல் , திரைப்படம், நாடகமும் அரங்கியலும், கட்புலனாகும் மற்றும் கட்புலனாகா மரபுரிமைகள், அரச ஆவணங்களைப் பாதுகாத்தல் மற்றும் இலங்கைக்கே உரித்தான கலாசாரப் பிரிவுகளைப் பாதுகாத்தல், மேம்பாடு மற்றும் பிரச்சாரம் செய்வதற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்தல்.

குறிக்கோள்கள்

ஒரு நாட்டினுடைய கலாசாரம் அந் நாட்டு மக்களின் சுபீட்சமான நலனுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களையும் மிகவும் பயனுள்ள

முறையில் நிறைவேற்றுவதற்கு வழிவகுக்கின்ற மக்கள் நடத்தையை ஒழுங்குபடுத்துகின்ற முக்கிய கருப்பொருளாக கருத்திற்கொண்டு எமது இலக்குகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

- நாட்டின் பொதுவான தேசிய அபிவிருத்திக் கொள்கையை நிறைவேற்றச் செய்யக் கூடிய வகையில் மக்களை சுயமாக ஈடுபடுத்துகின்ற சாதகமான கலாசாரச் சூழலை நாட்டில் கட்டியெழுப்புதல்.

- இலங்கையின் பல்லினத் தன்மையை அங்கீகரித்து, ஒவ்வொரு உப கலாசாரங்களினதும் தனித்துவத்தைப் பாதுகாத்து, அனைத்து உப கலாசாரங்களும் ஒன்றாக இணைந்து இலங்கை என்ற மிகப் பெரிய கலாசாரத்தைக் கொண்ட நாடொன்றாக முன்னெடுத்துச் செல்வதும் பல்வேறு சக்திகள் மூலம் அழிந்துவருகின்ற சாதகமான கலை, கலாசார அம்சங்களை அவ்வாறான தீங்குகளிலிருந்து பாதுகாத்தல்.

- கலாசார மரபுரிமைகளைப் பேணிப் பாதுகாத்து, முன்னெடுத்துச் செல்வதும் மற்றும் அவற்றைப் பிரயோகிப்பதன் மூலம் நாட்டு மக்களின் வாழ்வில் கலாசார மையம் நோக்கிய வாழ்வொன்றை திட்டமிடுதல்.

- சிறந்த கலை அம்சங்களை அறிந்துகொள்வதற்கும் மற்றும் அவற்றை தமது வாழ்வில் சேர்த்துக்கொள்வதற்கு மக்களைத் தூண்டுதலும் அதன் மூலம் இலங்கை என்ற தனித்துவமுடைய கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்புதல்.

- கலாசார சீரழிவுக்குக் காரணமாக அமைகின்ற வெளிவாரி மற்றும் உள்வாரிக் காரணிகளை அடையாளம் கண்டு அவற்றை நிராகரித்தலும் இதற்கான தன்னம்பிக்கையை மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தலும்.

- தேசப்பற்றுள்ள சிந்தனையை முன்வைத்து அபிவிருத்தி இலக்கை நிறைவேற்றக்கூடிய தன்னம்பிக்கையுள்ள, கூட்டாக, சக்தியுடையதாக கலாசார சமூகத்தை உருவாக்குவதற்கான திட்டம்.

1.3 பிரதான கடமைகள்

- இலங்கையின் தேசிய கலாசாரத்தின் எல்லா அம்சங்களையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- வெளிநாடுகளுடன் கலாசார உறவுகளை மேற்கொள்ளுதல்.

- கலாசார மற்றும் தொல்பொருளியல் மரபுரிமைகளுக்கு சேதம் ஏற்படாத வகையில் கலாசார அடிப்படையிலான சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குதல்.

- இனங்களுக்கிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்தும் வகையில் கலாசார ரீதியிலான பங்களிப்பைப் பயன்படுத்தும் போக்கை இனமறிதலும் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும்.

- வரலாற்று ரீதியிலான, தொல்பொருளியல் மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- நவீன மற்றும் சம்பிரதாய ரீதியிலான கலை ஆக்கங்களை மேம்படுத்துதல் மற்றும் கலைஞர்களை ஊக்குவிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- நாடக, சங்கீத மற்றும் நடனத் துறைகளின் மேம்பாட்டுக்கான செயல் நெறிகளை இனமறிதலும் நடைமுறைப்படுத்தலும்.


- அரசாங்க ஆவணங்களை விதிமுறையாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் பாதுகாத்தல்.

- மத்திய கலாசார நிதிய நிர்வாகம் மற்றும் இது தொடர்பான ஆய்வினை மேற்கொண்டு மறுசீரமைப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- அமைச்சின் விடயப் பரப்பிற்கு உட்பட்ட பொது சேவைகளை திறமையாக மற்றும் பொது நட்பு முறையில் வழங்குதல்.

- சூறையாடுதல் மற்றும் ஊழலை ஒழிப்பதன் மூலம் அமைச்சு தனது பங்களிப்பை நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்காக நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைகள் மற்றும் நடைமுறைகளை சீர்திருத்தம் செய்தல்.
- கலாசார அலுவல்கள் விடயத்திற்கு மற்றும் இந்த விடயத்திற்குக் கீழ் இணைக்கப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் சட்டபூர்வ நிறுவனங்களின் விடயங்களுக்கு மற்றும் இது தொடர்பாக செயற்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திட்டங்களை உருவாக்குதல், செயற்படுத்துதல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றை மேற்கொள்ளல்.

1.4 கலாசார அலுவல்கள் பிரிவு - ஒருங்கமைப்பு வரைபடம் - 2022



1.5 அமைச்சின் கலாசார அலுவல்கள் பிரிவின் கீழ் இயங்கிவருகின்ற திணைக்களங்கள் / திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

I.  கலாசார அலுவல்கள் திணைக்களம்

இலங்கை மக்களை ஆன்மீக ரீதியாக அபிவிருத்தியடைந்த உணர்வுப்பூர்வமான மனிதர்களாக மாற்றியமைக்கும் ஒரே எதிர்பார்ப்பை நிறைவு செய்துகொள்வதற்காக இலங்கைக் கலாசாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன், இலங்கைத் தனித்துவத்தைக் கொண்ட இலக்கிய, கலை மற்றும் கலாசார நடவடிக்கைகளை பேணுதல், மேம்படுத்தல், விஸ்தரித்தலுக்கான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்துவது என்பன இந்த கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

A. கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள்

- தேசிய கலா பவனம் மற்றும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபம்.
- சுதந்திர சதுக்கம்
- மகாவம்ச தொகுப்பு அலுவலகம்
- அகராதி அலுவலகம்
- கலைக்களஞ்சிய அலுவலகம்
- கிராமிய இசைப் பாதுகாப்பு நிலையம்
- எதிரிவீர சரத்சந்திர நாடக பயிற்சிப் பாடசாலை
- வலிசிங்க ஹரிஸ்சந்திர நூதனசாலையும் கலாசார கேந்திர நிலையமும்.
- தேசிய கலைக் கேந்திர நிலையம் - கண்டி குண்டசாலை
- வட தென் நட்பு நிலையம் - மிஹிந்தலை
- புத்தகங்கள் களஞ்சியமும் புத்தகங்கள் விற்பனையும்
- அரச நடனக் குழு மற்றும் அரச சங்கீதக் குழு

இத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் ஏனைய நடவடிக்கைகள்.

- கலாசார, கலை மற்றும் இலக்கிய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் அரச விழாக்கள்/ உற்சவங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் கலைஞர்கள் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- கலாசார, கலை மற்றும் இலக்கிய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- அலுவலக சேவையணியினர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

II. தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

1877 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் மூலம் வளமான எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல், காட்சிப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல், கலாசாரம் மற்றும் இயற்கைப் பாரம்பரியத்திற்கு உரிய வளங்கள் அறிவு பூர்வமாக மற்றும் விதிமுறைகளுக்கு அமைய பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களின் மதிப்பீட்டுக் கற்கை மற்றும் இரசனைக்காக முன்வைத்தல் என்பன மேற்கொள்ளப்படும்.

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- நாடு பூராகவும் அமைந்துள்ள தேசிய நூதனசாலைகள் (10)
- மானிடவியல்ப் பிரிவு
- மானிட வரலாற்று விஞ்ஞானப் பிரிவு
- புவியியல்ப் பிரிவு
- விலங்கியல்ப் பிரிவு
- நுண்ணியல் பிரிவு
- தாவரவியல்ப் பிரிவு
- பாதுகாப்புப் பிரிவு
- நூல்நிலையம்
- கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

III.  தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களம்

கலாசார உரிமையின் ஒரு பகுதியாக அரசாங்க ஆவணங்களின் முறையான முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பிற்காக தேசிய ஆவணக்காப்பக சட்டம் மற்றும் அது சம்பந்தப்பட்ட சட்டங்கள், ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தல், நிரந்தர பாதுகாப்பிற்காக அரச ஆவணங்கள் மற்றும் முக்கியமான தனியார் ஆவணங்களை பெற்றுக் கொள்ளல், குறித்த சட்டங்கள், விதிகளுக்கு அமைய பாரம்பரிய மற்றும் பாரம்பரியமல்லாத அரச ஆவணங்களின் முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல், உரிய சட்டரீதியான வைப்புக்கு பத்திரிகை மற்றும் வெளியீடுகளின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளல், அரசாங்க நிருவாக செயன்முறையின் போது மற்றும் மக்களின் ஆராய்ச்சிக்கான வைப்பு ஆவணங்களிலிருந்து தகவல்களை பெற்றுக் கொள்ள வசதி செய்வது என்பன தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- அரசாங்க ஆவணங்களை இணைத்தல் பிரிவு
- கண்காட்சிப் பிரிவு
- புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளைப் பதிவு செய்தல் பிரிவு
- ஆவணங்களைப் பாதுகாத்தல் பிரிவு
- செய்தித்தாள் மைக்ரோ புகைப்படம் எடுத்தல் பிரிவு
- ஆவணக் கட்டடத்தின் விரிவாக்கப் பிரிவு
- ஆவண முகாமைத்துவ கருத்திட்டப் பிரிவு
- ஆராய்ச்சிப் பிரிவு
- பொதுமக்கள் தொடர்புப் பிரிவு

IV. இலங்கை கலை மன்றம்

கலை நடவடிக்கைகளை மேம்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் விருத்தி செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான உப குழுக்களை நியமித்து அவர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்குதல் மற்றும் வழிகாட்டுதல், இலக்கியம், நாடகம், இசை, நடனம் மற்றும் சித்திர உப குழுக்களின் மூலம் நாடளாவிய ரீதியில் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், கலைஞர்களை தேசிய மட்ட மதிப்பீடுகளுக்குக்

கொண்டுவருதல் மற்றும் அவர்களை தேசிய மட்டத்திற்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் நியமிக்கப்பட்ட துறைகளில் அவர்களை உயர் மட்டங்களில் நிலை நிறுத்துதல், நுண்கலைகளின் நிலையை மேம்படுத்துதல், இலங்கையின் தனித்துவமான கலை மற்றும் கைவினைத் துறையை மேம்படுத்துதல், கலை தொடர்பான ஏனைய திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றுதல், நற்பண்புள்ள சமுதாயத்தை உருவாக்கும் பொருட்டு பொருத்தமான கலாசார சூழலை உருவாக்குவது போன்றவை இங்கு முக்கியமான பணியாகும்.

1.6 அமைச்சின் கீழ் இயங்கிவருகின்ற நிறுவனங்கள் / நிதியங்கள்

I. எஸ்.டப்.ஆர்.டீ. பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம்

காலம் சென்ற எஸ்.டப்.ஆர்.டீ. பண்டாரநாயக்க அவர்களின் ஞாபகார்த்தமாக நினைவகத்தை என்றென்றும் நிலைநிறுத்துவதற்காக "எஸ்.டப்.ஆர்.டீ. பண்டாரநாயக்க தேசிய ஞாபகார்த்த மண்டபம்" ஆக அடித்தளமொன்று 1975 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி அமைக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டு இலக்கம் 02 குறிப்பிடப்படும் பாராளுமன்ற சட்டம் மற்றும் 1981 மற்றும் 1983 ஆம் ஆண்டின் திருத்தத்தின் மூலம் மண்டபம் செயற்படுத்தப்பட்டது. தெற்காசியாவில் முக்கியத்துவம் வாய்ந்த விழாக்கள் மற்றும் கண்காட்சி மையமாக அமைப்பதற்கான தொலைநோக்குடன் கூடிய வர்த்தகப் பெயர், பௌதீக வளங்கள் மற்றும் மனித மூலதனத்தை புதிய முறையில் ஊக்குவிப்பதன் மூலம் நிறுவனத்தின் தனித்துவமான நிலையை பராமரிப்பதும் மேம்படுத்துவதும் இதன் முக்கிய பங்காகும். இதன் கீழ் மூன்று முக்கிய பிரிவுகள் செயற்படுகின்றன.

- எஸ்.டப்.ஆர்.டீ. பண்டாரநாயக்க தேசிய ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் (BMICH) - 1976 ஆம் ஆண்டில் இணைந்திராத மாநாட்டிற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் அனைத்து இனங்கள் மற்றும் சர்வதேச மாநாடு ஒன்றிற்கான வசதிகளை வழங்கும் பிரதான நிறுவனமாக செயற்படுகிறது.

- பண்டாரநாயக்க சர்வதேச கற்கைகளுக்கான மத்திய நிலையம் - சர்வதேச உறவுகள் மற்றும் மொழிப் பாடநெறிகளை நடாத்துதல் என்பன மேற்கொள்ளப்படுகிறது.
- நூதனசாலை - எஸ்.டப்.ஆர்.டி.பண்டாரநாயக்க நூதனசாலை மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்க நூதனசாலை என இரண்டு நூதனசாலைகள்.

II. ஜே.ஆர் ஜயவர்த்தன கேந்திர நிலையம்

ஜே.ஆர் ஜயவர்த்தன கேந்திர நிலையம் இலங்கையின் முதல் நிர்வாகத் தலைவர் "ஜூனியஸ் ரிச்சர்ட் ஜெயவர்த்தன" ஜனாதிபதியின் கருத்துப்படி 1988 ஆம் ஆண்டு 77 ஆம் இலக்கம் குறிக்கும் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள ஒரு சட்ட ரீதியான நிறுவனமாகும். இந் நிலையம் ஒரு நூல் நிலையம், ஒரு நூதனசாலை, ஜனாதிபதி காப்பகம் மற்றும் ஜப்பானிய அருங்காட்சியகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இங்கு திரு. ஜயவர்த்தன அவர்களின் தனிப்பட்ட நூல்நிலைய சேகரிப்பு மற்றும் அவரின் அரசியல் வாழ்க்கை தொடர்பான ஆவணங்கள் மற்றும் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சில கடித ஆவணங்கள் மற்றும் அவர் ஆட்சிக் காலத்தில் பெற்ற பரிவு அருங்காட்சியகத்தின் பதிவுகளும் வைக்கப்பட்டுள்ளன. இந் நிலையம் பொதுமக்களுக்காக திறக்கப்பட்டுள்ளதுடன் பல்வேறு வகையான சமூக சேவைகளை வழங்குகின்றது.

1.7 வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் கருத்திட்டங்களின் தகவல்கள்

கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

02. ஆம் அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் கண்ணோட்டம்

கலாசார மத்திய நிலைய நிகழ்ச்சித் திட்டங்கள், கலாசார அலுவல்கள் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் முக்கிய நிகழ்ச்சித் திட்டங்களாகும். இதன் கீழ், நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் சிறுவர்கள் மற்றும் கலைஞர்களின் கலைத்திறனை மேம்படுத்தும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய நாடக அரங்குகள், நூலக வசதிகள் மற்றும் அரங்கை அமைக்கும் நோக்குடன் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் "கலாச்சார நிலையம்" ஒன்றை நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது பாரம்பரியமான அவைக்காற்றுகைக் கலை மற்றும் பாரம்பரிய கலாசாரப் பிரிவுகளைப் பாதுகாத்து அதன் மூலம் வளர்க்கப்பட்ட கலாசாரத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் இக் கலாசாரக் கூறுகளைப் பொது மக்களிடம் கொண்டு செல்வதற்கு பங்களிப்புச் செய்யும் ஒரு முறையான பொறிமுறையாகும்.

கலாசார மத்திய நிலையங்கள் தொடர்பான அடிப்படைத் தகவல்கள்

மாகாணம்	மாவட்டம்	பி.செ. பிரிவு	நிர்மாணிக்கப் பட்டு செயற்பட்டு வரும் க.ம.நிலையம்	திறந்து வைக்கப்பட உள்ள க.ம.நிலையம்	நிர்மாணிக்கப் பட்டு வருகின்ற புதிய க.ம.நிலையம்
மத்திய	கண்டி	20	15	-	-
	மாத்தளை	11	11	-	-
	நுவரெலியா	05	04	-	-
கிழக்கு	அம்பாறை	20	07	04	01
	மட்டக்களப்பு	14	06	-	-
	திருகோணமலை	11	06	-	-
வட மத்திய	அநுராதபுரம்	22	13	01	01
	பொலன்னறுவை	07	06	-	-
வடக்கு	யாழ்ப்பாணம்	15	10	-	-
	கிளிநொச்சி	04	-	-	-
	மன்னார்	05	-	-	-
	முல்லைத்தீவு	06	-	-	-
	வவுனியா	04	02	-	-
வட மேல்	குருநாகல்	30	18	04	02
	புத்தளம்	16	08	02	-

சப்ரகமுவ	கேகாலை	11	09	-	-
	இரத்தினபுரி	17	08	-	-
தெற்கு	காலி	19	14	-	-
	அம்பாந்தோட்டை	12	07	-	-
	மாத்தறை	16	16	-	-
ஊவா	பதுளை	15	13	-	-
	மொனராகலை	11	07	01	-
மேல்	கொழும்பு	13	07	-	-
	கம்பஹா	13	09	01	-
	களுத்துறை	14	12	01	-
	மொத்தம்	**331**	**208**	**14**	**04**

கலாசார மத்திய நிலையங்களினால் வழங்கப்படும் அடிப்படைச் சேவைகள் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்

வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு உயர்தரக் கலைப் படைப்புக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான ஆய்வு மற்றும் பயிற்சிகளைப் பெறக் கூடிய நிறுவனக் கட்டமைப்பாக மாற்றும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 208 கலாசார மத்திய நிலையங்களில் பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அங்கு பாட்டு, இசை வாத்தியம், நடனம் போன்ற கலைத் திறன்களைப் பெற்றுக் கொள்ள ஆர்வம் உள்ளோர் அனைவரும் பங்கேற்கும் வகையில் தரமான நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. மேலும் விசேடமாக நாட்டுப்புறவியல் பற்றிய தகவல் சேகரிப்பு மற்றும் ஆராய்ச்சி விடயங்களுக்கான வாய்ப்பினை வழங்குவதுடன் இவற்றிற்கு மேலதிகமாக பின்வரும் பாடநெறிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

- உடரட்ட, பஹத ரட்ட, சப்ரகமுவ, பரதம், கதக் மற்றும் கிராமிய நடன பாடநெறிகள்.
- மேலத்தேய இசை மற்றும் கீழத்தேய இசை பாடநெறிகள்.
- நாடகமும் அரங்கியலும் பாடநெறி.
- ஓவியம்,
- சிற்பம் மற்றும் செதுக்குக் கலை பாடநெறி.
- ஜோதிட பாடநெறி.
- உடல் மற்றும் மன வளர்ச்சி பாடநெறி.
- கைப்பணி உற்பத்திகள், பற்றிக் தயாரிப்பு பாடநெறி.

- சிங்களம், தமிழ், ஆங்கிலம், பாளி மற்றும் கலாசார மொழிகள் தொடர்பான பாடநெறிகள்.
- அங்கம்பொர கைவினைப் பாடநெறி.
- முஸ்லிம் ரபான் / கோலாட்ட நடனப் பாடநெறி.
- வெகுஜனத் தொடர்பு பாடநெறி.
- உள்நாட்டு கை வைத்திய பாடநெறி.
- சீன பாரம்பரிய தற்காப்புக் கலைப் பாடநெறி.
- அழகுக் கலை பாடநெறி.

நூலக சேவையினை வழங்குதல்

அனைத்து பிரதேச கலாசார மத்திய நிலையங்களிலும் அமைக்கப்பட்டுள்ள நூல் நிலையங்களின் மூலம் பாடசாலை மாணவர்களின் மற்றும் பிரதேச மக்களின் வாசிப்பின் மீதுள்ள ஆர்வத்தை அதிகரித்தல் மற்றும் கல்வியை எளிதாக்கும் நோக்கத்துடன் இந்த சேவை செயல்ப்படுத்தப்படுகிறது. சில மத்திய நிலையங்களின் மூலம் பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள கிராமிய சங்கங்களுக்கான நடமாடும் நூல் நிலைய சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கலாசார சேவைகளை வழங்குதல்

பிரதேச மக்களின் தேவைகளுக்கு ஏற்ப சமய/ கலாசார விழாக்களின் தேவைகளுக்காக பிரதேச கலாசார மத்திய நிலையங்களின் மூலம் கலாசார சேவைகள் வழங்கப்படுகின்றன. இதன் கீழ் ஜய மங்கள காத்தா குழுக்கள், ஹேவிசி குழுக்கள், மங்கள வாத்திய குழுக்கள், வெஸ் நடன குழுக்கள், நடன குழுக்கள், வீதி நாடகக் குழுக்கள் மற்றும் கிஹி பிரித் குழுக்கள் ஆகிய வசதிகளை வழங்குதல்.

சமய/ கலாசார/ கல்வி மற்றும் சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைத்தல்.

கலாசார மத்திய நிலையம் பிரதேச ரீதியாக வருடம் முழுவதும் பல்வேறு சமய/ கலாசார/ கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை அவர்களது அபிவிருத்தி நிதியில் இருந்து/ பிரதேசத்தின் நிதி உதவியுடன்/ அரச பங்களிப்புடன் பிரதேச மக்களுக்காக நடாத்தப்படுகிறது.

கலாசார மத்திய நிலைய தேசிய நடனக் குழாமினை பராமரித்து வருதல்.

கலாசார மத்திய நிலையங்களில் நுண்கலைப் பாடநெறிகளைப் பயிலும் மாணவர்களிடையே உயர் திறமைகளை வெளிப்படுத்தும் மாணவ மாணவியர்கள்

அடங்கிய நடனக் குழாம் பராமரிக்கப்பட்டுவருகிறது. அரச / தேசிய விழாக்களுக்காகவும் வெளிநாட்டு கலாசார சுற்றுலாவிற்காகவும் இவ் நடனக் குழாம் பங்களிப்புச் செய்கிறது.

2.1 கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் 2022 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கருத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்.

தொ. இல.	செலவு விடய விபரம்	2022 ஒதுக்கீடு ரூ.மி.	செலவு 2022.12.31 ஆம் திகதிக்கு ரூ.மி.	நிதி முன்னேற்றம்
கலாசார மத்திய நிலைய நிகழ்ச்சித் திட்டங்களை செயல்ப்படுத்துதல்				
01.	கலாசார மத்திய நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தல் 101-02-05-9-1409	72.30	67.05	93%
02.	கலாசார மத்திய நிலையங்களுக்காக பெர/ சங்கீத வாத்தியங்கள்/ மரத் தளபாடங்கள் என்பவற்றைப் புதுப்பித்தல், மற்றும் நூல்நிலைய மேம்பாட்டிற்காக நூல்களைக் கொள்வனவு செய்தல். 101-02-05-0-2002	0.35	0.20	50%
03.	கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு. 101-02-05-0-2102	3.00	3.00	98%
04.	கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களின் கொள்வனவு. 101-02-05-0-2103	5.00	4.00	79%

05.	கலாசார மத்திய நிலைய சிறிய புதுப்பித்தல் வேலைகள், மேம்படுத்தல்கள் மற்றும் பராமரிப்பு விடயங்கள் 101-02-05-0-2001	20.00	14.00	70%
06.	கலாசார மத்திய நிலைய நிர்மாணிப்பு 101-02-05-23-2104	40.00	38.00	95%
விசேட கலாசார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை (மீண்டெழும்) செயல்ப்படுத்துதல்				
07.	சமூக கலாசார ஒருங்கிணைப்பிற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் 101-2-5-6-1508	3.44	3.40	100%
08.	அரச நிறுவனங்களில் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துதல். (அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டி) 101-2-5-8-1409	3.00	2.95	99%
09.	வெளிநாட்டுக் கலாசார உறவுகளுக்கான நிகழ்ச்சித் திட்டம். 101-2-5-27-1409	4.40	3.96	90%
விசேட கலாசார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை (மூலதன) செயல்ப்படுத்துதல்				
10.	கைத்தொழில் கிராமங்களுக்கான நிகழ்ச்சித் திட்டம். 101-02-05-21-2506	1.50	0.72	48%
11.	கலாசார விழுமியங்கள் மற்றும் உள்நாட்டு அறிவு தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள். 101-02-05-29-2507	0.80	0.60	75%

12.	தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள். 101-02-05-31-2509	10.00	7.10	71%
13.	அமரதேவ கலைக்கூடம் 101-02-05-37-2104	110.00	75.09	68%

2.1.1 கலாசார மத்திய நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தல்

101-02-05-9-1409

கலாசார மத்திய நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டில் ரூ.மி.72.00 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் செயற்பட்டு வரும் கலாசார மத்திய நிலையங்களில் நுண்கலை மற்றும் திறன் விருத்திப் பாடநெறிகளை நடைமுறைப்படுத்துவதற்காக (10 மாதங்களுக்கு) வளவாளர்களுக்கான கொடுப்பனவுகள் இச் செலவு விடயத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

2.1.2 கலாசார மத்திய நிலையங்களுக்காக பெர/ சங்கீத வாத்தியங்கள்/ மரத் தளபாடங்கள் என்பவற்றைப் புதுப்பித்தல், மற்றும் நூல்நிலைய மேம்பாட்டிற்காக நூல்களைக் கொள்வனவு செய்தல்.

101-02-05-0-2002

2022 ஆம் ஆண்டிற்கு 0.35 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் நாடு பூராகவும் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையங்களின் வேண்டுகோளுக்கு அமைய சீத்தவக்க, தமன்கடுவ, மத்திம நுவரகம் பலாத்த மற்றும் வலிமட கலாசார மத்திய நிலையங்களிற்காக சங்கீதக் கருவிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

2.1.3 கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு.

101-02-05-0-2102

கலாசார மத்திய நிலைய கட்டமைப்பின் செயலூக்கப் பராமரிப்பிற்காக கலாசார மத்திய நிலையங்களுக்கு தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்குவதற்காக 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 3.00 மில்லியன் ஒதுக்கீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இவ் ஒதுக்கீடுகள் தம்புத்தேகம, கொடக்கவெல, கொட்டவெகர, கங்கஇகளகோரளே ஆகிய கலாசார மத்திய நிலையங்களிற்குத் தேவையான

தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2.1.4 கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களின் கொள்வனவு.

101-02-05-0-2103

கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களின் கொள்வனவு செய்வதற்காக 2022 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒதுக்கீட்டின் அளவு ரூபா 5.00 மில்லியன் ஆகும். இந் நிதியினைச் செலவு செய்வதற்காக மஹகும்புக்கடவல, உடுநுவர, நியாகம, லுனுகம்வெகர, மொனறாகலை, கணேவத்தை, பலாகல, கரவெட்டி, தமன்கடுவ, கொழும்பு பல்கலைக்கழகம், சொரணாதொட்ட மற்றும் பாணந்துறை ஆகிய 12 கலாசார மத்திய நிலையங்களுக்குத் தேவையான கணணி உபகரணங்களின் கொள்வனவு மற்றும் மததும்பர கலாசார மத்திய நிலையத்திற்கு ஒரு அச்சு இயந்திமும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே பன்னல, அம்பலாந்தோட்டை, அம்பரலுவ, திக்வல்ல, கொட்டபொல ஆகிய கலாசார மத்திய நிலையங்களுக்குத் தேவையான கணணி இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. வியாங்கொடை தேசிய பயிற்சி நிலையத்திற்கு ஒரு மல்டி மீடியா புரொஜெக்டர் இயந்திரமும் 02 பொயிலரும் யட்டவத்தை கலாசார மத்திய நிலையத்திற்கு நீர் இறைக்கும் இயந்திரமும், மாபலகம மற்றும் கொட்டபொல ஆகிய கலாசார மத்திய நிலையங்களுக்குத் தேவையான புல் வெட்டும் இயந்திரமும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அலுவலக உபகரணங்கள், இசைக் கருவிகள், நடன உபகரணங்களைக் கொள்வனவு

2.1.5 கலாசார மத்திய நிலைய சிறிய புதுப்பித்தல் வேலைகள், மேம்படுத்தல்கள் மற்றும் பராமரிப்பு விடயங்கள்

101-02-05-0-2001

இதன் கீழ் நாடு முழுவதும் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையங்களான போப்பே போத்தல, பன்னல, தரணியகல, அம்பன்கங்ககோரள, யட்டவத்த, கலேவெல, நுவரெலியா, மல்லவபிட்டிய, வீரம்புகெதர, வலிகந்த, மாத்தளை, செங்கலடி, வாகரை, மண்முனை வடக்கு, மகரகம மற்றும் நியாகம ஆகிய 26 கலாசார மத்திய நிலையங்களுக்காக 2022 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 20.00

மில்லியன் நிதியில் ரூபா 14.00 மில்லியன் நிதியினைப் பயன்படுத்தி சிறிய புதுப்பித்தல் வேலைகள், நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.1.6 கலாசார மத்திய நிலைய நிர்மாணிப்பு வேலைத் திட்டங்களை செயற்படுத்துதல்.

101-02-05-23-2104

2022 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 40.00 மில்லியன் நிதியில் ரூபா 38.00 மில்லியன் நிதியினைப் பயன்படுத்தி கலாசார மத்திய நிலைய நிர்மாணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கமைய மஹஓயா, உஹன, இறக்காமம், தமண, சாய்ந்தமருது, பொல்கஹவெல, அஹெட்டுவெவ, மத்துகம, பாலிந்தநுவர, அல்ல, கங்கஇஹளகோரளை, இம்புல்பே மற்றும் மாலிம்பட ஆகிய கலாசார மத்திய நிலையங்களின் நிர்மாணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கலாசார மத்திய நிலைய நிர்மாணிப்பு – 2022, பௌதீக முன்னேற்றம் 2022.12.31 ஆம் திகதிக்கானது.

நிர்மாணிப்பு வேலைகள் முழுமையாக முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ள கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை	10
போதுமான அளவு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு திறந்துவைக்கப்படக் கூடிய கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை	07
நிர்மாணிப்பு வேலைகள் நிறுத்தப்பட்டுள்ள கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை	03
திறந்து வைக்கப்படவுள்ள மொத்த கலாசார மத்திய நிலையங்களின் எண்ணி	**20**

2.1.7 சமூக கலாசார ஒருங்கிணைப்பிற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

101-2-5-6-1508

2022 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 3.44 மில்லியன் நிதியில் ரூபா 3.43 மில்லியன் நிதியினைப் பயன்படுத்தி கலாசார மத்திய நிலையங்களின் ஊடாக நடாத்தப்படும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிதி உதவியின் கீழ் கணேவத்தை கலாசார மத்திய நிலையத்தின் ‘‘கொஹொம்பகங்காரிய சாந்திச் சடங்கு’’ நடத்துவதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை வழங்குதல், பண்டுவஸ்நுவர கலாசார மத்திய

நிலையத்தினால் நடாத்தப்படும் ‘‘அம்மாவருநே’’, ‘‘சர்வதேச மகளிர் தினம்’’ ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கீடுகளை வழங்குதல், பலாங்கொடை, அலவ்வை மற்றும் மததும்பர ஆகிய கலாசார மத்திய நிலையங்களின் ஊடாக நடாத்தப்படும் ‘‘செனகச’’ நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அவ்வாறே நாகொல்ல – உக்குவெல கலாசார மத்திய நிலையங்களின் ஊடாக நடாத்தப்படும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைப் பயிலும் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணருதல் மற்றும் கலைஞர்களுக்கு பரிசில்களை வழங்குவதற்காகவு நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாரியபொல கலாசார மத்திய நிலையதின் ஊடாக மகளிர் தினத்தை முன்னிட்டு ‘‘புன்சித் கிராமியப் பாடல்’’ நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இதற்கான ஒதுக்கீடுகளும் வழங்கப்பட்டுள்ளதுடன் மத்துகம கலாசார மத்திய நிலையதின் ஊடாக நடாத்தப்பட்ட ‘‘புஞ்சி அபட்ட பியாம்பன்ன அத்தட்டுதென்ன’’ நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும், கங்குரான்கெத்த கலாசார மத்திய நிலையதின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ‘‘கர்ப்பிணி சாந்திகர்மய’’ அழகியல் சார்ந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும், இம்புல்பே கலாசார மத்திய நிலையதின் ஊடாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் ஒதுக்கீடுகளை வழங்குதல் ஆகியன 2022 ஆம் ஆண்டிற்குரிய இவ் செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் சத்தரமஹா தேவாலயத்துடன் இணைந்து நடாத்தப்படும் எசல மஹா பெரஹரவை முன்னிட்டு கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள தேவாலயங்களில் நடைபெற்ற பெரஹரவிற்காக ஒதுக்கீடுகளை வழங்குதல், 2022 ஆம் ஆண்டிற்கான புத்தாண்டு சுப சீட்டுக்களை அச்சிடுவதற்காகவும் தேவையான ஒதுக்கீடுகள் இவ் செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வரலாற்று சிறப்புமிக்க மிஹிந்தலை பொசோன் ஹேவிசி பூஜைக்காகவும் எசல மஹா பெரஹரவுடன் இணைந்து நடாத்தப்டும் மாத்தளை பெரஹர மற்றும் நுவரெலிய தேவாலய பெரஹர மற்றும் வரலாற்று சிறப்புமிக்க தம்பதெனிய மகா விகாரையினால் நடாத்தப்படும் ஸ்ரீ தலதா பெரஹர திருவிழாவிற்கும் ஒதுக்கீடுகளை வழங்குதல் என்பன இவ் செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.1.8 அரச நிறுவனங்களில் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு (அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டி) உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

101-2-5-8-1409

அரச ஊழியர்களின் ஆக்கத்துவமான கலை திறன்களை மதிப்பிடுவதற்காக அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டி வருடம் தோறும் ஏற்பாடு செய்யப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் 2021 – அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டி (சிங்கள மொழிப் படைப்புக்கள் - 1081 ம் (சிறு கதை, கவிதை, சிறுவர் ஆக்கம், குறு நாடகம், குறுந் திரைப்படம், புகைப்படம் மற்றும் சித்திரம்) தமிழ் மொழிப் படைப்புக்கள் - 311 ம் (சிறு கதை, கவிதை, சிறுவர் ஆக்கம், பாடல் ஆக்கம்) என்பவற்றில் வெற்றியாளர்களுக்கான விருது வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 2021 ஆம் ஆண்டில் அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டியில் நிலுவையில் உள்ள பற்றுச் சீட்டுக்களைச் செலுத்துவதும் இவ் செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.1.9 வெளிநாட்டுக் கலாசார உறவுகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

101-2-5-27-1409

கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கலாசார உறவுகளை மேம்படுத்துவதற்காக உள்ளூர் கலாசார சுற்றுலாத் துறையுடன் இணைந்து கலாசாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட "Cultural Saubhagya" சர்வதேச கலாசார கச்சேரி 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் மற்றும் வெளிநாட்டு பிரமுகர்களின் தலைமையில் நெலும் பொக்குண மஹிந்த ராஜபக்ஷ திரையரங்கில் நடைபெற்றது. இதற்காக தேசிய நடனக் குழுவைச் சேர்ந்த கலைஞர்கள், கலாசார மத்திய நிலையங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் அரச நடனக் குழுவைச் சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர்.

மேலும், Republic of Koria, Asia Dance Committee Meeting 2022 நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஆலோசகர் ஒருவர் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கலந்துகொண்டார்.

2.1.10 கைத்தொழில் கிராமங்களுக்கான நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துதல்.

101-02-05-21-2506

உள்ளூர் கலைகள் மற்றும் கைவினைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் மற்றும் கைவினைஞர்களை மதிப்பளிக்கும் நோக்கத்துடனும் தும்பரா மாதிரித் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு நிதி வெகுமதிகளை வழங்குதல் மற்றும் நினைவுப்

பரிசில்களை வழங்குதல் என்பன இடம்பெற்றுள்ளதுடன் இவ் செலவு விடயத்திற்காக 2022 ஆம் ஆண்டிற்கு ரூ.மி.1.50 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.1.11 கலாசார விழுமியங்கள் மற்றும் உள்நாட்டு அறிவு தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளை நடாத்துதல்.

101-02-05-29-2507

கலாசார விழிப்புணர்வுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், தேசிய கலாசாரக் கொள்கைகளைத் தயாரித்தல், மும்மொழிகளிலும் பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுதல் ஆகிய நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பேராதெனிய பல்கலைக்கழகத்துடன் இணைந்து பாரம்பரிய கலைஞர்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வது தொடர்பாக தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இவ் செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்காக ரூ.மி.0.80 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.1.12 தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

101-02-05-31-2509

முக்கியமாக இந்த செலவுத் தலைப்பின் கீழ் தேசிய நடனக் குழுவினை நிறுவுதல் மற்றும் "பிரதிபா" கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையிலான போட்டியினை நடாத்துதல் மற்றும் அருவ மரபுப் பாதுகாப்பு அலகினை நிறுவுதல் மற்றும் அதன் வேலைத் திட்டங்களைத் தொகுத்தல் ஆகிய நிகழ்ச்சித் திட்டங்கள் இவ் செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **தேசிய நடனக் குழுவினை நிறுவுதல்.**

கலாசார அலுவல்கள் பிரிவுடன் இணைந்து மாகாண மட்டத்தில் திறமையைக் காட்டும் வளரும் கலைஞர்களைத் தெரிவு செய்து தேசிய நடனக் குழு அமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மற்றும் சர்வதேச கச்சேரி வாய்ப்புக்களின் மூலம் இவ் வளரும் கலைஞர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் அனுபவத்தை வழங்குதல் மற்றும் அவர்களை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் மேலும் சுற்றுலாத் துறையுடன் இணைந்து மேடைக் காட்சிகளை வழங்குவதற்கான் வாய்ப்புகளையும் அவர்களுக்கு வழங்குகிறது.

- **"பிரதிபா" கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையிலான போட்டியினை நடாத்துதல்.**

பாரம்பரிய நடனக் கலைகளை நவீன தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் உடரட்ட, பகத்தரட்ட மற்றும் சபரகமுவ நடன மரபுகளை நவீன மாணவர் சமூகத்திற்கு புதிய முறையில் அறிமுகப்படுத்தும் நோக்குடன் ஒரு நிகழ்ச்சித் திட்டமாக கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையில் நடாத்தப்படும் "பிரதிபா" கலாசார மத்திய நிலைய போட்டியினை அறிமுகப்படுத்தலாம். ஆண்டு தோறும் நடாத்தப்படும் இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் பாரம்பரிய நடனக் கலையை ஊக்குவிப்பதும் பிரச்சாரம் செய்வதும் ஆகும்.

- **"கலாசார நுண்ணறிவு" பயிற்சிப் பட்டறையினை நடாத்துதல்.**

மேம்பாட்டுப் பிரிவின் மூலம் 18 ஆய்வு உத்தியோகத்தர்களுக்காக உத்தியோகத்தர் பயிற்சிப் பட்டறையினை நடாத்துதல்.

- **"தேசிய கலாசாரக் கொள்கை" உருவாக்கம்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1525/12 மூலம் தேசிய கலாசாரக் கொள்கை அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அந்தக் கொள்கையை அமுல்ப்படுத்துவதிலும் தற்போது அதனை மாற்றியமைப்பதிலும் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன. நவீன சிக்கலான சமூகத்திற்கு ஏற்றவாறு வரையறை மற்றும் முறையான நடைமுறைப்படுத்தல் பொறிமுறை சேர்க்கப்படாததால் இந்த சாசனத்தைத் திருத்தி தற்காலத்திற்கு ஏற்றவாறு தயார்செய்வதற்காக, இந் நாட்டின் அனைத்து கலாசாரங்கள் பற்றிய விரிவான அறிவைக் கொண்ட அறிஞர்களிடம் இருந்து கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக மூன்று மொழிகளிலும் பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டு ஒரு நிபுணர் குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

2.1.13. அமரதேவ கலைக் கூடத்தினை நிறுவுதல்

101-02-05-37-2104

இந்த செலவு விடயத்தின் கீழ் அமரதேவ கலைக்கூட நிர்மாணப் பணிகள் தொடர்பான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆராய்ச்சிகளை மேற்கொள்வது, கலைஞர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பது மற்றும் அதனை ஒரு ஸ்ரூடியோவாக பராமரிப்பது இதன் நோக்கமாகும்.

2.2 சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

<u>கலாசார பாரம்பரியத்தை மேம்படுத்தும் திட்டங்களைச் செயற்படுத்துதல்.</u>

கருத் திட்டம் / நிகழ்ச்சித் திட்டம்	ஆரம்பிக்கப் பட்ட / முன்மொழி யப்பட்ட திகதி	எதிர்பார்க்கப்படும் நன்மைகள்		நன்மைகள் கிடைக்கப் பெறும் காலப் பகுதி
		அளவு	தரம்	
1. சமூக கலாசார ஒருங்கிணைப்பிற் கான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள **101-2-05-009-1409-99**	2023 ஆம் ஆண்டிற்கு	• 75 ஆவது தேசிய சுதந்திர தின விழாவை முன்னிட்டு இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட யாழ் கலாசார மத்திய நிலையத்தின் திறப்பு விழாவிற்காக ஒரு கலாசார நிகழ்ச்சியை வழங்குதல். • கலாசார மத்திய நிலையங்களின் வலையமைப்பை விரிவுபடுத்தல். • சிங்கள, இந்து புத்தாண்டு விழா. • புத்தாண்டு சுப சீட்டுக்களை அச்சடிக்கும் நடவடிக்கைகள். • தேசிய வெசாக் விழா. • தேசிய பொசொன் விழா. • பெரஹர மற்றும் வேறு விசேட நிகழ்வுகளுக்காக கலாசார மற்றும் நிதி உதவிகளை வழங்குதல்.	• யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்ட இந்துக் கலாசாரத்தின் வளர்ச்சிக்கு இடமளித்தல். • உள்ளூர் கலாசார பாரம்பரியத்தைப் பராமரித்தல்,பாது காத்தல் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு வழங்குதல். • இந்திய இலங்கை நட்புறவை உறுதிப்படுத்தல். • சிங்கள – திராவிட இனங்களுக்கு இடையே கலாசார உறவுகளை வளர்த்தல். • இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை மேம்படுத்துதல். • மத மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தல்.	நீண்டகால

கருத் திட்டம் / நிகழ்ச்சித் திட்டம்	ஆரம்பிக்கப் பட்ட / முன்மொழி யப்பட்ட திகதி	எதிர்பார்க்கப்படும் நன்மைகள்		நன்மைகள் கிடைக்கப் பெறும் காலப் பகுதி
		அளவு	தரம்	
		• கலாசார மத்திய நிலையங்களின் மூலம் செயல்ப்படுத்தப்படும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்.		
2. அரச நிறுவனங்களில் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துதல். (அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டி) **101-2-05-009-1409-099**	2023 ஆம் ஆண்டிற்கு	• அரச சேவையில் பணியாற்றும் மற்றும் ஓய்வு பெற்ற ஊழியர்களின் ஆக்கங்களை வெளியிடுதல். (குறு நாடகம், புகைப்படம், குறுந் திரைப்படம்)	• திருப்திகரமான அரச ஊழியர்களின் தோற்றம். • அரச ஊழியர்களின் கலைப் படைப்புத் திறன்களை வளர்த்து அவற்றை வெளியிடுவதற்கான வாய்ப்புக்களை வழங்குதல். • கடமையின் போது ஏற்படும் ஏகபோகத்தைக் குறைத்தல். • ஊக்கமளிக்கும் அரச ஊழியர்களை உருவாக்குதல். • அரச சேவையில் ஒன்றிணைதல் மற்றும் நல்லிணக்கத்தை வளர்ப்பது. • நிறைவான ஒரு ஓய்வு வாழ்க்கையை உருவாக்குதல்.	நீண்டகால

கருத் திட்டம் / நிகழ்ச்சித் திட்டம்	ஆரம்பிக்கப் பட்ட / முன்மொழி யப்பட்ட திகதி	எதிர்பார்க்கப்படும் நன்மைகள்		நன்மைகள் கிடைக்கப் பெறும் காலப் பகுதி
		அளவு	தரம்	
3. தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள். **101-02-05-031-2509**	2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு	• 2023 கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையிலான "பிரதிபா" போட்டியினை நடாத்துதல். • (சங்கீதம், நடனம், சித்திரம் மற்றும் நாடக ஆக்கங்களைக் கோருதல்)	• குழந்தைகளிடம் மறைந்திருக்கும கலைத் திறன்களை மதிப்பிடுதல் மற்றும் வளர்த்தல். • கலைகளின் மூலம் சாதனைகளை அடைவதற்கான மேடையைத் திறப்பது. • கலைத் திறன்களைக் கொண்ட திறமையான குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாப்பது. • உள்ளூர் கலை மரபுகளைப் பாதுகாத்தல் மற்றும் எதிர்கால சந்ததியினருக்குக் கடத்துதல்.	நீண்டகால
		• பிரதேச கலாசார மத்திய நிலைய நடனக் குழுவினை நிறுவுதல்.	• பாரம்பரிய நடனங்களைப் பாதுகாத்தல். • புதிய படைப்புக்களை உருவாக்குவதன் மூலம் நல்ல நேர்மறை மனப்பான்மை கொண்ட புதிய தலைமுறையை உருவாக்குதல்.	நீண்டகால

கருத் திட்டம் / நிகழ்ச்சித் திட்டம்	ஆரம்பிக்கப் பட்ட / முன்மொழி யப்பட்ட திகதி	எதிர்பார்க்கப்படும் நன்மைகள்		நன்மைகள் கிடைக்கப் பெறும் காலப் பகுதி
		அளவு	தரம்	
			• பிரதேசத்திற்குரிய தனித்துவமான நடனக் கூறுகளை தேசிய மற்றும் சர்வதேச அளவிற்கு கொண்டு வருதல். • பல்கலைக்கழக நுழைவின் போது கலைத்திறன் கொண்ட மாணவர்களுக்கு சம வாய்ப்பு அளித்தல். • நல்ல உறவுகளோடு ஒற்றுமையுடன் முன்னோக்கிச் செல்லக் கூடிய இணக்கமான தலைமுறையை சமூகத்திற்கு வழங்குதல்.	
		• பார்வை அற்ற சமூகத்தினருக்கான ஒலிப் புத்தகங்களைத் தயாரித்தல்.	• சமூக நீதியை உருவாக்குதல். • பார்வை அற்ற சமூகத்தை ஆக்க பூர்வமான கலை ஆர்வலர்களாக உருவாக்குதல்.	நீண்டகால
		• அருவமான பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு ஒப்படைத்தல். • அருவ மரபுப் பாதுகாப்புக்	• உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் உள்ளூர் அருவப் பாரம்பரியத்தின் விலைமதிப்பற்ற மதிப்பைக் கண்டறிந்து பாதுகாத்தல்	நீண்டகால

கருத் திட்டம் / நிகழ்ச்சித் திட்டம்	ஆரம்பிக்கப் பட்ட / முன்மொழி யப்பட்ட திகதி	எதிர்பார்க்கப்படும் நன்மைகள்		நன்மைகள் கிடைக்கப் பெறும் காலப் பகுதி
		அளவு	தரம்	
		குழுவின் வருடாந்த நடவடிக்கைகள். • அருவ மரபுகள் தொடர்பான தேசிய பட்டியல். • அருவ மரபுகளைப் பாதுகாப்பதற்கான UNESCO மாநாட்டின் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுதல். • Safe Guard Plan உருவாக்குதல்.	மற்றும் மேம்படுத்துதல். • அருவ மரபுகளை உலக பாரம்பரியமாகப் பாதுகாத்தல்.	

மேலே உள்ள பக்கம் 87 முதல் 112 வரை கொடுக்கப்பட்டுள்ள தகவல்களைச் சரிபார்த்து, மேற்கூறிய புள்ளி விபரங்களுடன் உடன்படுகின்றேன் என்று இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

.....

பிரதான கணக்கியல் உத்தியோகத்தர்

பெயர் சோமரத்ன விதானபத்திரண

பதவி - செயலாளர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

திகதி -

அத்தியாயம் 03 – வருடத்தின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை.

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ – எப்

2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவுற்ற காலத்திற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

வரவு செலவு 2022 ரூபா		குறிப்பு	உண்மையான 2022 ரூபா	2021 ரூபா	
	வருமான பெறுகைகள்				
	வருமான வரி	1	-	-	ஏசீஏ -1
	உள்ளூர் பொருட்கள் சேவைகளுக்கான வரி	2	-	-	
	சர்வதேச வர்த்தகம் மிதமான வரி	3	-	-	
	வரியில்லா வருமானம் மற்றும் பிற	4	-	-	
	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-		
	வருமானமல்லாத பெறுகைகள்				
	திறைசேரி முற்பணம்		867,877,000	720,024,000	ஏசீஏ 3
	வைப்புகள்		10,747,032	5,581,725	ஏசீஏ -4
	முற்பணக் கணக்குகள்		33,441,933	34,564,048	ஏசீஏ -5
	வேறு பெறுகைகள்		-	-	
	மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)		**912,065,965**	**760,169,773**	
	மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ= (அ)+(ஆ)		**912,065,965**	**760,169,773**	
	திறைசேரிக்குப் பணம் அனுப்புதல் (ஈ)				
	தேறிய வருமானப் பெறுகைகள் மற்றும் வருமானம் அல்லாத பெறுகைகள் உ= (இ) - (ஈ)		**912,065,965**	**760,169,773**	
	கழி : செலவினம்				
	மீண்டெழும் செலவினம்				
632,600,000	வேதனாதிகள், சம்பளங்கள்,பிற ஊழிய நன்மைகள்	5	596,426,428	531,406,736	ஏசீஏ -2(ii)
188,140,000	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	176,228,829	133,485,062	
34,160,000	உதவு தொகை, மானியம் மற்றும் மாற்றல்கள்	7	27,546,339	131,718,037	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டெழும் செலவினம்	9		1200	
854,900,000	**மொத்த மீண்டெழும் செலவினம் (ஊ)**		**800,201,596**	**796,611,035**	
	மூலதனச் செலவினம்				
24,400,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு	10	18,210,249	8,896,434	ஏசீஏ -2(ii)
125,500,000	மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்தல்	11	121,657,696	96,358,800	
	மூலதன மாற்றல்கள்	12		10,984,000	
-	நிதிச் சொத்துக்களைக் கையகப்படுத்தல்	13	-	-	
700,000	திறன் மேம்பாடு	14	777,320	614,658	
12,300,000	பிற மூலதனச் செலவுகள்	15	8,428,341	5,935,767	
162,900,000	**மொத்த மூலதனச் செலவினம் (எ)**		**149,073,606**	**122,789,659**	
	வைப்புக் கொடுப்பனவு		8,749,210	17,698,529	ஏசீஏ -4
	முற்பணக் கொடுப்பனவு		29,715,472	34,237,927	ஏசீஏ -5
	வேறு முக்கிய பேரேட்டுக் கணக்குகளுக்குப் பணம் செலுத்துதல்				
	பிரதான பேரட்டுச் செலவுகள் (ஏ)		**38,464,682**	**51,936,456**	
1,017,800,000	**மொத்தச் செலவினம் ஐ=(ஊ+எ+ஏ)**		**987,739,883**	**971,337,150**	
-1,017,800,000	**டிசம்பர் 31 இல் முற்பண மீதி ஒ=(உ-ஐ)**		**-75,673,919**	**-211,167,378**	
			-75,673,919	**211,167,378**	ஏசீஏ -7
	இறுதி அறிக்கையின் படி மிகுதி இருப்பு				ஏசீஏ -3
	டிசம்பர் 31 இல் நிலுவைத் தொகை		**-75,673,919**	**211,167,378**	

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

2022 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு ஏசீஏ – பீ

நிதி நிலைமை பற்றிய கூற்று

	குறிப்பு	உண்மையான 2022 ரூபா	2021 ரூபா
நிதி அல்லாத சொத்துக்கள்			
சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ -6	3,742,637,435	3,415,278,892
நிதிச் சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ 5/5(ஏ)	112,672,583	116,399,044
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	ஏசீஏ 3		
மொத்தச் சொத்துக்கள்		**3,855,310,018**	**3,531,677,936**
நிகர சொத்து/ பங்கு			
திறைசேரிக்கான நிகர சொத்து		76,216,524	81,940,807
சொத்துப் பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கு		3,742,637,435	3,415,278,892
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கு	ஏசீஏ -5(ஆ)		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்கு	ஏசீஏ -4	36,456,059	34,458,237
முற்பண மீதி	ஏசீஏ -3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**3,855,310,018**	**3,531,677,936**

113 முதல் 115 வரையான பக்கங்களில் மேலே உள்ள ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான படிவங்களில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு விபரங்கள் மற்றும் 116 முதல் 119 வரையான பக்கங்களில் உள்ள குறிப்பு கணக்கு விபரங்களும் இந்த இறுதிக் கணக்கின் ஒரு பகுதியாகும். இந்த நிதி நிலை அறிக்கைகளில் உள்ள குறிப்புகள் மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகளை வெளிப்படுத்துகின்றன. மேலை உள்ள இறுதிக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரங்கள், இதனுடன் தொடர்புபட்ட கணக்குகள் மற்றும் பிற கணக்குத் தகவல்கள் திறைசேரி கணக்குப் புத்தகங்களுடன் ஒப்பிடப்படுவதையும் இதன் மூலம் அவை அந்தப் புள்ளி விபரங்களுடன் ஒத்திருப்பதையும் இதன் மூலம் உறுதி செய்கின்றோம்.

நிதி நிர்வாகம் தொடர்பாக வினைத்திறன் மிக்க ஒரு உள்ளக நிர்வாக முறையினை அறிக்கையிடுதல் நிறுவனத்திற்குள் மேற்கொள்ளப்படுவதுடன் நிதி நிர்வாகம் தொடர்பாக உள்ளக நிர்வாக முறையினை சரியாக மேற்பார்வை செய்வதற்கும் அதன்படி இந்த முறையினை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்துவதற்குத் தேவையான முறையில் மாற்றங்களைச் செய்வதற்கும் அடிக்கடி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை இங்கு உறுதிப்படுத்துகின்றோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு அலுவலர்	கணக்கீட்டு அலுவலர்	பிரதான நிதி அலுவலர்/பிரதான
பெயர்:	பெயர்:	பெயர்:
பதவி:	பதவி:	பதவி:
திகதி:	திகதி:	திகதி:

3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ — சீ

2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த காலப்பகுதிக்கான

காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

	உண்மையான	
	2022 **ரூபா**	**2021** **ரூபா**
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணம்,அபராதம், தண்டப் பணம், உரிமங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானமல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்பிற்காக பெறப்பட்ட வருமானம்	41,834,112	39,821,403
பெறப்பட்ட கட்டுநிதி	867,877,000	720,024,000
பெறப்பட்ட முற்பணம்	32,081,881	34,218,570
வைப்புக்கள் மீதான பெறுவனவுகள்	10,747,032	5,581,725
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (அ)	**952,540,025**	**799,645,698**
கழி : காசு செலவிடல்		
ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு	784,786,518	671,478,753
மானியம் மற்றும் மாற்றல்கள் கொடுப்பனவுகள்	-47,669,794	30,045,237
பிற செலவினத் தலைப்புகளுக்கான செலவினம்	107,246,819	32,659,711
திறைசேரிக்கு செலுத்தப்பட்ட கட்டுநிதி	-	-
வழங்கப்பட்ட முற்பணம்	29,922,697	34,320,327
வைப்புக்களுக்கான கொடுப்பனவு	8,749,210	17,698,529
தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)	**883,035,449**	**786,202,558**
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்	**69,504,576**	**13,443,140**
இ = (அ)-(ஆ)		
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து செய்யப்பட்ட மொத்த காசு		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-
சொத்து விற்பனை, பௌதீக ஆதன விற்பனை	-	-
கடன் அறவீடுகள்		
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு (ஈ)	-	-
கழி: காசு செலவிடல்		
பௌதீகச் சொத்து கொள்வனவு அல்லது நிர்மாணம் மற்றும் வேறு முதலீடுகளைக் கையகப்படுத்துதல்.	69,504,576	13,443,140
முதலீட்டுச் செயற்பாடுகளுக்காகச் செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)	**69,504,576**	**13,443,140**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு ஊ=(ஈ)-(உ)	**-69,504,576**	**-13,443,140**
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு (எ)= (இ)+(ஊ)	**0**	**0**
நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
உள்நாட்டுக் கடன் பெறுகை	-	-
வெளிநாட்டுக் கடன் பெறுகை	-	-
பெறப்பட்ட மானியங்கள்	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி: காசு செலவிடல்		
உள்நாட்டுக் கடன் பெறுகை மீள் கொடுப்பனவு	-	-
வெளிநாட்டுக் கடன் பெறுகை மீள் கொடுப்பனவு	-	-
நிதிச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு	-	-
(ஒ)= (ஏ)-(ஐ)		
காசில் தேறிய மாற்றம் (ஒ)= (எ)+ (ஒ)	0	0
ஜனவரி 01 அன்று ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31 அன்று இறுதிக் காசு மீதி	-	-

3.4 நிதிக் கூற்றுக்கான குறிப்புகள்

குறிப்பு 05

ரூபா.

செலவு விபரம்	நிகழ்ச்சித் திட்டம் (1)					நிகழ்ச்சித் திட்டம் (2)					மொத்தச் செலவு
	ஒதுக்கீடு				செலவு	ஒதுக்கீடு				செலவு	
	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு		வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு		
	1	2	3	(4)= (1)+(2)+ 3	5	6	7	8	(9)=(6)+(7)+ 8	10	(11)= (5)+(10)
தனிநபர் சம்பளம்	65,300,000	-	(2,100,00)	63,200,000	51,286,375	567,300,000	-	-	567,300,000	545,140,053	596,426,428

குறிப்பு 06

ரூபா.

செலவு விபரம்	நிகழ்ச்சித் திட்டம் (1)					நிகழ்ச்சித் திட்டம் (2)					மொத்தச் செலவு
	ஒதுக்கீடு				செலவு	ஒதுக்கீடு				செலவு	
	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு		வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு		
	1	2	3	(4)= (1)+(2)+ 3	5	6	7	8	(9)=(6)+(7)+ 8	10	(11)= (5)+(10)
போக்கு வரத்துச் செலவு	1,700,000			1,700,000	885,949	6,300,000		-300,000	6,000,000	3,541,892	4,427,841
வழங்கல்	11,900,000	-	-1,124,000	10,776,000	8,032,341	12,500,000	-	-2,736,000	9,764,000	9,089,893	17,122,234
பராமரிப்பு	6,200,000	-	1,400,000	7,600,000	5,602,333	3,200,000	-	-150,000	3,050,000	2,030,991	7,633,324
சேவை	60,440,000		6,159,000	66,599,000	65,919,216	85,900,000	-	5,096,000	90,996,000	81,126,215	147,045,431
											176,228,829

குறிப்பு 07

ரூபா.

செலவு விபரம்	நிகழ்ச்சித் திட்டம் (1)					நிகழ்ச்சித் திட்டம் (2)					மொத்தச் செலவு
	ஒதுக்கீடு				செலவு	ஒதுக்கீடு				செலவு	
	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு		வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு		
	1	2	3	(4)=(1)+(2)+ 3	5	6	7	8	(9)=(6)+(7)+ 8	10	(11)= (5)+(10)
மாற்றல்கள்	460,000	-	-	460,000	435,385	33,700,000	-	(6,560,000)	27,140,000	27,110,954	27,546,339

குறிப்பு 09

ரூபா

செலவு விபரம்	நிகழ்ச்சித் திட்டம் (1)					நிகழ்ச்சித் திட்டம் (2)					மொத்தச் செலவு
	ஒதுக்கீடு				செலவு	ஒதுக்கீடு				செலவு	
	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு		வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு		
	1	2	3	(4)=(1)+(2)+ 3	5	6	7	8	(9)=(6)+(7)+ 8	10	(11)= (5)+(10)
இழப்புகள் மற்றும் விலக்குதல்கள்	-	-				-	-	-	-	-	

குறிப்பு 10

ரூபா

செலவு விபரம்	நிகழ்ச்சித் திட்டம் (1)					நிகழ்ச்சித் திட்டம் (2)					மொத்தச் செலவு
	ஒதுக்கீடு					ஒதுக்கீடு					
	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு	செலவு	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு	செலவு	
	1	2	3	(4)=(1)+(2)+3	5	6	7	8	(9)=(6)+(7)+8	10	(11)=(5)+(10)
மூலதனச் சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு	2,700,000	-	-	2,700,000	2,588,285	21,700,000	-	150,000	21,850,000	15,621,964	18,210,249

குறிப்பு 11

ரூபா

செலவு விபரம்	நிகழ்ச்சித் திட்டம் (1)					நிகழ்ச்சித் திட்டம் (2)					மொத்தச் செலவு
	ஒதுக்கீடு					ஒதுக்கீடு					
	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு	செலவு	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு	செலவு	
	1	2	3	(4)=(1)+(2)+3	5	6	7	8	(9)=(6)+(7)+8	10	(11)=(5)+(10)
மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்துதல்	2,500,000	-		2,500,000	1,837,013	123,000,000	-	35,000,000	158,000,000	119,820,683	121,657,696

குறிப்பு 12

ரூபா

செலவு விபரம்	நிகழ்ச்சித் திட்டம் (1)					நிகழ்ச்சித் திட்டம்(2)					மொத்தச் செலவு
	ஒதுக்கீடு					ஒதுக்கீடு					
	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு	செலவு	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு	செலவு	
	1	2	3	(4)=(1)+(2)+3	5	6	7	8	(9)=(6)+(7)+8	10	(11)=(5)+(10)
மூலதன மாற்றல்கள்		-	-			-	-	-	-	-	

குறிப்பு 14

ரூபா

செலவு விபரம்	நிகழ்ச்சித் திட்டம் (1)					நிகழ்ச்சித் திட்டம் (2)					மொத்தச் செலவு
	ஒதுக்கீடு					ஒதுக்கீடு					
	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு	செலவு	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு	செலவு	
	1	2	3	(4)=(1)+(2)+3	5	6	7	8	(9)= (6)+(7)+8	10	(11)=(5)+(10)
குறிப்பு - 13 மூலதனச் சொத்துக்களை விற்பனைக்கல்	-	-	-	-	-	-	-	-	-	-	-
குறிப்பு – 14 திறன் மேம்பாடு	400,000	-	165,000	565,000	480,575	300,000	-	-	300,000	296,745	777,320

குறிப்பு 15

ரூபா

செலவு விபரம்	நிகழ்ச்சித் திட்டம் (1)					நிகழ்ச்சித் திட்டம் (2)					மொத்தச் செலவு
	ஒதுக்கீடு					ஒதுக்கீடு					
	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு	செலவு	வரவு செலவு மதிப்பிடப் பட்ட ஒதுக்கீடு	முழுமையான மதிப்பிட பட்ட ஒதுக்கீடு	நி.பி. 66/69 மாற்றம் செய்தல்	மொத்த தேறிய ஒதுக்கீடு	செலவு	
	1	2	3	(4)=(1)+(2)+3	5	6	7	8	(9)=(6)+(7)+8	10	(11)=(5)+(10)
வேறு மூலதனச் செலவுகள்	-	-	-	-	-	12,300,000	-		12,300,000	8,428,341	8,428,341

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை - இல்லை

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா"000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	பயன்படுத்தப் பட்ட ஒதுக்கீடு, இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	முதல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	854,900	854,585	800,202	94
மூலதனம்	162,900	198,215	149,074	75

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்.'. திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்.'. மாவட்டச் செயலகம் / மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூபா"000

தொ. இல.	அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/மாவட்ட செயலகங்களிலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், இறுதி ஒதுக்கீட்டின் %ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
1	உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு (409-01-05-0-1409-(67))	74 ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு கலாசார நிகழ்வுகளை	19,007	19,007	18,959	100
2	ஒய்வூதியத் திணைக்களம் (253-01-02-04-1502-11)	ஒய்வூதியப் பணிக் கொடைக்கான தீர்வு	393	393	393	100
3	கலாசார அலுவல்கள் திணைக்களம் (206-02-03-06-1409)	தேசிய இலக்கியக் கலை விழாவின் பத்திரிகை விளம்பரத்திற்கு பணம் செலுத்துவதற்காக	101	101	101	100
4	பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (130-01-02-0-1003-11)	அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் மற்றும் பட்டதாரிப் பயிலுனர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்காக	1,417	1,417	1,417	100
5	பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (130-01-02-0-1003-11)	அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் மற்றும் பட்டதாரிப் பயிலுனர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்காக	909	909	909	100
6	பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (130-01-16-0-1409-11)	ரூபா 5,000 மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்காக.	18,901	18,901	18,901	100
			40,728	40,728	40,680	100

குறிப்பு

1. இவ் அமைச்சின் கலாசார பிரிவிற்கு உரிய விடயப் பரப்புக்களின் மாற்றங்களை எமது பிரிவு தாங்கியுள்ள பின்வரும் நிறுவனங்கள் தொடர்பான செலவுகள், ஒக்டோபர் 2022 இல் வெகுஜன ஊடகத்துறை அமைச்சிற்கு (த.இல.105) மாற்றப்பட்டுள்ளது.

* தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் (105-02-04-09-1503-11) - ரூ.73,120,000.00 மற்றும் (105-02-04-09-2201-11) - ரூ.9,837,000.00
* பொதுத் தணிக்கைச் சபை (105-02-04-10-1508-11)ரூ. 2,161,986.85 மற்றும் (105-02-04-10-2509-11)ரூ. 387,500.00

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ஆதனக் குறியீடு	குறியீட்டு விபரம்	2022.12.31 திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கைப் படி மீதி (ரூ.)	2022.12.31 திகதிய நிதி நிலைமை அறிக்கைப்படி மீதி (ரூ.)	எதிர் காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	3,005,370,224.12	3,005,370,224.12	-	-
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	404,598,831.28	404,598,831.28	-	-
9153	காணி	168,075,768.00	168,075,768.00	-	-
9154	அருவமான சொத்துக்கள்	-	-	-	-
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	-
9160	நடைபெறும் பணிகள்	164,592,611.82	164,592,611.82	-	-
9180	குத்தகைச் சொத்துக்கள்	-	-	-	-

3.9. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

செயலாளர்

புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

தலைப்பு 101 - புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் 2022 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று,அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று,காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்பு என்பவற்றை உள்ளடக்கி 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி நிலைமைக்கூற்று 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும் இந்நிதிநிலைமைக் கூற்று சம்பந்தமாக எனது கருத்துத் தெரிவிப்பும் அவதானங்களும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படும். 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் தலைமை கணக்கு அதிகாரிக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை காலக்கிரமத்தில் வெளியிடப்படப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் நாடாளுமன்றத்துக்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் மூலமான பாதிப்புக்களை தவிர, நிதிக் கூற்றுக்களின் மூலம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமைகள் மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தரநியமங்களுக்கு உட்பட்ட வகையில் உண்மையான மற்றும் நியாயமான நிலைமைகளை வெளிப்படுத்துவதாக அமையும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து நிலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) உட்பட்ட வகையிலேயே நான் கணக்காய்வினை மேற்கொண்டுள்ளேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள், இவ்வறிக்கையின் நிதி அறிக்கைக் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்கின்ற பகுதியில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் நோக்கில் என்னால் பெறப்பட்டிருக்கும் கணக்காய்வு ஆதாரங்கள் போதுமானவையாகவும் பொருத்தமானதாகவும் காணப்படுகின்றன என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் தலைமை கணக்கியல் உத்தியோகத்தினரிதும் மற்றும் கணக்கியல் உத்தியோகத்தினரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மற்றும் 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பிரதான கணக்காளர் உத்தியோகத்தர் பொறுப்பாக உள்ளார்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஒரு பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுவதை தலைமை கணக்கீட்டு அதிகாரி உறுதிசெய்து அந்த முறைமையின் செயல்திறன் குறித்து அவ்வப்போது மதிப்பாய்வு செய்து அதன் அடிப்படையில் கட்டமைப்பை பயனுள்ளவாறு முன்னெடுத்துச் செல்வதற்கான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மோசடி மற்றும் பிழைகளின் காரணமாக ஏற்படுகின்ற போதிய பொய்யான கூற்றுக்களிலிருந்து விடுபட்டவை என்று நியாயமான உத்தரவாத்தை வழங்குவதும் மற்றும் எனது கருத்தை கொண்ட கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர்மட்ட உத்தரவாதமாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வை மேற்கொள்ளும் போது தவறான கூற்றுக்கள் கண்டறியப்படுவதை அது எப்போதும் உறுதிப்படுத்தாது. மோசடி மற்றும் பிழைகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதால் போதிய பொய்யான கூற்றறுக்கள் உருவாக முடியும் என்பதுடன், அதன் போதுமான தன்மையை இத்தகைய நிதிக் கூற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீதான தாக்கங்களின் அடிப்படையில் இது தங்கி நிற்கிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வு செய்யப்படுகின்ற போது தொழில் நடுநிலைத்தன்மையுடன் கூடிய வகையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் என்னால் தொடர்ந்தும்,

- வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு கருத்திற்கு அடிப்படையொன்றை தயாரித்துக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறுதல் காரணமாக நிதி அறிக்கைகளில் ஏற்படக்கூடிய கூடுதல் பொய்யான கருத்துக்கள் உருவாகும்

ஆபத்துக்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. பிழையாக விடயங்களை குறிப்பிடுவதனால் ஏற்படுகின்ற பொய்யான கூற்றுக்களால் ஏற்படுகின்ற தாக்கங்களை விட மோசடியொன்றால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் கடுமையானது.

- உள்ளக நிருவாகத்தின் திறன்கள் குறித்த கருத்தொன்றை தெரிவிக்கும் கருத்தில் இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குகளை திட்டமிடும் நோக்கில் உள்ளக கட்டுப்பாடுகள் குறித்த புரிந்துணர்வொன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட இணைப்பு வெளிப்படுத்தல்கள் போற்றப்பட்டுள்ளது.

- நிதி அறிக்கைகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளீடுகளில் அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான முறையிலும் நியாயமான வகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளதென்பதையும் மற்றும் வெளிப்படுத்துதலை உள்ளடக்கிய நிதியறிக்கைகளின் முழுமையான முன்வைத்தல்களும் போற்றப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வில் இணங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுத் தேடல்கள், பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தருக்குத் தெளிவூட்டப்பட்டுள்ளது.

1.5. ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ) இன் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதி அறிக்கை கடந்த வருடத்துடன் ஒத்துப்போகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் தொடர்பில் புத்தசாசனப் பிரிவின் நிதிக்கூற்றுக்கள் குறித்து என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைனய ஆண்டுடன் தொடர்புடைய பந்தி இலக்கம்	செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள்	இவ்வறிக்கையின் பந்தி இலக்கம்
1.6.1.1 (அ)	அமைச்சுக்கு சொந்தமான இலக்கம் 18 – 4263 இலக்கமுடைய வாகனத்தின் பெறுமதி (மதிப்பீடு செய்யப்படவில்லை) நிதி அல்லாத சொத்துக்களில் உள்ளடக்கப்படாத காரணத்தினால் அத்தொகையிலிருந்து நிதி அல்லாத சொத்துக்கள் குறைவாக காண்பிக்கப்பட்டுள்ளது.	1.6.1 (அ) (ii)

1.6. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்

1.6.1 நிதி அல்லாத சொத்துக்கள்

(அ) புத்தசாசனப் பிரிவு

i. 2022ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்கு புத்தசாசனப் பிரிவில் நிதி அல்லாத சொத்துக்களுள் உள்ளடங்கிய வாகனங்களின் பெறுமதி ரூ. 243,386,950 ஆக காணப்பட்டதுடன், அமைச்சின் மூலம் முறையே பொதுநம்பிக்கைப் பொறுப்பு திணைக்களத்திற்கும் மற்றும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்திற்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த ரூ. 38,000,000 பெறுமதியான இலக்கம் PA -7082 உடைய ஜீப் வண்டி மற்றும் ரூ. 1,500,000 பெறுமதியான இலக்கம் 32-5816 உடைய ஜீப் வண்டி ஆகியவை இதுவரையில் சட்டரீதியான முறையில் ஒப்படைக்கப்படவில்லை எனினும் கணக்குகளிலிருந்து நீக்கியதன் காரணமாக அந்தத் தொகையில் அமைச்சின் நிதி அல்லாத சொத்துக் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

ii. இலக்கம் 18-4263 உடைய மோட்டார் வாகனத்தின் பெறுமதி (மதிப்பீடு செய்யப்படவில்லை) நிதி அல்லாத சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காத காரணத்தினால் அந்தத் தொகையில் நிதி அல்லாத சொத்து குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கலாச்சாரப் பிரிவு

i. கலாச்சாரப் பிரிவுக்குச் சொந்தமான இலக்கம் CAM 5384, 254 - 0003 மற்றும் YC 1104 உடைய 03 வாகனங்கள் (மதிப்பீடு செய்யப்படவில்லை) நிதிக் கூற்றுக்களில் வாகனங்களின் பெறுமதி உட்புகுத்தப்படாததன் காரணத்தினால் அந்தத் தொகையில் நிதி அல்லாத சொத்து குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

ii. இலக்கம் KE – 8095 உடைய டாடா சுமோ ஜீப் வண்டி மற்றும் இலக்கம் 253-1191 உடைய டொயோடா டபல் கெப் வண்டி ஆகியவை தொல்பொருள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும், முறையே ரூ. 2,500,000 மற்றும் ரூ. 1,500,000 பெறுமதியான அவ் வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2022 செப்டம்பர் 21ஆம் திகதியையுடைய இலக்கம் 06/2022 உடைய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 20 மற்றும் 21ஆம் பிரிவின் பிரகாரம் இரத்தான செலவுத் தலைப்பின் கீழ் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.2 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

அமைச்சின் மூலம் பின்வரும் ஆவணங்கள் பேணப்பட்டிருக்கவில்லை என்பதுடன், ஒரு சில ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்ட வகையிலும் முறையான அமைப்பிலும் பேணப்பட்டுச் சென்றிருக்கவில்லை என்பது மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது நிரூபணமாகியது.

ஆவண வகை	தொடர்புடைய ஒழுங்குவிதிகள்	அவதானங்கள்

i. சேதங்கள் தொடர்பான ஆவணம்	நிதி பிரமாணம் 110	புத்தசாசனப் பிரிவினால் பேணப்பட்டிருக்கவில்லை.
ii. பிணை ஆவணம்	நிதி பிரமாணம் 891(1)	புத்தசாசனப் பிரிவினால் பேணப்பட்டிருக்கவில்லை என்பதுடன், கலாச்சாரப் பிரிவின் மூலம் இற்றைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.
iii. செலவு பேரேடு	நிதி பிரமாணம் 447(3)	புத்தசாசனப் பிரிவினால் பேணப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 செலவு முகாமைத்துவம்

(அ) மீண்டுவரும் செலவு

அமைச்சின் புத்தசாசனப் பிரிவில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில் நி.பி 66 இன் கீழ் 04 மீள்நிரப்புகை செலவு விடயத்திற்கு ரூ. 19,166,000 தொகை ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டிருந்ததுடன், அதில் நூற்றுக்கு 40 தொடக்கம் 100 வரையிலான எல்லைக்குட்பட்ட ரூபா. 11,266,723 தொகையுடைய ஒதுக்கீடானது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் மீதப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மூலதனச் செலவு

அமைச்சின் புத்தசாசனப் பிரிவில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில் நி.பி 66 இன் கீழ் 04 மூலதனச் செலவு விடயத்திற்கு ரூபா. 70,315,000 தொகை ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டிருந்ததுடன், அத்தகைய மொத்த ஒதுக்கீடுகளும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் மீதப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) செலவுத் தலைப்புக்கள் 6 இற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 3,270,000 தொகை தூய ஒதுக்கீடுகளும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் மீதப்படுத்தப்பட்டிருந்தது.

2.2 தலைமை கணக்கியல் உத்தியோகத்தினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உத்தரவாதப்படுத்தல்.

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் விதிமுறைகளுக்கமைய, தலைமைக் கணக்கு அதிகாரி பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதியளித்திருக்க வேண்டும் எனினும், அதன்படி செய்திருக்கவில்லை.

(அ) அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளகக் கட்டப்பாட்டு முறை உருவாக்கப்படுவதையும் பராமரிக்கப்படுவதையும் தலைமைக் கணக்கீட்டு அதிகாரி உறுதி செய்தல் வேண்டும். மேலும் அந்த அமைப்பின் செயல்திறனை அவ்வப்போது மீளாய்வு செய்து முறையான செயல்திறனுக்குத் தேவையான மாற்றங்களைச் செய்தல் வேண்டும். மற்றும் அந்த மதிப்பாய்வுகள் எழுத்துப்பூர்வமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அதன் பிரதியொன்றையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தலும் வேண்டும். ஆனால் அத்தகைய மீளாய்வுகள் செய்யப்பட்ட அறிக்கைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் உரிய காலப்பகுதியினுள் தயாரிக்கப்படுவதை தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்தல் வேண்டும். மேலும் கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனம் தொடர்பான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதை தலைமை கணக்கியல் அதிகாரி உறுதி செய்தல் வேண்டும். ஆனால் அறிக்கையின் 3.1 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் காரணமாக அத்தகைய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டதிட்டங்கள் விதிகளுக்கான தொடர்	மற்றும் இணங்காமை
(அ) இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIVX ஆவது அத்தியாயம	

(i) 4,2,5, 4.5, 4.6 மற்றும் 6.3 ஆவது உப பிரிவு	புத்தசாசனப் பிரிவில் ஓய்வு பெற்ற அதிகாரியொருவரின் ரூபா.167,055 தொகையுடைய கடன் மீதியானது 03 வருடங்களுக்கு மேலாகவும் கலாச்சாரப் பிரிவில் ஓய்வு பெற்ற அதிகாரியொருவரின் ரூபா. 128,732 தொகையுடைய கடன் மீதியானது 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் அறவிடப்பட வேண்டியுள்ளதுடன், இதுவரையில் அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ii) 4.4 ஆம் உப பிரிவு	கலாச்சாரப் பிரிவில் மரணமடைந்துள்ள இரண்டு அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள 1 முதல் 2 வருடங்களாக தொடர்ந்து வருகின்ற ரூபா. 234,305 தொகையான கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.
(iii) 4.5, 4.6, மற்றம் 6.3 ஆம் உப பிரிவுகள்	கலாச்சாரப் பிரிவில் இடைநிறுத்தப்பட்டுள்ள 08 அதிகாரிகளின் ரூ. 483,021 அறவிடப்பட வேண்டியுள்ள போதிலும் அதனை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதியின்	
(i) நிதிப்பிரமாணம் 135	(i) கலாச்சாரப் பிரிவின் சுத்திகரிப்பு சேவையைப் பொறுத்தவரை, உறுதிப்படுத்தல் ஆவணங்களை

	சரிபார்க்காமல் 2021 டிசம்பர் 01 தொடக்கம் 2022 டிசம்பர் 31 வரையில் மாதம் ரூபா. 147,000 அடிப்படையில் செலுத்துகை செய்யப்பட்டுள்ளது. (ii) அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III அதிகாரிக்கு ரூபா. 68,917 கடன் தொகை நேர்மையீனமாக செலுத்தப்பட்டுள்ளதுடன், அக்கடன் தொகையை மீள அறவீடு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.
(ii) நிதிப்பிரமாணம் 113 (6) மற்றும் 2020 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய இலக்கம் 01/2020 உடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு	சேவையை விட்டுச் சென்று 5 வருடங்கள் கடந்து போயுள்ள கலாச்சாரப் பிரிவைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 220,488 தொகையுடைய மொத்த மீதியை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.
(இ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தி மற்றும் அரச நிதித் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி இலக்கம் 14	புத்தசாசனப் பிரிவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் இணக்கமடைவதாக குறிப்பிடப்பட்டிருந்த 09 தேவைப்பாடுகள் இணங ் கவில்லை என்பது அவதானிக்கட்டது. மேலும் கலாச்சாரப் பிரிவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் இணக்கமடைவதாக குறிப்பிடப்பட்டிருந்த 03 தேவைப்பாடுகள் இணங்கவில்லை என்பது அவதானிக்கட்டது.

2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்கமுடைய அரச நிருவாக சுற்றிக்கையின் 3.3 ஆம் பிரிவு.	எரிபொருள் பயன்பாட்டில் பாதகமான மாற்றங்கள் காணப்படுமாயின் அதனை இனங்கண்டு கொள்வதற்காக சுற்றறிக்கையின் இணைப்பு 1 இன் பிரகாரம் போக்குவரத்து சேவைக் குறிப்பை மாதாந்தம் பூரணப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

2.4 வைப்பு

புத்தசாசனப் பிரிவில் 2022 டிசம்பர் 31ஆம் திகதிக்கு வைப்பு மிகுதியாக ரூபா. 23,240,820 தொகை காணப்பட்டதுடன், அதில் இரண்டு ஆண்டுகள் கடந்ததன் பின்னரான மொத்தம் ரூபா. 21,106,115 தொகையை ஒப்பந்தத்திற்கான 05 தடுப்பு வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.5. வங்கிக் கணக்கினை கையாளுதல்

வங்கிக் கணக்குகளை பராமரிக்கும் போது காசோலைகளில் கைச்சாத்திடும் அதிகாரிகள் நிதிப்பிரமாணம் 880 இன் படி அரச அதிகாரிகளின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் பிணை வைக்க வேண்டிய போதிலும் புத்தசாசனப் பிரிவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பிணையை அறிவீடு செய்வதற்குரிய நடவக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. தொழிற்பாட்டு மதிப்பாய்வு

3.1 செயலாற்றுகை

(அ) 2020 ஆகஸ்ட் 28ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிந்து 150 நாட்களுக்குள் அந்த ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கையானது 2022 செப்டம்பர் 30 ஆம் திகதியிலேயெ பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

(ஆ) வருடாந்த செயல்திட்டத்துடன் தொடர்புடைய முன்னேற்றமும் செயலாற்றுகையும்

i. கலாச்சார அலுவல்கள் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் பிரதான வேலைத்திட்டம் கலாச்சார நிலைய வேலைத்திட்டமாகும். எனவே ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் கலாச்சார நிலையம் ஒன்று நிறுவப்பட உள்ளதாக வருடாந்த செயற்திறன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்படி இருந்தும் முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஒரு கலாச்சார நிலையம் கூட தாபிக்கப்படவில்லை என்பதுடன், இவ்வருடத்தில் கலாச்சார நிலையங்களை நிர்மாணிக்கும் போது கூட இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

ii. செயல்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள் விரிவான முறையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்கள்/செயற்திட்டங்கள் என்னவென்பது குறித்து தெளிவாக இல்லை என்பதுடன், அந்நடவடிக்கைகள் தொடர்பான நோக்கங்கள் மற்றும் இலக்குகள் எட்டப்பட்டதா என்பதை தீர்மானிக்க முடியவில்லை.

iii. செயல்திட்டத்தின் குறிக்கோள் இலக்கம் 04 இன் இலக்குகளாக நிலையான அபிவிருத்தி இலக்குளை அடைவதற்காக செயற்படுதல் என்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. 2030 ஆம் ஆண்டளவில் கல்வி கற்கும் அனைவரும் நிலையான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு அறிவு மற்றும் திறன்களைப் பெற்றிருத்தல் மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மையை மதிப்பீடு செய்வதற்காக திட்டங்கள் கண்டறியப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

iv. குறிக்கோள் இலக்கம் 11இல் இலக்கு 11.4 என்பதாக அனைத்து கலாச்சார மற்றும் இயற்கைப் பாரம்பரியங்களைப் பாதுகாத்தல், பாதுகாப்பு மற்றம் பாதுகாப்புக்கான முயற்சிகளை வலுப்படுத்தும் இலக்குகளாக தமிழ், முஸ்லிம் மற்றும் பிற கலாச்சார பாரம்பரிய உரிமைகளுக்கான திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சமூக கலாச்சார ஒருங்கிணைப்புக்கான விசேட திட்டங்கள் (101-2-5-6-1508)

i. இந்த செலவு விடயத்தின் மூலம் கலாச்சார மத்திய நிலையங்களினூடாக நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கலாச்சார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு ரூபா. 10,000,000 நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டிருந்ததுடன், 2022 டிசம்பர் 19 ஆம் திகதி அதில் ரூபா. 6,560,000 ஒதுக்கீடு 101-2-5-9-1409 செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக அச் செலவு விடயத்தின் கீழ் மீதமுள்ள ஒதுக்கீட்டை குறைந்த பெறுமதியாகக் காண்பித்து செயலாற்றுகை அறிக்கையில் நிதி முன்னேற்றப்பாடு 100 சதவீதம் என காட்டப்பட்டுள்ளது. இருந்த போதிலும், கலாச்சார நிலையங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் கலாச்சார மேம்பாட்டு நிகழ்ச்சிகளுக்கான நிதியுதவி வழங்குவதானது குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

ii. வருடாந்த செயல்திட்டத்தின் படி சம்பந்தப்பட்ட செலவு விடயத்தின் செயலாற்றுகை குறியீடானது "செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கலாச்சார ஊக்குவிப்புத் திட்டங்களின் எண்ணிக்கை" எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதற்கான எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் நிறுவப்படவில்லை. இருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட செலவு விடயத்தின் பௌதீக முன்னேற்றமானது 100 சதவீதம் என வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ளது.

iii. இச்செலவின தலைப்பின் கீழ் சமூக கலாச்சார ஒருங்கிணைப்புக்கான விசேட திட்டங்கள் செயற்பாடுகளாக அடையாளம் காணப்பட்ட போதிலும் வெவ்வேறு இனங்களின் கலாச்சாரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல்வகைத் தன்மையுடன் கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரச சேவையாளர்களுக்கிடையிலான ஆக்கப் போட்டி (101-02-05-08-1409)

2022ஆம் அண்டில் அரச சேவையாளர்களுக்கிடையிலான ஆக்கப் போட்டிக்கான விண்ணப்பம் கோரல் மற்றும் முன் பிரச்சார நடவடிக்கைகள் இந்தச் செலவுத் தலைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எனினும், ஆண்டிற்குள் அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் தொடர்புடைய செலவு விடயத்தின் பௌதீக முன்னேற்றப்பாடு 99 சதவீதம் என்பதாக வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ) சில்ப கம்மான கிராமிய நிகழ்ச்சித் திட்டம் (101-02-05-21-2506)

சில்ப கம்மான நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது செயற்பாட்டின் கீழ் உரிய உப செயற்பாடுகள் மூன்றில் எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன்,

18 கைவினைஞர்கள் மற்றும் 12 நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுக்கான பரிசளிப்பு விழாவொன்று நடாத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் தும்பரா மாதிரி தொழில்துறையை ஊக்குவிக்கும் நோக்கம் அடையப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளாத காரணத்தினால் பௌதீக முன்னேற்றம் ஏற்படாவிடினும், 48 சதவீதமான பௌதீக முன்னேற்றம் வருடாந்த செயற்திறன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஊ) கலாச்சாரப் பெறுமானங்கள் மற்றும் உள்நாட்டு அறிவு தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் (101-02-05-29-2507)

இதன் கீழ், பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சிப் பிரிவை நிறுவுதல் மற்றும் தேசிய கலாச்சாரக் கொள்கையை தயாரித்தல் ஆகிய நடவடிக்கைகள் இவ்வருடத்தில் நிறைவடையவில்லை என்பதுடன், அவ்விரண்டு செயற்பாடுகளும் 2023ஆம ஆண்டுக்கான செயற்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. இதன்படி, தேசிய கலாச்சார கொள்கையை தயாரிப்பதற்காக பத்திரிகை விளம்பரங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா. 461,916 செலவு தேறிய செலவாக மாறியிருப்பதனை அவதானிக்க முடிந்துள்ளது.

3.2 பெறுகை அறிவிப்புக்கள்

(அ) அமைச்சின் கலாச்சாரப் பிரிவுக்கான சுத்திகரிப்பு சேவையை பெறுதல் - 2021/2022

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. அமைச்சின் கலாச்சாரப் பிரிவின் சுத்திகரிப்பு சேவை நடவடிக்கைகள் ரூபா. 147.000 மாத வாடகைக்கு 2021 டிசம்பர் 01ஆம் திகதி முதல் 2022 நவம்பர் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு 2022 மார்ச் 07ஆம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்ட போதிலும் சுத்திகரிப்புப் பணிகள் 2021 நவம்பர் 26ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட்டன.

ii. பெறுகை ஆவணத்தின் பிரகாரம் சுத்திகரிப்பு சேவையாளர்களின் தனிப்பட்ட தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அந்தத் தகவல்கள் பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன், பெறுகை ஆவணத்திற்கும் ஒப்பந்தத்திற்கும் இடையில் வருகை மற்றும் புறப்படும் நேரம் மற்றும் பணியில் அமர்த்தப்பட வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை போன்றவற்றில் வேறுபாடுகள் காணப்பட்டன.

iii. ஒப்பந்தம் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணங்களின்படி, 04 பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டிய போதிலும் 2022 ஜனவரி முதல் 2022 டிசம்பர் 31 வரை இரண்டு தொழிலாளர்கள் மட்டுமே பணியமர்த்தப்பட்டுள்ளதுடன், பணி மேற்பார்வையாளர் ஒருவர் எந்த மேற்பார்வைப் பணியையும் செய்யவில்லை. அவ்வாறான நிலையில் பெறுகை ஆவணங்களிலும், ஒப்பந்தத்திலும் அபராதக் கட்டணங்களை அறவிடுவது தொடர்பான உரிய விதிமுறைகள் உள்ளடக்கப்படாமல், தொடர்ந்து சேவை விதிமுறைகளை மீறிய போதிலும், இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மாத வாடகை முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

iv. துப்புரவு நடவடிக்கைகளுக்காக மாதாந்திர அடிப்படையில் வழங்குநர் வழங்க வேண்டிய உபகரணங்கள் மற்றும் பொருட்களின் விநியோகம் மற்றும் பயன்பாடு தொடர்பான நிபந்தனைகள் பெறுகை ஆவணம் மற்றும் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிரக்கவில்லை என்பதுடன், அந்த பொருட்களின் பதிவை பராமரித்துச் செல்வதற்கும், அந்த நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மகிந்த ராஜபக்ச தேசிய திரைப்படப் பூங்காவிற்கு சுத்திகரிப்பு சேவையை பெறுதல் -2022/2023

அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. சுத்திகரிப்பு சேவையைப் பெறுவதற்கு, சந்தை விலை ஒப்பீட்டுப் பெறுகை முறையைப் பயன்படுத்தி, அமைச்சின் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைமனுக் கோருவதற்கு அமைச்சின் சிறு பெறுகைக் குழுவின் ஒப்புதல் கிடைத்திருந்தாலும், பெறுகை வழிகாட்டுதல்கள் கோவைகள் 4.3.1 மற்றும் 4.3.2 இன் பிரகாரம், இந்தப் பெறுகைச் செயற்பாட்டிற்கான மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்கு ஏற்ப அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், விலைமனுக் கோரலுக்கு அழைக்கப்பட்ட 5 வழங்குநர்களில் ஒரு வழங்குநர் மட்டுமே பதிவு செய்யப்பட்ட வழங்குநராக இருந்தார்.

ii. 2021/2022 மற்றும் 2022/2023 சேவை ஒப்பந்தங்களின்படி செலுத்த வேண்டிய அதிகபட்ச மாதாந்த கட்டணம் முறையே ரூபா.798,000 மற்றும் ரூபா.831,000 ஆக இருக்க வேண்டிய போதிலும் மாறாக, அதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா.

79,800 ஆக காணப்பட்டதுடன், அந்தத் தொகையானது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் இருந்து அறிவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய கலை நிகழ்ச்சி மத்தியநிலையத்திற்கான சுத்திகரிப்பு சேவையைப் பெறுதல் அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

i. பெறுகை வழிகாட்டுதல் கோவை 4.3 இன் படி, மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை என்பதுடன், கடந்த 11 மாதங்களுடன் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களின் பெறுமதியை அண்ணளவான மதிப்பீடாகக் கருத்தில் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தனது அவதானிப்புகளை வழங்கியது.

ii. சுத்திகரிப்பு சேவையைப் பெறுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட சேவை வழங்குநருடன் ஒப்பந்தம் செய்யப்படுதல் வேண்டும் என்ற போதிலும், 2022 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து சேவையினைப் பெற்று, 6 மாத கால தாமதத்திற்குப் பிறகு 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

iii. பெறுகை ஆவணங்களின் பிரகாரம் நாளாந்தம் பணியமர்த்தப்பட வேண்டிய மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 21 ஆக இருந்தாலும், 6 - 7 இற்கு இடைப்பட்ட ஊழியர்கள் அதாவது 32 சதவீதத்தினர் நாளாந்த அடிப்படையில் பணிக்கு வருவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன்படி, தேவையான எண்ணிக்கையிலான பணியாளர்களை ஈடுபடுத்தி தரமான சேவையை பெற்றுக்கொள்வதற்குஎந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதுடன், பணிக்கு வராத ஊழியர்களுக்கான செலுத்துகை தொகை மாத்திரமே குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

iv. சம்பளம் வழங்குவதில், பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூபா.1,400 மற்றும் பணி மேற்பார்வையாளருக்கு ரூபா.1,500 என்பதாக செலுத்துகை செய்யப்பட்ட போதிலும், பணிக்குச் சமூகமளிக்காமைக்காக வேண்டி பணம் குறைப்புச் செய்யும் போது நாள் ஒன்றுக்கு ரூபா.740 உம் மற்றும் பணி மேற்பார்வையாளருக்கு ரூபா.840 உம் கழிக்கப்படுதல் வேண்டும் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, 2022 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் ரூபா. 845,460 நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்க விலைமனுக்கோரல் வழிகாட்டுதல் விதிகளின்படி சேவை பெற்றுக்கொள்ளல் செய்யப்பட வேண்டிய போதிலும், கிராமோதய ஜனகலா கேந்திரவிற்கு 2022/2023 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்ளும் போது சேவை ஒப்பந்தத்தை முந்தைய ஆண்டின் வழங்குநரானவரையறுக்கப்பட்ட ரக்னா செக்யூரிட்டி லங்கா நிறுவனத்திற்கு வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக நேரடியாகவே தலைமைக் கணக்காளர் (தேசிய உரிமைகள் பிரிவு) மூலமாக 2022 டிசம்பர் 12 ஆம் திகதி சம்பந்தப்பட்ட வழங்குநருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) விலைமனுக்கோரல் தீர்மானத்தின் மூலம் அமைச்சின் மூலமாக நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளுக்காக உணவு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிறுவனங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ள போதிலும், அதற்கு முரணான வகையில் 2022 ஜனவரி 04ஆம் திகதி ரூபா.134,875 செலுத்தி நிகழ்ச்சியொன்றிற்கு சிற்றுண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

3.3 சொத்து முகாமைத்துவம்

இது சம்பந்தமாக, பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வித்யாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபத்தின் நிர்மாணப் பணிகள்

ரூபா. 1350 மில்லியன் (1-5 கட்டங்களாக) மதிப்பீட்டின் அடிப்படையில் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2017ஆம் ஆண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதி முடிப்பதற்கு திட்டமிடப்பட வித்யாலங்கார சர்வதேசபௌத்த மாநாட்டு மண்டபத்தின் 05 கட்டங்கள் வரையிலான கட்டுமானப் பணிகளுக்காக 2021 டிசம்பர் 31ஆம் திகதிக்குரூ.1245.18 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. செயல்திறன் அறிக்கையின்படி, கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில், அதற்கான செலவுகள் எதுவும் ஏற்படவில்லை. அது தொடர்பாக, 2022 நவம்பர் 29 அன்று நடத்தப்பட்ட நிலைய இடப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளது,

i. அஸ்திவாரத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக, பிரதான கட்டிடத்தைப் போலவே, முன் மற்றும் பின் படிக்கட்டுகள் நிலத்தினுள் இறங்கி அவற்றின்

தரையோடுகள் கழன்று போய் காணப்பட்டதுடன், நுழைவு படிக்கட்டுகளுடன் இணைந்ததான சுவர்கள் வெடித்து கோடுகள் விழுந்திருந்தன. கட்டிட இறக்கத்தின் அதிகபட்ச அளவினை அளவிட, இணைக்கப்பட்ட படிகளில் மணல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

ii. கட்டிடத்தின் உள்ளே வெளியிலிருந்து தண்ணீர் கசிந்து கொண்டிருந்ததுடன், மத்திய குளிரூட்டல் ஒழுங்கமைப்பு கொண்ட அறையிலும் தண்ணீர் கசிவு காணப்பட்டது. தண்ணீர் தொட்டிகள் அமைக்கப்பட்ட இடத்திலும் ஈரப்பதத்தின் மீது பல்வேறு செடி கொடிகள் வளர்ந்து, பாசியும் படிந்து காணப்பட்டது.

iii. கட்டிடத்தின் மேல் தளத்தின் பல்கனி யன்னல்களில் பதாமை (சீமெந்துக் கலவை) உதிர்ந்து போய் காணப்பட்டதுடன், நுழைவாயிலின் சுவர்கள் மற்றும் சிவிலினில் பறவைகளின் எச்சங்கள் படிந்து அழுக்குப் படிந்ததாக காணப்பட்டது.

iv. பிரதான கேட்போர் கூடத்தில் பொருத்தப்பட்டிருந்த இருக்கைகளில் பூஞ்சை உருவாகி இருந்ததுடன், பொருத்தப்பட்டுள்ள திரைச்சீலைகள் மாசுபட்டிருப்பதையும், சில திரைச்சீலைகள் பாதுகாப்பற்ற முறையில் தரையில் குவிக்கப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

v. கட்டிடத்தில் பொருத்தப்பட்ட தீயணைப்புக் கருவிகள் 2019.11.10 ஆம் திகதி காலாவதியாகிவிட்டதை அவதானிக்க முடிந்தது.

vi. கட்டிடம் அமைந்துள்ள வளாகத்தில் காடுகள் வளர்ந்திருந்துடன், கட்டிடத்தின் உள்ளேயும் பல்வேறு வகையான செடி கொடிகளும் வளர்ந்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

vii. இருப்பினும், இந்த மாநாட்டு மண்டப கட்டிடம் இந்த அறிக்கையின் திகதியாகும் போது கூடபயன்படுத்தப்படாமல் வெறுமையாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

(ஆ) அமைச்சின் புத்தசாசனப் பிரிவுக்குச் சொந்தமான 18-4263 இலக்கத்தைக் கொண்ட மோட்டார் வாகனம், 2019 அல்லது அதற்கு முன்னர் தொட்டு மகாநாயக்க சாரிகாராம வளாகத்தில் துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றது.

(**இ**) 2018 ஒக்டோபர் 10 ஆம் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் படி, அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்களின் பதிவு உரிமைகள் தொடர்பான பிரச்சனைகள் 2019 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், கலாச்சாரப் பிரிவின் மூலம் பயன்படுத்தப்பட்டு வரும் KU-1910,CAM-5384 மற்றும் 32-5805 இலக்கங்களையுடைய 03 வாகனங்களின் உரிமையை மாற்றிக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக இனங்காணப்பட்ட கலாசாரப் பிரிவுக்குச் சொந்தமான 301-4103,QY-1829 மற்றும் 18-7052 இலக்கங்களை கொண்ட 03 வாகனங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாகனங்கள் தொடர்பில் 2020 ஆகஸ்ட் 28ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 (II) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தகவல் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் காணப்பட்ட திஸ்ஸமஹாரம, ரன்மினிதென்னயில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ திரைப்படப் பூங்கா,2020 ஆகஸ்ட் 09ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2187/27 மூலம் தேசிய மரபுரிமை, கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைஞர்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டது. இதன்படி, வெகுஜன ஊடக அமைச்சின் மேலதிக செயலாளரின் இலக்கம் MMI / 05 / 08 / 16 மற்றும் 2020 டிசம்பர் 04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், 09 வாகனங்கள் ரன்மினிதென்ன திரைப்படப் பூங்காவிற்கு இணைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. அமைச்சுக்களுக்கு இடையே சொத்துக்களை மாற்ப்படுகின்ற போது மற்றும் ஒப்படைக்கும் போது 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இல 01/2020 இன் II ஆம் பகுதியின் 8ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் படி செய்திருக்க வேண்டும் என்றாலும், அதற்கு ஏற்ப உரிய மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. உரிய 09 வாகனங்களில், 04 வாகனங்கள் வெகுஜன ஊடக அமைச்சினால் தேசிய மரபுரிமை, கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமிய கலைஞர்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், எஞ்சிய

வாகனங்களை சட்டப்பூர்வமாக ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iii. சம்பந்தப்பட்ட வாகனங்களை பொறுப்பேற்பதை சம்பந்தப்பட்ட அமைச்சின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், மஹிந்த ராஜபக்ஷ தேசிய திரைப்படப் பூங்காவின் பதில் பணிப்பாளர் நாயகத்தினால் இவ்விடயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.மஹிந்த ராஜபக்ஷ தேசிய திரைப்படப் பூங்கா என்பது முறைப்படி நிறுவப்படாத நிறுவனமாக இருப்பதாலும், அதன் பணிப்பாளர் நாயகம் பதவியும் தற்காலிக நியமனம் என்பதாலும், வாகனங்களை ஏற்றுக்கொள்வது சட்டப்பூர்வமானது அல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2022 டிசம்பர் 31 நிலவரப்படி, கிராமோதய ஜனகலா கேந்திரவுக்குச் சொந்தமான 10 உத்தியோகபூர்வ இல்லங்களில், 7 உத்தியோகபூர்வ வீடுகள் அதிகாரிகளின் குடியிருப்புக்காகவும், மீதமுள்ள 3 வீடுகள் பிற தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 1ஆம் பிரிவின் படி, அனைத்து அரச இல்லங்களும் அட்டவணைப்படுத்தப்பட்ட இல்லங்கள் அல்லது பொது சேவை இல்லங்கள் என்பதாக வகைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் ஜனகலா கேந்திரவுக்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள் அதற்கேற்ப வேறுபடுத்தப்படவில்லை.

ii. தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் உப பிரிவின் படி, உத்தியோகத்தர் ஒரவரின் சம்பளத்திலிருந்து வசூலிக்கப்படும் வீட்டு வாடகையானது, அவருக்குக் கொடுக்கப்பட்ட வீட்டின் நியாயமான பொருளாதார வாடகையை விட கணிசமாக அதிகமாக இருந்தால், அவ்வதிகாரியின் சம்பளத்திலிருந்து நூற்றுக்கு சதவீதமாக வசூலிப்பதற்குப் பதிலாக உறுதியானதொரு வீட்டு வாடகையை வசூலிப்பதற்கு செயலாளரின் அனுமதி பெற வேண்டும் எனினும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

iii. தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 60.1 ஆம் உப பிரிவின் படி,ஒரு பதவிக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளைத் தவிர மற்றைய அனைத்து உத்தியோகபூர்வ வீடுகளினதும் குத்தகைக் காலம் 5 ஆண்டுகளில் காலாவதியாவதுடன் உத்தியோகபூர்வ இல்லங்களை உத்தியோகத்தர்களிடம்

ஒப்படைக்கப்படும் போது, தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பிரகாரம் உரிய உத்தியோகத்தருடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளல் வேண்டும். மேலும் உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறிச் செல்லாவிட்டால், 1971 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கம் மற்றும் 1974 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க அரச இல்லங்கள் (உடமையை மீளப் பெற்றுக்கொள்ளல்) சட்டத்தின் கீழ் அவர்களை அவ்வில்லங்களில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும்.எவ்வாறாயினும், அவ்வகையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதை நிராகரித்து, உத்தியோகபூர்வ இல்லமொன்றில் வசித்து வருகின்ற உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பில் அதன்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. உத்தியோகபூர்வ இல்லமொன்று சங்கீதக் கற்கைக்குப் பயன்படுத்தப்படுவதாக கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டாலும், பயன்படுத்தாமல் மூடியிருப்பதன் காரணமாக கரையான் போன்ற பூச்சிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும், கட்டிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதை தடுத்துக் கொள்வதற்குப் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்குமாறும்,கிராமோதய ஜனகலா கேந்திரவின் பணிப்பாளரினால் புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மூலமாக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

3.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண இல 880 இன் படி, அரச அதிகாரிகளின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆவது அதிகாரத்தின்படி, அமைச்சின் புத்தசாசனப் பிரிவில் பிணை வைக்கப்பட வேண்டிய 25 அதிகாரிகளிடமிருந்து பிணைப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ) தம்பதிவ யாத்ரீகர்களின் பதிவு மற்றும் வழிகாட்டுதல்

i. தம்பதிவ யாத்திரை ஏற்பாட்டாளர்கள் அமைச்சில் பதிவு செய்வதன் மூலம், தம்பதிவ யாத்திரை சுற்றுப்பயண பங்கேற்பாளர்களுக்கு இலவச விசாவைப்

பெற்றுக்கொள்வதை இலகுபடுத்தவும், கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் யாத்ரீகர்களுக்கு அதிக பாதுகாப்பை வழங்குதல் போன்ற வாய்ப்புக்கள் கிடைக்கின்ற போதிலும்அவர்களுக்கு கிடைக்கும் இவ்வசதிகள் குறித்து ஏற்பாட்டாளர்களையும் யாத்ரிகர்களையும் தெளிவூட்டும் முறையானதெர்ரு வேலைத்திட்டத்தை அமைச்சினுள் முன்னெடுக்கப்படவில்லை. மேலும், இலவச விசா வசதிகளை வழங்குவதன் மூலம் செலவுகள் குறையும் சலுகைகள் யாத்ரீகர்களுக்கு கிடைக்கின்றதா என்பது குறித்து எந்தவொரு பின்தொடர்தல் நடவடிக்கையும் செய்யப்படவில்லை.

ii. தம்பதிவ யாத்ரிகர்கள் யாத்திரையில் ஈடுபடும் வேளையில் அடிக்கடி உடல்நலப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தல் மற்றும் பல்வேறு தடவைகளில் இறப்பதற்கும் நேரிடுவதால் அமைச்சின் மேலதிக செயலாளரினால் (நிரிவாகம்) சுற்றுப்பயண யாத்திரை ஏற்பாட்டாளர்கள் மற்றும் யாத்ரீகர்களுக்கான சுகாதார ஆலோசனையுடனான வழிகாட்டியொன்றை தயாரித்துத் தருமாறு சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததுடன், அதற்கிணங்க, சுகாதார மேம்பாட்டு பணியகம் பொருத்தமான வழிகாட்டுதலை தயாரித்து அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளது. ஆயினும்கூட, இந்த வழிகாட்டுதலை அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து தபதிவ ஏற்பாட்டாளர்களுக்கும் விநியோகிக்கப்பட்டது என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன் அதனோடு தொடர்புடைய பின்தொடர்தல் நடவடிக்கை எதுவும் செய்யப்படவில்லை.

iii. பதிவுசெய்யப்பட்ட ஏற்பாட்டாளர்களிடமிருந்து தம்பதிவ யாத்திரையில் ஈடுபடும் யாத்ரீகர்களுக்கு ஏற்படும் குறைபாடுகள் தொடர்பாக கண்டறிதல் நடவடிக்கையொன்றை அமைச்சின் மூலமாக மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் 2020 முதல் 2022 வரையான காலப்பகுதியில் யாத்திரிகர்களுக்கு ஏற்பாட்டாளர்கள் மூலமாக ஏற்பட்ட பல்வேறு சிரமங்கள் மற்றும் அநீதிகள் குறித்து 29 முறைப்பாடுகளும், யாத்திரை ஏற்பாட்டாளர்களால் 02 முறைப்பாடுகளும் அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டபோதிலும் அது தொடர்பில் அமைச்சின் மூலமாக எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) ரஜரட்ட சுற்றுலா விடுதி இல்லத்தை பரிசோதித்தல்

i. ரஜரட்ட சுற்றுலா விடுதி இல்லக் கட்டிடத்தின் கொன்கிரீட் தளங்கள் வெடிப்புக்குள்ளாகிக் காணப்படுவதுடன், சாரதி தங்குமிடக் கட்டிடத்தின் மின் நிறுவல்கள் பழுதுபார்க்கப்பட்டவேண்டிய நிலையில் காணப்படுகிறது. மேலும், சுற்றுலா விடுதி இல்லத்தின் நுழைவு வீதி மழைநீரால் கழுவிச் செல்லப்படுவதன் காரணமாக வாகனங்களைஉள்நுழைவிப்பதில் சிரம நிலை காணப்படுகின்ற போதிலும் இதுவரை அதை சீரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ii. சுற்றுலா விடுதியை ஒதுக்கீடு செய்யும் கட்டணங்களுக்கு மேலதிகமாக பிரமுகர்களின் கட்டில் ஒன்றுக்கு 50 ரூபா என்கின்ற கட்டில் விரிப்புக் கட்டணம் சுற்றுலா விடுதிப் பொறுப்பாளரினால் அறவிடப்படுவதோடு, அதற்காக நிதிப்பிரமாணம் 168 (1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் முறையான பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை.

iii. நிதிப்பிரமாணம் 177 இன் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற அரச நிதிகளை நாளாந்தம் அல்லது கூடிய விரைவில் பரிமாற்றம் செய்ய வேண்டிய போதிலும் சுற்றுலா விடுதிக்கு சில்லறைச் செலவு முன்பணம் அல்லது வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணத்தினால் சில சந்தர்ப்பங்களில் கட்டில் விரிப்புக் கட்டணங்களால் வேறு செலவுகளும் செய்யப்பட்டுள்ளது.

(இ) சுதந்திர தின விழாவின் நடனங்களுக்கான ஆடைகளுக்கு அமைச்சின் கலாசாரத் திணைக்களம் ரூ. 4,429,800 தொகையைச் செலவிட்டிருந்ததுடன், அத்தகைய ஆடைகளை நடன ஆடைக் காப்பகத்தில் முறையாக வைக்காததாலும் நாடக ஆடை, ஆபரணங்களின் நிலுவைகளின் சரியான தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை.மேலும்,ஒப்பீட்டளவில் அதிக பொருட்செலவில் உருவாக்கப்படும் இந்த நாட்டிய ஆடைகளை வேறு மாற்று சந்தர்ப்பங்களுக்கு வெளி அமைப்புகளுக்கு கொடுத்து வருமானம் ஈட்டக்கூடியதாக இருந்த போதிலும் அதனை கவனத்தில் கொள்ளாமல் இந்த அணிகலன்கள் வெருமனே குவிந்து கிடப்பதை அவதானிக்க முடிந்தது.

(ஈ) திஸ்ஸமஹாராம, ரன்மினிதன்ன பிரதேசத்தில் 235 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ தேசிய திரைப்படப் பூங்காவானது, 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதுடன், அப்போது அது முறையான நிறுவனமொன்றாக நிறுவப்படவில்லை.இது தொடர்பில் அப்போதைய வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி 'மஹிந்த ராஜபக்ச தேசிய திரைப்படப் பூங்காவை அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனமாக மாற்ற வேண்டும்' என்ற தலையங்கத்திலான அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்திருந்தார். இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. சம்பந்தப்பட்ட அமைச்சரவை முடிவை செயல்படுத்துவதற்கான நிறுவனமாக ஊடகம் மற்றும் தகவல் அமைச்சுபெயரிடப்பட்டிருந்ததுடன், அவ்வமைச்சின் மூலம் அல்லது இத்திரைப்படப் பூங்கா அப்போது காணப்பட்ட தேசிய பாரம்பரிய உரிமைகள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைஞர்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் மூலம் சம்பந்தப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ii. மஹிந்த ராஜபக்ஷ தேசிய திரைப்படப் பூங்கா அமைந்துள்ள காணியானது அரச காணியாகக் காணப்படுவதுடன், இத்திரைபடப் பூங்கா ஊடக மற்றும் தகவல் அமைச்சின் கீழ் இருந்த காலப்பகுதியில் பல விசேட நிபந்தனைகளின் கீழ் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு மாற்றப்பட்டது. இந்த அறிக்கையின் திகதியாகின்ற போதும்,அக்காணி இன்னும் ஊடகம் மற்றும் தகவல் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் பெயரில் காணப்பட்டதுடன்,தேசிய பாரம்பரிய உரிமைகள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைஞர்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சிடம் இப்பூங்கா ஒப்படைக்கப்பட்டு 02 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட போதிலும்,சம்பந்தப்பட்ட காணியினை அமைச்சிற்கு பொறுப்பேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) கிராமோதய ஜனகலா கேந்திரவின் செயல்நடவடிக்கைகள் மற்றும் செயற்திறன்கள் குறித்து பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2022 செப்டம்பர் 13ஆம் திகதிய இலக்கம் அசு/22/1294/620/007உடைய அமைச்சரவை தீர்மானத்தின் படி,கிராமோதய ஜனகலா கேந்திரவை கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டமொன்றாக

முன்னெடுத்தச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரை செய்யப்பட்ட போதிலும், கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழான திட்டமொன்றாக செயற்படுத்தாமல் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியாகின்ற போதும் புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ii. முந்தைய மூன்றாண்டு காலப்பகுதியில் கிராமோதய ஜனகலா கேந்திரவிற்குச் செய்யப்பட்ட மொத்தச் செலவு 26,365,301 ரூபாவாக இருந்தபோதிலும், அந்தக் காலப்பகுதியில் பாடநெறிகளில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 112 ஆகக் குறைவாக இருந்ததுடன், மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான பொருத்தமான உத்திகள் பயன்படுத்தப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டது.

iii. 2020 ஒக்டோபர் 26 ஆம் திகதியுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 02/2020 இன் துணைப்பிரிவு 1 (vii) இன் பிரகாரம், நிறுவனங்களின் தற்போதைய சேவைத் தேவைகளின்படி அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்கு திருத்தங்கள் தேவைப்படும் போது, மிகவும் வினைதிறனான மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதற்குத் தேவையான குறைந்த பதவி எண்ணிக்கைகளை கண்டறிந்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். இருந்தபோதிலும், கலையரங்கம் இல்லாத ஜனகலா கேந்திரவிற்குமுகாமையாளர் பதவியொன்றும் கலையரங்க உதவியாளர் பதவிகள் இரண்டும்அங்கீகரிக்கப்பட்ட பதிவிகளாக முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், அப்பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தாமரைத் தடாக அரங்கம் (நெலும் பொகுன) உள்ளக அரங்கத்தின் செயல்பாடுகள் தொடர்பாக நடத்தப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2020 செப்டம்பர் 25 ஆம் திகதி தொடக்கம் புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் காணப்பட்ட தேசிய பாரம்பரிய கலை மற்றும்

கிராமப்புற கலைஞர்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் தாமரைத் தடாக அரங்கம் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர், 2022 ஜூலை 22 ஆம் திகதிய 2289/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் மாற்றப்பட்டது. ஆயினும்கூட, 2022 டிசம்பர் 31 ஆம் திகதியாகின்ற போது கூட கலையரங்கம் குறித்த அமைச்சின் மூலம் முறைப்படி நிறுவப்பட்டிருக்கவில்லை என்பது கவனிக்கப்பட்டது.

ii. அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் SA / AMP / Deposit/Transfer இலக்கமுடைய 2020 ஜனவரி 09 ஆம் திகதிய கடிதத்தின் படி, அரங்கின் வருமானத்திற்கு வருவாய்த் தலைப்பொன்றை உருவாக்ககிக கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியாகின்ற போதும் அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

iii. 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் சேவைகளை வழங்குவதற்காக வசூலிக்கப்படும் பல்வேறு கட்டணங்களை அதிகரிக்காத அனைத்து அரச நிறுவனங்களும் சம்பந்தப்பட்ட நேரியல் அமைச்சின் செயலாளரது ஒப்புதலைப் பெற்று அக்கட்டணத்தை 15 சதவீதம் அல்லது அதற்கு மேல் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் மூலம் 2012 ஆம் ஆண்டு முதல் வசூலிக்கப்படும் கட்டணத்தை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. அரங்கினை வாடகை அடிப்படையில் வழங்கும் போது,ஒருசிலதரப்பினர் மட்டும் மானிய முறையிலான கேள்வி விலையில் வாடகைப் பணத்தை வசூலித்திருந்ததுடன் (தள்ளுபடிகளை வழங்குதல்) அத்தகைய சலுகை அடிப்படையிலான அறவீடுகளுக்காக திறைசேரியின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை.

v. வாடகை அடிப்படையில் அரங்கினை வழங்கும் போது அந்தந்த வாடகை வாங்கும் தரப்பினருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தின் முதலாவது தரப்பினர் சார்பில்அரங்கினை முன்பதிவு செய்து கொள்ளும் அதிகாரி மற்றும் அரங்கின் பிரதான நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரினால் ஒப்பந்தத்தில்

கையொப்பம் இடப்பட்டுள்ளது. இருப்பினும், கலையரங்கு முறையான சட்ட ஆளுமை கொண்ட நிறுவனமாக நிறுவப்படாததால், ஒப்பந்தம் சட்டப்பூர்வமாக செல்லுபடியாகவில்லை.

vi. நிதி ஒழுங்குவிதி 3(1) இன் பிரகாரம், அரசாங்கத்தின் அனைத்து செயல்பாடுகளும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் குறிப்பிடப்பட வேண்டும் என்ற போதிலும், கலையரங்குடன் தொடர்பான செலவுகளை சுமப்பதற்காக அவ்வாறு திட்டமிடப்படவில்லை என்பதுடன், அச்செலவுகள் வருடாந்த மதிப்பீட்டில் சேர்த்து,பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை.

vii. மின் கட்டணம் செலுத்தும் போது, குறிப்பிட்ட மாதத்தின் மின் பட்டியல் கிடைத்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டிய போதிலும் தாமதமாக செலுத்தும் போது16 ஆவது நாளிலிருந்து 1.20% அளவிலான மாதாந்திர வட்டித் தொகையொன்றுநிலுவையான மின் கட்டணப் பட்டியலுக்கு அமைய வசூலிக்கப்படும் என்றும் மின் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படி இருந்தும், கலையரங்கின் மாதாந்திர மின்கட்டணம், 15 நாட்களுக்குள் செலுத்தப்பட்டு, தாமத வட்டியை வசூலிப்பதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.இதன் காரணமாக, 2022 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கான கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ரூபா. 460,419 தொகை கூடுதல் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. இது நிதி ஒழுங்குவிதிகள் 156 மற்றும் 210 (2) இன் படி செய்யப்பட வேண்டும்கவனிக்கப்பட்டது.

viii. மத்திய நிலையத்தில் மூன்று தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்களால் நடத்தப்படும் பரிமாற்ற ஆண்டெனாக்களுக்கான சேவைகளை வழங்குவதற்காக வசூலிக்கப்படும் வாடகை மற்றும் மின்சாரக் கட்டணம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- பரிமாற்ற ஆண்டெனாக்களை (Transmission Antena) பராமரிக்கும் இரண்டு தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் 2022 டிசம்பர் 31 இல் காலாவதியாகிவிட்ட போதிலும், புதிய ஒப்பந்தங்கள் எதுவும் செய்யப்படவில்லை. இதனால் கேள்வி விலைகளை திருத்தம் செய்து அதிக வருமானம் ஈட்டிக்கொள்ள அரங்கத்திற்கு காணப்பட்ட வாய்ப்பு இழக்கப்பட்டது.

- ஒப்பந்தத்தின்படி, வரி வாடகையை ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி செலுத்த வேண்டும் என்ற போதிலும், கலையரங்கின் மாத வருமான அறிக்கையின்படி, அந்தத் தொடர்பு நிறுவனங்கள் முறையாக தவணை செலுத்தவில்லை என்றும், ஒப்பந்தங்களில் நுழையும் போது,குத்தகைக் கூலி செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் அறவிடப்பட வேண்டிய அபராதத் தொகை குறிப்பிடப்படாமையினாலும் தாமதமான அபராதத் தொகையை வசூலிக்க முடியவில்லை.

- கலையரங்கம் மற்றும் ஒவ்வொரு தகவல் தொடர்பு நிறுவனத்திற்கும் இடையேயான ஒப்பந்தங்களின்படி, பரிமாற்ற ஆண்டெனாக்களை பராமரிக்க பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான செலவுகளை அந்த நிறுவனங்கள் கலையரங்கிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன், கலைரயங்கின் மூலமாக தொடர்புடைய கட்டணப் பட்டியல்கள் செலுத்தப்படுதல் வேண்டும். இருந்தபோதிலும், மேற்படி நிறுவனங்கள் முறையாக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாததன் காரணமாக, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான தொகையாக 1,255,465 ரூபா அறவிடப்பட வேண்டியிருந்தது.

ix. மத்திய நிலைய வளாகத்தில் 400 சதுர அடி பரப்பளவிலான நிலப்பகுதியில் இராணுவத்தால் சிற்றண்டிச்சாலையொன்று பராமரிக்கப்பட்டு வருவதுடன்,அதற்காக சம்பந்தப்பட்ட இராணுவத்திடம் இருந்து வாடகை எதுவும் வசூலிக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. சிற்றுண்டிச்சாலை நலன்புரி அடிப்படையில் நடத்தப்படுவதாலும், சிற்றுண்டிச்சாலையின் செயல்பாடுகள் கலையரங்கின் செயல்பாடுகளிலிருந்து தனித்தனியாகப் பராமரிக்கப்படுவதாலும், வளாகத்திற்கு வாடகை எதுவும் செலுத்தப்படுவதில்லை என்று சம்பந்தப்பட்ட இராணுவப் பிரிவு கணக்காய்வுக்கு தெரிவித்துள்ளது.இருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட நில வளாகம் பொருளாதார மதிப்பில் மிகவும் உயர்வானது என்பதும், மேற்படி வளாகத்துடன் தொடர்புடைய துப்புரவு, மின்சாரக் கட்டணம்,தண்ணீர் கட்டணம் போன்றவற்றை கலையரங்கமே ஏற்றுக்கொள்வதால், மதிப்பிடப்பட்ட மதிப்பின் அடிப்படையில் வாடகைத் தொகையொன்று வசூலிக்கப்பட வேண்டும் என நிரூபணமானது.

(எ) மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக நியதிச்சட்ட சபைகளுக்கிடையில் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

i. மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக நியதிச்சட்ட சபையினால் முன்னெடுக்கப்படும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வேறு நிறுவனங்கள் இருப்பதால், மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கென தனியான செயற்திட்டத்தை பேண வேண்டிய அவசியமில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

ii. மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக நியதிச்சட்ட சபைகளின் அலுவலக வளாகத்திற்காக கண்டி மாநகர சபைக்குள் அமைந்துள்ள கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. தொடர்புடைய குத்தகை ஒப்பந்தத்தின்படி, குத்தகை ஒப்பந்தத்தின் முடிவில் மதிப்பிடப்பட்ட மதிப்பின் அடிப்படையில், சொத்தில் செய்யப்பட்ட ரூபா.6,194,607 பழுதுபார்ப்பு மற்றும் கட்டுமானத்திற்காக குத்தகைதாரரிடம் கட்டணம் வசூலிக்க அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், புதிய குத்தகை ஒப்பந்தத்தில் அந்த நிபந்தனைகளைச் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அமைச்சிற்கு முழுமையாகச் சொந்தமான கலாச்சார பாதுகாப்பு மற்றும் கட்டுமான (தனியார்) நிறுவனம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

i. கலாச்சார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களில் கட்டிட நிருமாணம் மற்றும் பராமரிப்பினை திறமையாக மேற்கொள்ளும் நோக்கில் அமைச்சுக்கு முழுமையான பங்கு உரிமைகள் உள்ளபடி பதிவு செய்யப்பட்டிருந்த கலாச்சார பாதுகாப்பு மற்றும் கட்டுமான (தனியார்) நிறுவனத்தின் 2018/2019, 2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022 நிதி ஆண்டுகளுடன் தொடர்பான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. தற்போது, நிறுவனத்தின் நடவடிக்கைகள் முற்றிலும் செயலற்ற நிலையில் இருப்பதால், நிறுவனத்தை கலைக்குமாறு 2021 ஜூலை 05 ஆம் திகதி பிரதமரின் செயலாளரின் மூலமாக கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இந்த அறிக்கையின் திகதியாகின்ற போதும் கலைப்பு செயல்முறை செயல்படுத்தப்படவில்லை.

4. நல்லாட்சி

4.1 உள்ளக கணக்காய்வு

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) மற்றும் 40(3) பிரிவுகளின் பிரகாரம் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரினால் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட 07 கணக்காய்வு வினாக்கள் தொடர்பான கருத்துத் தெரிவிப்பினை சமர்ப்பிக்கவில்லை.

(ஆ) 2019 ஜனவரி 12 திகதியிடப்பட்டDMA/01-2019 ஆம் இலக்கமுடைய முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, நிதிப்பிரமாணம் 134(2) இல் குறிப்பிட்டுள்ள படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி ஆலோசனை பெற்றிருக்க வேண்டிய போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) அமைச்சின் கலாசாரத் துறைக்கு ஏறக்குறைய ஆயிரம் பணியாளர்களும், நாடு முழுவதிலும் தாபிக்கப்பட்ட 208 கலாசார நிலையங்கள் இயங்கி வந்தாலும் அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுப் பதவி பல ஆண்டுகளாக வெற்றிடமாக உள்ளது.

5. மனித வள முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் புத்தசாசனப் பிரிவிற்கு 219 அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களும் 164 உண்மையான பணியாளர்களும் காணப்படுவதுடன் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை 55 ஆகும். அவற்றில் பணிப்பாளர் பதவியொன்றும், பொறியியலாளர் மற்றும் உதவிப் பொறியாளர் பதவிகள் 02உம், உதவிச் செயலாளர் பதவிகள் 3 உம் வெற்றிடமாக இருந்தன. மேலும், 13 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 12 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள், 9 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 07 சாரதி பதவிகள் ஆகியவற்றில் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை அமைச்சின் செயலாற்றுகையில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்படுகின்றது.

(ஆ) கலாச்சாரப் பிரிவுக்கு 201 உதவிக் கலாச்சார ஊக்குவிப்பு உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும், உண்மையான எண்ணிக்கை 133 ஆக காணப்பட்டதுடன், 68 பதவிகள் அதாவது 34 சதவீதமான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், கலாச்சாரப் பிரிவுக்கான அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 141 ஆக காணப்பட்ட போதிலும் உண்மையான எண்ணிக்கை 187 ஆக உள்ளதால் 46 பதவிகளில் அதாவது, 33 சதவீதமானவை அதிகமாகக் காணப்பட்டது.

(இ) அமைச்சிடம் 208 கலாச்சார மத்தியநிலையங்கள் காணப்பட்டாலும், மத்திய நிலைய காவலர்களாக 297 பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். 2020 டிசம்பர் 10 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் தனிப்பட்ட முறையில் வைத்திருப்பவருக்கு மட்டும் 106 காவலர்கள் அனுமதிக்கப்பட்ட காரணத்தினால் இந்த உபரித் தொகை பதிவாகியிருந்தது. மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது, மேலதிக 89 காவலர்களின் சேவையை வினைத்திறனான முறையில் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இம் மத்தியநிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கைரேகை இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை 2021 ஆம் ஆண்டு கணக்காய்வு அறிக்கைகளின் மூலமாக சுட்டிக்காட்டியிருந்தாலும், அமைச்சின் மூலமாக இது விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மகிந்த ராஜபக்ச தேசிய திரைப்படப் பூங்காவிற்கான ''அலுவலக உதவியாளர் பதவி'' என்பது அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றல்ல என்ற போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியாகின்ற போதும் 02 பேர் அந்த பதவியில் இன்னும் பணியாற்றி வருகின்றனர்.

ஒப்பம்: எச்.எம். ரணசிங்க பண்டா

சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக

அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறியீட்டுச் சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக *(%)* உண்மையான வெளியீடு		
	100% -90%	**75% - 89%**	**50% - 74%**
1. கலாசார மத்திய நிலையங்களில் பாடநெறிகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை. உண்மையான மதிப்பு – 15,853 (கலாசார மத்திய நிலையம் -207*)* (எதிர்பார்க்கப்பட்ட அளவு - 45,000) **உண்மையான வெளியீடு (35%)** • நாட்டில் நிலவும் பொருளாதார ஸ்திரமின்மை காரணத்தினால் எதிர்பார்த்த மதிப்பை எட்டுவது கடினமாக இருந்தது.	-	-	-
2. கலாசார மத்திய நிலைய நூல்நிலையத்தின் ஊடாக நூல்நிலைய வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் பிரதேச நூல்நிலைய அங்கத்தவர்களின் எண்ணிக்கை உண்மையான மதிப்பு – 57,818 (எதிர்பார்க்கப்பட்ட அளவு - 40,000)	100%	-	-
3. கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற / பங்களிப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் தேசிய / விசேட கலாசார நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை உண்மையான மதிப்பு -05 (எதிர்பார்க்கப்பட்ட அளவு -10)	-	-	50%

• நாட்டில் நிலவும் பொருளாதார ஸ்திரமின்மை காரணத்தினால் எதிர்பார்த்த மதிப்பை எட்டுவது கடினமாக இருந்தது.			
4. கலாசார மத்திய நிலையங்களினால் பிரதேச ரீதியாக நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை உண்மையான மதிப்பு -926 (எதிர்பார்க்கப்பட்ட அளவு – 1,300)	-	-	71%
5. கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் நடாத்தப்படுகின்ற வெளிநாட்டு கலாசார ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை உண்மையான மதிப்பு - 3 (எதிர்பார்க்கப்பட்ட அளவு - 35) **உண்மையான வெளியீடு (8%)** • நாட்டில் நிலவும் பொருளாதார ஸ்திரமின்மை காரணத்தினால் எதிர்பார்த்த மதிப்பை எட்டுவது கடினமாக இருந்தது.	-	-	-
6.செயற்பாட்டில் உள்ள கலாசார இருதரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை உண்மையான மதிப்பு - 48 (எதிர்பார்க்கப்பட்ட அளவு -68)	-	-	70%
7. அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டிக்காக ஆக்கங்களைச் சமர்ப்பித்தல் (சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில்) உண்மையான மதிப்பு – 1,392 (எதிர்பார்க்கப்பட்ட அளவு -3,000) **உண்மையான வெளியீடு (46%)** • நாட்டில் நிலவும் பொருளாதார ஸ்திரமின்மை காரணத்தினால் எதிர்பார்த்த மதிப்பை எட்டுவது கடினமாக இருந்தது.	-	-	-

அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக் காட்டுக

இலக்கு/குறிக்கோள்	அடைவுகள்	வெற்றிக் குறிகாட்டிகள்	இதுவரை அடையப் பெற்ற முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%-100%
4.சரியான, நியாயமான, தரமான கல்வியை உறுதி செய்தல் மற்றும் அனைவருக்கும் அவர்களின் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொள்ள வாய்ப்பளித்தல்.	4.7. 2030 ஆம் ஆண்டின் போது கல்வி கற்கும் அனைவரும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான அறிவு மற்றும் திறன்களை பெறுதல், அவர்களுக்கு நிலையான வளர்ச்சி தொடர்பான கல்வி மற்றும் நிலையான வாழ்க்கை முறைகள், மனித உரிமைகள், சமாதானம், வன்முறை அற்ற கலாசாரத்தை ஊக்குவித்தல், உலகளாவிய குடியுரிமை மற்றும் கலாசார பன்முகத் தன்மையின் மதிப்பீடு மற்றும் நிலையான	1. நாடு முழுவதும் நிர்மாணிப்பின் கீழ் செயற்பட்டு வரும் கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை	-	65%	-
		2. கலாசார மத்திய நிலையங்களின் ஊடாக நடாத்தப்படும் பாடநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை.	35%	-	-
		3.கலாசார மத்திய நிலையங்களின் பிரதேச நூல் நிலையங்களில் உள்ள வாசகர்களின் எண்ணிக்கை.	-	-	100%
		4. கலாசார மத்திய நிலையங்களின்	-	71%	-

	வளர்ச்சிக்கு கலாசார ரீரதியான பங்களிப்பு ஆகியவை அடங்கும்.	மூலம் பிரதேச ரீதியாக நடாத்தப்படும் விசேட கலாசார நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை.			
		5. கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் வருடாந்தம் பங்களிப்புச் செய்யும் விசேட கலாசார நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை.	-	50%	-
		6. வெளிநாட்டு கலாசார உறவுகள், கலாசார இருதரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் கலைஞர்களால் பெறப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் எண்ணிக்கை.	-	70%	-

		7.அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கங்களின் எண்ணிக்கை.	46%	-	-
11. நகரங்கள் மற்றும் குடியிருப்புக்களை சரியான, பாதுகாப்பான, வலுவான மற்றும் நிலையானதாக வடிவமைத்தல்.	11.4. உலகின் இயற்கை மற்றும் கலாசார பாரம்பரியத்தை பாதுகாக்கவும் பாதுகாப்பதற்கான முயற்சிகளை வலுப்படுத்துதல்.	1. கைத்தொழில் கிராமங் களுக்கான நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்துதல். • கலாசிரிகம மற்றும் ஆலோக்ககம தொழில்த் துறையில் பணிபுரியும் 18 கைவினைஞர்க ளைத் தெரிவு செய்தல், பணப் பரிசில்களை வழங்குதல், விருதுகளை வழங்குதல், கைத்தொழில் அபிவிருத் திக்கான உபகரணங் களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒதுக்கீடுகளை வழங்குதல்.	30%	-	-
		2. கலாசார விழுமியங்கள்	-	-	-

		மற்றும் உள்நாட்டு அறிவு தொடர்பாக நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை.			
		3. தேசிய மரபுரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்பாடு செய்தல். • கட்புலானாகா மரபுரிமைகளின் பாதுகாப்புத் தொடர்பான கருத்துக்களை யுனெஸ்கோ சங்கத்திடம் முன்வைத்தல்.	-	70%	-

5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் உள்ள சாதனைகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்கவும்.

சாதனைகள்

1. புத்தசாசனப் பிரிவில் இருந்து அமரதேவ கலைக் கூடத்தை உருவாக்கும் திட்டத்திற்குத் தேவையான நிதியைப் பரிமாற்றிக் கொண்டு திட்டப் பணிகளை மேற்கொள்வது.
2. 74 ஆவது தேசிய சுதந்திர தின விழா கொண்டாட்டத்திற்காக வர்ணமயமான கலாசாரப் பிரிவுகளுடன் நடாத்தப்பட்ட கலாசாரக் காட்சி உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பார்வையாளர்களினால் பாராட்டப்பட்டது.
3. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உலக உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதற்கான ஒரு ஒத்துழைப்பினை வழங்கும் முகமாக, கலாசாரத் துறை மற்றும் இதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் தொடர்புபடுத்தி 2022 ஆம்

ஆண்டு முழுவதும் ‘‘நேர்மையான விவசாயத்தின் மூலம் ஒரு நல்ல கலாசாரம்’’ என்ற வேளாண்மைத் திட்டத்தினைச் செயற்படுத்துதல்.

4. தேசிய கலாசாரக் கொள்கையை உருவாக்குவதற்கான படிமுறைகளை மேற்கொள்ளல்.
5. உலக பாரம்பரிய தும்பரா வடிவத் தொழிற் துறையில் உள்ள கைவினைஞர்களைப் பாராட்டுதல், 18 கைவினைஞர்களுக்கு விருதுகளை வழங்குதல் மற்றும் கைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நிதியுதவி வழங்குதல்.
6. குழந்தைகளின் கலைத் திறன்களை மேம்படுத்தி ஊக்குவிப்பதன் மூலம் பிரதேச கலாசார மத்திய நிலையங்களில் மாணவர்களுக்கான போட்டிகளை நடாத்தி வெற்றியாளர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்க பிரதிபா 2021 நிகழ்வை நடாத்துதல்.
7. அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டிகளின் மூலம் அரச ஊழியர்களின் மற்றும் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களின் கலைத் திறன்களைப் பாராட்டுதல்.

சவால்கள்

1. 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பிரச்சினைகள் இருந்தபோதிலும் கலை மற்றும் கலாசார நடவடிக்கைகளைப் பேணுதல்.

2. நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக அலுவலகங்களுக்கு ஊழியர்களை அழைப்பதனை மட்டுப்படுத்துதல்.

3. காலாண்டு அடிப்படையில் ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதாலும் மேற்கூறிய நெருக்கடியான சூழ்நிலைகளாலும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஒதுக்கீடுகளைத் திறம்படவும் மற்றும் திறமையாகவும் பயன்படுத்த வேண்டியுள்ளது.

4. நாடு முழுவதும் உள்ள கலாசார மத்திய நிலையங்களின் வலையமைப்பைப் பராமரிப்பதற்கான செலவுகளைக் குறைக்க அரசாங்கம் அறிவுறுத்தி உள்ளது.

அத்தியாயம் 06 – மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம் / (அதிகப்படியான)
சிரேஸ்ட	17	12	05
மூன்றாம் நிலை	02	01	01
இரண்டாம் நிலை	589	518	114/(43)
ஆரம்ப நிலை	435	498	43

6.2 கலாசார அலுவல்கள் பிரிவின் நோக்கங்களை அடைய, மனித வளம் முழு அளவில் பயன்படுத்தப்படுகின்றது.

6.3 மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றப் பட்ட பதவி யினரின் எண்ணிக் கை	நிகழ்ச்சி த் திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூபா)		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/ வெளிநாடு)	வெளியீடு/ பெற்றுக் கொண்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
1. அரச கரும மொழிகள் திணைக்க ளத்தினால் நடாத்தப் படும் தமிழ் மொழி செயன் முறைப் பயிற்சி.	59	06 மாதங்க ள்	112,500		உள்நாடு	நிறுவன உத்தியோகத் தர்கள் 60 பேருக்கு தமிழ் மொழிப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.
அரசு ஊதியங்கள்	01	2022.11. 28,29,30	18,000		உள்நாடு	கணக்கியல் பிரிவில் இருந்து டீ.பி.எச். சத்துரங்கி கலந்து கொண்டார்.
2.பொதுக் கணக்கியல் முறை பற்றிய விழிப்புணர்வு மற்றும் இறுதிக் கணக்கு களைத் தயாரித்தல் பற்றிய பயிற்சி	01	2022.11. 28,29	7,500		உள்நாடு	கணக்கியல் பிரிவில் இருந்து எம்.பி.மஹேசி வீரரத்ன சத்துரங்கி கலந்து கொண்டார்.

பயிற்சித் திட்டங்களின் மூலம் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் அவர்கள் பெறும் அனுபவத்தை அவர்களின் உத்தியோகபூர்வ கடமைகளுக்குப் பயன்படுத்துவதன் மூலமும் நிறுவனத்தின் செயல்த் திறனை மேம்படுத்த முடியும்.

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது	-	-
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது	-	-
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	இணக்கம் அற்றது	அமைச்சின் கீழ் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குத் தவிர வேறு எந்த முற்பணக் கணக்குகளும் பராமரிக்கப்படுவதில்லை.	-
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	இணக்கம் அற்றது		-
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	இணக்கம் அற்றது		-
1.6	ஏனைய	இணக்கம் அற்றது		-
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்துப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
2.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொதுத் திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.9	இழப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.10	பொறுப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.11	அடிக்கட்டைப் புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி.135)**			

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது	-	-
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது.	இணக்கமானது	-	-
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணக்கமானது	-	-
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல.171.˙.2004 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	இணக்கமானது	-	-
4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்.**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது	-	-
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது	-	-
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது	-	-
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி. (NBD)	இணக்கமானது	-	-

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
	திணைக்களத்தில் உரிய திகதியில் சமர்ப்பித்தல்.			
4.5	வருடாந்த காசுப்ப பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்துக் கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது	-	-
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி. 134(2) டி.எம்.ஏ./1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது	-	-
6.2	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	இணக்கமானது	-	-
6.3	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின்	இணக்கமானது	-	-

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
	துணைப் பிரிவு 40 (4)இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்			
6.4	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதிப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல்.	இணக்கமானது	-	-
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டி.எம்.ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்குக் குறைந்தது 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.	இணக்கமானது	-	-
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ அறிக்கை இல.01/2017 சொத்துப் பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.	இணக்கமானது	-	-
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்ப்படுத்துதல்.	இணக்கமானது	-	-

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
	ஒருங்கிணைப்பிற்காக பொருத்தமான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரை நியமித்து இவ் உத்தியோகத்தர் தொடர்பான தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புதல்.	இணக்கமானது	-	-
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது	-	-
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட கால கட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.	இணக்கமானது	-	-
8.5	நி.பி.772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது.	இணக்கமானது	-	-
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத்	இணக்கமானது	-	-

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
	தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.			
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணக்கமானது	-	-
9.3	வாகனப் பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது	-	-
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி.103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது	-	-
9.5	2016.12.29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	இணக்கம் அற்றது	வாகனங்களிற்கு வழங்கப்படும் எரிபொருட்களின் அளவு காரணமாக இந்தப் பரிசோதனை முறை நடைமுறையில் கடினமாகி விட்டது.	பெற்றோலிய சட்ட நிறுவனத்திற்குத் தெரிவித்து ஞசு அமைப்பிற்கு அப்பால் இந்த நடவடிக்கையை மட்டும் மேற்கொள்ள அனுமதி கோருவேன்.
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்.	இணக்கமானது	-	-

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கிக் கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
10.2	மீளாய்வு வருடத்திலோ அல்லது அதற்கு முந்திய வருடங்களில் இருந்து காணப்பட்ட செய்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்.	இணக்கமானது	-	-
10.3	வங்கிக் கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல்.	இணக்கமானது	-	-
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது	-	-
11.2	நி.பி. 94 (1)இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்.	இணக்கமானது	-	-
12	**அரச அலுவலகர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது	-	-

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	இணக்கமானது	-	-
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்.	இணக்கம் அற்றது	எதிர் காலத்தில் கடன் வாங்குபவர்கள் அல்லது உத்தரவாதகாரர்களிடம் இருந்து அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	-
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி.571 பிரகாரம் நடடிவக்கை எடுத்தல்.	இணக்கமானது	-	-
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	இணக்கமானது	-	-
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து	இணக்கமானது	-	-

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
	மாதத்திற்குள் தீர்க்கப்படும்.			
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்.	இணக்கமானது	-	-
14.4	மாதந்தோறும் திறைசேரிப் புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்.	இணக்கமானது	-	-
15	**வருமானக் கணக்கு**			
15.1	விதிகளின் படி சேகரிக்கப்பட்ட வருமானத்தினைத் திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்.	இணக்கமானது	-	-
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.	இணக்கமானது	-	-
15.3	நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையைக் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும்	இணக்கமானது	-	-

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
	கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்.			
16.3	20.09.2017 தேதியிடப்பட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது	-	-
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்.	இணக்கமானது	-	-
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொதுக் கருத்துக்கள் / குற்றச் சாட்டுக்களை எளிதாக்குதல்.	இணக்கமானது	-	-
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
18	**பிரஜைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (i) இன் படி பிரஜைகள் பட்டயம் / பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.	இணக்கமானது	-	-
18.2	சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை பிரஜைகள் பட்டயம் / பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயற்படுத்தவும் அதைக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	இணக்கமானது	-	-
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது	-	-
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணி நேரப் பயிற்சி ஆண்டிற்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள	இணக்கம் அற்றது	தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு ஒதுக்கீடுகளைச் சேமிக்கும் வகையில் பயிற்சிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.	-

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
	திட்டம் உறுதி செய்ய வேண்டும்.			
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	இணக்கமானது	-	-
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனித வள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.	இணக்கமானது	-	-
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுப் பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்.	இணக்கமானது	-	-

தேசிய மரபுரிமை பிரிவு

அத்தியாயம் 01 நிறுவனக் குறிப்பு / நிறைவேற்றுச் சுருக்கம்

1.1 அறிமுகம்

அரசாங்கம் பிரகடனப்படுத்திய கொள்கைப் பிரகடனத்தில், புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் தேசிய மரபுரிமைகளை பாதுகாத்தல், கலாச்சாரம், இலக்கியம் மற்றும் கலைகள் என்பவற்றை தரத்தில் உயர்ந்ததாகப் பேணிச் செல்வதற்குரிய அந்தந்த கொள்கைகளின் பிரகாரமும் 2289/43 ஆம் இலக்க மற்றும் 2022.07.22 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலமும், இவ்வமைச்சின் தேசிய மரபுரிமை பிரிவை தாபித்தல் மற்றும் கடமைப்பொறுப்புகளை சட்ட ரீதியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்டதிட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்கள் பிரகாரம், கலாச்சாரம், தேசிய மரபுரிமைகள், அருங்கலை, கிராமிய கலைகள் ஊக்குவிப்பு முதலிய விடயங்கள் சம்பந்தமான கொள்கைகளை ஆக்குவதற்கு உதவுதல், தேசிய வரவு செலவுத் திட்டம், தேசிய முதலீட்டுத் திட்டம் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டம் என்பவற்றின் கீழ் வருகின்ற கருத் திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் நிருவாகப் பொறுப்புக்கள் சாட்டப்பட்டுள்ள திணைக்களங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பவற்றின் விடயங்கள் மற்றும் பணிகள் சம்பந்தமான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத் திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்துதல், பின்னூட்டல் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள், பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

1.2 தொலைநோக்கு

தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல், இலக்கியம் மற்றும் கலைகள் முதலியவற்றை ஊக்குவித்தல் என்பவ்றின் ஊடாக பெருமையும் மதிப்பும் மிக்க ஓர் இலங்கையைக் கட்டியெழுப்புதல்.

செயற்பணி

தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் கலைகள் என்பவற்றை தரத்தில் உயர்ந்ததாகப் பேணி செல்வதற்கு உரிய அந்தந்த சட்டதிட்டங்களினதும் மற்றும் கட்டளை சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க கலாச்சாரம், தேசிய மரபுரிமைகள், அருங்கலை, பாரம்பரியக் கலைகள் மற்றும் கிராமிய கலைத் திறன்கள் என்பவற்றை ஊக்குவிப்பதற்கும் இலங்கையில் காணப்படுகின்ற தொல்லியல் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கும் உதவுதல்.

குறிக்கோள்கள்

1. இலங்கையின் தேசிய மரபுரிமைகளை சட்டமுறையாக இனங்கண்டு அத்தகைய தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல்.

2. தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள், கிராமியக் கலைத் திறன்கள் ஊக்குவிப்பு விடயத்திற்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவுதல்.

3. கட்புல மற்றும் கட்புலனாகா கலாச்சார மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அத்தகைய மரபுரிமைகளைப் ஊக்குவித்தல்.

4. நாட்டின் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள் ஆகியோர் அடங்கலாக அனைத்து மக்கள் மத்தியிலும் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஒழுக்கநெறி என்பன பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

5. கலாச்சாரம் சார் விடயப் பிரிவுகளுக்குரிய வெளியீடுகளின் ஆக்கபூர்வ விடயங்களையும் மற்றும் பல்லினத்துவத்தையும் போஷித்தல்.

6. ஒவ்வொரு நிறுவனத்திலும் காணப்படுகின்ற நியதிச்சட்ட நிலைகளை சட்டமுறையாக உறுதிசெய்து அத்தகைய நிலைமைகளை உரியவாறு இற்றைப் படுத்துதல்.

7. ஆதிவாசிகளினதும் மற்றும் தனித்துவமான விடே அடையாளமுடைய மக்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் திருப்திகரமான ஒரு மக்கள் சமூகத்தைக் கட்டியெழுப்புதல்.

8. கலைஞர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

9. உள்நாட்டுக் கலை சார் ஆக்கங்களை சர்வதேச சமூகம் அனுபவிக்கும் வகையில் வாய்ப்பளித்து, வசதிகளை செய்து கொடுத்தல்.

10. தேசிய கலை சார் ஆக்கங்களைப் பாதுகாத்து, அவற்றை ஊக்குவித்து தரத்தில் உயர்ந்ததாக அவற்றை மக்கள் அனுபவிக்கக் கூடிய வகையில் வசதிகளை செய்து கொடுத்தல்.

11. இலங்கையில் உள்ள தொழில்பொருள் மதிப்புமிக்க மரபுரிமைகளை முகாமை செய்தல்.

1.3 விஷேட முன்னுரிமைகள்

1. மத்திய கலாச்சார நிதியத்தின் நிருவாகம் மற்றும் அது தொடர்பான கற்கைகளை மேற்கொண்டு மீள்கட்டமைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

2. கலாச்சார மற்றும் தொல்லியல் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் கலாச்சார மற்றும் தேசிய மரபுரிமைகளின் பெருமைகளை முதன்மையாகக்கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தேவையான ஒத்துழைப்பு வழங்குதல்

3. இனங்களுக்கிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காக கலாச்சார பங்களிப்பின் ஊடாக செல்நெறிகளை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

4. அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்துகின்ற தேசிய கொள்கைகளை கவனத்தில்கொண்டு புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம், நியதிச்சட்ட நிறுவனங்கள், மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் விடயங்களுக்கு ஏற்புடையதாக கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தொகுத்தல், நடைமுறைப்படுத்தல், பின்னாய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் மதிப்பிடல்.

5. வீண்விரயம் மற்றும் ஊழலை இல்லாதொழிக்கும் பொருட்டு அமைச்சின் கடமைப்பொறுப்புகள் நிறைவேற்றுவதை சான்றுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எல்லா முறைகளையும் விதிகளையும் சீரமைத்தல்


6. பௌத்த சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்

7. வரலாறு, தொல்லியல் மற்றும் கலாச்சார மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல்

8. நவீன மற்றும் சம்பிரதாய கலை படைப்புகளை மேம்படுத்தல் மற்றும் கலைஞர்களை ஊக்குவிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல்

9. நாடகம், சங்கீதம் மற்றும் நடனம் ஆகிய துறைகளின் மேம்பாட்டுக்கான செயற்பாடுகளை அயைடாளம் காணப்பட்டு செயற்படுத்தல்.

1.4 நிருவனக் கட்டமைப்பு



1.5 நிருவாக பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்

1. கிராமோதய ஜனகலா கேந்திரம்
2. காலு மரபுரிமை மன்றம்
3. தொல்லியல் திணைக்களம்
4. மலைநாட்டு மரபுரிமைகள் பாதுகாப்பிற்கான இடைக்கால நியதிச்சட்ட சபை
5. அபேகம
6. தேசிய அருங்கலைகளின் கலை நிலையம் (தாமரை தடாகம்)
7. மகிந்த ராஜபக்ஷ தேசிய றெலி சினிமா பூங்கா
8. டவர்ஹோல் திரையரங்கு மன்றம்
9. இலங்கை ரோயல் ஆசிய சங்கம்

1.1 நிருவாக பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் விபரங்கள் மற்றும் கடமைப்பொறுப்புகள்.

1.6.1 கிராமோதய ஜனகலா கேந்திரம்

அறிமுகம்

1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி கிராமோதய ஜனகலா கேந்திரம் ஆரம்பிக்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டு தொடக்கம் நடனம், சித்திரம், சிற்பம், இசை மற்றும் நாடகக் கலை போன்ற அழகியற் கற்கைநெறிகள் உள்ளடக்கப்பட்டன. தற்காலத்தில் நடனம், சங்கீதம் ஆகிய கற்கைநெறிகளின் பொருட்டு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்சார் கல்வி ஆணைக்குழுவினதும் தேசிய பயிலுநர் பயிற்றுவிப்பு அதிகார சபையினதும் அனுமதியுடன் தேசிய திறன்கள் 4,5 மற்றும் 6 ஆவது மட்டம் வழங்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சுடன் இணைந்து 13 ஆண்டுகள் சான்றுப்படுத்திய தொடர்ச்சியான கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அருங்கலைகள் விடயங்களை கற்கின்ற மாணவர்களுக்காக தொடர்ச்சியான கல்வி வாய்ப்புகளை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நோக்கங்கள்

1. நுண்கலைகளுடன் தொடர்புடைய நுட்பங்களை ஆராய்தல்
2. நுண்கலைகளுடன் தொடர்புடைய நுட்பங்களை பாதுகாத்தல்
3. நுண்கலைகளுடன் தொடர்புடைய நுட்பங்களை எதிர்கால சந்ததியினறுக்கு மாற்றுதல்
4. நுண்கலைகளுடன் தொடர்புடைய நுட்பங்கள் பற்றி சர்வதேச ரீதியிலான விழிப்புணர்வு

செயற்பணி

இலங்கையில் நுண்கலைகள் தொடர்பான பாரம்பரிய நுட்பங்களின் ஆய்வு, பாதுகாத்தல், அந்த அறிவை இனிவரும் தலைமுறையிடம் ஒப்படைத்தல் மற்றும் எதிர்கால கலைஞர்களை உருவாக்கும் பொருட்டு அறிவையும் சூழலையும் கட்டியெழுப்பி உலகம் முழுவதும் இலங்கையின் நுண்கலைகளுடன் தொடர்புடைய நுட்பங்களை பிரபல்யப்படுத்தல்.

பிரதான பணிகள்

1. உள்நாட்டு நுண்கலைகளை போற்றும் இளம் தலைமுறையை உருவாக்குதல்
2. கல்வி பொது தராதர (உயர்தர) பாடங்களில் அழகியற் பாடங்களை கற்பதற்காக
3. தூண்டுவித்தலை ஏற்படுத்தி நாட்டுக்கு தேவையான ஆக்கப்படைப்புடன் கூடிய தொழில் வல்லுநர்களை உருவாக்குவதற்கு பங்களிப்பு வழங்குதல்
4. நிறுவனத்தை சமூகமயமாக்குவதன் மூலம் அதிக பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடியுமாதல்

1.6.2 காலி மரபுரிமைகள் மன்றம்

அறிமுகம்

காலி மரபுரிமை அறக்கட்டளையானது 1994 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் சட்டப்பூர்வ அமைப்பாக நிறுவப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் யாதெனில், காலி கோட்டை மற்றும் அதன் வரலாற்றுக்கு பிந்திய நிலங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகும். இதுவரை பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இயங்கி வந்த காலி மரபுரிமை அறக்கட்டளை தற்போது புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குகிறது. மேலும், 1994 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க காலி மரபுரிமை அறக்கட்டளை சட்டத்தின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் "முகாமைத்துவ சபைக்கு" (சட்டத்தின் 05 ஆவது பிரிவின்படி) ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி, காலி மரபுரிமை அறக்கட்டளையின் முகாமைத்துவ சபையானது 26 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது, இதில் 14 உத்தியோகபூர்வ உறுப்பினர்கள், கௌரவ அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஆறு உறுப்பினர்கள் மற்றும் பதவிக்கால உறுப்பினர்களால் "தேர்ந்தெடுக்கப்பட்ட" ஆறு உறுப்பினர்களும் உள்ளனர். இந்த உறுப்பினர்களின் பதவிக்காலம் 02 வருடங்களாகும்.

காலி கோட்டைச் சுவர் 1971 இல் தொல்லியல் நினைவுச்சின்னமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டது மேலும், 1988 இல் யுனெஸ்கோ நிறுவனத்தால் உலக பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டது, அரசாங்கமும் பொதுமக்களும் அதிக கவனம் செலுத்தியதால், அதன் பாதுகாப்பு மற்றும் பேணலுக்காக காலி மரபுரிமை அறக்கட்டளையால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொலை நோக்கு

காலி கோட்டை தெற்காசியாவில் சிறந்த கோட்டை நகரமாகும்

செயற்பணி

கலாசார உலக மரபுரிமையாக அதன் சிறந்த உலகளாவிய பெறுமதியை பாதுகாக்கும் அதே வேளையில், சமூக பங்கேற்பு மரபுரிமை முகாமைத்துவ முறைமை மூலம் மிகவும் கவர்ச்சிகரமான கலாச்சார மரபுரிமை சுற்றுலாத் தலமாக காலி கோட்டை அதனைச் சார்ந்த நிலப் பகுதியின் நிலைபேண்தகு பாதுகாப்பினை உறுதி செய்தல்.

நோக்கங்கள்

1. வரலாற்று நகர நிலையமாகவும், தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகவும் காலி கோட்டை மற்றும் அதன் வரலாற்றுக்குப் பிந்திய நிலத்தையும் மேம்படுத்துதல், பாதுகாத்தல், பேணுதல், அபிவிருத்தி செய்தல்:

2. எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, காலி கோட்டை மற்றும் அதன் வரலாற்றுக்கு பிந்திய நிலப் பகுதியில் அமைந்துள்ளதும், வரலாற்று, கலாச்சார அல்லது அழகியற் கலை சார்ந்த பெறுமதியுள்ளதுமான ஏதேனும் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களை சுவீகரித்தல், பராமரித்தல், அப்புறப்படுத்தல்:

3. காலி கோட்டை மற்றும் அதன் வரலாற்று பின்னணியில் அமைந்துள்ள வீடுகள், கட்டிடங்கள் மற்றும் இதர சொத்துக்களையும் பாதுகாப்பதில், காலி கோட்டையில் வசிப்பவர்களின் ஆர்வத்தை ஊக்குவித்தல். மேலும் மேற்படி கோட்டை, அதன் வரலாற்று பின்னணியை பாதுகாத்தல், பேணுதல் தொடர்பிலும், குறித்த கோட்டையிலும் அதன் வரலாற்று பின்னணியின் வரலாறு, கலாச்சார தொல்லியல் மற்றும் அழகியற் துறைகள் தொடர்பிலும் குறித்த கோட்டையில் வசிப்பவர்களின் ஆய்வு மற்றும் அதே கோட்டையில் அமைந்துள்ள வீடுகள், கட்டிடங்கள் என்பன மீளமைத்தல், பழுதுபார்த்தல், பாதுகாத்தல், தரத்தை உயர்த்தல், இயல் நிலைக்கு கொண்டு வருதல் மற்றும் அதன் வரலாற்று பின்னணி மீண்டும் கட்டப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டு, கட்டிடங்களைப் பயன்படுத்துவதற்கான புதிய வழிகளைக் கண்டறிதல்:

4. காலி கோட்டை மற்றும் அதன் வரலாற்றுக்குப் பிந்திய நிலப் பகுதியில் பிரவேசித்து அதனை பார்வையிடுவதற்காக வசதிகளை அளித்தல்:

5. காலி கோட்டை மற்றும் அதன் வரலாற்றுக்குப் பிந்திய நிலப்பகுதியில் வசிப்பவர்களின் பொது நலனை மேம்படுத்துதல்:

6. மேற்கூறிய அனைத்து அல்லது எந்த நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான பிற செயற்பாடுகள் அல்லது விடயங்களை நிறைவேற்றுதல்:

முக்கிய செயல்பாடுகள்

1. விதிவிலக்கான உலகளாவிய பெறுமதியுடனான உலக பாரம்பரியச் சின்னமாக காலி கோட்டையின் அபிவிருத்திக்கு பங்களிக்கவும்.
2. காலி கோட்டையின் தனித்துவமான தொல்லியல் பெறுமதிகளைப் பாதுகாக்கும் அதே வேளையில் ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலா நகரத்திற்கு தேவையான வசதிகளை வழங்குதல்.
3. சமூகத்தின் கருத்துகளுக்கு மதிப்பளித்து தீர்மானங்களை மேற்கொள்ளும் போது, சமூகத்தின் பங்களிப்பையும் பெற்றுக்கொண்டு உலக மரபுரிமையாக காலி கோட்டையை பராமரித்தல்.
4. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களித்தல்

1.6.3 தொல்லியல் திணைக்களம்

அறிமுகம்

தொல்லியல் திணைக்களம் 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் மூலம் சட்டமாக்கப்பட்டுள்ளது. 1890 ஆம் ஆண்டு யூலை 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தொல்லியல் திணைக்களம் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆம் திகதியில் 132 ஆம் ஆண்டை நிறைவு செய்தது. இலங்கையின் தேசிய மரபுரிமைகளை சட்டரீதியாக அடையாளம் காணலும் தேசிய மரபுரிமைகளை பாதுகாத்தலும் முறையான நிர்வாகத்தை

மேம்படுத்துவதும் திணைக்களத்தின் முக்கியமான பணிகளாகும். குறித்த பணிகளை எய்துக்கொள்வதற்காக, 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தொல்லியல் (திருத்தம்) சட்டத்தால் தேவையான சட்ட ஏற்பாடுகளை செய்யப்பட்டுள்ளது. தொல்லியல் திணைக்களத்தின் தற்போதைய செயற்பாடுகள் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் உள்ளது.

குறிக்கோள்கள்

மேற்படி செயற்பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்கின்ற சில குறிக்கோள்கள் பின்வருமாறாகும்

1. வளங்களை மேம்படுத்துதல்.
    I. மனித
    II. நிறுவனம்
2. ஒட்டுமொத்த தொல்லியல் மரிபுரிமைகளின் பாதுகாப்பு.
3. தொல்லியல் மரபுரிமைகளை ஆவணப்படுத்துதல்.
    I. தளங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள்
    II. அசையும் கலைப்பொருட்கள்
4. தொல்லியல் மரபுரிமை பற்றிய பொது மக்கள் விழிப்புணர்வை ஊக்குவித்தல்.
5. தொல்பொருள் தளங்கள்/நினைவுச் சின்னங்கள் மற்றும் அசையும் கலைப்பொருட்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு.
6. ஆராய்ச்சி.

தொலைநோக்கு

மொத்த தொல்லியல் மரபுரிமைகளை நன்கு நிர்வகித்து அவற்றை எதிர்கால சந்ததியினருக்கு கொடையாக வழங்குதல்

செயற்பணி

இலங்கையின் தொல்லியல் மரபுரிமை முகாமைத்துவத்தின் பொறுப்புகளை வகிக்கும் உயர்மட்ட நிறுவனமாகவும் அதன் பிரதான ஒழுங்குபடுத்தல் நிறுவனமாகவும் செயற்படல்

முக்கிய செயற்பாடுகள்

1. இலங்கையின் தொல்லியல் மரபுரிமைகளை அடையாளம் காணுதல்.
2. இலங்கையின் அசையும் மற்றும் அசையாத தொல்லியல் மரபுரிமைகளை ஆவணப்படுத்துதல்.
3. தொல்லியல் மரபுரிமையை ஒழுகலாறுடன் பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் பேணுதல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
4. தொல்லியல் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
5. கலாச்சார சொத்து சட்டத்தை செயல்படுத்துதல்.
6. தொல்லியல் இடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்களை பொதுமக்களிடம் சமர்ப்பித்தல்.
7. பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தும் போது தொல்லியல் பெறுமதியுடன் கூடிய இடங்களுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பாக, சேத மதிப்பீடு கணக்கெடுப்புகளை மேற்கொள்ளுதல்.

1.6.4 மலைநாட்டு மரபுரிமைகள் பாதுகாப்பிற்கான இடைக்கால நியதிச்சட்ட சபை

அறிமுகம்

2020/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "மலையக மரபுரிமை" என்ற தலைப்பில் ஒரு விடயத்தை நிறுவப்பட்டதுடன், அதன் விடயவெல்லையாக ''மலையக மரபுரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்'' குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்காக 2017.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு 2017.08.18 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மலையக மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான இடைக்கால நியதிச்சட்ட சபை உத்தியோகபூர்வமாக 2018 மார்ச் 02 ஆம் திகதி நிறுவப்பட்டது.

தொலைநோக்கு

''மரபுரிமைகளைப் பாதுகாத்துக்கொண்டு சுபீட்சத்தை நோக்கி''

செயற்பணி

மலையக மரபுரிமைகளுக்கு உரித்தான சமூகப் பொருளாதார கலாச்சார மரபுரிமைகளை அடையாளம் காணுதல், எதிர்கால சந்ததியினறுக்கு அதனை வழங்குவதற்குப் பங்களித்தல், காலத்திற்குப் பொருத்தமான வகையில் பயன்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி ஊடாக சமூகப் பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் செயற்பாடுகளைத் திட்டமிடுதல் மூலம் நிலையான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.

குறிக்கோள்கள்

1. மலைநாட்டு மரபுரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தலுக்கு ஏற்புடையதாக கருத்திட்டங்களை அடையாளம் காணுதல், திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் செயற்படுத்தல்.
2. வரலாற்றுத் தளங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்
3. பாரம்பரிய மலையக கிராமிய பொருளாதாரத்திற்கு பெரிதும் பங்களிக்கும் கிராமிய குளங்கள் மற்றும் நீர்ப்பாசன முறைகளை மேம்படுத்துதல்.
4. பாரம்பரிய பழைய கிராமங்களில் தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை மற்றும் உருக்கு தொழில்களை மேம்படுத்துதல் மற்றும் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.
5. பாரம்பரிய தொழில்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.
6. பாரம்பரிய கிராமத்தின் வளர்ச்சி.
7. பாரம்பரிய கலைகள் மற்றும் கலைஞர்களின் ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பலை ஏற்படுத்தல்

முக்கிய செயற்பாடுகள்

1. மலையக மரபுரிமைகள் அதிகாரச் சட்டத்தின் வரைவு மற்றும் பாராளுமன்றத்தில் அங்கிகரித்துக்கொள்ளுதல்
2. மலையக மரபுரிமைகள் அதிகாரப் பிரதேசத்தின் மக்களது பொருளாதாரம், சமூக மற்றும் கலாச்சார மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல்.
3. வரலாற்று தளங்களின் மறுசீரமைப்பு மற்றும் பாரம்பரிய கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள், மலையகத்தில் அழிந்து காணப்படும் விகாரைகள், கோவில்கள் மற்றும் பன்சலைகள் என்பவற்றை புனரமைத்தல்
4. பாரம்பரிய மலையக நடனங்கள் மற்றும் நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாத்தல்
5. பாரம்பரிய பழைய கிராமங்களில் தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை மற்றும் உருக்கு தொழில்களை மேம்படுத்துதல் மற்றும் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.
6. மலையக பாரம்பரிய ஆடைகள், கைவினைப் பொருட்கள் போன்றவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில்துறையினரைப் பாதுகாத்தல் மற்றும் சந்தை வாய்ப்புகளை வழங்குதல்
7. லாக்ஷா தொழில், தளவாடங்களின் தயாரிப்புகள், மூங்கில், பருத்தி மற்றும் ஆளி பொருட்களின் உற்பத்தி நுட்பங்கள் மற்றும் உற்பத்திகளை பாதுகாத்தல், சந்தையினை வலுப்படுத்தல்.

1.6.5 அபே கம

அறிமுகம்

கொழும்பு மாவட்டத்தின் பத்தரமுல்ல, பெலவத்தை பிரதேசத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 13 ஏக்கர், 03 மரங்கள், 25.1 பேர்ச்சஸ்களில் அபே கம கண்காட்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இது மத்திய கலாச்சார நிதியத்தின் திட்டமாக ஆரம்பம் தொடக்கம் நிருவகிக்கப்பட்ட போதும், 2187/27 ஆம் இலக்க மற்றும் 2020.08.09 ஆம் திகதிய மற்றும் 2202/25 ஆம் இலக்க 2020.11.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிமூலம் இந்த அமைச்சகத்தின் வரம்புக்கு மாற்றப்பட்டது. 2021.04.01 முதல் தேசிய மரபுரிமை, அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கியது. அதன் பின்னர் 22.07.2022 தேதியிட்ட 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம், மீண்டும் புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்றது.

தொலைநோக்கு

இலங்கையில் தரமான உள்நாட்டு பொருட்களை விற்பனை செய்வதில் முதன்மையாளராக செயற்படல

செயற்பணி

அனைத்து வகையான உள்ளூர் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரம் பாதுகாக்கும் வகையில் சந்தைப்படுத்தலின் ஊடாக, வணிக ரீதியாக சாத்தியமான மற்றும் சமூக பொறுப்பு வாய்ந்த ஒரு முன்னணி தொழில்முயற்சியாதல்

குறிக்கோள்கள்

1. அபே கம வளாகத்தை முழுவதுமாகவோ அல்லது தனியாகவோ வாடகைக்கு விடல்
2. பழமையான கிராமத்தை பார்வையிடுவதற்கு வாய்ப்பு வழங்குதல்.
3. பாரம்பரிய உள்ளூர் உணவுகளை சந்தைப்படுத்துதல்
4. பாரம்பரிய கைவினைப் பொருட்களின் சந்தைப்படுத்தல்
5. உள்ளூர் கலாச்சார அம்சங்களை உள்ளடக்கிய சேவைகளை வழங்குதல்
6. புதிய சூழலை அனுபவிப்பதற்கு தேவையான வசதிகளை வழங்குதல்
7. பாரம்பரிய கைவினை முறைகளின் செயல்விளக்கம்
8. கல்வி சேவைகளை வழங்குதல்

1.6.6 தேசிய அருங்கலைகளின் கலை நிலையம் (தாமரைத் தடாகம்)

அறிமுகம்

இலங்கை அருங்கலைகள் தொடர்பில் சுமார் 2500 ஆண்டுகால வளமான வரலாற்றைக் கொண்டுள்ளது. பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்ற அருங்கலைகள், பிராந்திய மற்றும் தோற்றங்களின் அடிப்படையில் தனித்துவமான பண்புகளை வெளிப்படுத்துகின்றன. இது பண்டைய காலம் முழுவதும் அரச ஆதரவைப் பெற்றுள்ளது. அருங்கலைகள் துறையின் முன்னேற்றத்திற்கு அரசின் ஆதரவு அவசியம். இந்த நோக்கத்தை மனதில் கொண்டு இலங்கை அரசாங்கம் அருங்கலைகள் நிலையத்தை நிறுவுகிறது. இது இலங்கை கலைஞர்கள் பல வருடங்களாக கண்ட கனவாகும். தற்போது நனவாகியுள்ள இக்கனவு இலங்கைவாழ் மக்களின் கலை கலாசாரத்தை போற்றுவதற்கு மிகவும் பொருத்தமான இடமாக அமையும். இந்த திரையரங்கம், பல்வேறு இனக்குழுக்கள் உள்ளூர் கலை நிகழ்ச்சிகளைப் பரிமாறிக்கொள்வதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான புகலிடமாக திகழ்கின்றது.

தொலைநோக்கு

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இலங்கையின் அருங்கலைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்காக அருங்கலைகளின் படைப்பாளர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் உயர்தரத்திலான அருங்கலைகள் தொடர்பான கலை அனுபவங்களைப் பெறுவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குவதற்கு வசதிகளை வழங்குதல்.

செயற்பணி

இலங்கையின் அருங்கலைகள் தொடர்பான எண்ணக்கருவை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் அருங்கலைகள் துறையின் மேம்பாட்டிற்காக அதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், அருங்கலைகள் துறையின் முன்னேற்றத்திற்காக சர்வதேச ஒத்துழைப்பை விருத்தி செய்தல்

1.6.7 மஹிந்த இராஜபக்ஷ தேசிய நெலி சினிமா பூங்கா

அறிமுகம்

இந்த மஹிந்த ராஜபக்ஷ தேசிய நெலி சினிமா பூங்கா திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் 235 ஏக்கர் நிலப்பரப்பில் நெலி சினிமா துறைக்கு தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய முழுமையான படப்பிடிப்பு பூங்காவாக நிருமாணிக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் முதல் கட்டம் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதியன்று 2010 அன்று அதிகாரப் பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இலங்கையின் கலைத்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு தரப்பினரின் வேண்டுகோளின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட இந்த பூங்காவிற்கு தேவையான ஆரம்ப நிதியானது, வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு உரையாடல்களை பதிவு செய்யபட்டதன் பின்னர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட தொலைகாட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட வரிப்பணத்தால் பெறப்பட்டது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பாளர்களுக்கு கலையகங்கள், காட்சி பின்னணிகள் மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குவதன் மூலம், இந்த நாட்டின் நெலி சினிமா தொழில் துறையின்

முன்னேற்றத்திற்கு மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசிய பணியாக அரசாங்கத்தால் இதனை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மேலும் அந்த தேவையை பூர்த்தி செய்வதற்காக இந்த பூங்கா நிறுவப்பட்டது.

தொலைநோக்கு

கலையால் வளர்க்கப்பட்ட சமூகம்

செயற்பணி

மக்கள் நேயத்துடன்கூடிய அபிவிருத்திக்கு நெகிழ்வான, சகல கலைகளிலும் வளர்ச்சியடைந்த கலாச்சாரத்தை எதிர்கால சந்ததியினறுக்கு வழங்குதல்

குறிக்கோள்கள்

1. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சினிமா மற்றும் றெலி சினிமா படைப்பாளர்களிடம் திரையரங்குகள், காட்சி பின்னணிகள் மற்றும் தங்குமிடங்கள் போன்ற வசதிகளை வழங்கி றெலி சினிமா தொழிலில் மேம்பாட்டுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2. தேசிய றெலி சினிமா பூங்காவை பார்வையிடுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அறிவு, பொழுதுபோக்கு மற்றும் அனுபவத்தை வழங்கக்கூடிய இடமாக செயற்படுதல்.

3. இலங்கையின் கலை, கலாச்சாரம், நாடகக் கலை, சினிமா, றெலி தயாரிப்புகள், வணிகத் தயாரிப்புகள், தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்களில் ஒளிபரப்புவதற்கு கருதுகின்ற எந்தவொரு வகையிலுமான கலை தயாரிப்புகளையும் மேம்படுத்துதல்.

4. நிறுவனத்தால் வழங்கப்படும் இடங்களை பயன்படுத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கலைஞர்களும் தயாரிப்பாளர்களும் மேற்கொள்கின்ற சினிமா, நாடகம், றெலி படைப்புகள், வர்த்தக தயாரிப்புகள் போன்ற துறைகளில் தயாரிப்புகளை மேம்படுத்துதல்.

5. கலை மற்றும் வர்த்தக தயாரிப்பு நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி மற்றும் கல்வியை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட தொழில்நுட்பம், தொழில்நுட்ப அறிவு மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றின் விநியோகத்திற்காக நிறுவனத்தின் தற்போதைய வளங்களைப் பயன்படுத்தி வசதிகளை அளித்தல்

6. மேலே கூறப்பட்ட நோக்கங்களை செயல்படுத்தவும் பாதுகாக்கவும் பூங்காவின் வளங்களை சிறந்த வகையில் பராமரித்தல் மற்றும் வினைத்திறனுடன் பயன்படுத்தல்.

7. மேற்கூறிய முதன்மை நோக்கங்களுக்கு மேலதிகமாக, தற்போதுள்ள வசதிகள், வளங்கள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களை நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக பயன்படுத்துதல் மற்றும் அதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வருமானத்தை ஈட்டுதல்.

முக்கிய செயல்பாடுகள்

1. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொலைக்காட்சி படைப்புகளுக்கு தேவையான காட்சி பின்னணி வசதிகள், தரத்துடன் கூடிய தங்குமிட வசதிகள் மற்றும் கலையக வசதிகளை வழங்குவதன் மூலம் வருமானத்தை ஈட்டுதல்.

2. பார்வையாளர்களுக்கு நுழைவுச் சீட்டுகளை வழங்குதல், உள்ளக சுற்றுலாக்களின் பொருட்டு கொல்ப் கார்ட் வண்டி வசதிகளை வழங்குவதன் மூலம் வருமானம் உற்பத்தி செய்தல்

3. விரிவுரை மண்டப வசதிகளை வழங்குதல்.

4. வர்த்தக தயாரிப்புகள், திருமணத்திற்கு முந்தைய புகைப்படப்பிடிப்புகள் மற்றும் வீடியோக்களுக்கான பின்னணி காட்சிகளை வழங்குவதன் மூலம் வருமானம் ஈட்டுதல்.

5. சிற்றுண்டிச்சாலை வசதிகளை வழங்குதல்.

1.6.8 டவர் ஹால் தியேட்டர் அறக்கட்டளை

தொலைநோக்கு

இலங்கையின் தேசிய நாடக நிலையமாக உருவாகி, தரமான நாடக மற்றும் நாடக கலை கலாச்சாரத்தை உருவாக்குவதில் முன்னோடி நிறுவனமாக செயற்படல்

செயற்பணி

இலங்கையில் தரமான நாடக மற்றும் நாடக கலை கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் பங்களிப்பு வழங்குதல், அதற்கு தேவையான அறிவு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், நவீன உலகளாவிய நாடக மற்றும் நாடக கலை பயன்பாட்டில் புதிய அனுபவம், தொழில்நுட்பம் மற்றும் அறிவைப் பெறுவதற்குத் தேவையான புதிய பாதைகளை உருவாக்குதல், நாடகம் மற்றும் நாடக கலாச்சார ஆக்கப்படைப்பாளர்களை ஊக்குவிக்கப்பட்டு நாட்டின் அபிவிருத்திக்காகவும் மனித குலத்தின் நலனுக்காகவும் அவர்களைப் படைப்பாற்றலில் ஈடுபடத் தூண்டுவித்தல்.

குறிக்கோள்கள்

1. தரமான நாடகம் மற்றும் நாடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் பங்களித்தல்.

2. நூற்றாண்டை நிறைவு செய்துள்ள டவர் ஹோல் அறக்கட்டளையை இலங்கை நாடக கலையில் தேசிய அடையாளமாக தாபித்தல்.

3. உலகளாவிய ரீதியில் இலங்கையை ஒரு முக்கிய மையமாக உருவாக்குவதற்கு பங்களிப்பு வழங்குவதற்காக தேசிய நாடகம் மற்றும் நாடக கலை துறையின் மேம்பாட்டுக்கு

தேவையான கோட்பாட்டு ரீதியானதும் செய்முறை ரீதியானதுமான அறிவை முழுநேர காலத்திற்கு வழங்கும், முழுமையான நாடக மற்றும் நாடகக் கலை பாடசாலையை தாபித்து அதன்மூலம் அந்த துறையில் நிபுணர்களை உருவாக்குதல்.

4. தலைநகரத்தில் போன்று வெளியிலும் நாடகங்களை பார்வையிடும் பார்வையாளர்கள், இணையான வகையில் ரசிப்பதற்கு ஏற்ற வகையில், நவீனத் தேவைகளுக்கு பொருந்துகின்றவாறு நாடு முழுவதும் நவீனமயப்படுத்திய திரையரங்குகளின் வலையமைப்பை நிறுவுதல்.

5. சிறந்த வகையிலான நாடகக் கலைஞர்களுக்கு உயர்தர நாடகங்களைத் தயாரித்து, காட்சிப்படுத்த நிதியுதவி மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

6. இலங்கையின் பாரம்பரிய உள்ளூர் நாடக கலையில் பாதுகாக்கப்பட வேண்டிய படைப்பாளிகளின் ஆக்கப்பூர்வமான பாகங்கள், உடைகள், உபகரணங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் அந்த வடிவமைப்பாளர்களின் தகவல்கள், நினைவுப் பொருட்கள், அவர்களின் படைப்புகளை திரட்டியுள்ள குறுந்தகடுகள், நாடாக்கள், இலத்திரனியல் மற்றும் புலனாகாத மரபுரிமைகளை எதிர்கால சந்ததியினரின் பொருட்டு பாதுகாத்தல் மற்றும் பேணுதல்.

7. நாடகம் மற்றும் நாடகக் கலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக, அவர்களின் ஆக்கப்பூர்வமான பணிகளில் விரிவான பணிகளைச் செய்த மூத்த கலைஞர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களை உருவாக்குதல், அவர்களை வயதாகும்போது கவனித்துக் கொள்ளுதல், அவர்களை ஊக்குவிப்பதற்காக ஊக்குவிப்புத் தொகை வழங்குதல் மற்றும் பராமரிப்பு சேவைகளை மேற்கொள்ளுதல்

8. சர்வதேச நாடக நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதியாக, குறித்த நிறுவனம் மற்றும் பிற நாடுகளுடன் சர்வதேச உறவுகளைப் பேணுவது மட்டுமல்லாது நாடகம் மற்றும் நாடகத துறையின் புதிய போக்குகள் மற்றும் அது தொடர்பான புதிய தொழில்நுட்ப அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதற்கும் ஆராய்ச்சிப் பணிகளுக்கும் எமது படைப்பாளர்களை ஊக்குவித்தல்.

9. நாடகம் மற்றும் நாடக கலையில் உள்ள படைப்பாளர்களின் கேந்திரமாக தேசிய நாடக நூலகம், தேசிய நாடக அருங்காட்சியகம், தேசிய நாடகக் காப்பகம், பயிற்றுவிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், அறிவைப் பரப்புவதற்காக தகைமைகளைக் கொண்டுள்ள தேசிய நாடக நிலையமொன்றை உருவாக்குதல்.

10. நாடகம் மற்றும் நாடகக் கலை அனைத்து மக்களினதும் நல்லிணக்கத்தைப் பேணும் கருவியாக பயன்படுத்தி இலங்கையின் மனித வளத்தை அறிவார்ந்த மக்களாக அபிவிருத்தி செய்வதற்கு பங்களித்தல்.

அத்தியாயம் 02

முன்னேற்றமும் எதிர்கால நோக்குகையும்

தேசிய மரபுரிமை பிரிவின் விசேட அடைவுகள் - 2022 ஆம் ஆண்டு

1.1 தேசிய மரபுரிமை பிரிவால் செயற்படுத்திய நிகழ்ச்சித்திட்டங்கள்.....

தேசிய மரபுரிமை பிரிவின் பொறுப்பு யாதெனில், "தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் கலை என்பவற்றை தரத்தில் உயர்ந்ததாகப் பேணிச் செல்வதற்கு உரிய அந்தந்த சட்டதிட்டங்களுக்கும் மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கும் இணங்க கலாச்சாரம், தேசிய மரபுரிமைகள், அருங்கலை, கிராமிய கலை என்பவற்றின் ஊக்குவிப்பு விவகாரங்கள் சம்பந்தமான கொள்கைகளை ஆக்குவதற்கு உதவுவது, தேசிய வரவுசெலவுத்திட்டம், தேசிய முதலீட்டுத் திட்டம் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் என்பவற்றின் கீழ் காணப்படும் கருத் திட்டங்களை செயற்படுத்தலாகும். பல நிகழ்ச்சித் திட்டங்களும் பல கருத் திட்டங்களும் நேரடியாக தேசிய மரபுரிமை பிரிவால் செயற்படுத்தப்படுகிறது. 2022 ஆம் ஆண்டின் நிமித்தம் ஒதுக்கப்பட்டிருந்த மிக மட்டுப்பட்டளவான நிதியேற்பாடுகளை உச்ச வினைத் திறன் வாய்ந்ததாகப் பயன்படுத்தப்பட்டது.



❖ **தேசிய மரபுரிமைகளை ஊக்குவிப்பதற்கான டிஜிட்டல் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தி அதன் ஊடாக மறுமலர்ச்சியை ஏற்படுத்துதல்.....**

இலங்கையில் காணப்படுகின்ற கட்புலனாகும் மற்றும் கட்புலனாகாத (Tangible & Intangible) தேசிய மரபுரிமைகளை உள்நாட்டு வெளிநாட்டு பிரஜைகளுக்கு மிகவும் கவர்ச்சிகரமாக மற்றும் வினைத்திறன் வாய்ந்த விதத்தில் அனுபவிக்கக் கூடியவாறு ஏற்பாடு செய்வதன் ஊடாக தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல், பாதுகாப்புக்கும் கூற்றுலாவுக்கும் வழிகாட்டுதல் என்பன நோக்கமாகக்கொண்டு இந்தக் கருத் திட்டம் நடைமுறைப்படுகிறது. இந்தக் கருத்திட்டத்தின் கீழ்,

- தேசிய மரபுரிமை இடங்களின் மீது உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவர்ச்சியினைப் மேம்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் ஒதுக்கீடுகளிலிருந்து 30 வீடியோ நாடாக்களை சுற்றுலாப் பயணிகளுக்கிடையில் பிரபல்யப்படுத்துவதற்கு பின்வரும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.
  - இலங்கை சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகாரசபை
  - இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை

- அதே போன்று இந்த 30 வீடியோ நாடாக்களை ரஷ்யாவின் இலங்கை தூதரக அலுவலகத்திடம் வழங்கியதுடன், குறித்த அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட முறையான நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் சுற்றுலாத் தொழிலை மேம்படுத்துவதற்காக தற்போது பயன்படுத்தப்படுகிறது.

- கட்புலனாகும் மற்றும் கட்புலனாகாத (Tangible & Intangible) தேசிய மரபுரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக டிஜிட்டல் உள்ளீட்டு சாதனத்தினுள் (Digital App) உள்ளீர்ப்பதற்கு தேவையான பின்வரும் தேசிய மரபுரிமைகள் உள்ளடக்கிய 22 வீடியோ நாடாக்களை 2022 ஆம் ஆண்டின் ஒதுக்கீடுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

    - ஸ்ரீ தலதா மாளிகை
    - பொலன்னருவை கல் விகாரை
    - பொலன்னருவை சிவன் சிலை
    - அநுராதபுரம் சமாதி புது பிளிமய
    - சந்திர வட்டக் கல்
    - குட்டம் பொக்குண
    - ரிட்டிகல
    - தம்புளு விகாரை
    - களனிய
    - அம்பெக்கே தேவாலயம்
    - திருகோணமலை கோனேஸ்வரம் தேவாலயம்
    - மிகிந்தலை
    - கலாவெவ
    - சோமாவத்தி சைத்திய
    - காலி கோட்டை
    - நாமல் உயன
    - கத்தலுவ பூர்வாராமய
    - இசுருமுணிய
    - சமுத்திர தொல்லியல் நூதனச்சாலை
    - யாபஹுவ
    - சித்துல்பவ்வ
    - ஓவியங்களின் நூலகம்
    - தேசிய மரபுரிமை பிரதி நிலையம


இந்தக் கருத்திட்டம் பொருட்டு ரூபா.மில்லியன் 5.5 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

❖ 'கலைஞர்களுக்கான தரவு முறைமை தயாரித்தல்.....

பல கலைத் துறைகளுக்குரிய கலைஞர்களினதும் கலை நிபுணர்களினதும் தகவல்கள் உள்ளடங்கிய ஒரு தரவு முறைமை இல்லாமையானது, இந்த நாட்டுக் கலைத் துறையில் இருந்த ஒரு பாரிய குறைபாடாகும். இத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக எமது அமைச்சின் ஒதுக்கீடுகளை பயன்படுத்தி தற்போது கலைஞர்களின் தரவு முறைமை உருவாக்கப்பட்டது. கலைஞர்களின் தரவு முறைமை பொருட்டு இயங்கலை (Online) ஊடாக கலைஞர்கள் பதிவாகுவதற்கு தயாரிக்கப்பட்ட அறிவிப்பு பத்திரம் அமைச்சின் உத்தியோகபூர்வ இணைய தளம் மற்றும் உத்தியோகபூர்வ முகநூல் facebook பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த அறிவிப்பு பத்திரம் அச்சிடப்பட்டு, அனைத்து பிரதேச செயலகங்கள், ஏனைய அரச நிறுவனங்கள், கலாச்சார நிலையங்கள், கலை நிறுவனங்கள் மற்றும் தெரிவு செய்யப்படுகின்ற கிராம அலுவலர் அலுவலகங்களில் அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்துவதற்கு தேவையான ஒதுக்கீடுகள் நாட்டில் எல்லா மாவட்ட செயலகங்களிடமும் விடுவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 3500 இற்கும் அதிகமான கலைஞர்களை இயங்கலை முறையில் (online) பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கருத்திட்டம் பொருட்டு ரூபா.மில்லியன் 1 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.






❖ කලைஞர்களுக்கான Digital App ஐ தயாரித்தல்.....

கலைஞர்களின் தரவு முறைமைக்கு இணையாக கலைஞர்களுக்கான விசேட Mobile App தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் கலைஞர்களின் கலை படைப்புகளைப் பிரச்சாரப்படுத்தல் மற்றும் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த Mobile App பொருட்டு தரவு முறைமையில் பதிவாகியிருக்கும் கலைஞர்கள் மட்டுமே கையாள்வதற்கு முடியும். ஆகையால் நாடு முழுவதும் காணப்படுகின்ற அனைத்து கலைஞர்களையும் இந்த தரவு முறைமையில் பதிவு செய்தலானது, தேசிய நிகழ்ச்சித்திட்டம் மட்டுமல்ல அந்த கலைஞர்களுக்கும் தனிப்பட்ட நலன்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமாகும். இங்கு பதிவாகும் கலைஞர்களுக்கு டிஜிரல் அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் அதன்மூலம் பல்வேறு நலனோம்பல் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.





❖ ஆதிவாசிகள்/ விஷேட தனித்துவ அடையாளம் உடைய மக்களை பாதுகாப்பதற்கான சேவைகளை நடாத்துதல்.....

இலங்கையில் வாழ்கின்ற ஆதிவாசி/விசேட தனித்துவமுள்ள மக்களுக்காக நாம் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்பவற்றையும் நாம் புரிந்துக்கொண்டுள்ளோம். அதன்படி அவர்களின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு பல விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

1. ஆதிவாசிகள் பொருட்டு மரபுரிமைகளைப் பாதுகாத்தல் அத்தியாவசிய காரணியாவதால், தேசிய மரபுரிமை பிரிவில் விசேடமான தனித்துவத்துடன் கூடிய மக்களது மரபுரிமைகள் பாதுகாக்கும் அலகு தாபிக்கப்பட்டது.
2. ஆதிவாசீ மக்களின் பாதுகாப்பு நடவடிக்கை சேவைகளுக்காக தளுகான ஆதிவாசி கிராமத்தில், கள கற்கை சுற்றுலா மூலம் ஆண்மீக நிகழ்ச்சிகளை நடாத்தல் மற்றும் பாடசாலை பிள்ளைகளின் பொருட்டு பாடசாலை உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
3. உலக ஆதிவாசி தினம் கொண்டாடுதல் மற்றும் வருடாந்த ஹெத்ம சாந்தி நடாத்தல்
4. பாஹியன்கல மானிட எலும்புக் கூடுகளுக்கான விசேட இயந்திரம் ஜெர்மனியில் பெற்றுக்கொள்வதற்காக நூலகத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் மற்றும் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் விடயம் தொடர்பாக தேர்ச்சிப்பெற்றவர்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படினும், அந்நியச் செலாவணி பிரச்சினைகள் காரணமாக கொள்வனவு செய்தலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அந்தப் பணி 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

இந்தக் கருத்திட்டம் பொருட்டு ரூபா.மில்லியன் 5.5 ஆன ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஆதிவாசி மற்றும் தனித்துவ அடையாளங்களைக் கொண்டுள்ள மக்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் திருப்திகரமான மக்கள் சமூகமாக மாற்றுதல் இதன் அடிப்படை நோக்கமாகும்.





❖ கலைஞர்கள் தொடர்பான அவசர விபத்து மற்றும் மருத்துவக் காப்புறுதித் திட்டம்....

இந்த நாட்டில் கலைத் துறையைப் பிரதிநிதிப்படுத்துகின்ற பல வகை கலைஞர்களுக்கு நிரந்தர வருமான வழிகள் கிடையாது. அநேகமான கலைஞர்கள் அவர்களின் ஜீவனோபாயத்தை மிகவும் கஷ்டமான முறையில் சமாளித்துக் கொள்கின்றனர். ஆயினும் சில கலைஞர்கள் நீண்ட காலமாக தமது வாழ்க்கையில் ஏற்படும் பாதுகாப்பற்ற நிலைமை மத்தியிலும் கலைக்காக பாரிய கடமைப்பொறுப்புகளை ஆற்றுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாகும். அத்தகைய சூழலில் கலைதுறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் கலைஞர்கள் கலையின் மீது காட்டுகின்ற ஆர்வம் குறைவடைதலானது கலை துறைக்கு ஏற்படும் பாரிய நட்டமாகும். ஏனெனில் இந்த நாட்டின் கலாச்சாரம் மற்றும் கலைகளுக்கிடையில் காணப்படும் பரஸ்பர உறவுக்காக அது நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தும்.

அத்தகைய ஒரு நிலையிலுள்ள இந்த கலைஞர்கள் நிமித்தம் திடீர் விபத்து மற்றும் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துவது தற்போது ஒரு அத்தியாவசிய தேவையாகும். இந்த நாட்டின் மொத்த சனத் தொகையில் அரச மற்றும் தனியார் துறை சேவைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு காப்புறுதி முறைமை அறிமுகப்படுத்தியிருப்பினும், கலைஞர்களுக்காக புறம்பான காப்புறுதி திட்டம் அறிமுகப்படுத்தப்படவில்லை. 550 கலைஞர்களுக்கு மருத்துவ மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக கலைஞர்களின் பொருட்டு திடீர் விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதி திட்டம் அறிமுகப்படுத்தல் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியது. அதன் பிரகாரம் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 550 கிராமிய கலைஞர்களுக்கு காப்புறுதி வழங்கப்பட்டது. அதேபோன்று 2022 ஆம் ஆண்டில் நலன்கள் வழங்குதல் ஆரம்பமாகியதுடன், ஒட்டுமொத்த பயன்பெறுநர்களில் 41 பேர் பொருட்டு ரூபா. 3437439.43 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளது.





❖ காலி மரபுரிமைகள் மன்றம்

காலி மரபுரிமை மன்றத்தால் ஒருங்கிணைப்பு உதவி வழங்கியுள்ள சில விசேட கருத்திட்டங்கள் பின்வருமாறாகும்.

1. நெதர்லாந்து நிதி உதவியின் கீழ் காலி கோட்டையில் பழைய 55 வீடுகளை பாதுகாத்தல்
2. பழைமையான மணிக்கூண்டு தூண் பாதுகாக்கப்படுதல்
3. பழைமையான மணிகூண்டு (The clock Tower) தூண் பாதுகாக்கப்படுதல்
4. பழைமையான கரிக் களஞ்சியம் பாதுகாக்கப்பட்டு தகவல் நிலையமாக்குதல்
5. பழைமையான ஆயத அறை பாதுகாக்கப்பட்டு நூதனச்சாலையாக்குதல்
6. காலி கோட்டையில் இரண்டு மலசலகூட முறைமை நிருமாணித்தல்
7. காலி கோட்டையின் பொது கரையோரத்திற்கு, பொது வசதிகள் வழங்குதல்
8. பழைய வெடி மருந்து ஆலை கட்டிடம் பாதுகாக்கப்பட்டு அலுவலக வளாகம் தாபித்தல்
9. பழைய பொலிஸ் உத்தியோகபூர்வ கட்டிடம் பாதுகாக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தல்
10. க்ளிபர்ன்பர்க் ஆயத அறை பாதுகாக்கப்பட்டு வர்த்தக ரீதியாக பயன்படுத்தல்
11. காலி கோட்டையில் பழைய வீதி விளக்கு முறைமை பழுதுபார்க்கப்படுதல்
12. வீதி அபிவிருத்தி அதிகார சபையால் காலி கோட்டையில் கற்கள் பதித்து அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல்
13. உலக வங்கி கருத்திட்டத்தின் கீழ் கேட்டை மதில் பாதுகாப்பு கருத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.





❖ மலைநாட்டு மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான இடைக்கால நியதிச் சட்டசபை

1. ஊவா பரணகம, கொரதேகும்புர கிராமம், அங்கம்பொர தற்காப்பு கலை, பாதுகாக்கப்பட்ட கிராமமாக மேம்படுத்தல் மற்றும் அங்கம்பொர தற்காப்பு கலையை ஊக்குவித்தல்.
2. ஸ்ரீ சங்கபோதி பிரிவென, தம்மசித்தயாராமய, புரிஜ்ஜல, மாத்தளை பிரிவெனாவில் பழைய பனையோலை ஏடுகளை பாதுகாப்பதற்காக நூலக வசதிகளை வழங்குதல் (உக்குவெல)
3. மினிபே உடகலதெபொக்க பாரம்பரிய கிராமம், வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உடகலதெபொக்க பாரம்பரிய கிராமம் மின்சார பம்பயா உபகரணங்களை வழங்குதல்.
4. கொத்மலை பிரதேச செயலக அலுவலகத்தில் வரலாற்று கால நூதனச்சாலை பொருட்கள் உள்ள பாதுகாப்பான நூதனச்சாலையை மறுசீரமைத்தல்
5. ஹாலிஎல சம்பிரதாய குழாய் கைத்தொழில் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
6. பதியதலாவ பதியதொர ஸ்ரீ மகாபோதி விகாரையின் வேலியை மறுசீரமைத்தல் - வளாகுளு மதில்
7. மினிபே பிரதேச செயலகப் பிரிவில் புலத்வெல்கந்துர அரிசி, குரக்கன் அடங்கலாக தானிய மா உற்பத்தி கிராமம், தானியம் உலர்த்தும் இயந்திரம் வழங்குதல்
8. கெவுல்கம ஸ்ரீ தளதாகமன் ரஜமகா விகாரையின் தர்மசாலை மறுசீரமைத்தல்





❖ தொல்லியல் திணைக்களம்

1. ஆய்வுகளும் ஆவணப்படுத்தலும்

தொல்லியல் இடங்களில் எல்லைகளை அடையாளம் காணுதல் மற்றும் நிருணயப்படுத்தல், பாதுகாப்பான சின்னங்கள் மற்றும் காப்பொதுக்கங்களை பிரகடனப்படுத்தல், கல்விசார் ஆய்வு இடங்களின் பரிசோதனை, கனிமம் பிரித்தெடுக்கும் கருத்திட்ட இடங்களின் பரிசோதனை, தொல்லியல் சேதங்கள் உள்ள மதிப்பீட்டு இடங்களின் பரிசோதனை, தொல்லியல் அழிவுகளை தவிர்க்கப்படுதல், அசையும் தொல்லியல்களை ஆவணப்படுத்தல், GIS இணையத்தள பிஹிதொர இற்றைப்படுத்தல் மற்றும் தகவல்களை திரட்டுதல், தொல்லியல் இடங்களின் பெயர்கோவைக்காக தகவல்களை திரட்டுதல் மற்றும் அறிக்கைகளை அச்சிடல் அடங்கலாக 28 ஆய்வு கருத்திட்டங்களை திறைசேரி ஒதுக்கீடுகளின் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், 27 கருத்திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டன. அதேபோன்று வெளியக ஒதுக்கீடுகளின் கீழ் கள ஆய்வுகள் மற்றும் தொல்லியல் தாக்கங்கள் மதிப்பிடப்படும் 17 கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.



கனேதென்ன புராண விகாரை



லத்பந்துர பழைய குகை பரிசோதனை

2. அகழ்வுகள்

தீகவாபி ஸ்தூப மளுவ அகழ்வு, மிகிந்தலை அநுலா தேவி ஸ்தூப அகழ்வு, கவுடாகல தாகப கொடல்ல அகழ்வு, அம்பாறை சமன்கல ஸ்தூப அகழ்வு மற்றும் கிரிபாவ பபுளுகல புராண கண்ணாடி தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சி அகழ்வுகள் அடங்கலாக 5 அகழ்வு கருத்திட்டங்கள் நடமுறைப்படுத்தப்பட்டன.





3. நூதனச்சாலைகள்

நூதனச்சாலைகளின் மேற்பார்வை மற்றும் இடங்களின் பரிசோதனை, நூதனச்சாலையின் பொருட்களின் மீள் பாதுகாப்பு, கண்காட்சியின் குறைப்பாடுகளை சரிசெய்தல் மற்றும் நூதனச்சாலை கண்காட்சிகளின் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கிய 19 கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதில் 14 கருத்திட்டங்களின் வேலைகள் முடிவுறுத்தப்பட்டன.



4. பராமரிப்பு

மாகாணங்களில் உள்ள தொல்லியல் இடங்களை வலய மட்டத்தில் (96 வலயங்கள்) நாளந்தம் பராமரித்தல், வீதி பிரவேசிப்புகளை தயாரித்தல், காப்பொதுக்க பலகைகள் மற்றும் திசை பெயர் பலகைகளை பொருத்துதல், எல்லை காண்களை நிருமாணித்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கட்டிடங்களை பராமரித்தல் போன்ற ஏறத்தாழ 70 பராமரிப்பு கருத்திட்டங்கள் திறனசேரி ஒதுக்கீடுகளின் மேற்கொள்வதுடன், வேலை முடிவுறுத்திய கருத்திட்டங்களின் எண்ணிக்கை 44 ஆகும். தொடர்ச்சியாக வருடாந்தம் மேற்கொள்கின்ற கன்னிய சுடுநீர் வளாகம் பராமரிக்கும் நடவடிக்கைகள் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.





5. கல்வெட்டுகள் மற்றும் நாணயவியல்

கல்வெட்டுகள் பிரதிபண்ணல், நாணய குறியீடுகள், கல்வெட்டுகளின் ஆராய்ச்சி கோவையின் நடவடிக்கைகள் அடங்கலாக நடைமுறைப்படுத்திய 03 கருத்திட்டங்களில் 100% பௌதீக முன்னேற்றம்
அடைந்துக்கொள்ளப்பட்டுள்ளது.

6. கட்டிடக் கலை மற்றும் இரசாயன பாதுகாப்பு

ரிட்டிகல தொல்லியல் இடத்தின் பந்தா பொக்குணவின் பாதுகாப்பு அடங்கலாக 33 கட்டிடக் கலை பாதுகாப்பு கருத்திட்டங்கள் மற்றும் 34 இரசாயன பாதுகாப்பு கருத்திட்டங்கள் திறைசேரியின் ஒதுக்கீடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன், 15 கட்டிடக்கலை பாதுகாப்பு கருத்திட்டங்களும் 19 இரசாயன பாதுகாப்பு கருத்திட்டங்களும் பணிகளை மேற்கொள்ளும் ஆண்டில் முடிவுறுத்தப்பட்டது. அதேபோன்று வெளியக ஒதுக்கீடுகளின் கீழும் 06 பாதுகாப்பு கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.





❖ அபே கம

1. அபேகம வளாகத்தில் அமைந்துள்ள மஹவலவ்வ கட்டிடத்தின் மின்முறைமை தாபித்தல்
2. அபேகம வளாகத்தில் அமைந்துள்ள நடன மண்டபத்தின் மின்முறைமை தாபித்தல்
3. 3 விற்பனை நிலையங்களைக் கொண்ட (சதுர அடி 450) நவீனமயப்படுத்தல். (06 விற்பனை நிலையங்களின் பொருட்டு)
4. விற்பனை நிலையங்கள் மற்றும் ஒரு அறையுடன் கூடிய 600 சதுர அடியிலான 02 விற்பனை நிலையம் நவீனமயப்படுத்தல்
5. பெயர்பலகை நவீனமயப்படுத்தி புனரமைத்தல்
6. அபேகம வளாகத்தில் அமைந்துள்ள கட்டிடத்தின் கூரையில் வடிம்பு பலகை, மழை நீர் வழிந்தோடும் திறந்த குழாய் மற்றும் நீர்வழிந்தோடுவதற்கான குழாய்களை பொருத்துதல்









❖ மகிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி சினமா பூங்கா

நிறுவனம் இவ்வமைச்சின் விடயவெல்லையின் கீழ் ஒப்படைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நீண்ட காலமாக பராமரிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையால் பாரிய அளவில் சீர்குலைந்த நிலையில் காணப்பட்டமையால் எந்தவொரு படப்பிடிப்பும் மேற்கொள்வதற்கு இயலாத நிலையில் இருந்தது. ஆயினும், இந்த அமைச்சினால் அமைச்சரவை குறிப்பு மூலம் அங்கீகரித்துக் கொள்ளப்பட்ட ரூபா.மில்லியன் 350 ஆன ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா.மில்லியன் 50 ஐ 2021 ஆம் ஆண்டிலும், ரூபா.மில்லியன் 24 ஐ 2022 ஆம் ஆண்டிலும் வரவு செலவு திட்டம் மூலம் நிறுவனத்திடம் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், குறித்த ரூபா.மில்லியன் 74 ஆன ஒதுக்கீடுகளை பௌதீக மற்றும் நிதிசார் ரீதியாக நூற்றுக்கு நூறு வீதமாக உபயோகப்படுத்தப்பட்டு தற்போது மீண்டும் ரெலி சினமா படைப்புகளை உருவாக்குவதற்கு பொருத்தமான நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அந்த ரூபா.மில்லியன் 74 ஆன ஒதுக்கீடுகள் மூலம் மேற்கொண்ட அபிவிருத்தி பணிகள் பின்வருமாறாகும்.

1. முற்றுமுழுதாக சீல்குலைந்த நிலையில் காணப்பட்ட சம்பிரதாய கிராமத்தின் காட்சி பின்னணிகளை மீள நிருமாணித்தல். (கிராமிய வீடுகள் 05, மஹ வலவ்வ மற்றும் ஆரச்சில வலவ்வ)
2. அழிவுக்கு உட்பட்டு காணப்பட்ட நகரப் பிரதேசத்தின், பகுதி நிரந்தர கட்டிடங்களை நிரந்தர கட்டிடங்களாக நவீனமயப்படுத்தல். (நிபோன் ஹோட்டல், வங்கி கட்டிடம் மற்றும் கார்கில்ஸ் கட்டிடத்தின் படிவம்)
3. முற்றுமுழுதாக சேற்றால் மூடப்பட்டிருந்த ஜம்புகஸ்வெவ புனரமைத்தல்.
4. கலைகூடத்தின் கட்டிடத்தில் சீர்குலைந்த நிலையில் காணப்பட்ட பசுமை மதிலை அகற்றப்பட்டு அதற்காக 132 அடி மற்றும் 17 அடி உயரமான தெற்காசிய வலயத்தில் உள்ள மிகப் பெரிய பசுமை மதிலை (Green Wall) நிருமாணித்தல் (இந்த பசுமை மதில் பயன்படுத்தி எந்தவொரு மட்டத்திலுமான உள்ளக படிப்பிடிப்புகள் மேற்கொள்வதற்கு முடியும்.)
5. பார்வையாளர்களின் மற்றும் படிப்பிடிப்புகளின் பொருட்டு வருகை தருகின்ற படைப்பாளர்கள் பொருட்டு சிறந்த நிலையிலான துப்பரவேற்பாட்டு மலசலகூட முறைமை நிருமாணித்தல்.
6. பூங்கா பொருட்டு இணையதளம் உருவாக்குதல் https://www.ranmihithanna.gov.lk/.இந்த பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்கையிலும், 2022 ஆம் ஆண்டில் ரூபா.மில்லியன் 09.05 அன தொகை வருமானமாக உழைத்துக் கொள்வதற்கு முடிந்தது.







டவர்ஹோல் திரையரங்க மன்றம்

1. படைப்பாளர்களை கௌரவப்படுத்தும் வைபவம் மற்றும் நாடகம் கீ உள்ளடக்கிய சீ.டி. குறுந்தட்டு வெளியிடல்.
2. தமிழ் நாடக மற்றும் நடனக்கலை பாடசாலை நடாத்தல்
3. சம்பிரதாய சிங்கள நடனம் தொடர்பான செயலமர்வு (மழைநாட்டு நடனம்)
4. பழைய பாடல் கலைவிழாவை நடாத்தல்
5. உலக நாடக நாள் கொண்டாடும் வைபவம்
6. வயதடைந்த டவர்ஹோல் கலைஞர்களின் பொருட்டு புத்தாண்டு பரிசுகள் வழங்குதல்
7. டிப்ளோமா அளிப்பு
8. டவர் பிரபாவஷ்வர விழா நடாத்தல்
9. தமிழ் படைப்பாளர்களை கௌரவிக்கும் விழா மற்றும் சரஸ்வதி பூசை








❖ கிராமோதய ஜனகலா கேந்திரம்

நடனம், சங்கீதம் ஆகிய அழகியற் கற்கைநெறிகள் பொருட்டு மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு, தேசிய பயிலுநர் பயிற்சி அதிகார சபையின் அனுமதியுடன் தேசிய திறன் 4, 5 மற்றும் 6 மட்டம் பெற்றுக்கொள்ளுதல் விசேட அடைவாகும்.

2.2 சவால்களும் எதிர்கால இலக்குகளும்

தேசிய மரபுரிமைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம்	ஆரம்பிக்கப்பட்ட/ உத்தேச திகதி	எதிர்பார்க்கப்படும் நலன்கள்		நலன்கள் கிடைக்கப் பெறும் காலப் பகுதி
		அளவுரீதியாக	தர ரீதியாக	
1. தேசிய மரபுரிமை பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுக்-கான டிஜிரல் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தல் 101 **-2-09-15-2509**	2023 ஆண்டுக்காக	தயாரிக்கப்பட்ட தேசிய மரபுரிமைகள் பாதுகாப்பு வீடியோக்கள்(15)	இலத்திரனியல் ஊடக மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் தேசிய மரபுரிமை வீடியோக்களை விரிவுபடுத்துவதால் தேசிய மரபுரிமை டிஜிரல் பயன்பாட்டுடன் பாதுகாக்கப்படுதல் மற்றும் இளைஞர் சமூகத்தில் பிரபல்யப்படுத்தல்	நீண்டகால
2. நாட்டின் மரபுரிமை பிள்ளைகளுக்காகும். நிகழ்ச்சித்திட்டம் - கலாச்சார ஆய்வுகூடம். **101-2-09-011-2401**	2023 ஆம் ஆண்டுக்காக	மாகாண மட்டத்தில் நிருமாணிக்கப்பட்ட 09 கலாச்சார கலையகங்கள்	இலங்கை வாழ் பிள்ளைகள் சம்பிரதாய பெறுமதிகள் தொடர்பாக அறிவுறுத்தப்படுதல் மற்றும் குறித்த சம்பிரதாயங்களை தொடர்ச்சியாக பராமரிப்பதற்கு தூண்டுவித்தல்	நீண்டகால

கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம்	ஆரம்பிக்கப்ட்ட/ உத்தேச திகதி	எதிர்பார்க்கப்படும் நலன்கள்		நலன்கள் கிடைக்கப் பெறும் காலப் பகுதி
		அளவுரீதியாக	தர ரீதியாக	
3. நாட்டின் மரபுரிமை பிள்ளைகளுக்காகும் - நிகழ்ச்சித்திட்டம் - கலை கலாச்சார முகாம்கள் **101-2-09-021-1409**	2023 ஆம் ஆண்டுக் கான ஒதுக்கீடுகள்	மாகாண மட்டத்தில் கலை கலாச்சார முகாம்கள் 09 ஐ நடாத்தல்	இலங்கை வாழ் பிள்ளைகள் சம்பிரதாய பெறுமதிகள் தொடர்பாக அறிவுறுத்தப்படுதல் மற்றும் குறித்த சம்பிரதாயங்களை தொடர்ச்சியாக பராமரிப்பதற்கு இயலுமான கலாச்சார மனிதனை உருவாக்குதல்	நீண்டகால
4. ஆதிவாசி/ மிக விசேடமான தனித்துவத்தைக் கொண்டுள்ள மக்களுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குதல். **101-2-09-020-1409**	2023 ஆம் ஆண்டுக் கான ஒதுக்கீடுகள்	உலக ஆதிவாசி தினம் கொண்டாடப்படுதல், தம்பான/ ஹெனானிகல ஹெத்ம சாந்த கர்ம நிகழ்ச்சித்திட்டங்களை முடிவுறுத்தல் தளுகான ஆதிவாசி கிராமத்தில் சமூக எழுச்சி நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தி செய்தல்.	ஆதிவாசி மற்றும் மிகவிசேடமான தனித்துவம் கொண்ட மக்களது உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் திருப்தியான மக்கள் தொகுதியாக உருவாக்குதல். ஆதிவாசி மக்கள் தமது அடையாளத்தை பாதுகாத்துக்கொண்டு புதிய சமூக	நீண்டகால

கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம்	ஆரம்பிக்கப்ட்ட/ உத்தேச திகதி	எதிர்பார்க்கப்படும் நலன்கள்		நலன்கள் கிடைக்கப் பெறும் காலப் பகுதி
		அளவுரீதியாக	தர ரீதியாக	
			நிலைமைகளுக்கு ஒழுங்கமைதல்	
5. காலி கோட்டை பள்ளி வீதியின் பழைய பொலிஸ் உத்தியோகபூர்வ கட்டிடம் பாதுகாக்கப்படுதல். **101-2-09-004-2201/2202**	2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள்	தாபன நடவடிக்கைகளை பராமரிப்பதற்கு தேவையான அலுவலக எழுதுகருவி பொருட்கள் , மோட்டார் வண்டிக்கான எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் முகாமைத்துவ சபையின் உபசரணை படிகள் ஆகிய ஏனைய செலவினங்களை மேற்கொள்ளுதல்.	பதவியணி பயனுள்ளதாகவும் வினைத்திறனுடனும் தமது பணிகளில் ஈடுபடல்	நீண்டகால
பழமைவாய்ந்த இடங்களின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி	2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள்	பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட பழைமையான வழிப்பாட்டுத் தலங்கள்		நீண்டகால
சம்பிரதாய கிராமத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ஆண்மீக, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி)	2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள்	அபிவிருத்தி செய்யப்பட்ட சம்பிரதாய கிராமம்		நீண்டகால
சம்பிரதாய கலைகளின் மேம்பாடு மற்றும்	2023 ஆம் ஆண்டுக்	பங்குபற்றும் நபர்களின் எண்ணிக்கை /		நீண்டகால

கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம்	ஆரம்பிக்கப்ட்ட/ உத்தேச திகதி	எதிர்பார்க்கப்படும் நலன்கள்		நலன்கள் கிடைக்கப் பெறும் காலப் பகுதி
		அளவுரீதியாக	தர ரீதியாக	
உள்நாட்டு தொழில்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.	கான ஒதுக்கீடுகள்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை		
சம்பிரதாய தொழில் பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் அபிவிருத்தி	2023 ஆம் ஆண்டுக் கான ஒதுக்கீடுகள்	சம்பிரதாய கலைகளை மேம்படுத்தல்.		நீண்டகால
மகிந்த ராஜபக்ஷ தேசிய றெலி சினிமா பூங்காவின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் புனரமைப்பு	2023 ஆம் ஆண்டுக் கான ஒதுக்கீடுகள்	மறுசீரமைக்கப்பட்ட வேடமிடும் கட்டிடடம், காலி சந்தை, பிரதான வீதியின் கட்டிடங்கள் (நகரப் பிரதேசத்தின் பிரதான சந்தி) மற்றும் பொம்பே வெல்வெட் சமூக மன்றம்	(அ) றெலி சினிமா துறைக்கு மேம்படுத்தப்பட்ட காட்சி பின்னணிகள் உரித்தாகும். (ஆ) பயனாளர்கள் திருப்தியடைவார்கள். (இ) உயர் தரத்துடன் கூடிய ரெலி சினிமா உருவாக்கப்படுதல்.	நீண்டகால
அபே கம வளாகத்தின் புனரமைப்பு நடவடிக்கைகள், விற்பனை நிலையங்களின் பழுதுபார்த்தல் , விற்பனை மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்	2023 ஆம் ஆண்டுக் கான ஒதுக்கீடுகள்	நவீனமயப்படுத்திய கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள்	வாடிக்கையாளரின் கவர்ச்சியினை அதிகரிப்பதன் மூலம் வருமானம் அதிகரித்தல்	நீண்டகால
கிராமோதய ஜனகலா கேந்திரம்	2023 ஆம் ஆண்டுக்	நவீனமயப்படுத்திய கட்டிடம்,	நிறுவனத்திற்கான நடன ஆடை	நீண்டகால

கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம்	ஆரம்பிக்கப்ட்ட/ உத்தேச திகதி	எதிர்பார்க்கப்படும் நலன்கள்		நலன்கள் கிடைக்கப் பெறும் காலப் பகுதி
		அளவுரீதியாக	தர ரீதியாக	
நவீனமயப்படுத்தல், பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் நிருமாணித்தல்	கான ஒதுக்கீடுகள்	வினைத்திறனுடன் கூடிய அரச சேவை பெற்றுக்கொள்வதற்கு முடியுமாதல்	ஆபரணங்கள், உபகரணங்கள் என்பவற்றின் பாதுகாப்பு, உயர் தரத்துடன் கூடிய பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளுதல்	
ரஜகலதென்ன பாதுகாப்பு கருத்திட்டம்	ஒதுக்கீடுகள்	ரஜகல தொல்லியல் இடம் பாதுகாக்கப்படுதல் மற்றும் காட்சிகளின் மட்டத்தில் தயாரித்தல்	மரபுரிமை பாதுகாத்தல்	நீண்டகால
வருமான உற்பத்தி வழிமுறையாக புதிய 04 டிப்ளோமா கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு தேவையான உபகரணங்களை பெற்றுக்கொள்ளுதல்	ஒதுக்கீடுகள்	நாடக கலை தொடர்பான அறிவு விருத்தி மற்றும் நாடகத் தயாரிப்புக்காக மாணவர்களை ஈடுபடுத்தல்	நாடக படைப்புகளுக்காக மாணவர்களை ஈடுபடுத்தல் மற்றும் 75 ஆவது சுதந்திர தினம் அபிமானத்துடன் கொண்டாடுதல்	நீண்டகால

தொலைநோக்கு

தேசிய மரபுரிமைகளை பாதுகாத்தல், கலாச்சாரம், இலக்கியம் மற்றும் கலை என்பவற்றை அதிகூடிய தரத்துடன் பராமரிப்பதற்கான சட்டத்திட்டங்கள், கட்டளைச்சட்டங்கள் என்பவற்றின் பிரகாரம், கலாச்சாரம், தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக கொள்கை தொகுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல், தேசிய வரவு செலவு, தேசிய முதலீட்டு மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் உள்ள கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், நிருவாக பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டசபை நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அதற்கு ஏற்புடையதான திட்டங்களும் கருத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடல் தேசிய மரபுரிமை, அருங்கலைகள் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதனுள் செயற்படுத்த வேண்டிய கருத்திட்டங்களை அடையாளம் காணப்பட்டு மேற்படி இலக்குகளை பூர்த்தி செய்து கொள்ளுதல் அமைச்சின் பிரதான நோக்கமாகும். ஒவ்வொரு முன்னுரிமைகளும் வெவ்வேறாக உள்ளடங்கும் வகையில் அடையாளம் காணப்படும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக ஒரு நாட்டின் காம்பிரம் மற்றும் தனித்துவம் என்பவற்றை எடுத்துக்கூறும் தேசிய மரபுரிமைகளை பாதுகாத்து, எதிர்கால சந்ததியினறுக்கு வழங்குதல் மட்டுமின்றி, உயர் கலைப் படைப்புகளை உருவாக்குவதற்கு கலைஞர்களுக்கு தேவையான வசதிகளை அளிப்பதன் மூலம் நாட்டுமக்களின் இரசிக்கும் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும் அதனூடாக கலைஞர்களை மேம்படுத்தவதற்கும் எமது பயணப்பாதை தயாரிக்கப்பட்டுள்ளது.


இலங்கையில் புலனாகும் மற்றும் புலனாகாத (Tangible & Intangible) தேசிய மரபுரிமைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சமூகத்திடம் மிகவும் கவர்ச்சிகரமாகவும் பயனுள்ளதாகவும் தொடர்பு கொள்ளச் செய்வதன் ஊடாக தேசிய மரபுரிமைகளின் பாதுகாப்பை மேம்படுத்தல், பாதுகாப்பு மற்றும் சுற்றுலாவுக்கு வழிகாட்டுதலை நோக்கமாகக்கொண்டு நவீன தொழில்நுட்ப முறைகளை நடைமுறையில் பயன்படுத்தி, குறித்த தொழில்நுட்பம் ஊடாகவே இத் துறை தொடர்பான ஆர்வத்தையும் புரிந்துக்கொள்ளுதலையும் ஏற்படுத்தும் வகையில் டிஜிரல் உள்ளீடுகளை உருவாக்குதலும் பிரச்சாரப்படுத்தலும் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை முழுதிலும் பரந்து காணப்படுகின்ற அனைத்து துறைகளின் கலைஞர்களது விபரங்கள் அடங்கிய ஒரு கலைஞர்கள் தகவல் முறைமையை தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தலும் அமைச்சினால் செயற்படுத்துவதற்குள்ள விசேட கருத்திட்டமாகும். சுற்றுலா அமைச்சுடன் இணைந்து சுற்றுலா துறை அருங்கலை மற்றும் ஏனைய கலை செயற்பாடுகளின் நிமித்தம் கலைஞர்களை இணைத்துக் கொண்டு குறித்த தரவு முறை ஊடாக செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்படுகிறது. இதன் ஊடாக கலைஞர்களின் தொழில் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கலைஞர்களின் தரவு முறைமைக்கு இணையாக கலைஞர்களுக்கான விசேட Mobile App தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் கலைஞர்களின் கலை படைப்புகளைப் பிரச்சாரப்படுத்தல் மற்றும் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த Mobile App பொருட்டு தரவு முறைமையில் பதிவாகியிருக்கும் கலைஞர்கள் மட்டுமே கையாள்வதற்கு முடியும். ஆகையால் நாடு முழுவதும் காணப்படுகின்ற அனைத்து கலைஞர்களையும் இந்த தரவு முறைமையில் பதிவு செய்தலானது, தேசிய நிகழ்ச்சித்திட்டம் மட்டுமல்ல அந்த கலைஞர்களுக்கும் தனிப்பட்ட நலன்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமாகும். இங்கு பதிவாகும் கலைஞர்களுக்கு டிஜிரல் அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் அதன்மூலம் பல்வேறு நலனோம்பல் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.


இலங்கையில் வாழுகின்ற ஆதிவாசிகளும் வேறு விதே தனித்துவ அடையாளங்கள் உடைய மக்களும் முன்னோக்கி நகர்வதற்கும் அவர்களை பாதுகாப்பதற்கும் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதன் ஊடாக அந்த மக்களின் பிரஜை உரிமைகளை பாதுகாத்தலும், அந்த மக்களின் நாளாந்த வாழ்க்கை விடய விவகாரங்களைப் பேணிச்செல்வதற்கு தேவையான உதவிகளை வழங்குதலும் எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களில் தேசிய மரபுரிமை பிரிவால் உள்ளடக்கப்படும்.

தேசிய புராதனத்தை பிரதிபலிக்கும் புராதன கலாச்சார அங்கங்கள் இன்றைய மக்கள் சமூகத்திலிருந்து அரிதாகிச்செல்வதை தவிர்த்தல். அதே போல் புராதன காலம் தொட்டு இருந்து வருகின்ற மரபுரிமைகளை எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாத்துக் கொடுத்தல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எமது புராதன கலாச்சார அங்கங்களை ஊக்குவித்து அவற்றை பாதுகாக்கும் நிமித்தம் செயற்படுவதும் தேசிய மரபுரிமை பிரிவால் முதன்மையாகக் கருதப்படுகிறது.



அத்தியாயம் 03

3.1 ஆண்டின் ஒட்டுமொத்த நிதி செயல்திறன்



ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	திருத்தப்பட்ட 2021	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		243,683,000	409,157,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		56,684,628	22,325,561	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		4,026,516	2,717,970	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	48,410,693	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		304,394,144	482,611,224	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		304,394,144	482,611,224	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		69,080	191,305	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		304,325,064	482,419,919	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
90,830,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	61,061,885	62,950,089	
99,540,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	87,007,945	90,761,462	ஏசீஏ-2(ii)
136,300,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	123,238,891	120,060,701	
100,000	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	7,000	
326,770,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		271,308,721	273,779,252	
	மூலதனம் செலவினம்				
2,250,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	279,806	28,960,209	
7,130,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	4,127,161	14,698,494	
67,500,000	மூலதன மாற்றல்கள்	12	67,416,937	98,587,345	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
1,100,000	திறன் விருத்தி	14	393,662	3,731,522	
18,550,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	13,038,805	35,366,131	
96,530,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		85,256,371	181,343,701	
	வைப்புக் கொடுப்பனவுகள்		120,547,597	143,212,376	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		4,578,900	4,995,117	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		125,126,497	148,207,493	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		481,691,588	603,330,446	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(177,366,524)	(120,910,527)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		177,366,524	120,910,527	ஏசீஏ-7
423,300,000	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3

1

3.2 நிதி நிலை அறிக்கை

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	25,336,307	25,235,066
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	8,104,895	7,552,511
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		33,441,201	32,787,577
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(60,345,957)	(124,761,310)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		25,336,307	25,235,066
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	68,450,852	132,313,821
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		33,441,201	32,787,577

பக்க இலக்கம் 08 முதல் வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் முதல் வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 27/02/2023

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: ජී. එන්. මුණසිංහ
பதவி : ප්‍රධාන ගණකාධිකාරී
திகதி :

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி : 2023.02.27

R.T.K. Welivitage
Chief Accountant
State Ministry of National Heritage,
Performing Arts and Rural Arts,
Promotion Affairs

Somarathne Vidanapathirana
Secretary
Ministry of Buddhasasana, Religious & Cultural Affairs
No. 135, "Dahampaya"
Srimath Anagarika Dharmapala Mw,
Colombo - 07.

3.3 பண புழக்கங்களின் அறிக்கை

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை 2022 ரூபா	திருத்தப்பட்ட 2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	-	-
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	75,791,870	457,567,693
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	251,683,000	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	18,442,284	3,251,507
முற்பணங்களை அறவிடல்	56,684,628	22,325,561
வைப்புக்களின் பெறுகை	**402,601,781**	**483,144,761**
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)		
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு	207,234,463	215,760,017
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	-	-
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	11,717,440	-
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	8,069,080	191,305
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	19,760,578	4,994,317
முற்பணக் கொடுப்பனவு	120,547,597	128,971,916
வைப்புக் கொடுப்பனவு	**367,329,158**	**349,917,555**
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)		
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**35,272,623**	**133,227,206**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	-	-
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	35,272,623	133,227,206
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**35,272,623**	**133,227,206**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(35,272,623)**	**(133,227,206)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**0**	**0**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	-	-
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)		
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:	-	-
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)		
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3

3.4 நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

3.5 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

வருமானம் சேகரிக்கும் நிறுவனமல்ல

ரூபா.,000

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டில் செயலாற்றுகை

ரூபா.,000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டுவரும்	330,800	330,800	270,559	81.79
மூலதன	92,500	92,500	86,006	92.98

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு.

රු.,000

தொடர் இலக்கம்	அமைச்சிலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீடுகளின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	பயன்படுத்திய ஒதுக்கீடு, முடிவுறுத்திய ஒதுக்கீட்டின் தொகை % ஆக
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
130	அரச நிருவாகம்	2021 ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சம்பளம் செலுத்தல்	36,835.78	36,835.78	36,835.78	100%

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா.000

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2022 ஆம் திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி	31.12.2022 ஆம் திகதிய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கியுள்ள பெறுமதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியுள்ள	அறிக்கையிடல் முன்னேற்றம்%
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்புகள்				
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்				
9153	காணி				
9154	அருவமான சொத்துக்கள்				
9160	நடைபெறும் பணிகள்				
9180	குத்தகை சொத்துக்கள்				
மொத்தம்		7,463,475.18			

3.9. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

செயலாளர்
புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

தலைப்பு 101 - புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் 2022 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று,அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று,காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்பு என்பவற்றை உள்ளடக்கி 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி நிலைமைக்கூற்று 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும் இந்நிதிநிலைமைக் கூற்று சம்பந்தமாக எனது கருத்துத் தெரிவிப்பும் அவதானங்களும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படும். 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் தலைமை கணக்கு அதிகாரிக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை காலக்கிரமத்தில் வெளியிடப்படப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் நாடாளுமன்றத்துக்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் மூலமான பாதிப்புக்களை தவிர, நிதிக் கூற்றுக்களின் மூலம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமைகள் மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தரநியமங்களுக்கு உட்பட்ட வகையில் உண்மையான மற்றும் நியாயமான நிலைமைகளை வெளிப்படுத்துவதாக அமையும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து நிலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) உட்பட்ட வகையிலேயே நான் கணக்காய்வினை மேற்கொண்டுள்ளேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள், இவ்வறிக்கையின் நிதி அறிக்கைக் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்கின்ற பகுதியில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் நோக்கில்

என்னால் பெறப்பட்டிருக்கும் கணக்காய்வு ஆதாரங்கள் போதுமானவையாகவும் பொருத்தமானதாகவும் காணப்படுகின்றன என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் தலைமை கணக்கியல் உத்தியோகத்தினரிதும் மற்றும் கணக்கியல் உத்தியோகத்தினரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மற்றும் 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பிரதான கணக்காளர் உத்தியோகத்தர் பொறுப்பாக உள்ளார்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஒரு பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுவதை தலைமை கணக்கீட்டு அதிகாரி உறுதிசெய்து அந்த முறைமையின் செயல்திறன் குறித்து அவ்வப்போது மதிப்பாய்வு செய்து அதன் அடிப்படையில் கட்டமைப்பை பயனுள்ளவாறு முன்னெடுத்துச் செல்வதற்கான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மோசடி மற்றும் பிழைகளின் காரணமாக ஏற்படுகின்ற போதிய பொய்யான கூற்றுக்களிலிருந்து விடுபட்டவை என்று நியாயமான உத்தரவாத்தை வழங்குவதும் மற்றும் எனது கருத்தை கொண்ட கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர்மட்ட உத்தரவாதமாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வை மேற்கொள்ளும் போது தவறான கூற்றுக்கள் கண்டறியப்படுவதை அது எப்போதும் உறுதிப்படுத்தாது. மோசடி மற்றும் பிழைகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதால் போதிய பொய்யான கூற்றறுக்கள் உருவாக முடியும் என்பதுடன், அதன் போதுமான தன்மையை இத்தகைய நிதிக் கூற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீதான தாக்கங்களின் அடிப்படையில் இது தங்கி நிற்கிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வு செய்யப்படுகின்ற போது தொழில் நடுநிலைத்தன்மையுடன் கூடிய வகையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் என்னால் தொடர்ந்தும்,

- வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு கருத்திற்கு அடிப்படையொன்றை தயாரித்துக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறுதல் காரணமாக நிதி அறிக்கைகளில் ஏற்படக்கூடிய கூடுதல் பொய்யான கருத்துக்கள் உருவாகும் ஆபத்துக்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. பிழையாக விடயங்களை குறிப்பிடுவதனால் ஏற்படுகின்ற பொய்யான

கூற்றுக்களால் ஏற்படுகின்ற தாக்கங்களை விட மோசடியொன்றால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் கடுமையானது.

- உள்ளக நிருவாகத்தின் திறன்கள் குறித்த கருத்தொன்றை தெரிவிக்கும் கருத்தில் இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குகளை திட்டமிடும் நோக்கில் உள்ளக கட்டுப்பாடுகள் குறித்த புரிந்துணர்வொன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட இணைப்பு வெளிப்படுத்தல்கள் போற்றப்பட்டுள்ளது.

- நிதி அறிக்கைகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளீடுகளில் அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான முறையிலும் நியாயமான வகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளதென்பதையும் மற்றும் வெளிப்படுத்துதலை உள்ளடக்கிய நிதியறிக்கைகளின் முழுமையான முன்வைத்தல்களும் போற்றப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வில் இணங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுத் தேடல்கள், பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தருக்குத் தெளிவூட்டப்பட்டுள்ளது.

1.5. ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ) இன் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதி அறிக்கை கடந்த வருடத்துடன் ஒத்துப்போகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் தொடர்பில் புத்தசாசனப் பிரிவின் நிதிக்கூற்றுக்கள் குறித்து என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைனய ஆண்டுடன் தொடர்புடைய பந்தி இலக்கம்	செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள்	இவ்வறிக்கையின் பந்தி இலக்கம்
1.6.1.1 (அ)	அமைச்சுக்கு சொந்தமான இலக்கம் 18 – 4263 இலக்கமுடைய வாகனத்தின் பெறுமதி (மதிப்பீடு செய்யப்படவில்லை) நிதி அல்லாத சொத்துக்களில் உள்ளடக்கப்படாத காரணத்தினால் அத்தொகையிலிருந்து நிதி அல்லாத சொத்துக்கள் குறைவாக காண்பிக்கப்பட்டுள்ளது.	1.6.1 (அ) (ii)

1.6. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்

1.6.1 நிதி அல்லாத சொத்துக்கள்

(அ) புத்தசாசனப் பிரிவு

i. 2022ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்கு புத்தசாசனப் பிரிவில் நிதி அல்லாத சொத்துக்களுள் உள்ளடங்கிய வாகனங்களின் பெறுமதி ரூ. 243,386,950 ஆக காணப்பட்டதுடன், அமைச்சின் மூலம் முறையே பொதுநம்பிக்கைப் பொறுப்பு திணைக்களத்திற்கும் மற்றும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்திற்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த ரூ. 38,000,000 பெறுமதியான இலக்கம் PA -7082 உடைய ஜீப் வண்டி மற்றும் ரூ. 1,500,000 பெறுமதியான இலக்கம் 32-5816 உடைய ஜீப் வண்டி ஆகியவை இதுவரையில் சட்டரீதியான முறையில் ஒப்படைக்கப்படவில்லை எனினும் கணக்குகளிலிருந்து நீக்கியதன் காரணமாக அந்தத் தொகையில் அமைச்சின் நிதி அல்லாத சொத்துக் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

ii. இலக்கம் 18-4263 உடைய மோட்டார் வாகனத்தின் பெறுமதி (மதிப்பீடு செய்யப்படவில்லை) நிதி அல்லாத சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காத காரணத்தினால் அந்தத் தொகையில் நிதி அல்லாத சொத்து குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கலாச்சாரப் பிரிவு

i. கலாச்சாரப் பிரிவுக்குச் சொந்தமான இலக்கம் CAM 5384, 254 - 0003 மற்றும் YC 1104 உடைய 03 வாகனங்கள் (மதிப்பீடு செய்யப்படவில்லை) நிதிக் கூற்றுக்களில் வாகனங்களின் பெறுமதி உட்புகுத்தப்படாததன் காரணத்தினால் அந்தத் தொகையில் நிதி அல்லாத சொத்து குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

ii. இலக்கம் KE – 8095 உடைய டாடா சுமோ ஜீப் வண்டி மற்றும் இலக்கம் 253-1191 உடைய டொயோடா டபல் கெப் வண்டி ஆகியவை தொல்பொருள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும், முறையே ரூ. 2,500,000 மற்றும் ரூ. 1,500,000 பெறுமதியான அவ் வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2022 செப்டம்பர் 21ஆம் திகதியையுடைய இலக்கம் 06/2022 உடைய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 20 மற்றும் 21ஆம் பிரிவின் பிரகாரம் இரத்தான செலவுத் தலைப்பின் கீழ் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.2 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

அமைச்சின் மூலம் பின்வரும் ஆவணங்கள் பேணப்பட்டிருக்கவில்லை என்பதுடன், ஒரு சில ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்ட வகையிலும் முறையான அமைப்பிலும் பேணப்பட்டுச் சென்றிருக்கவில்லை என்பது மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது நிரூபணமாகியது.

ஆவண வகை	தொடர்புடைய ஒழுங்குவிதிகள்	அவதானங்கள்
i. சேதங்கள் தொடர்பான ஆவணம்	நிதி பிரமாணம் 110	புத்தசாசனப் பிரிவினால் பேணப்பட்டிருக்கவில்லை.

ii. பிணை ஆவணம்	நிதி பிரமாணம் 891(1)	புத்தசாசனப் பிரிவினால் பேணப்பட்டிருக்கவில்லை என்பதுடன், கலாச்சாரப் பிரிவின் மூலம் இற்றைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.
iii. செலவு பேரேடு	நிதி பிரமாணம் 447(3)	புத்தசாசனப் பிரிவினால் பேணப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 செலவு முகாமைத்துவம்

(அ) மீண்டுவரும் செலவு

அமைச்சின் புத்தசாசனப் பிரிவில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில் நி.பி 66 இன் கீழ் 04 மீள்நிரப்புகை செலவு விடயத்திற்கு ரூ. 19,166,000 தொகை ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டிருந்ததுடன், அதில் நூற்றுக்கு 40 தொடக்கம் 100 வரையிலான எல்லைக்குட்பட்ட ரூபா. 11,266,723 தொகையுடைய ஒதுக்கீடானது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் மீதப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மூலதனச் செலவு

அமைச்சின் புத்தசாசனப் பிரிவில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில் நி.பி 66 இன் கீழ் 04 மூலதனச் செலவு விடயத்திற்கு ரூபா. 70,315,000 தொகை ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டிருந்ததுடன், அத்தகைய மொத்த ஒதுக்கீடுகளும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் மீதப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) செலவுத் தலைப்புக்கள் 6 இற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 3,270,000 தொகை தூய ஒதுக்கீடுகளும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் மீதப்படுத்தப்பட்டிருந்தது.

2.2 தலைமை கணக்கியல் உத்தியோகத்தினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உத்தரவாதப்படுத்தல்.

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் விதிமுறைகளுக்கமைய, தலைமைக் கணக்கு அதிகாரி பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதியளித்திருக்க வேண்டும் எனினும், அதன்படி செய்திருக்கவில்லை.

(அ) அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளகக் கட்டப்பாட்டு முறை உருவாக்கப்படுவதையும் பராமரிக்கப்படுவதையும் தலைமைக் கணக்கீட்டு அதிகாரி உறுதி செய்தல் வேண்டும். மேலும் அந்த அமைப்பின் செயல்திறனை அவ்வப்போது மீளாய்வு செய்து முறையான செயல்திறனுக்குத் தேவையான மாற்றங்களைச் செய்தல் வேண்டும். மற்றும் அந்த மதிப்பாய்வுகள் எழுத்துப்பூர்வமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அதன் பிரதியொன்றையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தலும் வேண்டும். ஆனால் அத்தகைய மீளாய்வுகள் செய்யப்பட்ட அறிக்கைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் உரிய காலப்பகுதியினுள் தயாரிக்கப்படுவதை தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்தல் வேண்டும். மேலும் கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனம் தொடர்பான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதை தலைமை கணக்கியல் அதிகாரி உறுதி செய்தல் வேண்டும். ஆனால் அறிக்கையின் 3.1 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் காரணமாக அத்தகைய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டதிட்டங்கள் மற்றும் விதிகளுக்கான தொடர்	**இணங்காமை**
(அ) இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIVX ஆவது அத்தியாயம	
(i) 4,2,5, 4.5, 4.6 மற்றும் 6.3 ஆவது உப பிரிவு	புத்தசாசனப் பிரிவில் ஓய்வு பெற்ற அதிகாரியொருவரின் ரூபா.167,055 தொகையுடைய கடன் மீதியானது 03 வருடங்களுக்கு மேலாகவும் கலாச்சாரப் பிரிவில் ஓய்வு பெற்ற அதிகாரியொருவரின் ரூபா. 128,732 தொகையுடைய கடன் மீதியானது 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் அறவிடப்பட வேண்டியுள்ளதுடன், இதுவரையில் அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ii) 4.4 ஆம் உப பிரிவு	கலாச்சாரப் பிரிவில் மரணமடைந்துள்ள இரண்டு அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள 1 முதல் 2 வருடங்களாக தொடர்ந்து வருகின்ற ரூபா. 234,305 தொகையான கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.
(iii) 4.5, 4.6, மற்றம் 6.3 ஆம் உப பிரிவுகள்	கலாச்சாரப் பிரிவில் இடைநிறுத்தப்பட்டுள்ள 08 அதிகாரிகளின் ரூ. 483,021 அறவிடப்பட வேண்டியுள்ள போதிலும் அதனை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதியின்	
(i) நிதிப்பிரமாணம் 135	(i) கலாச்சாரப் பிரிவின் சுத்திகரிப்பு சேவையைப் பொறுத்தவரை, உறுதிப்படுத்தல் ஆவணங்களை சரிபார்க்காமல் 2021 டிசம்பர் 01 தொடக்கம் 2022 டிசம்பர் 31 வரையில் மாதம் ரூபா. 147,000 அடிப்படையில் செலுத்துகை செய்யப்பட்டுள்ளது. (ii) அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III அதிகாரிக்கு ரூபா. 68,917 கடன் தொகை நேர்மையீனமாக செலுத்தப்பட்டுள்ளதுடன், அக்கடன் தொகையை மீள அறவீடு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.
(ii) நிதிப்பிரமாணம் 113 (6) மற்றும் 2020 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய இலக்கம் 01/2020 உடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு	சேவையை விட்டுச் சென்று 5 வருடங்கள் கடந்து போயுள்ள கலாச்சாரப் பிரிவைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 220,488 தொகையுடைய மொத்த மீதியை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.
(இ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தி மற்றும் அரச நிதித் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி இலக்கம் 14	புத்தசாசனப் பிரிவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் இணக்கமடைவதாக குறிப்பிடப்பட்டிருந்த 09 தேவைப்பாடுகள் இணங்கவில்லை என்பது அவதானிக்கட்டது. மேலும் கலாச்சாரப் பிரிவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் இணக்கமடைவதாக குறிப்பிடப்பட்டிருந்த 03 தேவைப்பாடுகள் இணங்கவில்லை என்பது அவதானிக்கட்டது.
2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்கமுடைய அரச நிருவாக சுற்றிக்கையின் 3.3 ஆம் பிரிவு.	எரிபொருள் பயன்பாட்டில் பாதகமான மாற்றங்கள் காணப்படுமாயின் அதனை இனங்கண்டு கொள்வதற்காக சுற்றறிக்கையின் இணைப்பு 1 இன் பிரகாரம் போக்குவரத்து சேவைக் குறிப்பை மாதாந்தம் பூரணப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

2.4 வைப்பு

புத்தசாசனப் பிரிவில் 2022 டிசம்பர் 31ஆம் திகதிக்கு வைப்பு மிகுதியாக ரூபா. 23,240,820 தொகை காணப்பட்டதுடன், அதில் இரண்டு ஆண்டுகள் கடந்ததன் பின்னரான மொத்தம் ரூபா. 21,106,115

தொகையை ஒப்பந்தத்திற்கான 05 தடுப்பு வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.5. வங்கிக் கணக்கினை கையாளுதல்

வங்கிக் கணக்குகளை பராமரிக்கும் போது காசோலைகளில் கைச்சாத்திடும் அதிகாரிகள் நிதிப்பிரமாணம் 880 இன் படி அரச அதிகாரிகளின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் பிணை வைக்க வேண்டிய போதிலும் புத்தசாசனப் பிரிவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பிணையை அறிவீடு செய்வதற்குரிய நடவக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. தொழிற்பாட்டு மதிப்பாய்வு

3.1 செயலாற்றுகை

(அ) 2020 ஆகஸ்ட் 28ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிந்து 150 நாட்களுக்குள் அந்த ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கையானது 2022 செப்டம்பர் 30 ஆம் திகதியிலேயெ பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

(ஆ) வருடாந்த செயல்திட்டத்துடன் தொடர்புடைய முன்னேற்றமும் செயலாற்றுகையும்

i. கலாச்சார அலுவல்கள் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் பிரதான வேலைத்திட்டம் கலாச்சார நிலைய வேலைத்திட்டமாகும். எனவே ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் கலாச்சார நிலையம் ஒன்று நிறுவப்பட உள்ளதாக வருடாந்த செயற்திறன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்படி இருந்தும் முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஒரு கலாச்சார நிலையம் கூட தாபிக்கப்படவில்லை என்பதுடன், இவ்வருடத்தில் கலாச்சார நிலையங்களை நிர்மாணிக்கும் போது கூட இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

ii. செயல்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள் விரிவான முறையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்கள்/செயற்திட்டங்கள் என்னவென்பது குறித்து தெளிவாக இல்லை என்பதுடன், அந்நடவடிக்கைகள் தொடர்பான நோக்கங்கள் மற்றும் இலக்குகள் எட்டப்பட்டதா என்பதை தீர்மானிக்க முடியவில்லை.

iii. செயல்திட்டத்தின் குறிக்கோள் இலக்கம் 04 இன் இலக்குகளாக நிலையான அபிவிருத்தி இலக்குளை அடைவதற்காக செயற்படுதல் என்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. 2030 ஆம் ஆண்டளவில் கல்வி கற்கும் அனைவரும் நிலையான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு அறிவு மற்றும் திறன்களைப் பெற்றிருத்தல் மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மையை மதிப்பீடு செய்வதற்காக திட்டங்கள் கண்டறியப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

iv. குறிக்கோள் இலக்கம் 11இல் இலக்கு 11.4 என்பதாக அனைத்து கலாச்சார மற்றும் இயற்கைப் பாரம்பரியங்களைப் பாதுகாத்தல், பாதுகாப்பு மற்றம் பாதுகாப்புக்கான முயற்சிகளை வலுப்படுத்தும் இலக்குகளாக தமிழ், முஸ்லிம் மற்றும் பிற கலாச்சார

பாரம்பரிய உரிமைகளுக்கான திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சமூக கலாச்சார ஒருங்கிணைப்புக்கான விசேட திட்டங்கள் (101-2-5-6-1508)

i. இந்த செலவு விடயத்தின் மூலம் கலாச்சார மத்திய நிலையங்களினூடாக நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கலாச்சார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு ரூபா. 10,000,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2022 டிசம்பர் 19 ஆம் திகதி அதில் ரூபா. 6,560,000 ஒதுக்கீடு 101-2-5-9-1409 செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக அச் செலவு விடயத்தின் கீழ் மீதமுள்ள ஒதுக்கீட்டை குறைந்த பெறுமதியாகக் காண்பித்து செயலாற்றுகை அறிக்கையில் நிதி முன்னேற்றப்பாடு 100 சதவீதம் என காட்டப்பட்டுள்ளது. இருந்த போதிலும், கலாச்சார நிலையங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் கலாச்சார மேம்பாட்டு நிகழ்ச்சிகளுக்கான நிதியுதவி வழங்குவதானது குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

ii. வருடாந்த செயல்திட்டத்தின் படி சம்பந்தப்பட்ட செலவு விடயத்தின் செயலாற்றுகை குறியீடானது "செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கலாச்சார ஊக்குவிப்புத் திட்டங்களின் எண்ணிக்கை" எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதற்கான எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் நிறுவப்படவில்லை. இருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட செலவு விடயத்தின் பௌதீக முன்னேற்றமானது 100 சதவீதம் என வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ளது.

iii. இச்செலவின தலைப்பின் கீழ் சமூக கலாச்சார ஒருங்கிணைப்புக்கான விசேட திட்டங்கள் செயற்பாடுகளாக அடையாளம் காணப்பட்ட போதிலும் வெவ்வேறு இனங்களின் கலாச்சாரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல்வகைத் தன்மையுடன் கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரச சேவையாளர்களுக்கிடையிலான ஆக்கப் போட்டி (101-02-05-08-1409)

2022ஆம் அண்டில் அரச சேவையாளர்களுக்கிடையிலான ஆக்கப் போட்டிக்கான விண்ணப்பம் கோரல் மற்றும் முன் பிரச்சார நடவடிக்கைகள் இந்தச் செலவுத் தலைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எனினும், ஆண்டிற்குள் அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் தொடர்புடைய செலவு விடயத்தின் பௌதீக முன்னேற்றப்பாடு 99 சதவீதம் என்பதாக வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ) சில்ப கம்மான கிராமிய நிகழ்ச்சித் திட்டம் (101-02-05-21-2506)

சில்ப கம்மான நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது செயற்பாட்டின் கீழ் உரிய உப செயற்பாடுகள் மூன்றில் எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், 18 கைவினைஞர்கள் மற்றும் 12 நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுக்கான பரிசளிப்பு விழாவொன்று நடாத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் தும்பரா மாதிரி தொழில்துறையை ஊக்குவிக்கும் நோக்கம் அடையப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான

செயற்பாடுகளை மேற்கொள்ளாத காரணத்தினால் பௌதீக முன்னேற்றம் ஏற்படாவிடினும், 48 சதவீதமான பௌதீக முன்னேற்றம் வருடாந்த செயற்திறன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஊ) கலாச்சாரப் பெறுமானங்கள் மற்றும் உள்நாட்டு அறிவு தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் (101-02-05-29-2507)

இதன் கீழ், பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சிப் பிரிவை நிறுவுதல் மற்றும் தேசிய கலாச்சாரக் கொள்கையை தயாரித்தல் ஆகிய நடவடிக்கைகள் இவ்வருடத்தில் நிறைவடையவில்லை என்பதுடன், அவ்விரண்டு செயற்பாடுகளும் 2023ஆம ஆண்டுக்கான செயற்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. இதன்படி, தேசிய கலாச்சார கொள்கையை தயாரிப்பதற்காக பத்திரிகை விளம்பரங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா. 461,916 செலவு தேறிய செலவாக மாறியிருப்பதனை அவதானிக்க முடிந்துள்ளது.

3.2 பெறுகை அறிவிப்புக்கள்

(அ) அமைச்சின் கலாச்சாரப் பிரிவுக்கான சுத்திகரிப்பு சேவையை பெறுதல் - 2021/2022

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. அமைச்சின் கலாச்சாரப் பிரிவின் சுத்திகரிப்பு சேவை நடவடிக்கைகள் ரூபா. 147.000 மாத வாடகைக்கு 2021 டிசம்பர் 01ஆம் திகதி முதல் 2022 நவம்பர் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு 2022 மார்ச் 07ஆம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்ட போதிலும் சுத்திகரிப்புப் பணிகள் 2021 நவம்பர் 26ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட்டன.

ii. பெறுகை ஆவணத்தின் பிரகாரம் சுத்திகரிப்பு சேவையாளர்களின் தனிப்பட்ட தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அந்தத் தகவல்கள் பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன், பெறுகை ஆவணத்திற்கும் ஒப்பந்தத்திற்கும் இடையில் வருகை மற்றும் புறப்படும் நேரம் மற்றும் பணியில் அமர்த்தப்பட வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை போன்றவற்றில் வேறுபாடுகள் காணப்பட்டன.

iii. ஒப்பந்தம் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணங்களின்படி, 04 பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டிய போதிலும் 2022 ஜனவரி முதல் 2022 டிசம்பர் 31 வரை இரண்டு தொழிலாளர்கள் மட்டுமே பணியமர்த்தப்பட்டுள்ளதுடன், பணி மேற்பார்வையாளர் ஒருவர் எந்த மேற்பார்வைப் பணியையும் செய்யவில்லை. அவ்வாறான நிலையில் பெறுகை ஆவணங்களிலும், ஒப்பந்தத்திலும் அபராதக் கட்டணங்களை அறவிடுவது தொடர்பான உரிய விதிமுறைகள் உள்ளடக்கப்படாமல், தொடர்ந்து சேவை விதிமுறைகளை மீறிய போதிலும், இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மாத வாடகை முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

iv. துப்புரவு நடவடிக்கைகளுக்காக மாதாந்திர அடிப்படையில் வழங்குநர் வழங்க வேண்டிய உபகரணங்கள் மற்றும் பொருட்களின் விநியோகம் மற்றும் பயன்பாடு தொடர்பான நிபந்தனைகள் பெறுகை ஆவணம் மற்றும் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிரக்கவில்லை என்பதுடன், அந்த பொருட்களின் பதிவை பராமரித்துச் செல்வதற்கும், அந்த நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மகிந்த ராஜபக்ச தேசிய திரைப்படப் பூங்காவிற்கு சுத்திகரிப்பு சேவையை பெறுதல் -2022/2023

அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. சுத்திகரிப்பு சேவையைப் பெறுவதற்கு, சந்தை விலை ஒப்பீட்டுப் பெறுகை முறையைப் பயன்படுத்தி, அமைச்சின் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைமனுக் கோருவதற்கு அமைச்சின் சிறு பெறுகைக் குழுவின் ஒப்புதல் கிடைத்திருந்தாலும், பெறுகை வழிகாட்டுதல்கள் கோவைகள் 4.3.1 மற்றும் 4.3.2 இன் பிரகாரம், இந்தப் பெறுகைச் செயற்பாட்டிற்கான மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்கு ஏற்ப அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், விலைமனுக் கோரலுக்கு அழைக்கப்பட்ட 5 வழங்குநர்களில் ஒரு வழங்குநர் மட்டுமே பதிவு செய்யப்பட்ட வழங்குநராக இருந்தார்.

ii. 2021/2022 மற்றும் 2022/2023 சேவை ஒப்பந்தங்களின்படி செலுத்த வேண்டிய அதிகபட்ச மாதாந்த கட்டணம் முறையே ரூபா.798,000 மற்றும் ரூபா.831,000 ஆக இருக்க வேண்டிய போதிலும் மாறாக, அதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா. 79,800 ஆக காணப்பட்டதுடன், அந்தத் தொகையானது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் இருந்து அறிவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய கலை நிகழ்ச்சி மத்தியநிலையத்திற்கான சுத்திகரிப்பு சேவையைப் பெறுதல்

அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

i. பெறுகை வழிகாட்டுதல் கோவை 4.3 இன் படி, மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை என்பதுடன், கடந்த 11 மாதங்களுடன் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களின் பெறுமதியை அண்ணளவான மதிப்பீடாகக் கருத்தில் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தனது அவதானிப்புகளை வழங்கியது.

ii. சுத்திகரிப்பு சேவையைப் பெறுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட சேவை வழங்குநருடன் ஒப்பந்தம் செய்யப்படுதல் வேண்டும் என்ற போதிலும், 2022 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து சேவையினைப் பெற்று, 6 மாத கால தாமதத்திற்குப் பிறகு 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

iii. பெறுகை ஆவணங்களின் பிரகாரம் நாளாந்தம் பணியமர்த்தப்பட வேண்டிய மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 21 ஆக இருந்தாலும், 6 - 7 இற்கு இடைப்பட்ட ஊழியர்கள் அதாவது 32 சதவீதத்தினர் நாளாந்த அடிப்படையில் பணிக்கு வருவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன்படி, தேவையான எண்ணிக்கையிலான பணியாளர்களை ஈடுபடுத்தி தரமான சேவையை பெற்றுக்கொள்வதற்குஎந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதுடன், பணிக்கு வராத ஊழியர்களுக்கான செலுத்துகை தொகை மாத்திரமே குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

iv. சம்பளம் வழங்குவதில், பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூபா.1,400 மற்றும் பணி மேற்பார்வையாளருக்கு ரூபா.1,500 என்பதாக செலுத்துகை செய்யப்பட்ட போதிலும், பணிக்குச் சமூகமளிக்காமைக்காக வேண்டி பணம் குறைப்புச் செய்யும் போது நாள் ஒன்றுக்கு ரூபா.740 உம் மற்றும் பணி மேற்பார்வையாளருக்கு ரூபா.840 உம் கழிக்கப்படுதல் வேண்டும் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2022 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் ரூபா. 845,460 நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்க விலைமனுக்கோரல் வழிகாட்டுதல் விதிகளின்படி சேவை பெற்றுக்கொள்ளல் செய்யப்பட வேண்டிய போதிலும், கிராமோதய ஜனகலா கேந்திரவிற்கு 2022/2023 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்ளும் போது சேவை ஒப்பந்தத்தை முந்தைய ஆண்டின் வழங்குநரானவரையறுக்கப்பட்ட ரக்னா செக்யூரிட்டி லங்கா நிறுவனத்திற்கு வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக நேரடியாகவே தலைமைக் கணக்காளர் (தேசிய உரிமைகள் பிரிவு) மூலமாக 2022 டிசம்பர் 12 ஆம் திகதி சம்பந்தப்பட்ட வழங்குநருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) விலைமனுக்கோரல் தீர்மானத்தின் மூலம் அமைச்சின் மூலமாக நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளுக்காக உணவு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிறுவனங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ள போதிலும், அதற்கு முரணான வகையில் 2022 ஜனவரி 04ஆம் திகதி ரூபா.134,875 செலுத்தி நிகழ்ச்சியொன்றிற்கு சிற்றுண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

3.3 சொத்து முகாமைத்துவம்

இது சம்பந்தமாக, பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வித்யாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபத்தின் நிர்மாணப் பணிகள்

ரூபா. 1350 மில்லியன் (1-5 கட்டங்களாக) மதிப்பீட்டின் அடிப்படையில் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2017ஆம் ஆண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதி முடிப்பதற்கு திட்டமிடப்பட வித்யாலங்கார சர்வதேசபௌத்த மாநாட்டு மண்டபத்தின் 05 கட்டங்கள் வரையிலான கட்டுமானப் பணிகளுக்காக 2021 டிசம்பர் 31ஆம் திகதிக்குரூ.1245.18 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. செயல்திறன் அறிக்கையின்படி, கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில், அதற்கான செலவுகள் எதுவும் ஏற்படவில்லை. அது தொடர்பாக, 2022 நவம்பர் 29 அன்று நடத்தப்பட்ட நிலைய இடப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளது,

i. அஸ்திவாரத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக, பிரதான கட்டிடத்தைப் போலவே, முன் மற்றும் பின் படிக்கட்டுகள் நிலத்தினுள் இறங்கி அவற்றின் தரையோடுகள் கழன்று போய் காணப்பட்டதுடன், நுழைவு படிக்கட்டுகளுடன் இணைந்ததான சுவர்கள் வெடித்து கோடுகள் விழுந்திருந்தன. கட்டிட இறக்கத்தின் அதிகபட்ச அளவினை அளவிட, இணைக்கப்பட்ட படிகளில் மணல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.
ii. கட்டிடத்தின் உள்ளே வெளியிலிருந்து தண்ணீர் கசிந்து கொண்டிருந்ததுடன், மத்திய குளிரூட்டல் ஒழுங்கமைப்பு கொண்ட அறையிலும் தண்ணீர் கசிவு காணப்பட்டது. தண்ணீர் தொட்டிகள் அமைக்கப்பட்ட இடத்திலும் ஈரப்பதத்தின் மீது பல்வேறு செடி கொடிகள் வளர்ந்து, பாசியும் படிந்து காணப்பட்டது.

iii. கட்டிடத்தின் மேல் தளத்தின் பல்கனி யன்னல்களில் பதாமை (சீமெந்துக் கலவை) உதிர்ந்து போய் காணப்பட்டதுடன், நுழைவாயிலின் சுவர்கள் மற்றும் சிவிலினில் பறவைகளின் எச்சங்கள் படிந்து அழுக்குப் படிந்ததாக காணப்பட்டது.

iv. பிரதான கேட்போர் கூடத்தில் பொருத்தப்பட்டிருந்த இருக்கைகளில் பூஞ்சை உருவாகி இருந்ததுடன், பொருத்தப்பட்டுள்ள திரைச்சீலைகள் மாசுபட்டிருப்பதையும், சில திரைச்சீலைகள் பாதுகாப்பற்ற முறையில் தரையில் குவிக்கப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

v. கட்டிடத்தில் பொருத்தப்பட்ட தீயணைப்புக் கருவிகள் 2019.11.10 ஆம் திகதி காலாவதியாகிவிட்டதை அவதானிக்க முடிந்தது.

vi. கட்டிடம் அமைந்துள்ள வளாகத்தில் காடுகள் வளர்ந்திருந்துடன், கட்டிடத்தின் உள்ளேயும் பல்வேறு வகையான செடி கொடிகளும் வளர்ந்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

vii. இருப்பினும், இந்த மாநாட்டு மண்டப கட்டிடம் இந்த அறிக்கையின் திகதியாகும் போது கூடபயன்படுத்தப்படாமல் வெறுமையாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

(ஆ) அமைச்சின் புத்தசாசனப் பிரிவுக்குச் சொந்தமான 18-4263 இலக்கத்தைக் கொண்ட மோட்டார் வாகனம், 2019 அல்லது அதற்கு முன்னர் தொட்டு மகாநாயக்க சாரிகாராம வளாகத்தில் துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றது.

(**இ**) 2018 ஒக்டோபர் 10 ஆம் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் படி, அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்களின் பதிவு உரிமைகள் தொடர்பான பிரச்சனைகள் 2019 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், கலாச்சாரப் பிரிவின் மூலம் பயன்படுத்தப்பட்டு வரும் KU-1910,CAM-5384 மற்றும் 32-5805 இலக்கங்களையுடைய 03 வாகனங்களின் உரிமையை மாற்றிக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக இனங்காணப்பட்ட கலாசாரப் பிரிவுக்குச் சொந்தமான 301-4103,QY-1829 மற்றும் 18-7052 இலக்கங்களை கொண்ட 03 வாகனங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாகனங்கள் தொடர்பில் 2020 ஆகஸ்ட் 28ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 (II) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தகவல் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் காணப்பட்ட திஸ்ஸமஹாரம, ரன்மினிதென்னயில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ திரைப்படப் பூங்கா,2020 ஆகஸ்ட் 09ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2187/27 மூலம் தேசிய மரபுரிமை, கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைஞர்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டது. இதன்படி, வெகுஜன ஊடக அமைச்சின் மேலதிக செயலாளரின் இலக்கம் MMI / 05 / 08 / 16 மற்றும் 2020 டிசம்பர் 04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், 09 வாகனங்கள் ரன்மினிதென்ன திரைப்படப் பூங்காவிற்கு இணைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. அமைச்சுக்களுக்கு இடையே சொத்துக்களை மாற்ப்படுகின்ற போது மற்றும் ஒப்படைக்கும் போது 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இல 01/2020 இன் II ஆம் பகுதியின் 8ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் படி செய்திருக்க வேண்டும் என்றாலும், அதற்கு ஏற்ப உரிய மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. உரிய 09 வாகனங்களில், 04 வாகனங்கள் வெகுஜன ஊடக அமைச்சினால் தேசிய மரபுரிமை, கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமிய கலைஞர்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், எஞ்சிய வாகனங்களை சட்டப்பூர்வமாக ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iii. சம்பந்தப்பட்ட வாகனங்களை பொறுப்பேற்பதை சம்பந்தப்பட்ட அமைச்சின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், மஹிந்த ராஜபக்ஷ தேசிய திரைப்படப் பூங்காவின் பதில் பணிப்பாளர் நாயகத்தினால் இவ்விடயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.மஹிந்த ராஜபக்ஷ

தேசிய திரைப்படப் பூங்கா என்பது முறைப்படி நிறுவப்படாத நிறுவனமாக இருப்பதாலும், அதன் பணிப்பாளர் நாயகம் பதவியும் தற்காலிக நியமனம் என்பதாலும், வாகனங்களை ஏற்றுக்கொள்வது சட்டப்பூர்வமானது அல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2022 டிசம்பர் 31 நிலவரப்படி, கிராமோதய ஜனகலா கேந்திரவுக்குச் சொந்தமான 10 உத்தியோகபூர்வ இல்லங்களில், 7 உத்தியோகபூர்வ வீடுகள் அதிகாரிகளின் குடியிருப்புக்காகவும், மீதமுள்ள 3 வீடுகள் பிற தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 1ஆம் பிரிவின் படி, அனைத்து அரச இல்லங்களும் அட்டவணைப்படுத்தப்பட்ட இல்லங்கள் அல்லது பொது சேவை இல்லங்கள் என்பதாக வகைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் ஜனகலா கேந்திரவுக்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள் அதற்கேற்ப வேறுபடுத்தப்படவில்லை.

ii. தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் உப பிரிவின் படி, உத்தியோகத்தர் ஒரவரின் சம்பளத்திலிருந்து வசூலிக்கப்படும் வீட்டு வாடகையானது, அவருக்குக் கொடுக்கப்பட்ட வீட்டின் நியாயமான பொருளாதார வாடகையை விட கணிசமாக அதிகமாக இருந்தால், அவ்வதிகாரியின் சம்பளத்திலிருந்து நூற்றுக்கு சதவீதமாக வசூலிப்பதற்குப் பதிலாக உறுதியானதொரு வீட்டு வாடகையை வசூலிப்பதற்கு செயலாளரின் அனுமதி பெற வேண்டும் எனினும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

iii. தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 60.1 ஆம் உப பிரிவின் படி,ஒரு பதவிக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளைத் தவிர மற்றைய அனைத்து உத்தியோகபூர்வ வீடுகளினதும் குத்தகைக் காலம் 5 ஆண்டுகளில் காலாவதியாவதுடன் உத்தியோகபூர்வ இல்லங்களை உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்படும் போது, தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பிரகாரம் உரிய உத்தியோகத்தருடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளல் வேண்டும். மேலும் உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறிச் செல்லாவிட்டால், 1971 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கம் மற்றும் 1974 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க அரச இல்லங்கள் (உடமையை மீளப் பெற்றுக்கொள்ளல்) சட்டத்தின் கீழ் அவர்களை அவ்வில்லங்களில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும்.எவ்வாறாயினும், அவ்வகையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதை நிராகரித்து, உத்தியோகபூர்வ இல்லமொன்றில் வசித்து வருகின்ற உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பில் அதன்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. உத்தியோகபூர்வ இல்லமொன்று சங்கீதக் கற்கைக்குப் பயன்படுத்தப்படுவதாக கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டாலும், பயன்படுத்தாமல் மூடியிருப்பதன் காரணமாக கரையான் போன்ற பூச்சிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும், கட்டிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதை தடுத்துக் கொள்வதற்குப் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்குமாறும்,கிராமோதய ஜனகலா கேந்திரவின் பணிப்பாளரினால் புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மூலமாக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

3.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண இல 880 இன் படி, அரச அதிகாரிகளின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆவது அதிகாரத்தின்படி, அமைச்சின் புத்தசாசனப் பிரிவில் பிணை வைக்கப்பட வேண்டிய 25 அதிகாரிகளிடமிருந்து பிணைப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ) தம்பதிவ யாத்ரீகர்களின் பதிவு மற்றும் வழிகாட்டுதல்

i. தம்பதிவ யாத்திரை ஏற்பாட்டாளர்கள் அமைச்சில் பதிவு செய்வதன் மூலம், தம்பதிவ யாத்திரை சுற்றுப்பயண பங்கேற்பாளர்களுக்கு இலவச விசாவைப் பெற்றுக்கொள்வதை இலகுபடுத்தவும், கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் யாத்ரீகர்களுக்கு அதிக பாதுகாப்பை வழங்குதல் போன்ற வாய்ப்புக்கள் கிடைக்கின்ற போதிலும்அவர்களுக்கு கிடைக்கும் இவ்வசதிகள் குறித்து ஏற்பாட்டாளர்களையும் யாத்ரிகர்களையும் தெளிவூட்டும் முறையானதொர்ு வேலைத்திட்டத்தை அமைச்சினுள் முன்னெடுக்கப்படவில்லை. மேலும், இலவச விசா வசதிகளை வழங்குவதன் மூலம் செலவுகள் குறையும் சலுகைகள் யாத்ரீகர்களுக்கு கிடைக்கின்றதா என்பது குறித்து எந்தவொரு பின்தொடர்தல் நடவடிக்கையும் செய்யப்படவில்லை.

ii. தம்பதிவ யாத்ரிகர்கள் யாத்திரையில் ஈடுபடும் வேளையில் அடிக்கடி உடல்நலப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தல் மற்றும் பல்வேறு தடவைகளில் இறப்பதற்கும் நேரிடுவதால் அமைச்சின் மேலதிக செயலாளரினால் (நிரிவாகம்) சுற்றுப்பயண யாத்திரை ஏற்பாட்டாளர்கள் மற்றும் யாத்ரீகர்களுக்கான சுகாதார ஆலோசனையுடனான வழிகாட்டியொன்றை தயாரித்துத் தருமாறு சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததுடன், அதற்கிணங்க, சுகாதார மேம்பாட்டு பணியகம் பொருத்தமான வழிகாட்டுதலை தயாரித்து அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளது. ஆயினும்கூட, இந்த வழிகாட்டுதலை அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து தபதிவ ஏற்பாட்டாளர்களுக்கும் விநியோகிக்கப்பட்டது என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன் அதனோடு தொடர்புடைய பின்தொடர்தல் நடவடிக்கை எதுவும் செய்யப்படவில்லை.

iii. பதிவுசெய்யப்பட்ட ஏற்பாட்டாளர்களிடமிருந்து தம்பதிவ யாத்திரையில் ஈடுபடும் யாத்ரீகர்களுக்கு ஏற்படும் குறைபாடுகள் தொடர்பாக கண்டறிதல் நடவடிக்கையொன்றை அமைச்சின் மூலமாக மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் 2020 முதல் 2022 வரையான காலப்பகுதியில் யாத்திரிகர்களுக்கு ஏற்பாட்டாளர்கள் மூலமாக ஏற்பட்ட பல்வேறு சிரமங்கள் மற்றும் அநீதிகள் குறித்து 29 முறைப்பாடுகளும், யாத்திரை ஏற்பாட்டாளர்களால் 02 முறைப்பாடுகளும் அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டபோதிலும் அது தொடர்பில் அமைச்சின் மூலமாக எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) ரஜரட்ட சுற்றுலா விடுதி இல்லத்தை பரிசோதித்தல்

i. ரஜரட்ட சுற்றுலா விடுதி இல்லக் கட்டிடத்தின் கொன்கிரீட் தளங்கள் வெடிப்புக்குள்ளாகிக் காணப்படுவதுடன், சாரதி தங்குமிடக் கட்டிடத்தின் மின் நிறுவல்கள்

பழுதுபார்க்கப்பட்டவேண்டிய நிலையில் காணப்படுகிறது. மேலும், சுற்றுலா விடுதி இல்லத்தின் நுழைவு வீதி மழைநீரால் கழுவிச் செல்லப்படுவதன் காரணமாக வாகனங்களைஉள்நுழைவிப்பதில் சிரம நிலை காணப்படுகின்ற போதிலும் இதுவரை அதை சீரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ii. சுற்றுலா விடுதியை ஒதுக்கீடு செய்யும் கட்டணங்களுக்கு மேலதிகமாக பிரமுகர்களின் கட்டில் ஒன்றுக்கு 50 ரூபா என்கின்ற கட்டில் விரிப்புக் கட்டணம் சுற்றுலா விடுதிப் பொறுப்பாளரினால் அறவிடப்படுவதோடு, அதற்காக நிதிப்பிரமாணம் 168 (1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் முறையான பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை.

iii. நிதிப்பிரமாணம் 177 இன் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற அரச நிதிகளை நாளாந்தம் அல்லது கூடிய விரைவில் பரிமாற்றம் செய்ய வேண்டிய போதிலும் சுற்றுலா விடுதிக்கு சில்லறைச் செலவு முன்பணம் அல்லது வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணத்தினால் சில சந்தர்ப்பங்களில் கட்டில் விரிப்புக் கட்டணங்களால் வேறு செலவுகளும் செய்யப்பட்டுள்ளது.

(இ) சுதந்திர தின விழாவின் நடனங்களுக்கான ஆடைகளுக்கு அமைச்சின் கலாசாரத் திணைக்களம் ரூ. 4,429,800 தொகையைச் செலவிட்டிருந்ததுடன், அத்தகைய ஆடைகளை நடன ஆடைக் காப்பகத்தில் முறையாக வைக்காததாலும் நாடக ஆடை, ஆபரணங்களின் நிலுவைகளின் சரியான தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை.மேலும்,ஒப்பீட்டளவில் அதிக பொருட்செலவில் உருவாக்கப்படும் இந்த நாட்டிய ஆடைகளை வேறு மாற்று சந்தர்ப்பங்களுக்கு வெளி அமைப்புகளுக்கு கொடுத்து வருமானம் ஈட்டக்கூடியதாக இருந்த போதிலும் அதனை கவனத்தில் கொள்ளாமல் இந்த அணிகலன்கள் வெருமனே குவிந்து கிடப்பதை அவதானிக்க முடிந்தது.

(ஈ) திஸ்ஸமஹாராம, ரன்மினிதன்ன பிரதேசத்தில் 235 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ தேசிய திரைப்படப் பூங்காவானது, 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதுடன், அப்போது அது முறையான நிறுவனமொன்றாக நிறுவப்படவில்லை.இது தொடர்பில் அப்போதைய வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி 'மஹிந்த ராஜபக்ச தேசிய திரைப்படப் பூங்காவை அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனமாக மாற்ற வேண்டும்' என்ற தலையங்கத்திலான அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்திருந்தார். இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. சம்பந்தப்பட்ட அமைச்சரவை முடிவை செயல்படுத்துவதற்கான நிறுவனமாக ஊடகம் மற்றும் தகவல் அமைச்சுபெயரிடப்பட்டிருந்ததுடன், அவ்வமைச்சின் மூலம் அல்லது இத்திரைப்படப் பூங்கா அப்போது காணப்பட்ட தேசிய பாரம்பரிய உரிமைகள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைஞர்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் மூலம் சம்பந்தப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ii. மஹிந்த ராஜபக்ஷ தேசிய திரைப்படப் பூங்கா அமைந்துள்ள காணியானது அரச காணியாகக் காணப்படுவதுடன், இத்திரைபடப் பூங்கா ஊடக மற்றும் தகவல் அமைச்சின் கீழ் இருந்த காலப்பகுதியில் பல விசேட நிபந்தனைகளின் கீழ் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு மாற்றப்பட்டது. இந்த அறிக்கையின் திகதியாகின்ற போதும்,அக்காணி இன்னும் ஊடகம் மற்றும் தகவல் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் பெயரில் காணப்பட்டதுடன்,தேசிய பாரம்பரிய உரிமைகள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைஞர்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சிடம் இப்பூங்கா

ஒப்படைக்கப்பட்டு 02 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட போதிலும்,சம்பந்தப்பட்ட காணியினை அமைச்சிற்கு பொறுப்பேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) கிராமோதய ஜனகலா கேந்திரவின் செயல்நடவடிக்கைகள் மற்றும் செயற்திறன்கள் குறித்து பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2022 செப்டம்பர் 13ஆம் திகதிய இலக்கம் அசு/22/1294/620/007உடைய அமைச்சரவை தீர்மானத்தின் படி,கிராமோதய ஜனகலா கேந்திரவை கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டமொன்றாக முன்னெடுத்தச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரை செய்யப்பட்ட போதிலும், கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழான திட்டமொன்றாக செயற்படுத்தாமல் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியாகின்ற போதும் புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ii. முந்தைய மூன்றாண்டு காலப்பகுதியில் கிராமோதய ஜனகலா கேந்திரவிற்குச் செய்யப்பட்ட மொத்தச் செலவு 26,365,301 ரூபாவாக இருந்தபோதிலும், அந்தக் காலப்பகுதியில் பாடநெறிகளில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 112 ஆகக் குறைவாக இருந்ததுடன், மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான பொருத்தமான உத்திகள் பயன்படுத்தப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டது.

iii. 2020 ஒக்டோபர் 26 ஆம் திகதியுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 02/2020 இன் துணைப்பிரிவு 1 (vii) இன் பிரகாரம், நிறுவனங்களின் தற்போதைய சேவைத் தேவைகளின்படி அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்கு திருத்தங்கள் தேவைப்படும் போது, மிகவும் வினைதிறனான மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதற்குத் தேவையான குறைந்த பதவி எண்ணிக்கைகளை கண்டறிந்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். இருந்தபோதிலும், கலையரங்கம் இல்லாத ஜனகலா கேந்திரவிற்குமுகாமையாளர் பதவியொன்றும் கலையரங்க உதவியாளர் பதவிகள் இரண்டும்அங்கீகரிக்கப்பட்ட பதிவிகளாக முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், அப்பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தாமரைத் தடாக அரங்கம் (நெலும் பொகுன) உள்ளக அரங்கத்தின் செயல்பாடுகள் தொடர்பாக நடத்தப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2020 செப்டம்பர் 25 ஆம் திகதி தொடக்கம் புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் காணப்பட்ட தேசிய பாரம்பரிய கலை மற்றும் கிராமப்புற கலைஞர்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் தாமரைத் தடாக அரங்கம் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர், 2022 ஜூலை 22 ஆம் திகதிய 2289/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் மாற்றப்பட்டது. ஆயினும்கூட, 2022 டிசம்பர் 31 ஆம் திகதியாகின்ற போது கூட கலையரங்கம் குறித்த அமைச்சின் மூலம் முறைப்படி நிறுவப்பட்டிருக்கவில்லை என்பது கவனிக்கப்பட்டது.

ii. அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் SA / AMP / Deposit/Transfer இலக்கமுடைய 2020 ஜனவரி 09 ஆம் திகதிய கடிதத்தின் படி, அரங்கின் வருமானத்திற்கு வருவாய்த் தலைப்பொன்றை உருவாக்ககிக கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியாகின்ற போதும் அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

iii. 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் சேவைகளை வழங்குவதற்காக வசூலிக்கப்படும் பல்வேறு கட்டணங்களை அதிகரிக்காத அனைத்து அரச நிறுவனங்களும் சம்பந்தப்பட்ட நேரியல் அமைச்சின் செயலாளரது ஒப்புதலைப் பெற்று அக்கட்டணத்தை 15 சதவீதம் அல்லது அதற்கு மேல் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் மூலம் 2012 ஆம் ஆண்டு முதல் வசூலிக்கப்படும் கட்டணத்தை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. அரங்கினை வாடகை அடிப்படையில் வழங்கும் போது,ஒருசிலதரப்பினர் மட்டும் மானிய முறையிலான கேள்வி விலையில் வாடகைப் பணத்தை வசூலித்திருந்ததுடன் (தள்ளுபடிகளை வழங்குதல்) அத்தகைய சலுகை அடிப்படையிலான அறவீடுகளுக்காக திறைசேரியின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை.

v. வாடகை அடிப்படையில் அரங்கினை வழங்கும் போது அந்தந்த வாடகை வாங்கும் தரப்பினருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தின் முதலாவது தரப்பினர் சார்பில்அரங்கினை முன்பதிவு செய்து கொள்ளும் அதிகாரி மற்றும் அரங்கின் பிரதான நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரினால் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடப்பட்டுள்ளது. இருப்பினும், கலையரங்கு முறையான சட்ட ஆளுமை கொண்ட நிறுவனமாக நிறுவப்படாததால், ஒப்பந்தம் சட்டப்பூர்வமாக செல்லுபடியாகவில்லை.

vi. நிதி ஒழுங்குவிதி 3(1) இன் பிரகாரம், அரசாங்கத்தின் அனைத்து செயல்பாடுகளும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் குறிப்பிடப்பட வேண்டும் என்ற போதிலும், கலையரங்குடன் தொடர்பான செலவுகளை சுமப்பதற்காக அவ்வாறு திட்டமிடப்படவில்லை என்பதுடன், அச்செலவுகள் வருடாந்த மதிப்பீட்டில் சேர்த்து,பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை.

vii. மின் கட்டணம் செலுத்தும் போது, குறிப்பிட்ட மாதத்தின் மின் பட்டியல் கிடைத்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டிய போதிலும் தாமதமாக செலுத்தும் போது16 ஆவது நாளிலிருந்து 1.20% அளவிலான மாதாந்திர வட்டித் தொகையொன்றுநிலுவையான மின் கட்டணப் பட்டியலுக்கு அமைய வசூலிக்கப்படும் என்றும் மின் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படி இருந்தும், கலையரங்கின் மாதாந்திர மின்கட்டணம், 15 நாட்களுக்குள் செலுத்தப்பட்டு, தாமத வட்டியை வசூலிப்பதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.இதன் காரணமாக, 2022 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கான கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ரூபா. 460,419 தொகை கூடுதல் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. இது நிதி ஒழுங்குவிதிகள் 156 மற்றும் 210 (2) இன் படி செய்யப்பட வேண்டும்கவனிக்கப்பட்டது.

viii. மத்திய நிலையத்தில் மூன்று தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்களால் நடத்தப்படும் பரிமாற்ற ஆண்டெனாக்களுக்கான சேவைகளை வழங்குவதற்காக வசூலிக்கப்படும் வாடகை மற்றும் மின்சாரக் கட்டணம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- பரிமாற்ற ஆண்டெனாக்களை (Transmission Antena) பராமரிக்கும் இரண்டு தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் 2022 டிசம்பர் 31 இல் காலாவதியாகிவிட்ட போதிலும், புதிய ஒப்பந்தங்கள் எதுவும் செய்யப்படவில்லை. இதனால் கேள்வி விலைகளை திருத்தம் செய்து அதிக வருமானம் ஈட்டிக்கொள்ள அரங்கத்திற்கு காணப்பட்ட வாய்ப்பு இழக்கப்பட்டது.

- ஒப்பந்தத்தின்படி, வரி வாடகையை ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி செலுத்த வேண்டும் என்ற போதிலும், கலையரங்கின் மாத வருமான அறிக்கையின்படி, அந்தத் தொடர்பு நிறுவனங்கள் முறையாக தவணை செலுத்தவில்லை என்றும், ஒப்பந்தங்களில் நுழையும் போது,குத்தகைக் கூலி செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் அறவிடப்பட வேண்டிய அபராதத் தொகை குறிப்பிடப்படாமையினாலும் தாமதமான அபராதத் தொகையை வசூலிக்க முடியவில்லை.

- கலையரங்கம் மற்றும் ஒவ்வொரு தகவல் தொடர்பு நிறுவனத்திற்கும் இடையேயான ஒப்பந்தங்களின்படி, பரிமாற்ற ஆண்டெனாக்களை பராமரிக்க பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான செலவுகளை அந்த நிறுவனங்கள் கலையரங்கிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன், கலைரயங்கின் மூலமாக தொடர்புடைய கட்டணப் பட்டியல்கள் செலுத்தப்படுதல் வேண்டும். இருந்தபோதிலும், மேற்படி நிறுவனங்கள் முறையாக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாததன் காரணமாக, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான தொகையாக 1,255,465 ரூபா அறவிடப்பட வேண்டியிருந்தது.

ix. மத்திய நிலைய வளாகத்தில் 400 சதுர அடி பரப்பளவிலான நிலப்பகுதியில் இராணுவத்தால் சிற்றண்டிச்சாலையொன்று பராமரிக்கப்பட்டு வருவதுடன்,அதற்காக சம்பந்தப்பட்ட இராணுவத்திடம் இருந்து வாடகை எதுவும் வசூலிக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. சிற்றுண்டிச்சாலை நலன்புரி அடிப்படையில் நடத்தப்படுவதாலும், சிற்றுண்டிச்சாலையின் செயல்பாடுகள் கலையரங்கின் செயல்பாடுகளிலிருந்து தனித்தனியாகப் பராமரிக்கப்படுவதாலும், வளாகத்திற்கு வாடகை எதுவும் செலுத்தப்படுவதில்லை என்று சம்பந்தப்பட்ட இராணுவப் பிரிவு கணக்காய்வுக்கு தெரிவித்துள்ளது.இருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட நில வளாகம் பொருளாதார மதிப்பில் மிகவும் உயர்வானது என்பதும், மேற்படி வளாகத்துடன் தொடர்புடைய துப்புரவு, மின்சாரக் கட்டணம்,தண்ணீர் கட்டணம் போன்றவற்றை கலையரங்கமே ஏற்றுக்கொள்வதால், மதிப்பிடப்பட்ட மதிப்பின் அடிப்படையில் வாடகைத் தொகையொன்று வசூலிக்கப்பட வேண்டும் என நிரூபணமானது.

(எ) மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக நியதிச்சட்ட சபைகளுக்கிடையில் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

i. மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக நியதிச்சட்ட சபையினால் முன்னெடுக்கப்படும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வேறு நிறுவனங்கள் இருப்பதால், மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கென தனியான செயற்திட்டத்தை பேண வேண்டிய அவசியமில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

ii. மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக நியதிச்சட்ட சபைகளின் அலுவலக வளாகத்திற்காக கண்டி மாநகர சபைக்குள் அமைந்துள்ள கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. தொடர்புடைய குத்தகை ஒப்பந்தத்தின்படி, குத்தகை ஒப்பந்தத்தின் முடிவில் மதிப்பிடப்பட்ட மதிப்பின்

அடிப்படையில், சொத்தில் செய்யப்பட்ட ரூபா.6,194,607 பழுதுபார்ப்பு மற்றும் கட்டுமானத்திற்காக குத்தகைதாரரிடம் கட்டணம் வசூலிக்க அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், புதிய குத்தகை ஒப்பந்தத்தில் அந்த நிபந்தனைகளைச் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அமைச்சிற்கு முழுமையாகச் சொந்தமான கலாச்சார பாதுகாப்பு மற்றும் கட்டுமான (தனியார்) நிறுவனம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

i. கலாச்சார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களில் கட்டிட நிருமாணம் மற்றும் பராமரிப்பினை திறமையாக மேற்கொள்ளும் நோக்கில் அமைச்சுக்கு முழுமையான பங்கு உரிமைகள் உள்ளபடி பதிவு செய்யப்பட்டிருந்த கலாச்சார பாதுகாப்பு மற்றும் கட்டுமான (தனியார்) நிறுவனத்தின் 2018/2019, 2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022 நிதி ஆண்டுகளுடன் தொடர்பான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. தற்போது, நிறுவனத்தின் நடவடிக்கைகள் முற்றிலும் செயலற்ற நிலையில் இருப்பதால், நிறுவனத்தை கலைக்குமாறு 2021 ஜூலை 05 ஆம் திகதி பிரதமரின் செயலாளரின் மூலமாக கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இந்த அறிக்கையின் திகதியாகின்ற போதும் கலைப்பு செயல்முறை செயல்படுத்தப்படவில்லை.

4. நல்லாட்சி

4.1 உள்ளக கணக்காய்வு

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) மற்றும் 40(3) பிரிவுகளின் பிரகாரம் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரினால் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட 07 கணக்காய்வு வினாக்கள் தொடர்பான கருத்துத் தெரிவிப்பினை சமர்ப்பிக்கவில்லை.

(ஆ) 2019 ஜனவரி 12 திகதியிடப்பட்டDMA/01-2019 ஆம் இலக்கமுடைய முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, நிதிப்பிரமாணம் 134(2) இல் குறிப்பிட்டுள்ள படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி ஆலோசனை பெற்றிருக்க வேண்டிய போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) அமைச்சின் கலாசாரத் துறைக்கு ஏறக்குறைய ஆயிரம் பணியாளர்களும், நாடு முழுவதிலும் தாபிக்கப்பட்ட 208 கலாசார நிலையங்கள் இயங்கி வந்தாலும் அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுப் பதவி பல ஆண்டுகளாக வெற்றிடமாக உள்ளது.

5. மனித வள முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் புத்தசாசனப் பிரிவிற்கு 219 அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களும் 164 உண்மையான பணியாளர்களும் காணப்படுவதுடன் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை 55 ஆகும். அவற்றில் பணிப்பாளர் பதவியொன்றும், பொறியியலாளர்

மற்றும் உதவிப் பொறியாளர் பதவிகள் 02உம், உதவிச் செயலாளர் பதவிகள் 3 உம் வெற்றிடமாக இருந்தன. மேலும், 13 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 12 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள், 9 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 07 சாரதி பதவிகள் ஆகியவற்றில் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை அமைச்சின் செயலாற்றுகையில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்படுகின்றது.

(ஆ) கலாச்சாரப் பிரிவுக்கு 201 உதவிக் கலாச்சார ஊக்குவிப்பு உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும், உண்மையான எண்ணிக்கை 133 ஆக காணப்பட்டதுடன், 68 பதவிகள் அதாவது 34 சதவீதமான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், கலாச்சாரப் பிரிவுக்கான அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 141 ஆக காணப்பட்ட போதிலும் உண்மையான எண்ணிக்கை 187 ஆக உள்ளதால் 46 பதவிகளில் அதாவது, 33 சதவீதமானவை அதிகமாகக் காணப்பட்டது.

(இ) அமைச்சிடம் 208 கலாச்சார மத்தியநிலையங்கள் காணப்பட்டாலும், மத்திய நிலைய காவலர்களாக 297 பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். 2020 டிசம்பர் 10 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் தனிப்பட்ட முறையில் வைத்திருப்பவருக்கு மட்டும் 106 காவலர்கள் அனுமதிக்கப்பட்ட காரணத்தினால் இந்த உபரித் தொகை பதிவாகியிருந்தது. மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது, மேலதிக 89 காவலர்களின் சேவையை வினைத்திறனான முறையில் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இம் மத்தியநிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கைரேகை இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை 2021 ஆம் ஆண்டு கணக்காய்வு அறிக்கைகளின் மூலமாக சுட்டிக்காட்டியிருந்தாலும், அமைச்சின் மூலமாக இது விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மகிந்த ராஜபக்ச தேசிய திரைப்படப் பூங்காவிற்கான "அலுவலக உதவியாளர் பதவி" என்பது அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றல்ல என்ற போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியாகின்ற போதும் 02 பேர் அந்த பதவியில் இன்னும் பணியாற்றி வருகின்றனர்.

ஒப்பம்: எச்.எம். ரணசிங்க பண்டா
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக

அத்தியாயம் 04

செயல்திறன் குறிகாட்டிகள்

4.1 *நிறுவன செயல்திறன் குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)*

விசேட சுட்டிகள்	வருடாந்த வரவுசெலவு ஒதுக்கீடு (ரூபா.மில்)	நிதி முன்னேற்றம்		எதிர்பார்க்கப்பட்ட சதவீதமாக (%) உண்மையான வெளியீடு			ஏனைய
		உண்மையான செலவு (ரூபா.மில்)	ஒதுக்கீடுகளின் சதவீதமாக	100% -90%	75% - 89%	50% - 74%	
1. தேசிய மரபுரிமை மேம்பாட்டுக்காக டிஜிரல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்.- முதன்மை அடிப்படையின் கீழ் புலனாகும் மற்றும் புலனாகாத தேசிய மரபுரிமை வீடியோக்களின் எண்ணிக்கை	5.5	5.5	100.00	√			இதற்கு தேவையான மேலதிக ஒதுக்கீடுகள் ரூபா.மில்லியன் 1.5 ஐ செலவு தலைப்பு 101-2-09-018-2509 மூலம் மாற்றம் செய்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
2. ஆதிவாசிகள்/ விசேட தனித்துவம் கொண்ட மக்களை பாதுகாக்கும் சேவைகளை நடாத்தல்: பாதுகாப்பு சேவைகள் பெறுகின்ற ஆதிவாசி குடும்பங்களின் எண்ணிக்கையை சதவீதமாக அதிகரித்தல்.	5.5	4.82	87.64	√			
3. தம்பான மக்கள் மரபுரிமை நிலையம் பராமரித்தல்: சம்பளம் செலுத்தும் பதவியணி	1.5	1.5	100.00	√			

4. தேசிய மரபுரிமை ஆய்வுகள் மற்றும் பாதுகாப்பு அலகுகளை தாபித்தல்(தேசிய மரபுரிமைகளை அடையாளம் காணுதல்) பாதுகாக்கப்படும் மரபுரிமைகளின் எண்ணிக்கை	0.25	0	0.00				03/2022 இலக்க சுற்றுநிருபம் பிரகாரம் இந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்த இயலாது
5. ஆதிவாசி மக்களின் மரபுரிமைகளை பாதுகாத்தல், - புனரமைக்கபட்ட நூதனச்சாலை மற்றும் அதன்மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தின் சதவீதமான வளர்ச்சி	0.5	0	0.00				03/2022 இலக்க சுற்றுநிருபம் பிரகாரம் இந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்த இயலாது
6..நாட்டின் மரபுரிமை பிள்ளைகளுக்காகும் - நிகழ்ச்சித்திட்டம். பிள்ளைகளின் கலைதுறை தொடர்பான இரசிக்கும் ஆர்வத்தை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். கலாச்சார ஆய்வுகூடங்களை கேந்திரமாக கொண்டு நடாத்தப்படுகின்ற செயற்பாடுகளை மேம்படுத்தல்	0.1	0	0.00				03/2022 இலக்க சுற்றுநிருபம் பிரகாரம் இந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்த இயலாது
7. பிரசித்திபெற்ற கலைஞர்களை சார்ந்த கலை கிராமங்களை உருவாக்குதல். - நிலையத்தை மையமாகக்கொண்டு மேற்கொள்கின்ற புதிய கலைக் கலாச்சார செயற்பாடுகளை விருத்தி செய்கின்ற சதவீதம்	0.1	1.13	0.00				101 - 2-09-18- 2509 இலக்கம் கொண்ட செலவு தலைப்பில் ரூபா.மில். 0.9 மற்றும் 101 - 2-09-019- 2509 இலக்கம் கொண்ட செலவு தலைப்பில் ரூபா.மில் 0.18 ஒதுக்கீடுகள் பிரசித்திபெற்ற கலைஞர்களை சார்ந்த கலைக்கிராமங்களை உருவாக்குதல் என்ற கருத்திட்டத்தின் கீழ் ஹந்தபான்கொட கலாச்சார ஆய்வுகூடத்தின் 2021 பொறுப்புகளை தீர்ப்பதற்காக

							மாற்றப்பட்டது. 03/2022 இலக்க சுற்றுநிருபம் பிரகாரம் இந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்த இயலாது .
8. உள்நாட்டை அடிப்படையாகக்கொண்ட நூலாசிரியருக்கான பங்கினை செலுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகளுக்கமைவாக முறையான பொறிமுறை அறிமுகப்படுத்தல்: கூட்டு சங்கங்கள் தாபித்தல் தொடர்பில் புகைப்பட சங்கங்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.	0.52	0	0.00				101-2-09-17-2509 இலக்கம் கொண்ட செலவு விடயத்தின் கீழ் ரூபா.மில்.0.18 ஆன ஒதுக்கீடு இந்தக் கருத்திட்டத்திடம் மாற்றப்பட்டது.
9.கலைஞர்களின் தரவு முறைமை தாபித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்:- பல்வேறு துறைகளில் பதிவு செய்யப்படுகின்ற உள்நாட்டு கலைஞர்களின் எண்ணிக்கை சதவீதமாக விருத்தி செய்தல்	4.1	1.04	25.37				101-2-09-17-2509 ஆம் இலக்க செலவு விடயத்தின் படி ரூபா.மில்லியன் 0.9 ஆன ஒதுக்கீடு இந்தக் கருத்திட்டத்திடம் மாற்றப்பட்டது. 101-2-09-015-2509 இலக்கம் கொண்ட செலவு விடயத்திடம் ரூபா.மில்லியன் .1.5 ஆன ஒதுக்கீடு இந்தக் கருத்திட்டத்திடம் மாற்றப்பட்டது.
10. கிரோமதய ஜனகலா கேந்திரம்: 1. அபிவிருத்தி செய்யப்பட்ட கற்கைநெறிகளின் எண்ணிக்கை 2. புலனாகாத மரபுரிமைகளின் பாதுகாப்பு பொருட்டான நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 3. மனித வளங்களின் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	4	4	100.00	√			

11. கந்த உடரட்ட மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான சர்வதேச நியதிச்சட்டசபை: ஊவா பரணகம, கொரதேகும்புர கிராமம், அங்கம்பொர பாதுகாப்புக் கலை – பாதுகாக்கப்பட்ட கிராமமாக மேம்படுத்தல்	5.4994	5.4619	99.32	√			
12.தொல்லயில் திணைக்களம்- பாதுகாக்கப்பட்ட கட்டிட அலகுகளின் எண்ணிக்கை - ஆய்வு செய்யப்பட்ட தொல்லியல் இடங்களின் எண்ணிக்கை - பராமரிக்கப்பட்டு பேணுகின்ற இடங்களின் எண்ணிக்கை மற்றும் நினைவுச் சின்ன வேலைத்தலங்களின் எண்ணிக்கை	116.281	85.438	73.48			√	
14.அபேகம மஹவலவ்வ கட்டிடத்தின் மின் முறைமை தாபிக்கப்படுதல். – விற்பனை நிலையம் மற்றும் அறையுடன் கூடிய சதுர அடி 600 ஆன 2 விற்பனை நிலையங்களை நவீனமயப்படுத்தல், பெயர்பலகை நவீனமயப்படுத்தி புனரமைத்தலின் சதவீதமான வளர்ச்சி	9.5	9.5	100.00	√			
15.மகிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி சினமா பூங்கா- கலையகத்தின் புனரமைப்பு, நகர மற்றும் கிராமிய காட்சிகளின் பின்னணிகளை பழுதுபார்த்தலின் சதவீதமான வளர்ச்சி	24	24	100.00	√			

அத்தியாயம் 05

நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை

5.1 இனங்கண்டுள்ள உரிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை குறிப்பிடுக

இலக்கு	குறிக்கோள் / இலக்கு	சாதனைகள் சுட்டி	இதுவரை அடைந்துள்ள சாதனை விகிதம்		
			0% - 49%	50% - 74%	75% - 100%
(11.4.) உலக கலாசார மற்றும் இயற்கை மரபுரிமைகளை பாதுகாத்தல் மற்றும் பாதுகாக்க எடுக்கும் முயற்சிகளை வலுப்படுத்தல	1. தேசிய மரபுரிமைகளை ஊக்குவிப்பதற்கான டிஜிரல் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் தேசிய மரபுரிமைகள் டிஜிரல் ஊடக பயன்பாட்டில் பாதுகாக்கப்படுதல் மற்றும் தேசிய மரபுரிமை இடங்களின் பொருட்டு உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவரும் தன்மையை அதிகரித்தல்	டிஜிரல் உள்ளீட்டு சாதனத்தில் உள்ளீர்க்கும் பொருட்டு தேசிய மரபுரிமைகளை பாதுகாக்கும் 22 வீடியோக்களைத் தயாரித்தல் மற்றும் 2021 தயாரிக்கப்பட்ட 30 வீடியோக்களை உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக் கிடையில் பிரபல்யப் படுத்தும் பொருட்டு நிறுவனங்களை ஒன்றிணைத்து வீடியோ நாடாக்களை பிரச்சாரம் செய்தல்			√
	2. ஆதிவாசிகள்/ தனித்துவ அடையாளம் உடைய மக்களை பாதுகாப்பதற்கான சேவைகளை வழங்குதல்	பாதுகாப்பு சேவைகளை வழங்கப்பட்டு ஆதிவாசி மக்கள் குடும்பங்களின் எண்ணிக்கை சதவீதமாக அதிகரித்தல்			√

	ஆதிவாசிகளுக்கான தினத்தை கொண்டாடுதல் மற்றும் வருடாந்த சாந்தி கர்ம விடயங்களை மேற்கொள்ளுதல்				
	ஆதிவாசிகளின் மக்கள் மரபுரிமைகளை பாதுகாத்தல் நடவடிக்கைகளு-க்கான சேவைகளை வழங்குதல் (தளுகான கள கற்கை)				√
	3. தம்பான மக்கள் மரபுரிமைகள் நிலையத்தைப் பராமரித்தல் தம்பான மக்கள் மரபுரிமைகள் நிலையத்தில் பணியாற்றும் பதவியணிக்கு சம்பளம் செலுத்தல் மற்றும் பொதுவான பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்	சம்பளம் செலுத்துகின்ற பதவியணி			√

	3. கலைஞர்களின் தரவு முறைமை தாபித்தல் மற்றும் அதனை இற்றைப்படுத்தி பராமரித்தல் பல்வேறு துறைகளில் பதிவாகியுள்ள உள்நாட்டு கலைஞர்களின் எண்ணிக்கையை சதவீதமாக அதிகரித்தல்	நாட்டில் எல்லா பிரதேச செயலக பிரிவுகளின் மட்டத்தில் 2000 ம் அறிவிப்புகளை காட்சிப்படுத்தல்	√		
	4.கலைஞர்களுக்காக திடீர் விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதி திட்டம் நடைமுறைப்படுத்தல்	திடீர் விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதி திட்டத்தினைப் பெற்றுக்கொண்ட 550 பேர்களில் 41 பேர் நலன்களை பெற்றுள்ளனர்.	√		
	6.டவர்ஹோல் தியேட்டர் அறக்கட்டளை அருங்கலை கலைஞர்களுக்காக மாதாந்தம் ஓய்வூதியம் வழங்குதல்	99 கலைஞர்களுக்கு படி வழங்குதல்			√
(4.1) பயனுள்ள கற்கை நலன்களை பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில்	கற்கை ஆண்டுகள் 2014/15, 2015/16, 2016/17, 2017/18, 2018/19 மாணவர்களின் டிப்ளோமா அளிப்பு	172 டிப்ளோமா பெறுநர்களுக்கு டிப்ளோமா வழங்குதல்			√

அனைத்து பெண் பிள்ளை களையும் ஆண் பிள்ளை களையும் இலவச, சமமான மற்றும் தரத்தில் உயர்ந்த, ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை கல்வியை பூர்த்தி செய்து ள்ளமையை உறுதிப்படுத்தல் (4.2) அனைத்து பெண் பிள்ளை களுக்கும் ஆண் பிள்ளை-களுக்கும் தரத்துடன் கூடிய முன் அபிவிருத்தி, பராமரிப்பு சேவைகள் மற்றும் முன் ஆரமப் கல்வி கற்பதற்கான வாய்ப்பு இருத்தல் வேண்டும். மேலும் அதன் மூலம் அவர்கள் ஆரம்ப கல்விக்கு தயாராக	வைபவம் நடாத்தப்படல்	1000 ம் பிரதிகள்			
	நாடகம் கீ 16 உள்ளடக்கிய குறுந் தட்டுகள் வெளியிடல்				√
	கிராமோதய ஜனகலா கேந்திரய அழகியற் கற்கைநெறிகள் பொருட்டு மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கற்கை ஆணைக்குழுவினதும் தேசிய பயிலுநர் அதிகார சபையினதும் அனுமதியுடன் தேசிய திறன் மட்டத்தினை பெற்றுக்கொள்வதற்கு முடியுமான நிறுவனமாக உருவாக்குதல்.	1- அபிவிருத்தி செய்யப்பட்ட கற்கைநெறிகளின் எண்ணிக்கை			√
	சித்திரம் மற்றும் சிறபக்கலை கற்கைநெறிகளின் பொருட்டு மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினதும் தேசிய பயிலுநர் பயிற்சி அதிகார சபையினதும் அனுமதியுடன் தேசிய திறன் 4.5 மற்றும் 6	புலனாகாத மரபுரிமைகளின் பாதுகாப்பு பொருட்டான நிகழ்ச்சித்திட்டங்கள்			√

இருப்பதை உறுதிப்படுத்தல்.	ஆவது மட்டங்களை பெற்றுக்கொள்ளுதல்				
	புதிய கற்கைநெறிகளை ஆரம்பித்தல் - (சித்திரம் மற்றும் சிற்பக்கலை, சங்கீதம், பன்சலை சித்திரங்களை பாதுகாக்கும் கற்கைநெறிகளை ஆரம்பித்தல்				√
	8.மகிந்த ராஜபக்ஷ தேசிய நெலி சினிமா பூங்கா, ரன்மினிதென்ன அனைவராலும் செலவிட முடியுமானதும் நியாயமானதுமான அணுகுமுறையின் பொருட்டு கவனம் செலுத்தப்பட்டு, பொருளாதார அபிவிருத்திக்கு மற்றும் மனிதவள நல்லிருப்புக்கு ஒத்துழைப்பு வழங்குதல், என்பவற்றுகு பிராந்திய மற்றும் எல்லைகளு-க்கிடையில் உட்கட்டமைப்பு வசதிகள் அடங்கலாக தரமான, நம்பகமான,	கலையகத்தின் புனரமைப்பு, நகர மற்றும் கிரமிய பின்னணி காட்சிகளின் பழுதுபார்த் தலை சதவீதமாக விருத்தி செய்தல்.			√

	நிலையான, ஈடுகொடுக்க முடியுமான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்				
SDG 9 தரணிய உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புதல் ,இணைந்த மற்றும் நிலையான கைத்தொழிலை மேம்படுத்தலும் நவினமயப்படுத்தல் மூலம் போஷித்தலும்	மலைநாட்டு மரபுரிமை பாதுகாப்பதற்கான இடைக்கால நியதிச்சட்ட சபை அச்சிடப்பட்ட நூல்கள், நாடகம், சினமா, சித்திரம் மற்றும் சிற்பங்கள், சங்கீதம் மற்றும் நடன கைத்தொழில் மேம்பாட்டுக்கான வசதிகளை அளித்தல்	நிதிவளங்கள்: (பொது, தனியார்) மரபுரிமை வகைகள் (கலாச்சார, இயற்கை) மற்றும் அரச மட்டம் (தேசிய, பிரதேச மற்றும் பிராந்திய/மாநகர மூலம் எல்லா கலாச்சார மற்றும் இயற்கை மரபுரிமைகளின் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் பேணுதலுக்கான மொத்த தனிநபர் செலவினம்			√
11.4 உலகத்தின் இயற்கையான மற்றும் கலாச்சார மரபுரிமைகளை பாதுகாத்தல், பாதுாகப்பதற்கான முயற்சிகளை வலுப்படுத்தல்.	தேசிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்காக உள்ள நிறுவனங்களில் விளைவுத்திறனை அதிகரிப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்				√
	ஆக்கப்படைப்புடன் கூடிய படைப்புகளை பாதுகாத்தல் மற்றும் காட்சிப்படுத்துவதற்காக விசேட வசதிகளை அளித்தல்				√

	10 தொல்பொருளியல் திணைக்களம் உலகளாவிய ரீதியாக முக்கியத்துவம் கொண்டுள்ள தொல்லியல் இடங்களை உலக மரபுரிமை நிலைக்கு உயர்த்தல்	இடங்களின் எண்ணிக்கை- நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.			√
11.4 நாட்டின் கலாச்சார மற்றும் இயற்கையான மரபுரிமைகளை பாதுகாத்தல், பாதுகாப்பதற்கான முயற்சிகளை வலுப்படுத்தல்.	சமூகம், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக பிள்ளைகளின் பங்களிப்புடன் இடங்கள் சார்ந்த செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்	இடங்களின் எண்ணிக்கை- நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.		√	
	உள்நாட்டு வெளிநாட்டு மக்களை அறிவுறுத்தலுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்	நடாத்தப்பட்ட காட்சிகள், அச்சிடப்பட்ட நூல்கள், தயாரிக்கப்பட்ட வீடியோ நிகழ்ச்சித்திட்டங்கள்		√	
	தொல்லியல் கட்டளைச் சட்டம் திருத்தம் செய்தல்	தொல்லியல் கட்டளைச் சட்டத்திற்கமைவாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்		√	
	11 அபேகம அபேகம வளாகத்தின் புனரமைப்பு நடவடிக்கைகள்	நவீனமயப்படுத் திய கட்டிடங்கள்			√
11.நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள்	மஹவலவ்வ கட்டிட கூரையின் வடிம்பு பலகை, மலைநீர் வநிந்தோடும் குழாய்	அலங்காரப்படுத்திய வளாகம்			√

	மற்றும் நீர்வழிந்தோடும் குழாய்களை பொருத்துதல்				
	03 விற்பனை நிலையம் கொண்டமைந்த (சதுர அடி 450) விற்பனை நிலையங்களை நவினமயப்படுத்தல் (06 விற்பனை நிலையங்களின் பொருட்டு)	நவீனமயப்படு-த்திய கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள்			√
	காலி மரபுரிமை மன்றம் உலகத்தின் இயற்கை மற்றும் கலாச்சார மரபுரிமைகளை பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பதற்கான முயற்சிகளை வலுப்படுத்தல்	நிதிவளங்கள்: (பொது, தனியார்,) மரபுரிமை வகைகள் (கலாச்சார, இயற்கை) மற்றும் அரச மட்டம் (தேசிய, பிரதேச மற்றும் பிராந்திய/மாநகர மூலம் எல்லா கலாச்சார மற்றும் இயற்கை மரபுரிமைகளின் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் பேணுதலுக்கான மொத்த தனிநபர் செலவினம்			

5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துக்கொள்ளும் சாதனையையும் சவால்களையும் சுருக்கமாக குறிப்பிடுதல்

புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் (தேசிய மரபுரிமை பிரிவில்) தேசிய மரபுரிமைகளை அடையாளம் காணுதல் மற்றும் பாதுகாப்பதற்காக நீண்டகால குறிக்கோள்களை செயற்படுத்துவதற்கு விஷேடமான ஒரு முறையியல் இல்லாமையானது இந்தத் துறையில் காணக் கூடிய ஒரு மாபெரும் குறைபாடாகும். இதற்கு நிலையான ஒரு தீர்வாக தேசிய மரபுரிமை மேம்பாட்டுக்காக டிஜிட்டல் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தியதன் கீழ் இலங்கையின் தேசிய மரபுரிமைகள் உள்ளடங்கும் வகையில், தேசிய மரபுரிமைகளை உள்நாட்டவர்களுக்கும் மற்றும் வெளிநாட்டவர்களுக்கும் மிக கவர்ச்சியாக மற்றும் பயனுள்ளதாக அனுபவிப்பதற்கு வாய்ப்பு அளிப்பதன் ஊடாக தேசிய மரபுரிமைகளை பாதுகாக்கும் முயற்சியை வலிமைப்படுத்தும் நிலையான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்ள முடிந்தமையும் ஒரு விஷேடமான வெற்றியாகும்.

நாட்டில் அனைத்து மாவட்டங்களும் கலை துறைகளும் கிராமிய கலைஞர்களும் உள்ளடங்கும் வகையில் நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் பரந்து வாழ்கின்ற கலைஞர்களின் முற்று முழுதான விபரங்கள் அடங்கிய தகவல் முறைமையை தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டதுடன், இயங்கலையின் முறையின் கீழ் நாடு முழுதிலுமுள்ள 3500 கலைஞர்களின் தகவல்கள் தரவு முறைமையில் பதிவு செய்யப்பட்டது. தற்போது தரவு முறைமையில் கலைஞர்கள் பதிவாகும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகிறது. பிராந்திய ரீதியாக வாழ்கின்ற கலைஞர்களை இயங்கலை முறையில் தரவு முறைமையில் பதிவு செய்கின்ற போது அவர்களின் தொழில்நுட்ப படிப்பறிவின் பற்றாக்குறையால் சவாலுடன் கூடிய நிலைமையை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

கலாகரு காப்புறுதி கருத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 550 கலைஞர்கள் 2021 ஆம் அண்டில் காப்புறுதி பெற்றுக்கௌாவதற்கு பதிவாகியதுடன், அவர்கள் 2022 ஆம் ஆண்டில் நலன்களை பெற்றுக்கொண்டனர். இந்தக் கருத்திட்டத்தை முன்கொண்டு செயற்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாமை இதன் போது எதிர்நோக்கிய பாரிய சவாலாகும்.

பாஹியங்கலையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புகளை பாதுகாக்கப்பட்டு தேசிய நூலகத்தில் காட்சிப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொண்ட போதிலும், ஆண்டு முழுவதும் எதிர்நோக்கிய அந்நியச் செலாவணி பிரச்சினை காரணமாக தேவையான இயந்திரம் நாட்டுக்கு கொண்டு வருவதற்கு முடியவில்லை. அதன்படி இந்தக் கருத்திட்டம் முடிவுறத்துவதற்கு இயலவில்லை.

புதிய அமைச்சு 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சின் பிரதான நோக்கங்கள் மற்றும் பணிகளுக்கமைவாக தேசிய மரபுரிமைகளை பாதுகாத்தல், கலாச்சாரம், இலக்கியம் மற்றும் கலை என்பன அதிக தரத்துடனும் உயர் வினைத்திறனுடனும் பராமரிப்பதற்கு தேவையான செயற்றிட்டம் தயாரிக்கப்படினும், அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட 03/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் வழிகாட்டலுக்கமைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டமையால், 2022 ஆம் ஆண்டின் செயற்றிட்டம் நூற்றுக்கு நூறு வீதத்தால் செயற்படுத்த முடியாத போதிலும், காணப்பட்ட நிலைமையுடன் ஒப்பிடுகையில் திருப்தியடையலாம்.

அத்தியாயம் 06
மனிதவள விபரம்

6.1. பதவியணி முகாமைத்துவம் 2022.12.31 ஆம் திகதியில்

		அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடங்கள்	மிகை
சிரேட்ட		09	04	05	-
மூன்றாம் நிலை		03	00	03	-
இரண்டாம் நிலை	அபி.அலுவலர்	28	58	-	30
	முக.சேவை அலுவலர்	08	04	04	-
ஆரம்ப		13	02	11	-

6.2 இணைக்கப்பட்டுள்ள எல்லா விடய அலுவலர்களின் பொருட்டும் வெவ்வேறாக கடமைகள் கையளிக்கப்பட்டுள்ளதால், நாளாந்த கடமைகள் தாமதமின்றி மேற்கொள்ளலாம்.

6.3 மனிதவள அபிவிருத்தி

தொடர் இலக்கம்	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றுவிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூபா 000) (உள்நாடு)	நிகழ்சிசத்திட்டத்தின் இயல்பு (வெளிநாடு)	வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு
01	விளைவுத்திறன் எண்ணக்கருவை அமைச்சில் நடைமுறைப்படுத்தல்	30	மணித்தியாலங்கள் 3 (2022.01.11)	10,000/=	விளைவுத்திறன் பயிற்சி ஆலோசகரை அழைப்பித்து விரிவுரைகளை நடாத்தல்	அமைச்சில் விளைவுத்திறன் எண்ணக்கரு நடைமுறைப்படுத்தலை ஆரம்பித்தல்
02	விளைவுத்திறன் எண்ணக்கரு அமைச்சில் நடைமுறைப்படுத்தல். -II	60	மணித்தியாலங்கள் 6 (2022.02.08/18)	-	விளைவுத்திறன் பயிற்சி ஆலோசகரை அழைப்பித்து விரிவுரைகளை நடாத்தல் (5S)	அமைச்சில் 5S எண்ணக் கருவை நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பித்தல்
03	கடிதக் கோவையிடல்	05	நாள் - 1 (2022.04.05)	25,000/=	தேசிய தொழிற் கற்கை நிறுவனம் மூலம் ஒழுங்கமைக்கின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	அலுவல கத்தின் கடிதக் கோவையிடலை மிக முறையாகவும் பயனுள்ளதாகவும் பராமரித்து அலுவலக நடவடிக்கைகளை இலகுபடுத்தல் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்ளுதல்.

தொடர் இலக்கம்	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றுவிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூபா 000)	தொடர் இலக்கம்	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்
04	அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள்	03	நாள் - 1 (2022.05.10/11)	30,000/=	,,	அலுவலர் களின் வினைத்திறன் மற்றும் செயற்திறன் ஊடாக நிறுவனத்தின் சேவை நடவடிக்கைகளை பயன்கொள்ளுதல் தொடர்பான அறிவு
05	அலுவலக குறிப்பு எழுதுதல் மற்றும் கடமை பொருட்டான கடிதங்கள் எழுதுதல்	04	நாள் - 1 (2022.05.25)	20,000/=	,,	தரத்துடன் கூடிய அலுவலக சேவையினை உருவாக் குதல் தொடர்பான அறிவு
06	அரசாங்கத்தின் வாகனங்களை பேணுதல்	02	நாள் - 1 (2022.06.16)	10,000/=	,,	அரசாங்கத்திற்குரிய வாகனங்களை ஆகக்கூடிய வினைத்திறனுடன் ஆகக் குறைந்த செலவில் பயன்படுத்தல் மற்றும் அவற்றின் பாதுகாப்பு அதிகப்படு-த்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுதல் தொடர்பான அறிவு
				95,000/=		

- நிறுவனத்தின் செயலாற்றுகை பொருட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில்

அத்தியாயம் 07

இணக்கப்பாட்டு அறிக்கை

இலக்கம்	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்ற தாயின் அது பற்றி சுருக்கமாக விபரிக்குக. அதற்கான சுருக்க விளக்கம்	எதிர் காலத்தில் இணக்க மற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	இணக்கமற்றது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	இணக்கமற்றது		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	இணக்கமற்றது		
1.6	ஏனைய	இணக்கமற்றது		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணுதல் (நி.ஒ.விதி 445)**			
2.1	பொது நிருவாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்துக்களின் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகளின் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		

2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (ஊஐபுயுளு) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.11	அடி கட்டை புத்தகங்களின் (GA – N20 பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
3	**நிதி கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.ஒ.விதி 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது.	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணக்கமானது		
3.4	2014.05.11 ஆந் திகதிய 171/2004 ஆம் அரச கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 171/2004 இன் படி அரச	இணக்கமானது		

	ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயற்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.			
4	**வருடாந்த திட்டங்களை தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்			
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வரவு செலவு திணைக்களத்தில் (னுடீ) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது		
6	**உள்ளக கணக்காய்வு**			
6.1	நி.பி 134(2) DMA/1 - 2019 இன் படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்-வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் அளித்தல்	இணக்கமற்றது		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும்	இணக்கமானது		

	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப் பிரிவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்			
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திடம் வழங்குதல்	இணக்கமானது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**			
7.1	DMA 1-2019 சுற்றறிக்கையின்படி, ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்தப்பட்டள்ளன.	இணக்கமானது	.	
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017இ சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.	இணக்கமானது		
8.2	மேற்கொண்ட சுற்றறிக்கையின் 13 ஆவது அத்தியாயத்தின் படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இன் படி, பொருடகள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர	இணக்கமானது		

	நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.			
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைப்பாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8.5	நிதி பி. 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம் பெற்றது.	இணக்கமானது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன், புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.5	2016.12.29 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனத்தின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்	இணக்கமானது		

9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்	இணக்கமானது		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதியில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	இணக்கமானது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்	இணக்கமானது		
11	**நீதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி. பி. 94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்.	இணக்கமானது		
12	**அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	இணக்கமற்றது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையிலுள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமற்றது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி.571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		

13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.	இணக்கமானது		
14.2	நி.பி 371 இன் படி அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல் அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணக்கமானது		
14.3	நி.பி 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	விதிகளின் படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருத்தல் வேண்டும்.	இணக்கமற்றது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.	இணக்கமானது		
15.3	நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின்	இணக்கமானது		

	எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்			
16.3	20.09.2017 தேதியிட்ட MSD சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
17	**பொது மக்களுக்கான தகவல் வழங்குதல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அலுவலர் ஒருவரை நியமித்து, தகவல் வழங்கும் ஆவணமொன்றை இற்றைப்படுத்தி பராமரித்தல்	இணக்கமற்றது	இப்பிரிவு புறம்பான பிரிவாக செயற்படல்	பிரிதொரு ஆவணம் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
17.2	நிறுவனம்அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள்/ குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல்	இணக்கமானது		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 08 மற்றும் 10 ஆவது பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்	இணக்கமற்றது	மேற்படி 17.1 பிரகாரம் ஆகும்	பிரிவுக்கான தகவல்களை புறம்பாக சமர்ப்பித்தல்
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கங்கள் 05/2008 மற்றும் 05/2018(1) இன் படி பிரசைகள் பட்டயம்.. பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்	இணக்கமற்றது		நடப்பாண்டில் பிரசயங்களின் பட்டயம் தயாரித்து செயற்படுத்துவ தற்கு எதிர்பார்க்கின்- றேன்.
18.2	சுற்றறிக்கையில் பந்தி 2.3 ஐப் பொறுத்த வரை பிரசைகள் பட்டயம்/பிரசைகள் வாடிக்கையாளர்	இணக்கமற்றது		நடப்பாண்டில் பிரசயங்களின் பட்டயம் தயாரித்

	சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.			செயற்படுத்துவதற் எதிர்பார்க்கின்-றேன்.
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனிதவள திட்டம் தயாரித்தல்.	இணக்கமற்றது		மனிதவள திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுதல்
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கொண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	இணக்கமற்றது		செயற்படு வதற்கு எதிர்பார்க்கின் றேன்.
19.3	மேற்கொண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	இணக்கமற்றது		செயற்படு வதற்கு எதிர்பார்க்கின் றேன்.
19.4	மேற் குறித்த சுற்றறிக்கையில் 6.5 ஆம் பந்திக்கு இணங்க மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரித்திருத்தல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை உருவாக்குதல், தேர்ச்சி விருத்தி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல என்பன தொடர்பான பொறுப்புகளை ஒப்படைத்து சிரேட்ட அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.	இணக்கமற்றது		செயற்படு வதற்கு எதிர்பார்க்கின் றேன்.
20	**கணக்காய்வு பந்திகளுக்கு பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.**			
20.1	கடந்த ஆண்டுகளுக்கு கணக்காய்வாளர் அதிபதியால் வழங்கிய கணக்காய்வு பந்திகள்மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைப்பாடுகளை சரி செய்திருத்தல்.	இணக்கமானது		